# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 40
பக்கங்கள்: 56

சுடர் 33 | கதிர் 259 | ஆடி 27ஆம் நாள் | ஞாயிற்றுக்கிழமை 12 ஒகஸ்ட் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


## பருத்தித்துறையில் சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 12
பருத்தித்துறை மாலுசந்திப் பகுதியில் 63 வயது பெண்ணின் 4 பவுண் தங்கச் சங்கிலி உந்துருளியில் வந்தவர்களால் நேற்று மாலை 5 மணியளவில் அறுத்துச் செல்லப்பட்டுள்ள >> 53

## பதவி துறக்குமாறு விக்கிக்கு அழுத்தம்

### தனித்துப் போட்டியிடுவதற்கான அனுதாபத்தைச் சம்பாதிப்பதற்கு அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் இதனைச் செய்கின்றன

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 12
வடக்கு மாகாண அமைச்சரவையில் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதனை முன்னிறுத்தி முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைப் பதவி துறக்குமாறு அவருக்கு ஆலோசனை வழங்கும் நெருக் கமான சில தரப்புக்கள் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்துள்ளதாக அறியமுடிகின்றது.

இதனூடாக மக்களின் அனுதாபங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அந்தத் தரப்புக்கள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்குச் சுட்டிக் காட்டியுள்ளபோதும், அந்த யோசனையை இதுவரையில் முதலமைச்சர் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால் வடக்கு மாகாண அமைச்சரவை மறுசீரமைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சரை, டெனீஸ்வரனையும் உள்ளடக்கியதாக அமைச்சரவையைப் பரிந்துரைக்குமாறு ஆளுநர் கேட்டுக் கொண்டபோதும், முதலமைச்சர் >> 53

## நாட்டை ராணுவ மயப்படுத்த முயற்சி செய்கிறது கூட்டரசு

மகிந்த குற்றச்சாட்டு

(விரிவு - பக்:12)

## தேர்தல் தாமதத்துக்கு நாடாளுமன்றே காரணம்

என்கிறது சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு

(விரிவு - பக்:12)

### முல்லைத்தீவு தாக்குதல்:

## இரவோடு இரவாக 6பேர் கைதாகிப் பிணையில் விடுவிப்பு

முல்லைத்தீவு, ஓக. 12
முல்லைத்தீவு நீரியல்வளத் திணைக்களம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் உள்பட 6 பேர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர். அவர்கள் முல்லைத்தீவு மாவட்டப் பதில் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடிகளைத் தடை செய்யக் கோரி கடந்த 2ஆம் திகதி முல்லைத் >> 53

## நவாலியிலும் வீடு மீது நேற்றிரவு கல்வீச்சு

யாழ்ப்பாணம், ஓக. 12
அராலிப் பகுதியில் கடந்த சில வாரங்களாக வீடுகள் மீது கல் வீச்சு தாக்குதல் நடைபெற்று வந்த நிலையில் தற்போது நவாலிப் பகுதிக்கும் அது பரவியுள்ளது.

நவாலி வடக்கு, சங்கரத்தை பிரதான வீதியில் கேணியடிப் பகுதியிலுள்ள வீட்டின் மீது நேற்றிரவு 7.30 மணியளவில் சரமாரியாக கற்கள் வீசப்பட்டுள்ளது. வீட்டின் சீற உடைந்துள்ளது. தெய்வா >> 53



ஆடி அமாவாசை தினத்தில்

## கீரிமலை தீர்த்தக் கரையில் நேற்றுக் குவிந்தனர் மக்கள்

யாழ்ப்பாணம், ஓக. 12
ஆடி அமாவாசை தினமான நேற்று இந்துக்கள் தமது பிதிர்க் கடமைகளை நிறைவேற்றினர். கீரிமலை கண்டகி தீர்த்தக் கரையில் பெருமளவான மக்கள் பிதிர் கடமைகளை நிறைவேற்றியதைக் காண முடிந்தது. >> 53

## கொள்கை அடிப்படையில் ஒற்றுமை இருக்கவேண்டும்

### விக்கி வலியுறுத்தியதையே மாவையும் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஓக. 12
கூட்டமைப்பின் அத்திவாரக் கட்டமைப்பு சரியாக உள்ளது. வீட்டைக் கட்டியெழுப்ப நீங்கள் எங்களைப் பலமடையச் செய்யவேண்டும். நாங்கள் ஒற்றுமையாகப் பலமாகச் செயற்படவேண்டும். ஒற்றுமை கொள்கை அடிப்படையிலேயே இருக்கவேண்டும். அதனைவிடுத்து அறிக்கைகள் விடுவதும், போலித்தனமாகச் செயற்படுவதும் ஒற்றுமை அல்ல. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

வரணியில் மக்கள் குறைகேள் அலுவலகம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச >> 53

## வெடுக்குநாரி மலையில் சிவனுக்கு சிறப்புப் பூசை

### தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாட்டில் மக்கள் சந்தேகம்



வவுனியா, ஓக. 12
வெடுக்குநாரி மலையில் உள்ள ஆதி இலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு வழிபாட்டுக்குச் செல்லக் கூடாதென்று பொலிஸார் தடை விதித்துள்ள நிலையில் நேற்று அங்கு வழிபாடுகள் நடந்துள்ளன. நேற்று ஆடி >> 53

## மாணவர்களுக்கு வழங்க கடத்தப்பட்ட போதை மாத்திரைகளுடன் தம்பதியர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 12
கடல் வழியாகக் கடத்தப்பட்ட பெருந்தொகை போதை மாத்திரைகளுடன் இளம் தம்பதியினர் வவுனியா, செட்டிக்குளத்தில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.



21 மில்லியன் ரூபா பெறுமதியான 70 ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் நோக்குடன் இவை கொண்டுவரப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்த >> 53



## வன்முறையைக் கட்டுப்படுத்த உதவி நாடுகின்றது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள சமூகவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர். >> 53




வாழ்வாதாரமளிக்கும் - உற்சாகமூட்டும் - நிம்மதியான வாழ்க்கை

011 5 411 411

அரச ஓய்வூதியர்களான உங்களுக்கு, உற்பத்தியாளர்களாக எழுந்து நிற்க SDB வங்கியிடமிருந்து அழைப்பு

077 20 20 282

SDB வங்கி

Fitch Rating BB+ (stable), Reg. No. PB 42PQ

## குள்ள மனிதர்கள் விவகாரம்

# மூடி மறைக்கும் பொலிஸாருக்கு ஒத்து ஊதுகிறார் முதல்வர் விக்கி

### கண்கண்ட சாட்சிகள் இருந்தும் சாட்சிகள் ஏதும் இல்லை, அரசியல் பின்னணியே என்பதால் மக்கள் கொதிப்பு

யாழ்ப்பாணம், ஓக 12

மக்கள் பிரச்சினைகளைப் பற்றி மக்களிடம் நேரில் சென்று அறிவதற்கு துளியளவேனும் ஆர்வம் காட்டாத அல்லது விருப்பம் இல்லாத வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பொலிஸார் கூறுவதை நம்புவதும், அதை பத்திரிகைகளுக்குத் தெரிவித்து எதுவுமே நடக்கவில்லைஎன்பதுவிசனத்துக்குரியது, ஒரு நாள் அவர் இங்கு வந்து இரவு முழுவதும் நின்று நிலமைகளை அவதானித்தால் தெரியும் மக்கள் படும் பாடு. இவ்வாறு யாழ்ப்பாணம் அராலி மக்கள் கொதித்தனர்.

யாழ்ப்பாணம், அராலிப் பகுதியில் தொடர்ந்துள்ள வீடுகள் மீதான கல்வீச்சுத் தாக்குதல் தொடர்பாக வடக்கு முதலமைச்சர் நேற்று முன்தினம் தெரிவித்த கருத்துத் தொடர்பில் அந்த மக்களிடம் நேற்று வினவியபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், மட்டுமல்லாது வடக்கு மாகாணத்திலும் தற்போது பரவலாகப் பேசப்படும் விடயம் அராலி மக்கள் எதிர்கொள்ளும் கல்வீச்சுத் தாக்குதல் தொடர்பானதே! குள்ள உருவம் கொண்டவர்களே வீடுகள் மீது கற்களை வீசிவிட்டுத் தப்பித்துச் செல்கின்றனர் என்று அராலி மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குள்ளமனிதர்கள்யார்என்பதைஅவர்கள்அடையாளம்காணாதபோதும், கல்லெறிவது குள்ளர்கள்தான் என்பதே அவர்களுடைய வாதமாக உள்ளது. அவர்களைச் சிலர் நேரிலும் கண்டுள்ளனர். இது தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலும் பலர் கண்கண்டசாட்சியாகதமதுகருத்துக்களைப்பதிவு செய்தனர் . வீட்டுக் கூரைகளின் மேல் குதிப்பதுபோன்றுசத்தம்கேட்கின்றது, உடனடியாகவே வெளியில் சென்று பார்த்தால் யாரும் அங்குஇல்லை, வேலிகளில்உள்ளமரங்கள் அசைகின்றன. வீதிகளில்இருந்துவீடுகளுக்கு கல் வீசப்படுகிறது. அப்போது கூட அங்கு யாரும்இருக்கவில்லை. சப்பாத்துக்கால்களுடன்வீதியில்ஓடுவதுபோன்றுசத்தம்கேட்கின்றதுமதிலால்எட்டிப்பார்தால்யாரும் இல்லை. அந்த நபர்களைத் தேடித் திரியும் போதும் எவரும் அகப்படவில்லை, ஆனால் சில நிமிடங்களிலேயே இன்னும் ஒரு வீட்டுக்கு கல் வீச்சு இடம்பெறுகிறதுஇவ்வாறுசெய்பவர்கள் எங்களுடைய கண்களுக்குப் படவில்லை என்றால்அவர்கள்குள்ளர்கள்தான். நாங்கள் வருவதைத் தெரிந்து உடனேயே மறைகின்றனர். தாவும் திறனைக் கொண்டிருந்தாலே கூரையில்இருந்துமரத்துக்குத்தாவி, வீதியில் குதித்து ஓட முடியும். சாதாரண நபர்கள் என்றால் மதிலால் பார்க்கும் போது ஓடுவதைக் கண்டுகொள்ளமுடியும், ஆனால்இவர்களைத் தெரியவில்லை. இவ்வாறு எல்லாம் வைத்து குள்ளமனிதர்கள் என்றே கூறுகிறோம். என்றும்சிலர்தெரிவித்துள்ளனர்.

எனினும் மக்களுடைய குற்றச்சாட்டுக்கள் கண்கண்டசாட்சிகள் அனைத்தும்பொய்த்து விடுமாற்போல்வடக்குமுதலமைச்சர்நேற்று முன்தினம்பத்திரிகைகளுக்குவிளக்கத்தைக் கூறினார். பொலிஸாருடைய கதையை நம்பியே முதல்வர் அவ்வாறு கூறியுள்ளார். பத்திரிகைகளில் வரும் குள்ளமனிதர்கள் பற்றிய செய்திஅரசியல்பின்னணியில்பரப்பப்பட்டுள்ளது. அராலியில் நடைபெறும் சம்பவங்கள் தொடர்பில் எவரும் பொலிஸ் நிலையத்தில் முறையிட வில்லை, குள்ளமனிதர்களைக் கண்டேன் என்று யாரும் முன்வந்து கூறவில்லை. எனவே அதுபொய்என்பதேஅவருடைய விளக்கமாக உள்ளது.

#### பரவலாகப் பேசப்பட்ட சம்பவம்

அராலியின் பல பகுதிகளிலும் கடந்த ஒரு மாதங்களுக்கு மேலாக இந்தச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. எனினும் கடந்த ஜூலை மாதம் 27ஆம் திகதி இரவு அராலியில் கடும் கல்வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இளைஞர்கள் கூடி தேடுதல்களை மேற்கொண்டிருந்தனர். அந்த அசம்பாவிதம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனுக்கும் அறிவிக்கப்பட்டது. வட்டுக்கோட்டைப் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தின் போது வட்டுக்கோட்டைப் பொலிஸார் முன்னிலையிலேயே அந்த மக்கள் குள்ள மனிதர்களே இந்தச் சம்பவங்களுக்குக் காரணம் என்று பகிரங்கமாகக் கூறியிருந்த னர். மக்களுடைய இந்தப் பிரச்சினையை உதயனே முதன் முதல் பொது வெளிக்குக் கொண்டுவந்தான்.


நேற்று முன்தினம் தாக்கப்பட்ட வீடு

> அராலியில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் உடனடியாகவே சம்பவ இடத்துக்குவரவில்லை, அடுத்ததாக 119 என்ற அவசர பொலிஸ் சேவைக்கு அழைத்தோம் அதன் பின்னரே வட்டுக்கோட்டைப் பொலிஸார் இங்கு வந்தனர். வந்ததும்அவர்கள் அவசர பொலிஸ் சேவைக்கு அழைத்ததைக் கண்டித்தனர். உடனடியாக இங்கு வரமுடியாத அவர்கள் சம்பவம் நடைபெறவில்லை என்று கூறுவது அவர்கள் மீதே சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

#### கட்டுக்கதை

கல்வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெறுகிறது, குள்ளமனிதர்கள்தான்கற்களைவீசுகின்றனர் என்பது வெறும் கட்டுக்கதை என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தன் அண்மையில் தெரிவித்தார். இந்தக் கதையைப் பரப்பியவரைக் கைது செய்யவேண்டும் என்றும் அவர் சீறினார். சம்பவங்கள் பற்றி ஏதும் அறியாமலேயே அவர் இவ்வாறு கூறினார். அவரைத் தொடர்ந்து பலரும் அந்தச்சம்பவம்பொய்என்றனர். பொலிஸாரிடம் சிறந்த உறவைப் பேணி அதன் மூலம் அவர்கள் கூறுபவற்றையே அவர்களும் பொது வெளியில் கொண்டு வந்தனர். வடக்கு மாகாணமுதலமைச்சரும்அவ்வாறே. அரசியல் பின்னணி, கட்டுக்கதை என்று பொலிஸார், நம்புவதாகத் தெரிவித்துள்ளார். பதிவு செய்யப்படாத இணையத்தளங்களும் அரசியல் வாதிகளின் கூற்றுக்கு விசுவாசம் காட்டத்தவறவேயில்லை.

#### நடந்த உண்மை

"எனது வீட்டுக்கும் கல்லெறிந்தார்கள் வீதியில் சென்று பார்த்தால் எவரும் இல்லை. நீண்ட காலமாக இங்குதான் இருக்கிறோம். இப்போதுதான் இந்தப் பிரச்சினை வந்துள்ளது. அடுத்தடுத்து கல்வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருந்தும் என்ன செய்வது பயத்துடனே வாழ்கின்றோம்" என்று அராலியைச் சேர்ந்த கமலாம்பிகை தெரிவித்தார்.

"அராலியில்கல்லெறியாதவீடுகளே இல்லை, தொடர்ச்சியாக தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம், பொலிஸார் இங்கு வந்து நடந்தவற்றைக்கேட்டனர். நாங்களும்கூறியுள்ளோம். அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தின்போது கண்ணால்கண்டேன்என்றுபெண்கள்சிலர் கூறியுள்ளனர். பொலிஸாருக்குமுன்னிலையிலேயேஎமது இளைஞர்கள் தேடுதல்களில் ஈடுபட்டிருந்தனர் என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த கணேசலிங்கம் தெரிவித்தார்.

#### பொலிஸார் மீது மக்கள் வெறுப்பு

அராலியில்இடம்பெறும்சம்பவங்கள்தொடர்பில் வட்டுக்கோட்டைப்பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் உடனடியாகவே சம்பவ இடத்துக்கு வரவில்லை, அடுத்ததாக 119 என்ற அவசர பொலிஸ் சேவைக்கு அழைத்தோம்அதன்பின்னரேவட்டுக்கோட்டைப் பொலிஸார் இங்கு வந்தனர். வந்ததும் அவர்கள் அவசர பொலிஸ் சேவைக்கு அழைத்ததைக் கண்டித்தனர். உடனடியாக இங்கு வரமுடியாத அவர்கள் சம்பவம் நடைபெறவில்லைஎன்றுகூறுவது அவர்கள்மீதே சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. கல்வீச்சுத் தாக்குதல்கள்தொடர்பில்அண்மையில்பொலிஸாருக்கும், மக்களுக்குமிடையிலானசந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதில் நடந்த விடயங்களைக் கூறியிருந்தோம். கண்ணால் கண்டேன் என்று சில பெண்கள் கூறியிருந்தனர். கறுப்புஉடைஅணிந்திருந்தார்கள், முகம்தெரியவில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர். இதன்போதுபொலிஸ்அதிகாரிகள், கிராமஅலுவலர்களும் உடனிருந்தனர். இத்தனையும் தாண்டிமுறைப்பாடுபதிவுசெய்யப்படவில்லை, கண்கண்ட சாட்சிகள் இல்லை என்று பொலிஸார் கூறுவது முறைப்பாடு செய்பவர்களை தனிப்பட்டமுறையில்பழிதீர்ப்பதற்கா? பொலிஸாருடை கதையை முதலமைச்சர் நம்புவதும் அதை உண்மை என்று வெளிப்படுத்துவதும்விசனத்துக்குரியதுஎன்றுஅராலிஅம்மாள் சனசமூக நிலையத்தை அண்டியுள்ள பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் தெரிவித்தார்.

பெயர் மற்றும், ஒளிப்படங்களை வெளியிட்டால் அதனால் ஆபத்துக்கள் வரும் என்று மக்கள் அஞ்சுகின்றனர்.

அதனால்பலர்தங்களுடையபெயர்களையோ, ஒளிப்படங்களையோ, பத்திரிகையில் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு வேண்டிக்கொண்டனர்.

#### நேற்றுமுன்தினம் கல்வீச்சுத்தாக்குதல்

அராலி ஐயனார் கோவிலடியை அண்டிய பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் இரவும் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வீட்டு விறாந்தையில் வீட்டின் உரிமையாளர் படுத்திருந்த போது சம்பவம் இடம்பெற்றது. கூரையைப் பிரித்து உள்ளே வந்த கல்லில் இருந்து மயிரிழையில் தப்பியுள்ளார் உரிமையாளர். தற்போதும் கல்வீசப்பட்ட அடையளம் உள்ளது. சம்பவம்நடைபெற்றபோதும்அது பற்றிபொலிஸாருக்கு தகவல் வழங்கப்படவில்லை, அங்குள்ள நிலமைகளை அறியாமலேயே பொலிஸார் தமது கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டுள்ளனர் என்பதையும், பொலிஸாருடைய கதைகளை நம்பி அதுவே உண்மை என்பது போன்று முதலமைச்சருடைய கருத்துக்கள் உள்ளன என்பதையும் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கல்வீச்சுத் தாக்குதல் சம்பமே தெளிவுபடுத்துகின்றது.

#### முதலமைச்சர் மீது கொதிப்பு

சம்பவங்கள்நடக்காதுஅதைக்கூறவேண்டிய அவசியம்எமக்குஇல்லை. வேண்டுமென்றே பெண்கள் அவலக் குரல் எழுப்புவார்களா? வீட்டின் மீது கல்லெறிந்தவுடன் சத்தமிடுகின்றனர். அங்கு ஓடிச் சென்று பார்ப்பதற்குள் இன்னுமொரு வீட்டில் எறிவிழுகிறது. இது கட்டுக்கதையா வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் அண்மையில் இங்கு வந்திருந்தார். அவர் நிற்கும் போதே கல்வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது. அவருக்குத் தெரியும் நடந்தது என்னவென்று. மக்களை முட்டாள்களாக்கி அங்கிருந்து கதைப்பதால் பயனில்லை. சில பெண்கள் கல்வீச்சுத் தாக்குதலில்காயமடைந்துள்ளனர். அவர்கள் தாங்களாகவே வேண்டுமென்று தமது தலையை தாமே உடைப்பார்களா? முதலமைச்சர்என்னகதைக்கின்றார். என்றுபெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் தெரிவித்தார்.

முதலமைச்சரை இங்கு வந்து பார்க்குமாறு கூறுங்கள் எமது பிரச்சினைகள் தெரியும். இங்குவந்துமக்களுடன்கலந்துரையாடாமல் பிரச்சினைகளை விளங்காமல் கதைப்பதில் நியாயம் ஏதுமில்லை. வேலைவெட்டி இல்லாதுதானாஎமதுஇளைஞர்கள்இரவிரவாகக் காவல் நிற்கின்றனர். இரவில் விழித்திருந்து பகலில் வேலைக்குச் செல்லாது வருமானின்றி எத்தனை குடும்பங்கள் உள்ளன என்று அவருக்குத் தெரியுமா? பொலிஸாருடைய கதையை நம்பிக் கதைப்பது வேடிக்கையானது அவர் ஒருநாள் இங்கு வந்து நின்றிருக்கவேண்டும் அப்போதே தெரிந்திருக்கும். நடக்கின்ற பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தலையிட்டு தீர்வு கண்டு எமக்கு ஆறுதல்கூறாது, பெரும்சம்பவங்கள்இடம்பெறும் போதெல்லாம்பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அதுவே சற்று ஓய்ந்து வரும் போது மக்களுடையமனதைப்புண்படுத்துவது போன்றும், எதுவுமே நடக்காது போன்றும் கதைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்று மக்கள் கொதித்துள்ளனர்.

— எஸ்.தர்சன், ஜெ.சுலக்சன் —

## நாவற்குழி விவகாரம்:

# சுமூகத் தீர்வை எட்டுவதற்காக வழக்கு நீண்டநாள் தவணை

யாழ்ப்பாணம். ஒக. 12

தேசியவீடமைப்புஅதிகாரசபைக்குச்சொந்தமானநாவற்குழிக் காணிக்குள்அத்துமீறிகுடியேறினார்கள் என்றகுற்றச்சாட்டில் 35 குடும்பங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு. நவம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. குடியிருப்பாளர்கள்சார்பில்மன்றில்முன்னிலையானஅரசதலைவர் சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனின்கோரிக்கையைஏற்றுக்கொண்டுநீதிமன்றம், நீண்டகாலம் வழுங்கி வழக்குத் திகதியிடப்பட்டது.

தேசியவீடமைப்புஅபிவிருத்திஅதிகாரசபைக்குச்சொந்தமான நாவற்குழிக்காணியில்அத்துமீறிக்குடியேறியுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டு62குடும்பங்களைஅங்கிருந்துவெளியேற்றுமாறு சாவகச்சேரிநீதிமன்றில்வழக்குத்தாக்கல்செய்யப்பட்டது. 35 வழக்குகள் விசாரணைக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

குடியிருப்பாளர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், மக்களை காணிகளிலிருந்து வெளியேற்ற முற்படுவதுதொடர்பில்நாடாளுமன்றத்தில், வீடமைப்புஅதிகார சபைக்குரிய அமைச்சர் சஜித் பிரேமதாசவி டம் நான் கேள்வி எழுப்பியிருந்தேன். அரச காணிகளிலிருந்து மக்களை வெளியேற்றுவது அரசின்கொள்கையல்லஎன்றுபதில்கூறியஅவர், நாவற்குழி விவகாரம் தொடர்பில் எதுவும் தெரியாது என்றார். வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகளுடன் மாலையில் பேச்சு நடத்தப்பட்டது. அமைச்சர் சஜித் பிரேமதாச யாழ்ப்பாணம் வந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகத் தெரிவிக்கப்பட்டது என்று மன்றில் தெரிவித்தார்.

இதுதொடர்பில்தனக்குஎதுவும்தெரிவிக்கப்படவில்லைஎன்று தேசியவீடமைப்புஅதிகாரசபையின்சார்பில்மன்றில் முன்னிலையானசட்டத்தரணிகுறிப்பிட்டுள்ளார். அந்தக் காணியிலிருந்து ஏன் உங்களை வெளியேற்றக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுவதற்கு திகதியிடுமாறு அவர் மன்றில் கோரியுள்ளார்.

காரணம் காட்ட முடியும் என்று கூறிய சட்டத்தரணி சுமந்திரன், வழக்கை நீண்டநாள் திகதியிடுமாறு மன்றில் கோரினார். வீடமைப்பு அதிகார சபையின் சட்டத்தரணி நீண்ட நாள் திகதி வழங்கக் கூடாது என்று கூறினார். நாடாளுமன்றத்தில் நடந்த விடயங்கள் இன்று (நேற்று) பத்திரிகைகளில் வந்துள்ளமையை நீதிமன்றின் கவனத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கொண்டு வந்ததுடன், அமைச்சர் குறிப்பிட்டதை கவனத்தில் எடுத்து வழக்கை நீண்ட நாள் திகதியிடுமாறு கோரினார். கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை நவம்பர் 9ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

வழக்குகள் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது குடும்பத்தலைவருக்குப்பதிலாகபெண்கள்நீதிமன்றில் முற்பட்டனர். அடுத்த தவணைக்கு வழக்கில் பெயர் குறிப்பிட்ட குடும்பத் தலைவர் சமூகமளிக்க வேண்டுமெனவும் பதில் நீதிவான் உத்தரவிட்டு சமூகமளித்தவர்களை தலா 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார். எஞ்சியவழக்குகள்எதிர்வரும் 24ஆம் திகதி அழைக்கப்படவுள்ளது. (5.9.105)




# "இடிபடும் கோட்டைகள்" நாவல் வெளியீடு நேற்று

யாழ்ப்பாணம். ஒக.12

மூத்த படைப்பாளர் நா. யோகேந்திரன் எழுதிய "இடிபடும் கோட்டைகள்" நாவல் நேற்று சனிக்கிழமை 11 ஆம் திகதி நல்லூர்நாவலர்கலாசாரமண்டபத்தில்வெளியிடப்பட்டது. நூல்வெளியீட்டுக்கு முதன்மைவிருந்தினர்களான நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், யாழ்ப்பாண மாவட்டசெயலர்நா.வேதநாயகனும்கலந்துகொண்டனர். இந்த நூல்வெளியீடு1950 - 1960 வரையான காலப்பகுதியில் எமது மண்ணில்நிலவிய சமூகப் பண்பாட்டுவாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கியப் படைப்பாகும்.



நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வாழ்த்துரை நிகழ்த்தினார். அனைவராலும் எழுதமுடியாது. எழுதுபவர்களை ஊக்குவிக்கவேண்டும். பலஎழுத்தாளர்கள்மற்றும் கலைஞர்கள், படைப்பாளிகளுக்கு என்னால் முடிந்த உதவிகளைச்செய்வேன். இளையவர்கள்தற்போதுவாசிப்பது குறைவு. இளைஞர்களின் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டு செல்ல வேண்டும். அரசியலோடு சேர்ந்து அனைத்தையும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று அவர் தனது வாழ்த்துரையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் வாழ்த்துரை நிகழ்த்தினார். எழுத்தாளருக்குத் தனது வாழ்த்துக்களைத்தெரிவித்தமாவட்டச் செயலர் அவருடையபணி மேலும் வளர்ச்சியடைய வேண்டும்என்றும்வாழ்த்தினார்.

நிகழ்வில் வடமாகாண கலை பண்பாட்டுச் செயலாளர் சத்திய சீலன், எழுத்தாளர்கள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-113)

மாபெரும் இசைநிகழ்ச்சி



அர்ச்சனா | ரமணி அம்மா | வர்ஷா | ஜஸ்கரன் சிங்

ஆகஸ்ட் 11 மாலை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி. இன்று ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் [லிங்கம் கூல்பார் முன்பாக] யாழ்ப்பாணம்.

Rs 300/= Rs. 500/= Rs. 1000/= மற்றும் VIP டிக்கெட்ஸ்

K.T.Prassath - 078 612 5929, 071 381 5114

Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத்)



நயினை அம்மன் ஆலயத்தில்

ஆடிப்பூரம்

நாடி வரும் அடியார்களுக்கு அமுதசுரபியில்

சிறப்பு அன்னதானம்


நாளை (13.08.2018) திங்கட்கிழமை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்தில் **ஆடிப்பூர விழா** சிறப்பாக நடைபெறவுள்ளது **விசேட அபிஷேகங்களைத்** தொடர்ந்து **அம்பாளுக்கு பூரகர்மா ஆராதனைகள்** இடம்பெறும். இத்தினத்தில், நயினாதீவுக்கு வரும் அடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை மண்டபங்களில் வழமைபோல் விசேட அன்னதானம் வழங்கப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருவதுடன் அம்பிகை அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரதான சாலை,
நயினாதீவு - 02,
021 321 3575**

நிர்வாகம்
ஸ்ரீ நாகபூஷணி
அமுத சுரபி அன்னதானசபை

# கடை உடைக்கப்பட்டு வவுனியாவில் திருட்டு



வவுனியா, ஓக.12
வவுனியா, சாந்தசோலையில் கடை ஒன்று உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
நேற்றுமுன்தினம் இரவு கடையைப்பூட்டிவிட்டுச்சென்றஉரிமையாளர்நேற்றுக்காலைகடையைத் திறக்க வந்தபோது அதன் கதவு உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்தார். அங்கிருந்த 50 ஆயிரம் ரூபா பணமும், பொருள்கள் சிலவும் திருடப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.
இதுதொடர்பாகப்பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ற1-10)

# பிரதேசசபை ஊழியர்களை தாக்கிய இருவர் கைது

சுதுமலை, ஓக. 12
சாவகச்சேரி பிரதேச சபையின் ஊழியர்கள் இருவரை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தாக்கிய குற்றச்சாட்டில் இருவர் நேற்றுக்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கொடிகாம் பொலிஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கைக்கு அமைவாக, இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்குதலுடன் தொடர்புடைய ஏனையோரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கொடிகாம் பொலிஸார் தெரிவித்தனர். (5.159)

# கிளைக்குழு தேர்தல்

கைதடி, ஓக. 12
தென்மராட்சிமேற்கு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தின்ஒத்திவைக்கப்பட்டகிளைகளுக்கான கிளைக்குழுத் தேர்தல்கள் இன்றுஞாயிற்றுக்கிழமைமுற்பகல் 10 மணிக்கு மீள நடைபெறவுள்ளதாகத் தென்மராட்சி மேற்குபலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இ. கந்தசாமி அறிவித்துள்ளார்.
ஒத்திவைக்கப்பட்ட ஒன்பதாம் கிளைக்கான தேர்தல் தனங்களப்புமுன்பள்ளிவளாகத்திலும், பதினோராம்கிளைக்கானதேர்தல் மறவன்புலவு செல்வா சனசமூக நிலையக் கட்டத்திலும் இடம்பெற இருப்பதாகவும் உரிய அழைப்புக்கள் கிளை அங்கத்தவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (288)

# சந்நிதிக்கானபாலம்திறப்பு



யாழ்ப்பாணம், ஓக. 12
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி அச்சுவேலி பாலம் நேற்றுச் சனிக்கிழமை மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.
அச்சுவேலியிலிருந்து தொண்டைமானாறு வீதியில் செல்வச்சந்நிதி ஆலயத்துக்குச் செல்லும் நன்னீர் சுத்திகரிப்பு மேம்பாலம் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.
செல்வச்சந்நிதி ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா நேற்று ஆரம்பமாகியது. நேற்றுக் காலைஇந்தப்பாலம்மக்கள்பாவனைக்காக திறந்து விடப்பட்ட போதும் பிற்பகலிலேயே மக்கள்அதிகளவில்இந்தப்பாலத்தின்ஊடாகச் சென்றனர். (5422)

# பொது இடத்தில் மது அருந்திய இருவருக்கும் ரூ. 2,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஓக. 12
பொது இடத்தில் மது அருந்திய குற்றத்துக்காக இருவருக்குத் தலா இரண்டாயிரம்ரூபாதண்டம்விதித்ததுயாழ்ப்பாணம்நீதிவான்மன்று.
குறித்த இருவரையும் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர்.
பொது இடத்தில்மதுபானம் அருந்தியமை மற்றும் மது போதையில் மக்களுக்கு இடையூறு விளைவித்தமை ஆகியகுற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இருவரும்தமது குற்றங்களை ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து இருவருக்கும் கடந்த வாரம் தண்டம் விதிக்கப்பட்டது.
இனியும் இவ்வாறான வழக்குகளில் மன்றில் முற்படுத்தப்பட்டால் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும்என்றுநீதிவான்எச்சரித்தார். (4,114)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஓக. 12
நெடுந்தீவுக்குதென்கிழக்கேஇலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட27தமிழகமீனவர்களையும் எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார்.
வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்கூறல்மீன்கள்அதிகளவில் இந்தப் பகுதியில் இருந்ததால் அதனை பிடித்து கொண்டிருந்த போதுகாற்றின்வேகம்காரணமாக எல்லைதாண்டி வந்ததாக கைது செய்யப்பட்ட மீனவர்கள் விசாரணையின்போது தெரிவித்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட மீனவர்கள் யாழ்ப்பாணமாவட்டகடற்றொழில் நீரியல்வளத்துறைஅதிகாரிகளிடம் நேற்றுஒப்படைக்கப்பட்டனர். மீனவர்கள் அனைவரும் ஊர்காவற்றுறைநீதிமன்றநீதிபதியின்வீட்டில் முற்படுத்தினர். வழக்கைவிசாரித்த நீதிபதி மீனவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.
இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுதலைசெய்யக்கோரிஉறவினர்கள் இராமநாதபுரம்மாவட்டமீன்துறை உதவி இயக்குநரைச் சந்தித்து மனுக்கையளித்துள்ளனர். (5,105)

# மாட்டுவண்டிச் சவாரி

சுதுமலை, ஓக. 12
யாழ்ப்பாணம் புளியங்கூடல் மகாமாரிசனசமூகநிலையம்மகாமாரி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியானது இன்று 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 புளியங்கூடல் புது வெளித்திடலில் இடம்பெறவுள்ளது. மகாமாரி சனசமூகநிலையச் செயலர் ப. காண்டீபன் தலைமையில்இடம்பெறும்இந்தநிகழ்வுக்கு. முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் உதவிச்செயலர்எக்ஸ். செல்வநாயகமும், சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை தலைமைப்பீட பொலிஸ் பொறுப்பதிகாரி விகும் வீரகேசர, வேலனை மத்திய கல்லூரியின் அதிபர் சிவச்சாமிகிருபாகரன், யாழ்சாராதொழிலகத்தைச் சேர்ந்த கிறிஸ்ரி செல்வராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (5,147)


# "நான் எதனைப் பார்க்கிறேன்" சிறப்புரை இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஓக. 12
"நான் எதனைப் பார்க்கின்றேன்" என்ற தலைப்பில் துறைசார்ந்தவரான "முகனட் காடர்" இன்று உரையாற்றவுள்ளார்.
இலக்கம்199, கோவில் வீதி நல்லூரிலுள்ள ஆவணக் காப்பகத்தில் முற்பகல் 10 மணி தொடக்கம் மதியம் 12 வரை இடம்பெறவுள்ளது. கலை ஆர்வலர்கள் அனைவரும் தவறாது கலந்து பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றனர்.
முகனட் காடரது படைப்புகள் இலங்கை நிலப்பரப்பு, பொருள்கள் என அவரைச் சுற்றியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டவை. இரண்டுதசாப்தகாலஅவரதுகலை வெளிப்பாடுகள் பற்றியதாகவே இந்த உரை அமையும்.
இவ்வாவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் 62வது நிகழ்வாக இன்று இது இடம்பெறுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்ப்பாணம் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானா இளைப்பாறு மண்டபத்துக்கு அடிக்கல்நடும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.
கருகம்பனை இந்து இளைஞர் கழகத் தலைவர் சா. சோபிகன் தலைமையில் இது நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர், வலிகாமம் வடக்குபிரதேசசபைத் தவிசாளர் மற்றும்தெல்லிப்பளை பிரதேசமுகங்களி உட்படல் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (4,63)

# மக்கள் குறைகேள் பணிமனை திறப்பு



கொடிகாமம், ஓக. 12
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வரணிப் பிரதேச மக்கள் குறைகேள் அலுவலகம், வரணி மத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்று பி.ப. 3 மணிக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசா, எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் இந்தநிகழ்வில்கலந்துகொண்டார்கள். (5.159)

# யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் ஒருவருக்குச் சிறைத் தண்டனை விதிப்பு

## சாரதிகள் பலருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஓக. 12
முறையற்ற விதத்திலும் உரிய ஆவணங்கள் இன்றியும் சாரத்தியம்செய்த சாரதிகள் பலருக்கு யாழ்ப்பாணநீதிவான்நீதிமன்று தண்டப்பணங்கள் அறவிட்டதுடன் ஒருவருக்கு சிறைத்தண்டனையும் விதித்துள்ளது.
யாழ்ப்பாணம் நீதிமன்ற மாவட்டநீதிபதியும்மேலதிகநீதிவானுமான வி. இராமகமலன் முன்னிலையில் வழக்குகள் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டன. சந்தேகநபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அனைவரும் தமது குற்றங்களை ஏற்றுக்கொண்டனர்.
அதனடிப்படையில் காப்புறுதிப் பத்திரம் இன்றிவாகனம்செலுத்திய குற்றத்துக்காக இருவருக்குத்தலாஆயிரம்ரூபாதண்டமும், ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக 2 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.
மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக இருவருக்குத் தலா 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஒரு மாதகாலத்துக்கு ஓட்டுநர் உரிமப்பத்திரத்தைத் தடுத்து வைக்கவும் நீதிமன்று உத்தரவிட்டது.
ஓட்டுநர் உரிமப் பத்திரம் இன்றியும் மதுபோதையிலும் வாகனம்செலுத்திய இரண்டுசாரதிகளுக்கு தலா 13 ஆயித்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
மற்றொரு வாகன சாரதிக்கு ஓட்டுநர்உரிமப்பத்திரம்இன்றியும், மதுபோதையிலும் வாகனம் செலுத்தியதற்காக 13 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் மற்றும் இரண்டு வாரகால சாதாரண சிறைத்தண்டனையும் விதித்துத்தீர்ப்பளிக்கப்பட்டது.
கவனவீனமாகவாகனம்செலுத்தியமை மற்றும் பாதசாரிக கடவையில்வாகனத்தைநிறுத்தாது சென்ற குற்றங்களுக்காக மற்றொரு வாகன சாரதிக்கு 4ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டது.
சிவப்பு நிற வீதி விளக்கு ஒளிரும் போது நிறுத்தாது சென்றதுடன் ஆபத்தானமுறையில்வாகனம் செலுத்தினார் என்ற குற்றத்துக்காக பேருந்து சாரதி ஒருவருக்கு 4ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (4,114)

# பார்வதி அம்பாள் ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக.12
கோண்டாவில் கிழக்கு மருத்துவமனை வீதியில் உள்ள பார்வதி அம்மாள் ஆலயத்தில் நேற்று இரவுதிருட்டுநடந்துள்ளது.
கதவைஉடைத்துஉள்நுழைந்த திருடர்கள் சுமார் ஒருலட்சம்ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியுள்ளனர்என்றுதெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில்முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது என்றும்தெரிவிக்கப்பட்டது. (ற-127)

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஓக. 12
அமரர் திரு. திருமதி மு. க. சின்னையா சௌபாக்கியவதி (பாக்கியம்) நினைவாக தமிழ்த்தாய் மன்றம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.
"பொறகமலதேவி வாசா இலக்கம் 31, புதிய செங்குந்த வீதி, சட்டநாதர் வீதி யாழ்ப் பாணம் என்ற இடத்தில் காலை 8 மணி முதல் மதியம் 12 மணிவரை இது இடம்பெறும்.
இலவச நீரிழிவுப் பரிசோதனை, இலவசக் குருதி அழுத்தப் பரிசோதனையும்நடைபெறவுள்ளன. இதில் 100பேருக்குவிஷன்கேயார்நிறுவனத்தின் மூலம் இலவசமாகக்கண் பரிசோதனை செய்யப்படும். இலவச மூக்குக் கண்ணாடிகளையும் வழங்கவுள்ளனர். குழந்தைப்பாக்கியமற்றவர்களுக்கு மகப்பேற்று மருத்துவ நிபுணர் தனிப்பட்ட இலவசமருத்துவ ஆலோசனை வழங்கவுள்ளார்.
யாழ்ப்பாண மாநகர சபை ஆயுர்வேத வைத்தியர்கள் இலவசமாக நோயாளிகளைப் பரிசோதனை செய்து மருந்துகள் வழங்கவுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

# 4.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கொற்றாண்டார் குளப்பாலம் சீரமைப்பு

கிளிநொச்சி, ஓக 12

இயக்கச்சிகாளிகோயிலடிகொற்றாண்டார் குளத்துக்கு அண்மையாகவுள்ள வீதியில் காணப்படும்பாலம்புதிதாகதிருத்தியமைக்கப்பட்டு, மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாகத் தெரியவருவதாவது: கடந்த பல வருட காலமாகத் திருத்தப்படாமல் உடைந்த நிலையிலேயே இந்தப் பாலம்காணப்பட்டது.

பாலத்தையும் வீதியையும் சீரமைத்துத் தருமாறு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அந்தப்பகுதி மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டதைக்கருத்திற்கொண்டு, மாகாணசபையின் சமூகவலுவூட்டல்நிதியில்இருந்து 4.5 மில்லியன்ரூபாநிதிஒதுக்கப்பட்டு,வீதியும்பாலமும்சீரமைக்கப்பட்டுக் கடந்த 8 ஆம் திகதி மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்தப்பாதையூடாகப்போக்குவரத்துமேற்கொள்வதற்குப் பாலத்துக்குப் பனைமரக் குற்றிகள், தகரங்கள், மண் மூடைகளை போட்டேஇத்தனைகாலமும்வாகனங்களும் மக்களும் போக்குவரத்தில் ஈடுபட்டனர்.

மாரிகாலத்தில் இந்தப் பாதையூடான பயணம் கேள்விக்குறியாகவே இருந்து வந்தது.

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணிக்குட்பட்ட பல கிராம மக்கள் ஏ 9 சாலையினை அடைவதற்கு இந்தப் பாதையினையே பயன்படுத்தி வருகின்றனர்.

இதனை விட வடமராட்சி கிழக்கு கரையோர மக்களும், கடலனர்த்தங்களின் போதுகொடுக்குளாய்அபாயவெளியேற்றப் பாதையூடாக வெளியேறுவதற்கு, இப்பாதையேபயன்படுத்துகின்றனர். கடலுணவுகளை ஏ - 9 பாதைக்கு கொண்டு வருவதற்கும் இந்தப் பதையினையே வாகன உரிமையாளர்கள்பயன்படுத்துகின்றனர்.

இந்த வீதியும் அதிலுள்ள பாலமும், திருத்தியமைக்கப்பட்டது வரவேற்கத்தக்கது என மக்கள் தெரிவிக்கின்றனர். (70)

## நிறுவை, அளவை உபகரணங்களுக்கு முத்திரை

துணுக்காய், ஓக 12

துணுக்காய்ப் பிரதேசத்திற்குட்பட்ட நிறுவை மற்றும் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் நிகழ்வு அளவீட்டு அலகுகள், நியமங்கள்மற்றும்சேவைகள்திணைக்களத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

எதிர் வரும் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை துணுக்காய் பிரதேச சபை மற்றும் மல்லாவிபொதுநோக்கு மண்டபத்திலும்நடைபெறவுள்ளது. இதன் போது 12 மாதங்களுக்கு முத்திரை இடப்படாத நிறுவையை அல்லது அளவையை நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களைமுத்திரையிட்டுக்கொள்ளுமாறு, குறிப்பிடப்பட்டுள்ளது.

தவிர 12 மாதங்களுக்கு மேலாக முத்திரை இடப்படாத நிறுவையை அல்லது அளவையைநிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை வைத்திருப்பது தண்டனைக்குரியகுற்றம்எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (72)

## கலந்துரையாடல்

திருவையாறு சித்திவிநாயகர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா எதிர் வரும் செப்ரெம்பர் மாதம்1ஆம்திகதிஆரம்பமாகவுள்ளதால், அந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஆலய அறங்காவலர்சபைத்தலைவர் க. சுப்பிரமணியம்தலைமையில்இன்றுகாலை10 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் உபயக்காரர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (222)

## சிறுவர் விழிப்புணர்வு கருத்தரங்கு

கிளிநொச்சி, ஓக 12

இலண்டன் அன்னம்மா சிற்றம்பலம் அறக்கட்டளையின்நிதிஅனுசரணையில்ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் சம்மேளனம், மற்றும் பீனிக்ஸ் இளைஞர் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில்இந்துபுரம்திருமுறிகண்டியில்அமைந்துள்ள புனித பவுல் முன்பள்ளியில் சிறுவர் விழிப்புணர்வுக்கருத்தரங்கு ஒன்றுகடந்த 30 ஆம் திகதி மதியம் 12.30 மணியளவில் இடம் பெற்றது.

இதன் போது துண்டுபிரசுரங்களும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் விளக்கமும் அளிக்கப்பட்டது. மேலும் கலந்துகொண்ட முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் மற்றும் இந்துபுரம் கிராமசேவகர் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் இளைஞர் சேவைகள் மன்றப் பணியாளர்கள் மற்றும் கிராம மக்கள் முன்பள்ளி மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (222)

## 'யூத் வித் ரலண்ட்' சிறப்பு ஆற்றல்களை வெளிப்படுத்தும் போட்டி

கிளிநொச்சி, ஓக. 12

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் "யூத் வித் ரலண்ட்" இளையோர்களுக்கான தனிப்பட்ட, சிறப்புத்திறமையையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் போட்டி வட மாகாணப் போட்டியாக கிளிநொச்சிக் கூட்டுறவு மண்டபத்தில் வரும் 25 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.


ஒவ்வொருகிராமத்தவரும் கிராமத்தில் உள்ள 15 தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்ட இளையோர்களைப் பங்குபற்றச் செய்ய முடியும். மேலதிக தகவலுக்கு இளைஞர் சேவைகள் உத்தியோகத்தரின் இந்தத் தொலைபேசி இயக்கத் துக்கு 0775015295 தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (222)

# பேராற்றின் மேலதிக நீரை விவசாயத்துக்கு விடுங்கள்

## அமைச்சர் ஹக்கீமுக்கு ப. சத்தியலிங்கம் கடிதம்

வவுனியா, ஓக 12

ஆசியஅபிவிருத்திவங்கியின்நிதிப்பங்களிப்புடன்வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் வழங்கலுக்கான நீர்த்தேக்கத்தில் இருந்து வெளியேறும் மேலதிகநீரை நெற்செய்கைக்குப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்குமாறு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் வவுனியாமாவட்ட மாகாண சபை உறுப்பினருமாகிய மருத்துவர் ப. சத்தியலிங்கம் மத்திய நீர்வழங்கல்அமைச்சர்ரவூக்ஹக்கீமுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.



அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு விவசாயிகளின் 165 ஏக்கர்வயல்நிலம் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது. இதற்குமாற்றீடாக அதேபகுதியில் காணப்பட்ட கைவிடப்பட்ட குளங்கள் 2 சீரமைக்கப்பட்டு அதன் கீழாக வயல் நிலங்கள் உருவாக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

எனினும் வயல் நிலங்கள் கையளிக்கப்பட்டு கடந்த மூன்று வருடங்களாகக் குளங்களுக்கு போதிய நீர்வரவில்லை. ஏற்கனவே விவசாய அமைப்புகளுடன் செய்து கொள்ளப்பட்டமுத்தரப்புஒப்பந்தத்தின் மூலம் சீரமைக்கப்பட்ட குளங்களுக்கான நீர்வரத்து தொடர்பில் எழுத்து மூலமாக உறுதிப்படுத்தப்படுமென உறுதியளிக்கப்பட்டது. மழைக்காலங்களில் அணைக்கட்டிலிருந்து வெளியேறும் மேலதிகநீரானது, ஆற்றில்பாய்ந்து கடலில்கலக்கின்றது.

எனவேஅணைக்கட்டிலிருந்து சுலுசு மற்றும் கால்வாய் அமைப்பதனூடாகச் சீரமைக்கப்பட்ட குளங்களின் நீர்வரத்தினை அதிகரிக்கமுடியும். இதனால் விவசாயிகள் பிரச்சினைகளின்றி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும்.

இதுதொடர்பில் வவுனியாமாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் என்னால்கொண்டுவரப்பட்ட பிரேரணை அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை அனுமதிக்குமிடத்து வேலையை செய்வதற்குத் தயாராக இருப்பதாக கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது. எனவே விவசாயிகளின்நன்மைகருதி மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்த அனுமதிக்குமாறுகேட்டுக்கொள்கின்றேன் எனஅந்தக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



மன்னார்மறைமாவட்டத்தின் தலைமன்னார் பங்கின் பாதுகாவலராம் புனித லவுறேன்சியாரின் ஆலய வருடாந்தபெருவிழா, பங்குத்தந்தை அருட்பணி இ. அகஸ்ரின் புஸ்பராஜா அடிகளாரின்தலைமையில் ஒன்பது நவநாட்களைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் இடம்பெற்றது. பெருவிழா திருப்பலியைஒப்புக்கொடுப்பட்டுதிருச்சுரூப்பவனிஇடம்பெறுவதை படத்தில் காணலாம். (60)


## வேலையாள் தேவை

*சாரதி -
தகைமை : 40 வயதிற்கு மேற்பட்ட AD சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.

*உதவியாளர் -
பொருள்களை வாகனத்தில் கொண்டு சென்று விநியோகப்பதற்கு உதவியாளர் தேவை. (யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கொக்குவில், உரும்பிராய், அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர்)

*கணக்காளர் - கணினி அறிவுள்ள கணக்குகளை மீள் பார்வை செய்வதற்கு 40 வயதிற்கு மேற்பட்டவர் தேவை. (A/L சித்தி)

தொடர்புகளுக்கு : (திங்கள் காலை 8 மணி முதல் 5 மணிவரை)
071 861 7918


## 2017 விதை உருளைக்கிழங்கு முற்பண மிகுதித்தொகை மீள அளித்தல்

சென்ற வருடம் (2017) விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கு விவசாயிகள் செலுத்திய பணத்தில் ஒருபகுதி மீளப் பெறப்படாமல் யாழ். மாவட்டச் செயலக கணக்கில் வைப்பில் உள்ளது. மேற்படி பணத்தை சம்பந்தப்பட்ட விவசாயிகள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து மாவட்டச் செயலக விவசாயத் திணைக்கள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**14.08.2018 - 28.08.2018 காலப்பகுதியில்**

**முற்பகல் 9.00 - பிற்பகல் 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.**

**குறிப்பு** : விதை உருளைக்கிழங்கு இனங்களுக்கு இடையே உள்ள விலை வேறுபாடு சம்பந்தப்பட்ட வகையிலேயே மிகுதிப்பணம் திருப்பி வழங்கப்படுகின்றது. இதுவரை மீளளிப்புத் தொகையை பெற்றுக் கொள்ளாத விவசாயிகள் உரிய காலப்பகுதியில் தவறாது பெற்றுக்கொள்ளவும்.

**தலைவர்: - இ.தெய்வேந்திரம்**

**யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தி - விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்.**

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் மகாலிங்கம் (மகான்)



பலாலிறோட், 2 ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் மகாலிங்கம் கடந்த (06.08.2018) காலமானார்.

அன்னார் மாணிக்கம் செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும் கந்தர் செல்லம்மா தம்பதியரின் அன்புமருமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் டெஸ்கன்னா, ரமேஸ்கன்னா, டெனியஸ்னா, நிந்துஜா, நீருஜா ஆகியோரின் அன்புத்தந்தையும் நேசமணி, கனகலிங்கம், சறோஜா, காஞ்சனா, வசந்தா, சாந்தலிங்கம் (கனடா), மஞ்சுளா, சசிகலா, ராஜலிங்கம், மல்லிகா, சித்திரா (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் செல்லம்மா காலஞ்சென்ற தம்பிராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இலட்சுமணன் நிரோசன்

## களஞ்சியம் தேவை

பொருள்களை களஞ்சியப்படுத்தி விநியோகிப்பதற்கு வீடு / கட்டடம் வாடகைக்கு (2500 சதுரஅடி) தேவை.
குறிப்பு - வாகனங்கள் நிறுத்தி வைக்கவும், வாகனங்கள் வந்து செல்வதற்கும் அகலமான பாதை இருத்தல் வேண்டும்.
(பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து அச்சுவேலிக்கு இடைப்பட்ட பிரதேசமாக இருத்தல் வேண்டும்.
(ஆவரங்கால், நவக்கிரி) தொடர்பு - 071 861 7918

ஓம் விராட்விஸ்வ பிரம்மனே நமஹ

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 . 04 . 1953



மறைவு 07 . 08 . 2013

### இராசையா சரவணபவன்

திதி: பிரதமை (12.08.2018)


பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
உங்கள் நினைவில்
மிதக்கின்றோம் அப்பா!

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### ஆசைப்பிள்ளை அன்ரனி லியோபோல் (பொன்னு)



பிறப்பு 31.05.1966 இறப்பு 08.08.2018

இளவாலையைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Annapaulowna வை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை அன்ரனி லியோபோல் (பொன்னு) (08.08.2018) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப் பிள்ளை மேரி மகடலின் (இளவாலை) தம்பதி யரின் அன்புமகனும் செபமாலை அல்பேட் மேரி திரேசா (மட்டக்களப்பு) தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்டெலா ராஜினியின் அன்புக்கணவரும் யூடிற், ஜெனி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஞானரட்ணம் (ஒலிவர், ஆசிரியை இளவாலைக் கன்னியர் மடம்) மேரி அக்னஸ் (கிளி, லண்டன்), மேரித்திரேசா (சாந்தி, கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆனந்தராஜா (இலங்கை), அருள்நேசன் (லண்டன்), அன்ரனிராஜன் (கனடா), வீனஸ் ரஞ்சன், இக்னேசியஸ் ரூபன், பிரான்சிஸ் அமலன், ஜெனிற்றா, லதா (இலங்கை), தேவரட்ணம் மனுவேற்பிள்ளை (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (14.08.2018) நெதர்லாந்தில் Annapaulowna இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0031 657298002 (மனைவி, ராஜினி, நெதர்லாந்து),
0094 212211921 (ஒலிவர், இலங்கை)
0094 771117658 (தேவரட்ணம், இலங்கை)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 09 . 06 . 1960

இறப்பு 11 . 08 . 2018

### திருமதி புஸ்பமாலினி மகாதேவன்

குருநகர் வீதி, கைதடி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், தலையாழி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பமாலினி மகாதேவன் நேற்று (11.08.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொன்னம்பலம் மகாதேவன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளியம்மை தம்பதியரின் இளைய மகளும், பொன்னம்பலம் - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, நடராசா மற்றும் தர்மராசா, நடராசா, புஸ்பமலர், புஸ்பலீலா, புலேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வராசா, செல்வமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2018) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பொ.மகாதேவன் (கணவர்)

077 483 1757

## வாடகைக்கு

நெஹிவளையில் மலர் Hostel இல் படிக்கும் / வேலைசெய்யும் ஆண்கள் தங்குவதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய Room கள் நாள், கிழமை, மாத, வருட அடிப்படையில் வாடகைக்குண்டு.
077 742 3532 / 077 799 9361 (ACO/303) (10)

## கடை வாடகைக்கு

சுண்டிக்குழி பாடசாலைக்கு அருகில் உள்ள கடை வாடகைக்கு விடப்படும்.
T.P: 0777 242427/0777412713 (CS/18945) (10)

## சமையலாளர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உணவகம் ஒன்றுக்கு ஆண், பெண், சமையலாளர் தேவை.
T.P: 077 194 2175 (CS/18916) (10)

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இங்கிலாந்து நிறுவனத்தின் கிளை நிறுவனத்தில் பணியாற்ற படித்த பெண் பணியாளர்கள் தேவை.
தொடர்பு: 076 618 5174

## வாடகைக்கு

நல்லூரில் சிறிய குடும்பத்திற்கு உகந்த ஓர் அறை, இணைந்த குளியலறை உடன்கூடிய வீட்டின் பகுதி வாடகைக்கு உண்டு. வாடகை 15000/=, 1 வருட வாடகை முற்பணம்.
076 216 0099 (CS/18959) (10)

## வேலையாள்கள் தேவை

மிக்சர் தொழிற்சாலைக்கு வேலையாள்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்)
T.P: 077 54 600 28 (CS/18960) (10)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில் அமைதியான நல்ல சுற்றாடலில் வீடு கட்டுவதற்கு உகந்த 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 076 9646 185

## கணினி அறிவுள்ள வேலையாள் தேவை

யாழ் நகரிலுள்ள தனியார் நிறுவனத்திற்கு கணக்குகள் பதிவதற்கு கணினி அறிவுள்ள ஆண் வேலையாள் தேவை.
077 071 7307

## தவறிவிட்டது

NP - BBM 7018 மோட்டார் சைக்கிளின் பின்பக்க இலக்கத்தகடு மட்டுவிலுக்கும் நாவற்குழிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
077 025 3545

## வேலையாள்கள் தேவை

புடைவைக் கடை ஒன்றுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.
T.P: 077 9195 439 (CS/18948) (10)

## வேலையாள்கள் தேவை

உயர்தர சைவ உணவகம் ஒன்றுக்கு சமையலாளர், றொட்டி, தோசை போடக் கூடியவர்கள், உணவு பரிமாறுபவர்கள் உடனடியாகத் தேவை.
திறமைக்கேற்ற ஊதியம். நேரில் பேசிக் கொள்ளலாம்.
தொடர்பு - 0212216779

## JCB DOZER வாடகைக்கு



077 871 5430, 076 857 3798
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட Hotel ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை.
1. முகாமையாளர்
2. வரவேற்பாளர் (பெண்)
(மூன்று மொழிகளும் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது)
3. Roomboy
4. சமையலாளர்கள் (இந்திய உணவு வகைகள் தயாரிக்கக் கூடியவர்கள் மற்றும் கொத்து, Rise தயாரிக்கக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.)
நான்கு மணிக்கு முன்னர் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு - 076 359 1514

## மாடி வீடு வாடகைக்குண்டு



உரும்பராய்,
ஆனைக்கோட்டையில்
பிடாரி அம்மன் கோயில்
அருகில் சகல நவீன
வசதிகள் கொண்ட
மாடி வீடுவாடகைக்கு
உண்டு.அரச, அரச
சார்பற்ற நிறுவனங்களும்
விரும்பத்தக்கது.

077 136 3047

## அக்குபஞ்சர் அறிமுகப் பயிலரங்கம்

தமிழில் அக்குபஞ்சர் பற்றிய முழு விவரங்களை அறிந்து கொள்ள ஒரு அருமையான வாய்ப்பு. அடுத்த சனி, ஞாயிறு தினங்களில் (18,19) காலை 9 முதல் மாலை 5 மணிவரை Yarl Crown Inn இல் (இல.41, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்.) எனது தலைமையில் (Dr.R. சிவகுருநாதன்) நடத்த உத்தேசித்துள்ளேன். விசேட பயிற்சியாளர், பேச்சாளர் Dr. ரபீக் (தமிழ்நாடு) கலந்து சிறப்பிக்கிறார். அனைவரும் பயிலலாம்.

விவரங்களுக்கு:
சித்த வைத்தியர். Dr.R. Sivagurunathan
0777 301 669

தீராத நோயாளரும் பயன் பெறலாம்.

## CENTRE FOR HOLISTIC HEALING

DIPLOMA IN PSYCHOLOGICAL COUNSELING

### Walk in Interview (18.08.2018)

எம் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஒரு வருட வார இறுதி கற்கை நெறியாகிய Diploma in Psychological Counseling, 2018 - 2019 புதுமுக மாணவர்களிற்குரிய நேர்முகத்தேர்வு எதிர்வரும் 18.08.2018 சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை கீழ்வரும் முகவரியில் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தாதிமார்கள், சமூகபணியில் ஈடுபடுபவர்கள் மற்றும் விண்ணப்பிக்காதவர்களும் தம் சுயவிவரக்கோவையுடன் நேர்முகத்தேர்வில் பங்குபற்றலாம்.

தொடர்புகளுக்கு - 077 917 7230, 077 737 0494, 021 205 4443
இடம் - நிறைவாழ்வுமையம், மக்லியோட் வைத்தியசாலை வளாகம், இணுவில்.

## வடமாகாணத்தில் உடனடியாக விற்பனைக்குள்ள ஆதன விவரங்கள்

JAFFNA REAL ESTATE

1. நல்லூர் அண்மையில் மாடி வீடு + வீடு - 2 கோடி 60 இலட்சம்
2. பலாலி வீதி (வியாபார நோக்கத்திற்கு உகந்தது) 5 பரப்பு - 9 கோடி
3. யாழ். பலாலி வீதி ஒழுங்கையில் காணி + மாடி வீடு 2 1/2 பரப்பு - 1 கோடி 80 இலட்சம்
4. ஞானம்ஸ் ஹோட்டல் அருகில் 2 1/2 பரப்பு காணி - 2 கோடி 38 இலட்சம்
5. கச்சேரியடி A9 Road இல் 1 3/4 பரப்பு - 75 இலட்சம்
6. கச்சேரி நல்லூர் வீதியில் 2 பரப்பு - 90 இலட்சம்
7. பலாலி வீதி, கோண்டாவில் காணி + வீடு 3 3/4 பரப்பு - 1 கோடி 60 இலட்சம்
8. சங்கானை காணி வீடு - 80 இலட்சம்
9. தெல்லிப்பழை கொல்லங்கலட்டி 10 பரப்பு - 20 இலட்சம்
10. கொக்குவில் மேற்கில் 2 1/2 பரப்பு - 60 இலட்சம்
11. இளவாலை சேந்தான்குளம் (பண்ணைக்கு உகந்தது) 40 பரப்பு - 40 இலட்சம்
12. சாவகச்சேரி, கல்வயல் 9 1/2 பரப்பு காணி - 28.5 இலட்சம்
13. கிளிநொச்சி ஆஸ்பத்திரி முன்பாக 2 பரப்பு - 20 இலட்சம்
14. கோண்டாவில் K.K.S. வீதியில் 1 1/2 பரப்புக் காணி 4 கடை 2 வீட்டுத் தொகுதி - 2 கோடி 30 இலட்சம்
15. கட்டப்பிராய் சந்தி மாடியுடன்கூடிய கடை - 55 இலட்சம்
16. நாவற்குழி A9 வீதியில் காணி 20 பரப்பு - 2 கோடி 80 இலட்சம்
17. காங்கேசன்துறை தல்சவன அருகில் கடற்கரைஓரமாக 13 பரப்புக்காணி
18. பருத்தித்துறை வீதி, அச்சுவேலி, வல்லைச் சந்தி 36 பரப்பு
19. வேம்பிராய் 83 பரப்பு வயல்காணி
20. சாவகச்சேரி கனகம்புளியடி சந்தி (கடைத்தொகுதிக்கு ஏற்றது 4 பரப்பு காணி)
21. தெல்லிப்பழை சந்தி அருகில் (திருமண மண்டபத்திற்கு ஏற்றது) 10 பரப்பு காணி
22. வறுத்தலைவிளான் 40 பரப்பு தோட்டக்காணி - 60 இலட்சம்
23. தெல்லிப்பழையில் 4 1/2 பரப்பு காணி - 22 இலட்சம்
24. தெஹிவளையில் 2 படுக்கையறையுடன்கூடிய அடுக்குமாடி குடியிருப்பு - 2 கோடி
25. வவுனியா பண்டாரிக்குளம் பிரதான வீதியில் 2 பரப்பு காணி + வீடு - 85 இலட்சம்

மேலும் பல காணிகள், வீடுகள், பண்ணைகள் உடன் விற்பனைக்கு. ஆர்வம் உள்ளவர்களுக்கு விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
உடன் அழையுங்கள் - 0094 762142555 (Viber/ Whatsapp)
காணிகள் வீடுகளை இலகுவாக வாங்க விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள்.
மேலதிக தகவல், படங்களை www.jaffnarealestate.com இல் பார்வையிடவும்.

Jaffna real estate (pvt) Ltd.
34/2, Sir pon. Ramanathan Rd.
Thirunelveli, Jaffna.



அச்சுறுத்தலுக்கு மத்தியில் மன்னாரில்

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பணிமனை திறந்தனர்

மன்னார், ஓக. 12

புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத்தேடும் குடும்பங்களைச்சேர்ந்தவர்கள், தமக்கான பணியகம் ஒன்றை மன்னாரில் நேற்றுத் திறந்து வைத்துள்ளனர்.

மன்னார் சாவற்கட்டுப் பகுதியில் பணியகம் திறந்து வைக்கப்பட்டது. பங்குத்தந்தை ஜெயபாலன் உட்பட வடக்கு மாகாண சபையின் பா. டெனீஸ்வரன், ஜீ. குணசீலன், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம்அன்ரன்டேவிட்சன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோரின் ஒத்துழைப்போடு குறித்த பணியகம் திறந்துவைக்கப்பட்டது.

இந்தப் பணியகத்திலிருந்து வெளிமாவட்டங்களில்இயங்கும் காணாமல்ஆக்கப்பட்டவர்களின் சங்கம் அல்லது அமைப்புகளோடு தொடர்பைப் பேணி எமக்கான உரிய தீர்வைப் பெறப் போராடுவோம் என்று காணாமல்ஆக்கப்பட்டோரின்உறவுகள் தெரிவித்தனர்.

இறுதிப்போர் முடிவடைந்த பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்வரும்பொழுதுமுள்ளிவாய்க்கால் பகுதியில் விசாரணைகளுக்காகப் பெற்றோர் தமதுபிள்ளைகளைஇராணுவத்தினரிடம் ஒப்படைத்திருந்தனர். அப்படிஒப்படைக்கப்பட்டபலருக்கு என்ன நடந்தது என்று இன்னும் தெரியாதுதாய். தந்தை. பிள்ளைகளைத் தேடியவாறு அனைத்து மாவட்டங்களிலும்,

அரசுகாணாமல்ஆக்கப்பட்டவர்களுக்கு எந்த ஒரு தீர்வையும் தராது. அதற்கான பொறுப்புக்கூறலும் இன்றிக் காலத்தை இழுத்தடித்து போராட்டத்தை மறக்கச்செய்யும்செயற்பாடுகளில் முனைப் புக் காட்டி வருகிறது என்றுஅவர்கள்நேற்றும்குற்றஞ்சாட்டினர்.

அரசின்கபடத்தனத்தைஉலகுக்குக் காட்டுவதற்காகவும் காணாமல்ஆக்கப்பட்டஉறவுகளுக்காக நீதியை விடாப்பிடியாகப் பெற்றுக்கொள்வதற்காகவும் இந்தப் பணியகம் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பணியகம் திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நாளில் இருந்து ஏற்பாட்டாளர்களுக்குத் தொலைபேசி மூலம் கொலை மிரட்டல்கள் இருந்தன. அதையும்தாண்டியேஇந்தப்பணியகத்தைத் திறந்ததாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்டசுமார்250க்கும்மேற்பட்டவர்கள் மன்னாரில் உள்ளனர். புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்களால் சிலர் இந்த நிகழ்வில் பங்குபெறவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

எங்களைப் பகடைக்காய்களாக வைத்துப் பலர் பலவகைகளில் நிதிகளைப் பெற்று சுகபோகமாக வாழ்கின்றார்கள். எங்களுக்குப் பணம் தேவையில்லை. எமது பிள்ளைகளைஎம்மிடம்ஒப்படையுங்கள்அல்லதுஎமதுகைகளால் இராணுவத்தினரிடம் ஒப்படைத்த அவர்களுக்கு என்ன நடந்தது என்றாவது கூறுங்கள் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்றுத் தெரிவித்தனர்.

இந்த அலுவலகமானது தனியாருக்குச்சொந்தமானவீடுஒன்றில் தற்போதுஇயங்குகிறது. (4.213)

---

# கசிப்பு வைத்திருந்த இரண்டு பேருக்கு ரூ.50 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி, ஓக. 12

சட்டவிரோதமாகக் கசிப்பு வைத்திருந்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்று 50 ஆயிரம் ரூபா தண்டம்விதிக்கப்பட்டது.

கொடிகாமம் எருவன் பகுதியைச் சேர்ந்த ஒருவர் 750 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்தார் என்றகுற்றச்சாட்டில்கைது செய்யப்பட்டார். மந்துவிலைச் சேர்ந்த ஒருவர் 375 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்தார் என்றகுற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

கொடிகாமம்பொலிஸார்இருவருக்கும்எதிராகச்சாவகச்சேரிநீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்ககளை விசாரித்த பதில்நீதிவான் செ. கணபதிப்பிள்ளை, எருவன் வாசிக்கு 30 ஆயிரம் ரூபாவும் மந்துவில் வாசிக்கு 20 ஆயிரம் ரூபாவுமாக 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். இதுதவிர, போக்குவரத்து விதிமுறைகளைமீறிவாகனம்செலுத்தியதாகக்கொடிகாமம்பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அவற்றை விசாரணைக்கு எடுத்த பதில்நீதிவான், காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கும் மதுபோதையில் வாகனம் செலுத்திய மற்றொருவருக்கும் தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டம் விதித்தார். (4.9)

---

அரசு நடவடிக்கை எடுப்பதால்

# கடன் தள்ளுபடியா இல்லையா? அடுத்த கட்டத்துக்கு வாருங்கள்

அமைப்புக்கள் அறிவுறுத்திக் கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஓக. 12*

*நுண்கடன் சுமைகளில் இருந்து விடுபடுவதற்கு அரசு ஏற்பாடு செய்வதாக அறிவித்துள்ளதால், நீங்கள் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றனவா? இல்லையா? என்பதை நீங்கள் கடன் பெற்ற நிறுவனத்திடம் சென்று முதலில்உறுதிப்படுத்துங்கள். தவறானமுடிவெடுப்பதைஇனியாவதுநிறுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்கப்படுகின்றனர்.*

கிளிநொச்சிமாவட்ட அரசசார்பற்ற மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் சம்மேளனம், கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்றஅமைப்புக்களின் இணையம் மற்றும் கரைச்சிச் சிவில் சமூக வலையமைப்பு என்பன இவ்வாறு அறிவுறுத்தியுள்ளன.

அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

நுண்கடன்என்னும்மாயவலைக்குள் விழுந்து அதிலிருந்து மீண்டு வர முடியாமல் நீண்ட காலமாக எமது மக்கள் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நுண்கடன் பிரச்சினைக்கு முகங்கொடுக்க முடியாமல் தமது உயிர்களை மாய்த்துக் கொண்டவர்கள் மற்றும் தற்கொலைக்கு முயற்சித்துக் காப்பாற்றப்பட்டவர்கள் ஏராளம். இந்தநுண்கடன்தாக்கங்களில் இருந்து எமது மக்களை விடுவிக்கக்குறிப்பாகஎமதுபெண்களை விடுவிக்கக்கோரிப் பல்வேறு விதங்களில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன. மத்திய வங்கி ஆளுநருடனான கலந்துரையாடல்கள்போன்றவற்றின்பிரதிபலனாகஅரசுபின்வரும் சலுகைகளை மக்களுக்குக் குறிப்பாக நுண்கடன் சுமையால் பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு வழங்க முன்வந்துள்ளது.

**சலுகைகள்**

1. நுண்கடன் பிரச்சினைகளால் பாதிப்படைந்த 12மாவட்டங்களில் உள்ள மக்களில் குறிப்பாக 75 ஆயிரம் பெண்களின் நுண்கடன்கள்தள்ளுபடிசெய்யப்படும்என்று நிதிஅமைச்சர்குறிப்பிட்டுள்ளதோடு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத்தொடங்கியுள்ளார்.
2. இந்தச்சலுகை ஒருலட்சம் ரூபா அல்லது அதற்குக் குறைவான நுண்கடன்களைப் பெற்று நுகர்வுத் தேவைக்காகப் பெற்ற கடன்கள்அல்ல. 2018ஆம்ஆண்டுஜூன் மாதம்30ஆம்திகதிக்குள்தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்குக் கட்டுப்பணத்தை மீளச்செலுத்த முடியாமல் போன பெண்களின் கடன்கள்தள்ளுபடிசெய்யப்படும்.
3. ஒருவர்ஒருலட்சம்ரூபாஅல்லது அதற்குக்குறைவாகநுண்கடன்களைப் பெற்றிருப்பின் அவற்றுள் மிகவும் கூடுதலான பெறுமதியுள்ள கடன் மட்டுமே தள்ளுபடி செய்யப்படும். இந்த நுண்கடன்களைத் தள்ளுபடி செய்ய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளாக,

*மேற்குறிப்பிட்டநிபந்தனைகளுக்குள் அடங்கும் நுண்கடன் பயனாளிகளின் பெயர் விவரங்களை நிதி அமைச்சு அந்தந்த நுண்கடன் நிறுவனங்களிடம் இருந்து கோரியுள்ளது. இந்தப்பெயர் விவரங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர்அனைத்துநிதிநிறுவனங்களும் திறைசேரிக்கு அனுப்பி வைக்கும்படிகேட்கப்பட்டுள்ளனர்.

*அதன்பின்னர் அந்தப்பெயர்ப்பட்டியல்கள் அந்தந்த மாவட்டச் செயலருக்கு உறுதிப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்படும். மாவட்ட செயலர்கள் பட்டியலை உறுதிப்படுத்தி நிதி அமைச்சுக்கு அனுப்பி வைப்பர்.

*திறைசேரிஇந்தப்பெயர்ப்பட்டியல்களைத் தொகுத்த பின்னர் மக்களின்கடன்களைஅடைப்பதற்கான நிதியை வழங்குவதற்கான உத்தரவாதக் கடிதத்தை அந்தந்த நுண்கடன் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கும். இந்தச்செயற்பாடு எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் நடைபெறும் என்று எதிர்வு கூறப்படுகின்றது. *அத்துடன்கடன்விலக்களிப்புக்குள்உள்வாங்கப்பட்டமக்களுக்கு அவர்களுடைய கடன்கள் அடைக்கப்பட்டுவிட்டதற்கான உறுப்படுத்தப்பட்ட கடிதமும்திறைசேரியால்அனுப்பிவைக்கப்படும்.

**செய்ய வேண்டியவை**

*நீங்கள்பெற்றகடன்கள்தள்ளுபடி செய்யப்படுகின்றனவா? இல்லையா? என்பதை அறிந்து கொள்வது உங்கள் பொறுப்பு. இதற்காக நீங்கள் கடன்பெற்ற நிறுவனக் கிளைகளுக்குச் சென்று உங்கள் பெயர்கள்உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துங்கள்.

*உங்களுடையபெயர்கள்பட்டியல்களில் சேர்க்கப்படவில்லை என்று கருதினால் நீங்களும் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கடன் விலக்களிப்பு பெறுவதற்கு உரித்துடையவர்கள் என்று கருதும் பட்சத்தில் உங்களுடைய அரச அதிகாரிகளுக்கு இதனைத் தெரியப்படுத்துங்கள்.

விரைந்து செயல்படுங்கள்! கடன் சுமைகளில்இருந்துமீண்டிடுங்கள் - என்றுள்ளது. (4)

---

# குருத்தோலையிலுள்ள 'பங்கசு' நீக்கமுடியுமா?

ஆய்வு நடக்கிறது என்கிறது சபை

யாழ்ப்பாணம். ஒக. 12

பனை உற்பத்திப் பொருள்கள் செய்யும் ஓலைகளில் (குருத்து ) பங்கசு தாக்கத்தைக்கட்டுப்படுத்தமுடியுமா? அவ்வாறு செய்து ஓலையை நீண்ட காலம்எவ்வாறுபாதுகாப்பதுஎன்பது தொடர்பில் ஆராய்ச்சி நடைபெற்று வருவதாக யாழ்ப்பாண பனை அபிவிருத்திசபையின்விரிவாக்கல்முகாமையாளர்கெ. கோபாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

பனை சார்ந்த உற்பத்தி பொருள்களைச் செய்வதற்குப் பனையின் அனைத்துப் பாகங்களும் பயன்படுகின்றது. பனங் குருத்தில் பல்வேறு பொருள்கள்உற்பத்திசெய்யப்படுகின்றன. அதற்கான கேள்வியும் அதிகமாக உள்ளது. எல்லா நேரத்திலும் உடனேயே பனங் குருத்தைப் பெறுவது கடினம். உதாரணமாக மழை காலங்களில்பனையில்ஏறிக்குருத்து வெட்டுவது கடினம். ஆகவே அதிகளவான குருத்துக்களை முதலில் சேகரித்து பாதுகாத்து வைத்திருந்தால் அதனைப் பின்னர் உற்பத்திப் பொருள்கள் செய்வதற்கு பயன்படுத்தலாம்.

ஆனால் குருத்தை நீண்ட காலம் சேகரித்து வைக்க முடியாது. பங்கசு தாக்கத்தால்அது பழுதடைந்துவிடும். நிறம் வெளிறும் போன்ற பல்வேறு பிரச்சினைகள்ஏற்படும். ஆகவே பங்கசுத்தாக்கத்தைக்கட்டுப்படுத்திகுருத்துகளை பாதுகாக்கும்முறை தொடர்பில் பனை ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வுகள் நடைபெறுகின்றன. ஆராய்ச்சியின் பின்னர் அந்த நடைமுறைகளைநாம்பயன்படுத்துவதன் மூலம் எமக்குத் தேவையான அதிகளவான குருத்துக்களை உரிய காலத்தில் சேமித்து வைக்க முடியும் -என்றார். (4.7)

---

# கெரோய்னுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 12

கெரோய்ன் போதைப்பொருளுடன் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் ரோந்து சென்றபோது குருநகர் பகுதியில் அவரைச் சந்தேகத்தில் விசாரித்து அவரைச் சோதனையிட்டபோதே அவரிடம் கெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாசையூர்ப் பகுதியைச் சேர்ந்த அவரிடமிருந்து 925 மில்லிக்கிராம் கெரோய்ன் மீட்கப்பட்டது என்று யாழ்ப்பாணப் பிராந்தியப் பொலிஸ் பொறுப்பதிகாரி டீயுல்வேவ தெரிவித்தார். (4)

# நல்லூர்த் திருவிழாக் காலத்தில் இந்த நடைமுறைகள் கட்டாயம்

## சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தல்

நல்லூர் கோவில்த் திருவிழாக்காலத்தில் பின்வரும் சுகாதார நடைமுறைகளைத் தவறாது பின்பற்றுமாறு யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

1. உற்சவகாலத்தில்கோவிற்சுற்றாடலிலும்கோவிலுக்குவரும்பாதைகளிலும் தாங்கள் உள்ளெடுக்கக் கூடிய குடிதண்ணீர் மற்றும் உணவுப்பொருள்கள்சுகாதாரமானவைஎன்பதைஉறுதிப்படுத்திக்கொள்வதோடு அது தொடர்பிலானமுறைப்பாடுகளை0212222645என்னும்தொலைபேசிஇலக்கத்துக்கோ அல்லதுநல்லூர்ப்பிரதேசபொதுச் சுகாதாரப்பரிசோதகரின்அலைபேசிஇலக்கமான0718628519என்ற இலக்கத்துக்கோ தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
2. குழந்தைகள், சிறுவர்கள் விரும்பி உண்ணும் இனிப்பு வகைகள், சிற்றுண்டிகள் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்பட்டு அல்லது விநியோகிக்கப்படும்பட்சத்தில்உங்கள்பிள்ளைகளின் ஆரோக்கியத்தைக் கருத்திற்கொண்டு அவற்றை வாங்கிக் கொடுப்பதைத் தவிர்ப்பதோடு குறித்த தொலைபேசி இலக்கங்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
3. அதிகளவான சீனி (சிவப்பு,செம்மஞ்சள் ஒட்டப்பட்ட குடிபானங்கள்) நிறமூட்டிகள், சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட ஆரோக்கியத்தைக் கொடுக்கும்உணவுகளைஇயன்றளவில்தவிர்த்துப்பிள்ளைகளின் நலனைப்பாதுகாத்துக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.
4. வீதியில் பரப்பப்பட்டிருக்கும் மண்ணின் சுகாதாரத்தைப் பேணும் முகமாக ஆலய சுற்றாடலில் வதியும் மக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களைத் திருவிழா நாள்களில் வீதிக்கு வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், கோவிலுக்குவரும்அடியவர்கள், தம்முடன்தமதுவளர்ப்பு நாய்களை அழைத்து வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறீர்கள். அறிவுறுத்தல்களை மீறும் பட்சத்தில் அவை கட்டாக்காலிநாய்களாகக்கருதப்பட்டு அப்புறப்படுத்தப்படும் அல்லது நாய்களைப் பதிவுக்கட்டணத்தின் பிரகாரம் சபையால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன் குடியிருப்பாளர்கள் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு வழங்கப்படும் பூச்சி மருந்தை நாய்கள் உட்கொள்கின்றனவா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
5. கோவில்சுற்றாடலில்பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருள்களை எடுத்துவருதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ஒத்துழைப்புவழங்குமாறும்பொதுமக்கள் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
6. அங்கப்பிரதட்சணம் மற்றும் அடியளித்தல் போன்ற நேர்த்திக் கடன்களைநிறைவேற்றும்அடியவர்களின்நன்மைகருதியும்மண்ணின் சுகாதாரத்தைப் பேணும் வகையிலும் கோவில் சுற்றாடலில் (வெளி வீதித்தடைக்குள்) பாதணிகள் அணிந்துசெல்வதைமுற்றாகத்தவிர்க்குமாறும் கோவில் வீதிகளில் பரப்பப்பட்டுள்ள மணலின் மீதிருந்து உணவுப் பொருள்களை உண்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் (கச்சான் கோது போடுதல், கார உணவு மீதிகள் படிந்த ரெஜிபோம் மற்றும் பேப்பர், பைகள் போடுதல் போன்றவற்றைத் தவிர்த்தல்) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். அவற்றைக் கழிவுத் தொட்டிகளில் இட்டு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.
7. ஆலயச்சூழலில் நடமாடும்போது மக்கள் கழிவுப் பொருள்களை வீச வேண்டிய சந்தர்ப்பங்களில் அவற்றைத் தரம்பிரித்து அதற்கென வைக்கப்பட்டுள்ள கழிவுப் பொருள்களில் இடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
8. திருவிழாக் காலங்களில் இயங்கும் தற்காலிக உணவு கையாளும் நிலையமாகஅமையும்வியாபாரநிலையமானாலும்உணவுகையாளும்நிலையத்தின் அடிப்படைத்தன்மைகள்பூர்த்திசெய்யப்படுவதை உறுதிப்படுத்துவதுடன் உணவுகையாள்வோர்தற்காலிகஅடிப்படையிலேனும் அனுமதிகளை வைத்திருத்தல் அவசியம். இந்த நடைமுறை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும். என்பதையும் வலியுறுத்திக் கூறுகிறோம். மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வது தவிர்க்கப்பட முடியாதது. அதனால் நேர காலத்துடன் எமது பணிமனையின் தலைமைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரைத் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.
9. அலயசுற்றாடலில்தற்காலிகசுகாதாரநிலையங்கள்அமைக்கப்படும் பட்சதிதல் அவற்றில் ஒலிபெருக்கிகளைச்சத்தமாக அலறவிடுவதோ திரைப்படப்பாடல்இசைப்பதையோதவிர்த்துஒத்துழைப்புநல்குமாறு கேட்டுக்கொள்ளப்டுகிறீர்கள்.
10. வீடுகளில் குறித்த தினங்களில் மட்டும் தண்ணீர்ப் பந்தல் மற்றும் அன்னதானநிகழ்வுகளைநடைமுறைப்படுத்துபவர்கள் அவற்றைச் சுகாதாரநடைமுறைக்கு அமையநடத்துமாறும்மீறும்பட்சத்தில்சட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.
11. பொதுமக்கள் தங்கள் வீடுகளில் டெங்கு நுளம்புகள் பெருகாதவாறு சுற்றாடலைப் பேணுவதுடன் திருவிழாவை முன்னிட்டு பிற மாவட்டங்களில் இருந்து தங்கள் வீட்டுக்கு வருகைதரும் விருந்தினர்கள் காய்ச்சலுடன் வரும் பட்சத்தில் உரிய மேலதிகநடவடிக்கைகள் மேற்கொண்டு (காய்ச்சலுக்கு உட்பட்டவரை மருத்துவ பரிசோதனை செய்தல், நுளம்பு வலைகளை உபயோகிக்கச் செய்தல், நுளம்புக் கடியிலிருந்து ஒவ்வோருவரையும் பாதுகாத்தல்.) உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
12. கோவில் சுற்றாடலிலும் மாநகர சபை எல்லைக்குள்ளும் பொதுமக்கள்தமதுவீட்டுக்கழிவுகளை வீதிகளில்வீசிஆலயத்துக்குவரும்பக்தர்களுக்குஅசௌகரியத்தைஏற்படுத்தாதுசுற்றுப்புறச்சூழலில்சுகாதாரம் பேண ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறீர்கள்.
13. கோவிலுக்கு அண்மித்த சூழலில் வதியும் பொதுமக்கள் உற்சவ காலத்துக்கு முன்பாக தங்கள் வீட்டுக் கிணறுகளை இறைத்தும் நீர்த்தாங்கிகளைச் சுத்தம் செய்தும் வாராந்தம் கிணற்றுக்குக் குளோரின் இடுவதற்கு சுகாதார பகுதியினரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறீர்கள் - என்றுள்ளது. (4)

# விதை உருளைக்கிழங்கைப் பெற இந்த முறையும் மானியம் வேண்டும்

## சமாசம் அரசதலைவருக்குக் கடிதம்

**அச்சுவேலி, ஓக. 12**

**யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு இந்த வருடமும் மானிய விலையில் விதை உருளைக்கிழங்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கைவிடுத்து அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.**

யாழ்ப்பாணமாவட்டஉருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இவ்வாறு கடிதம் அனுப்பியுள்ளது என்று சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் காலபோக பயிர்ச் செய்கையில் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையை ஆர்வத்துடன் செய்து வருகின்றனர்.

விதை உருளைக் கிழங்கின் விலைஅதிகரிப்புபாதகமாகஉள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கடும் வறட்சி மற்றும் காலநிலை சீர்றறதன்மைபாதிப்பைஏற்படுத்தியுள்ளது.

இதனைச்சுட்டிக்காட்டிஇந்தவருடம்விதைஉருளைக்கிழங்குக்கு மானிய உதவி வழங்க வேண்டும் என்று கோரியுள்ளோம் என்று சமாசத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வருடமும் இவ்வாறு கோரிக்கை விடுத்துக் கடிதம் அனுப்பியிருந்தோம். கடந்தவருடமும்அதற்குமுன்னையவருடமும் 50 வீத மானிய அடிப்படையில் விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டிருந்தன. தலா200 கிலோகிராம் நிறையில் அவை வழங்கப்பட்டன.

50 கிலோகிராம் விதை உருளைக்கிழங்கு13 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியானது. அவை 50வீதமானியத்தில்6ஆயிரத்து 500ரூபாவுக்குவிவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் மட்டும் 700க்கும் மேற்பட்ட விவசாயி களுக்கு இவை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தமுறை கடந்த காலத்தை விட அதிகளவான நிறையில் உருளைக்கிழங்குகள்தேவைப்படும் என்று விவசாய சம்மேளனம்தெரிவித்துள்ளது. (4.11)

# நடமாடும் சேவை மன்னாரில் இன்று

## அயலுறவு அமைச்சர் திலக்மாரப்பன கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம். ஓக. 12

இந்தியாவில் இருந்து நாடு திரும்பி மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும்வகையில்நடமாடும்சேவை ஒன்று இன்று இடம்பெறவுள்ளது. அயலுறவு அமைச்சின் ஏற்பாட்டில் இது இடம்பெறவுள்ளது. அயலுறவு அமைச்சர் திலக்மாரப்பன இதில் கலந்துகொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் நகர சபை மண்டபத்தில் இன்று காலை முதல் மாலை வரை நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து 2010க்குப் பின்னர் தாயகம் திரும்பிய மக்களில் மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 318குடும்பங்களைச்சேர்ந்த3ஆயிரத்து 913 பேரினதும் சகலவிதமான சட்ட ஆவணங்கள் மற்றும் நெருக்கடிகள் தொடர்பில் தமக்கான பிரச்சினைகளுக்குஇந்தநடமாடும்சேவையில் தீர்வுகாண முடியும் என்று மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் போர் இடம்பெற்ற காலத்தில் ஏதிலிகளாக இந்தியாவுக்குத் தப்பிச்சென்ற குடும்பங்களில் போர்ஓய்வுக்குப்பின்னர்நாடுதிரும்பிய குடும்பங்களின் சட்டபூர்வமான ஆவணங்களான பிரஜாவுரிமை, பிறப்புச்சான்றிதழ், திருமணப்பதிவுப் பத்திரம், அடையாள அட்டை உள்ளிட்டபல ஆவணங்களையும்வழங்கும் நோக்கிலேயே மேற்படி நடமாடும்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் அகதிகளின் நலன் மேம்பாட்டு நிறுவனமான ஒபர் நிறுவனத்தின் அனுசரணையில்நடமாடும்சேவை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4.105)

# சமூக விரோதச்செயல்களுக்கு சர்வமதப் பேரவை கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 12

சமூகவிரோதச்செயல்கள்மற்றும் குள்ள மனிதர்களின் அட்டகாசங்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட சர்வமதப் பேரவையினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பேரவையினர் நேற்றுமுன்தினம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது,

மாவட்டத்தில் பல பிரதேசங்களில்தொடர்ந்து, மிகவும்மோசமாகச் சமூக விரோதிகளால் நடத்தப்பட்டுவரும்வாள்வெட்டுச்சம்பவங்களையாழ்ப்பாண மாவட்ட சர்வமதப் பேரவை வன்மையாகக்கண்டிக்கிறது.

வாள்வெட்டுச் சம்பவங்கள், குழு மோதல்கள், பாலியல் துர்நடத்தைகள், போதைப் பொருள் பாவனை மற்றும் குள்ள மனிதர்களின் அட்டகாசம் போன்ற சமூக விரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இவைதொடர்பானசெய்திகளே தினசரிப் பத்திரிகைகளின் அதிகபக்கங்களைநிரப்புகின்றன. இதனால் சாதாரண மக்களின்அன்றாடவாழ்க்கை மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. மக்கள் அச்சத்தில் பொழுதைக் கழித்து வருகின்றனர்.

மாவட்டத்தில்மீண்டும்அமைதியான சூழலை உருவாக்கவும்மக்கள்மீளஇயல்புவாழ்க்கைக்கு திரும்பவும் அனைவரும் பாடுபட வேண்டியது அவசியம். இந்தஇக்கட்டானநிலையில் அமைதி நிலைமை ஏற்படுவதற்குப் பொறுப்புடைய பொலிஸார் இந்தவிடயத்தில் மிகவும் முனைப்புடன் செயற்பட வேண்டியது அவசியம்.

கொக்குவிலில் அண்மையில் நான்குக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் 9பேர் பயணித்துக் கிராம அலுவலர் பணியகம், வீடு ஆகியவற்றுடன் ஹயஸ் வாகனத்துக்கும் சேதம் விளைவித்துள்ளனர். அத்துடன் ஆபத்தான ஆயுதங்களுடன் வீதிகளில் நடமாடியமையும் குறிப்பிடத்தக்கது. மேற்படி பல சம்பவங்கள் தினந்தோறும் குடா நாட்டில் நடைபெற்று வருகின்றன.

எனவேஇந்தப்பிரச்சினைகள் தொடர்பாகப் பொறுப்பிலுள்ள அதிகாரிகள்துரிதநடவடிக்கை எடுத்து விரைவாக இயல்பு நிலைமையை ஏற்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (4)

# பொது இடத்தில் மது குடித்த இருவருக்கும் ரூ.2,000 தண்டம்

பொதுஇடத்தில்மதுஅருந்தியகுற்றத்துக்காக இருவருக்குத்தலா இரண்டாயிரம்ரூபாதண்டம்விதித்ததுயாழ்ப்பாணம்நீதிவான் மன்று.

குறித்த இருவரையும் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர்.

பொது இடத்தில் மதுபானம் அருந்தியமை மற்றும் மது போதையில் மக்களுக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய இருகுற்றச்சாட்டுகள்சுமத்தப்பட்டன. இருவரும்தமதுகுற்றங்களை ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து இருவருக்கும் கடந்த வாரம் தண்டம் விதிக்கப்பட்டது. இனியும் இவ்வாறான வழக்குகளில் மன்றில் முற்படுத்தப்பட்டால் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்று நீதிவான் எச்சரித்தார். (4,114)

LG
Life's Good

LG டோ கூலிங் இன்வெர்டர்

மற்றவர்கள் தமது inverters மற்றும் gasses
மிகச்சிறந்தவை என கூறுகின்ற போதும்.

நாம் எமது இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸர் + டோர் கூலிங்
42% வரையான மின்சாரத்தை சேமிக்கின்றது என்பதனை
உறுதிசெய்துள்ளோம்.

சொல்வதை செய்வதும் – செய்வதை சொல்வதும்

LG மட்டுமே!

மின்சார செலவை குறைக்கும் இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸர்
LG குளிர்சாதனப் பெட்டிகளில் மாத்திரமே உள்ளன!



கதவில் கூல் செய்யும் டோர் கூலிங்

குளிரூட்டியின் கதவில் இருக்கும் துளைகள் மூலம் குளிர் காற்றை வெளியேற்றி குளிர்ச்சியூட்டும் சிறப்பம்சம் LG குளிர்சாதனப் பெட்டிகளில் மாத்திரமே உள்ளன. கதவை திறப்பதால் வீண்விரையமாகும் குளிர்ச்சியை உடனடியாக மீண்டும் சரிசெய்கிறது.

R600a

ரு.81,900 இலிருந்து

## இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸர்

சிந்தியுங்கள்! நாம் ஒரு பயணம் போகும் போது சுற்றுப் பாதையில் சென்றால் போகும் பயணம் தாமதமாகும், வீண் விரையங்கள் அதிகமாகும். ஆனால் அந்த பயணத்தை சுற்றுப் பாதையை தவிர்த்து நேர் பாதையில் சென்றால் நமது பயணம் விரைவாகும், வீண் விரையங்கள் குறைவாகும். லீனியர் இன்வெர்டர் கொம்பிரெஸர் மற்றும் சாதாரண இன்வெர்டர் கொம்பிரெஸர் ஆகிய இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை இவ்வாறு சுட்டிக்காட்ட முடியும்.

INVERTER LINEAR COMPRESSOR 10 YEAR WARRANTY



இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸர்
மோதும் 1 இடம்

LG குளிர்சாதனப் பெட்டிகளிலுள்ள இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸர் ஒரு இடத்தில் மாத்திரம் மோதி மிகவும் இலகுவாக செயல்படுவதால் இதில் குறைந்த அளவு மின்சாரமே செலவாகிறது.

எதிராக

சாதாரண இன்வெர்டர் கொம்பிரெஸர்
மோதும் 4 இடங்கள்

ஏனைய குளிர்சாதனப் பெட்டிகளிலுள்ள சாதாரண இன்வெர்டர் கொம்பிரெஸர் இயங்கும் போது 4 இடங்களில் மோதுவதால் மின்சாரம் வேகமாக செலவாகிறது.

*நிபந்தனைகள் உண்டு.

0115 999 000 | Abans.com | us at www.facebook.com/abans | நாடளாவிய அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் ஏக முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Abans

# இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

உங்களின் இளைப்பாறுகை வாழ்க்கைக்கு அரச பாதுகாப்புடன்கூடிய ஓய்வூதியப் பிரேரணைத் திட்டம்

உங்களின் ஓய்வூதியப் பயன்கள் தொடர்பில் நீங்கள் அறிவீர்களா?

உங்களுக்கு உரித்தான பயன்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

இச்சபையினூடாக செயற்படுத்தப்படும் ஓய்வூதியப் பயன் பிரேரணைத் திட்டங்களின் செயலற்ற அங்கத்துவத்தினை, மீளவும் செயற்படச் செய்வதற்கு
2018 ஆகஸ்டு மாதம் 15 ஆந் திகதியிலிருந்து 2018 நவம்பர் மாதம் 15 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள்,
உங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.
மாவட்ட செயலகத்தில் (கச்சேரியில்) அமையப் பெற்ற, இச்சபையின் மாவட்ட அலுவலகத்தில் உங்களின் அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

**சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியப் பயன் பிரேரணைத் திட்டத்திற்கு அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளுவது எவ்வாறு ?**

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்திற்கு அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளுவது எவ்வாறு? முதலில் உங்களுக்குத் தேவையான ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தினை (சுரக்கும / ஆரஸ்ஸாவ) தெரிவு செய்து, அதன் பின்னர் எமது நிறுவனத்தினூடாக வழங்கப்பட்டுவரும் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து, முதலாவது தவணைப் பணத்தினைச் செலுத்தியதன் பின்னர் ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தின் அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொள்ளவும். (இரண்டாவது தவணையிலிருந்து தொடர்ச்சியாக) நீங்கள் செலுத்த வேண்டிய மாதாந்த / காலாண்டு / வருடாந்த தவணைக் கொடுப்பனவினைச் செய்து அங்கத்துவத்தினை செயலூக்கத்துடன் முன்னெடுத்தல் வேண்டும்.

**நீங்கள் வசிக்கும் பிரதேசத்தின்,**

- மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் (சமூகப் பாதுகாப்பு மாவட்ட அலுவலகங்கள் மாவட்ட செயலகங்கள்)
- சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள்
- சமுர்த்தி முகாமையாளர்கள்
- நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள்
- கிராம உத்தியோகத்தர்கள்
- சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
- பிரதான அலுவலகம் மற்றும் ஏனைய அதிகாரத்தினைக் கொண்ட உத்தியோகத்தர்களினூடாக அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.



**சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியப் பயன் பிரேரணைத் திட்டத்தில் அங்கத்துவப் பணத்தினைச் செலுத்துவது எவ்வாறு ?**

- மக்கள் வங்கியின் சகல கிளைகளினூடாக
- இலங்கை வங்கியின் சகல கிளைகளினூடாக
- இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் மாவட்ட அலுவலகங்கள், பிரதேச செயலகம் மற்றும் அதிகாரத்தினைக் கொண்ட உத்தியோகத்தர்களினூடாக
- சகல அஞ்சல் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்களினூடாக

BANK OF CEYLON BOC | POST

எம்முடன் தொடர்பு கொள்ளவும்
0112 88 60 88
நேரடி அழைப்பு

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு | 011-2369250 | பதுளை | 055-2225614 |
| கம்பஹா | 033-2229301 | மொனராகலை | 055-2276345 |
| களுத்துறை | 034-3749861 | அநுராதபுரம் | 025-2220529 |
| காலி | 091-2226169 | பொலன்னறுவை | 027-3274700 |
| மாத்தறை | 041-2229252 | அம்பாறை | 063-2224493 |
| ஹம்பாந்தோட்டை | 047-2256010 | திருகோணமலை | 026-2222233 |
| இரத்தினபுரி | 045-2224220 | மட்டக்களப்பு | 065-2222487 |
| கேகாலை | 035-2231894 | வவுனியா | 024-2222566 |
| கண்டி | 081-2228387 | மன்னார் | 023-2251715 |
| மாத்தளை | 066-2233455 | முல்லைத்தீவு | 021-2290309 |
| நுவரெலியா | 052-2224931 | கிளிநொச்சி | 021-2285061 |
| குருணாகல் | 037-2221895 | யாழ்ப்பாணம் | 021-2226163 |
| புத்தளம் | 032-2266795 | | |

**இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை,**
சமூக வலுவூட்டல் அமைச்சு,
"சமாஜ ஆரக்சண பியச", இல. 18, இராஜகிரிய வீதி, இராஜகிரிய.

0112 886585 / 86 | www.ssb.gov.lk | info@ssb.gov.lk

# ஜனநாயகத்தை மதிக்கும் சிறந்த அரசியலே மக்களின் எதிர்பார்ப்பு

## என்கிறார் அரச தலைவர்

கொழும்பு,ஓக. 12

ஊழலை எதிர்த்து ஜனநாயகத்தை மதிக்கின்ற சிறந்த அரசியல் ஆளுமையே இன்று இந்த நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும். இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

சிறிலங்காசுதந்திரக்கட்சியின்முக்கியசெயற்பாட்டாளரான காலஞ்சென்ற அமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்தனவின் உருவச் சிலைதிறந்து வைக்கும்நிகழ்வுநேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அரச தலைவர் இதனைத் தெரிவித்தார்.

ஊழலுக்கு எதிராகப் போராடிய எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்தன ஜனநாயகத்தையும்சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயல்பட்ட. ஒரு அரசியல் ஆளுமையாளராவார்.

இது போன்ற நேர்மையான அரசியல் ஆளுமைகள் நாட்டுக்கு மிகவும் தேவையாகும் என்று அரசதலைவர் குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள குளங்களை மறு சீரமைப்பதற்காக அரச தலைவர் அலுவலகத்தின் ஊடாக சிறப்பு நிகழ்ச்சித் திட்டம்ஒன்றைநடைமுறைப்படுத்தியுள்ளதுடன், இதன் ஊடாக அதிகளவு குளங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எஞ்சியுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளையும் உரிய முறையில் நடைமுறைப்படுத்தி திருகோணமலை மாவட்டத்திலுள்ள மக்களுக்கு அபிவிருத்தியின் பெறுபேறுகளை கிடைக்கச் செய்வதாகவும் அரச தலைவர் குறிப்பிட்டார்.

கந்தளாய்நகரில்பெரும்குறைபாடாகஇருந்து வந்த நகர மண்டபம் மற்றும்

திருகோணமலை மாவட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள09நீர்சுத்திகரிப்புமுறைமைகளையும், தொலையியக்கிதொடர்பாடல் தொழில்நுட்பஉதவியுடன்மக்களிடம்கையளித்தார்.

மாவட்டத்திலுள்ள160பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐவருக்கான நியமனங்கள் மற்றும் கந்தளாய் பிரதேச செயலர் பிரிவில் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வையும் அரசதலைவர் ஆரம்பித்து வைத்தார்.

இதில், கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம, அமைச்சர் துமிந்த திஸநாயக்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சேருவில தொகுதி அமைப்பாளர் நளின் குணவர்தன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலைத்தொகுதிஅமைப்பாளர் ஆரியவதி கலபதி ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி2)

## அரச தலைவர் வேட்பாளர்

# மகிந்தவாய்திறக்கும்வரை அது பற்றிப் பேசுவதில்லை

கொழும்பு,ஓக. 12

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் மகிந்த அணி தலைமையிலான கூட்டணியின் சார்பில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பதை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அறிவிக்கும் வரை அது பற்றிப் பேசுவதில்லை. இவ்வாறு மகிந்த அணியின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தின்போதே இந்தத்தீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும்அரசதலைவர்தேர்தலில்நிறுத்தப்படும் வேட்பாளர் பற்றித் தற்போதே பேசி கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளக்கூடாதுஎன்றுநாடாளுமன்றஉறுப்பினர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

இதனால், அரசதலைவர்தேர்தல் அறிவிக்கப்பட்டதும், மகிந்த ராஜபக்ச அறிவிக்கும் வேட்பாளரின் வெற்றிக்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசதலைவர்தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தமது கட்சியின் தலைவர்களுடன்கலந்துரையாடிதகுதியானவேட்பாளரை அறிவிப்பதாகவும் அதன் பின்னர், அவரது வெற்றிக்காக அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார். (ரி2)














SINGER
யாழ் FIESTA
ஓர் அற்புதமான அனுபவம்
ஆகஸ்ட்
17 18 19
காலை 09.30 - இரவு 09.00 வரை
நுழைவு இலவசம்
யாழ்ப்பாணம்
வீரசிங்கம் மண்டபம்

# இலங்கை-சிங்கப்பூர் ஒப்பந்தம் ஆராய சிறப்புக் குழு நியமிப்பு

கொழும்பு.ஓக.12

இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் சுயாதீன நிபுணர்கள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பில் பல்வேறு தரப்பிடமிருந்தும் அரச தலைவருக்குக் கிடைத்துள்ள கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு அரச தலைவரால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் ஓய்வுபெற்ற பொருளியல் துறைப் பேராசிரியர் தேசமான்ய டபிள்யு.டீ. லக்ஷ்மன் இக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை முன்னாள் பேராசிரியர் சிறிமெவன் கொழும்பகே, களனி பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை முன்னாள் பேராசிரியர் அஜிதா தென்னகோன், சுயாதீன ஆலோசகர் கலாநிதி சனத் ஜயனெத்தி, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் உதவி ஆளுநர் ஆர்.ஏ.ஜயதிஸ்ஸ ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

இலங்கை-சிங்கப்பூர் வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தி முன்மொழியப்பட்டுள்ள புதிய வர்த்தக கொள்கையின் நடைமுறைத் தாக்கங்கள் எதிர்காலத்தில் இலங்கையின் வர்த்தகக் கொள்கையை தயாரிப்பதற்குத் தேவையான கொள்கை சார்ந்த வழிகாட்டல்களுக்கான சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் மூலம் இலங்கையின் பல்வேறு சேவைகளை வழங்கும் பிரிவுகள் தொடர்பிலும் இலங்கையின் சமூக, பொருளாதார நிலைமை மற்றும் வாழ்க்கைத் தரம் தொடர்பிலும் உள்ள தாக்கங்கள் பற்றி ஆராய்வதும் இக் குழுவின் விடயப் பரப்புக்குள் உள்பட்டதாகும்.

இந்தக் குழுவுக்கு தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு அனைத்துத் தரப்பினருக்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நிபுணர்கள் குழுவின் பொறுப்புக்கள் குறித்த முன்னேற்றம் அவ்வப்போது இடைக்கால அறிக்கைகளினூடாக அரச தலைவருக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், இறுதி அறிக்கை இரண்டு மாத காலப் பகுதியில் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

நீங்கள் தேடுவது பணம் பரிமாறிட சிறந்ததோர் வழியா?

ஆம், எனின் இதோ...

WESTERN UNION WU

HNB மற்றும் Western Union
பணம் பரிமாறிட சிறந்த வழி.

இப்போது வெஸ்டன் யூனியன் ஊடாக அனுப்பும் பணத்தினை HNB வாடிக்கையாளர் நிலையங்களில் பாதுகாப்பாக, துரிதமாக மற்றும் வசதியாக பெற்றிடுங்கள். நாடு முழுதும் பரந்துள்ள 251 வாடிக்கையாளர் நிலையங்களிலும் நட்புறவான சேவை அனுபவத்தினை பெற்றிடுங்கள்.

பிச் ரேட்டிங் AA-(lka)

Hatton National Bank PLC - PQ 82

HNB

# உயர்தர மாணவர்களை ஏற்றி இறக்கிய ஐ.தே.க.

கொழும்பு.ஓக. 12

இலங்கையில் தற்போது கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், நாடளாவிய ரீதியில் தொடருந்துப் போக்குவரத்து தொடர்ந்தும் ஸ்தம்பித நிலையில் உள்ளது. இதனால் பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள் கடும் நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. இந்த நிலையை மாற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பரீட்சை எழுதும் மாணவர்களை அவர்களது பிரதேச தொடருந்து நிலையங்களில் இருந்து, தமது வாகனங்களில் ஏற்றிப் பரீட்சை மண்டபத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதனால் மாணவர்கள் சிரமப்படாமல் கார்களிலும், ஜீப் வண்டிகளிலும் பரீட்சைக்குச் சென்று வருகின்றனர். (ரி2)

# எல்லை நிர்ணயம் தொடர்பில் நாடாளுமன்றில் ஆலோசனை

கொழும்பு.ஓக. 12

மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பிலான ஆலோசனை இம் மாதம் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முனவைக்கப்படவுள்ளது.

இந்த ஆலோசனை நாடாளுமன்றத்தில் 2:3 பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டால் மட்டும் புதிய தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்சல் நடத்துவதற்கு வாய்ப்பு உள்ளது.

அது நிறைவேற்றப்படாவிட்டால் பழைய தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது என்று அரசமைப்பு அபிவிருத்தி, கண்டி அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல் நடத்துவது தொடர்பாக கவனத்தில் எடுக்கப்பட்ட விவாதம் இம் மாதம் 24 ஆம் திகதி மு.ப 11.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரை நாடாளுமன்றத்தில் இடம்பெறும்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் சப்ரகமுவ, வடமத்திய , கிழக்கு ,மத்திய, வடமேல், வடக்கு ஆகிய ஆறு மாகாணங்களில் தேர்தல் நடத்துவதற்கு 24 ஆம் திகதி நடைபெறும் விவாதத்தின் போது சிறப்புக் கவனம் செலுத்தப்படும் என்றார். (ரி2)

# நாட்டை ராணுவமயப்படுத்த முயற்சி செய்கிறது கூட்டரசு

## மகிந்த குற்றச்சாட்டு

கொழும்பு.ஓக. 12

பொலிஸ் அதிகாரத்தை இராணுவத்துக்கு வழங்கி அதன் மூலம் நாட்டை இராணுவ மயப்படுத்த முயற்சிக்கிறது அரசு. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச குற்றம் சாட்டியுள்ளார்.

காலியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது.

நாட்டில் நிலவும் ஜனநாயக கோட்பாடுகளில் மாற்றங்களை செய்வதற்கு அரசு தயாராகி வருகின்றது. ஆகவேதான் நாட்டையும் மக்களையும் பாதிப்பிலிருந்து மீட்டெடுப்பதற்கு நாம் போராடி வருகிறோம். ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்றான தேர்தலை நடத்துவதாக இல்லை. உள்ளூராட்சித் தேர்தலை நீண்ட நாள்கள் நடத்தாது காலம் தாழ்த்தினர். அதே போல் மாகாண சபைத் தேர்தலையும் நடத்தாது காலம் தாழ்த்துகின்றனர்.

தேர்தலை நடத்த வேண்டும் என்கின்ற தேவை அரசிடம் இல்லை. ஏனெனில் உள்ளூராட்சித் தேர்தலில் அரசு படுதோல்வியடைந்தது. இந்த நிலையில், மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் தோல்வியைச் சந்திக்க வேண்டிவரும் என்கின்ற அச்சத்தினாலேயே இழுத்தடிப்புச் செய்கின்றது - என்றார். (ரி2)

# தேர்தல் தாமதத்துக்கு நாடாளுமன்றே காரணம்

## என்கிறது சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு.ஓக.12

தேர்தலை காலம் தாழ்த்த வேண்டிய தேவை சுயாதீன ஆணைக்குழுவுக்கு இல்லை. தேர்தல் தொடர்பில் நாடாளுமன்றம் தனது பணியை நிறைவேற்றாமையினாலேயே மாகாண சபைத் தேர்தல் தாமதடைகிறது. இவ்வாறு சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விடயம் தொடர்பில் ஆணைக்குழு தெரிவித்ததாவது,

எமது நாட்டில் தற்போது மூன்று மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது. எனினும் தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தல் சட்டத்தில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினையை நாடாளுமன்றமே தீர்க்க வேண்டும் என உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

அது விடயத்தில் சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு மீது குற்றச்சாட்டு முன்வைக்க முடியாது.

நாடாளுமன்றம் தனது பணியை உரிய முறையில் மேற்கொண்டு பிரச்சினையைத் தீர்க்குமாயின் உடனடியாகத் தேர்தலை அறிவிப்பதற்கு சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு தயார் நிலையில் உள்ளது என்று அந்த ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (ரி2)



## வாடகைக்குண்டு

பருத்தித்துறை வீதியில் சகல வசதிகள் கொண்ட ரெஸ்ரோறண்ட் வாடகைக்குண்டு.

**077 486 0517, 077 595 2245**

## வீடு வாடகைக்கு

சித்தங்கேணியிலிருந்து பண்டத்தரிப்புக்குச் செல்லும் பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.

**076 237 3166, 077 287 3312**

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 பிறந்த சுவாதி நட்சத்திரமும், சூரியன், செவ்வாய் 7 இல் கூடிய ஜாதகம் உள்ள பட்டதாரி மணமகளுக்குப் பெற்றோர்கள் தகுந்த மண மகனைத் தேடுகின்றார்கள்.

**குறிப்பு:-** தரகர் தேவையில்லை

தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கம்...

**077 706 9148**

## விற்பனைக்கு

உயர் ரக சணல் கிடாய் குட்டிகள், பாவனையில் உள்ள குளிர்சாதனப் பெட்டி **(Sisil)** விற்பனைக்கண்டு.

**077 400 2382**

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்.நகர சுற்று வட்டாரத்துக்குள் 1½km அமைவிடத்தில் கே.கே.எஸ்.றோட், பிரப்பங்குளம் வீதியில் பழைய வீட்டுடன் 1 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**071 822 9630**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் பட்டப்படிப்பை முடித்து தற்போது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் **Business Development Manager** ஆகப் பணிபுரியும், 1985, கார்த்திகை 3 ஆம் பாதம், ரிஷபராசி, பாவம் 43½, 12 இல் செவ்வாய், உயரம் 173 செ.மீ, நற்பண்பும், நல்ல தோற்றமும் உடைய எமது ஒரே மகனுக்குப் பொருத்தமான மண மகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றோம்.

**077 103 3347**

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள பான்சி கடை ஒன்றுக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை.

**077 858 0995**

## வேலைக்கு ஆள்தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் **வாகன சுத்திகரிப்பு** நிலையத்திற்கும், கடைக்கும் ஆள்கள் தேவை.

077 776 3533

## வீடு விற்பனைக்கு

குளமங்கால், மல்லாகத்தில் அழகிய வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.

**076 244 2892,**
**416 269 5221** (ஆவணிக்குப் பின்)

## கார் விற்பனைக்கு

**Nissan Sunny**
**12 - xxxx**

**078 325 5829**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை சந்திக்கு அருகில் வியாபார நிலையங்களுக்குப் பொருத்தமான காணி விற்பனைக்குண்டு.

**077 726 0323**

## செல்வா மணி மண்டபம் வேலைவாய்ப்பு

- காவலாளி (பகல், இரவு)
- சோடனை
- சமையல்காரர்
- வயறிங் வேலை
- நீர்க்குழாய் வேலை

**077 982 2613**
139,பலாலி றோட், டிப்போ அருகில் உரும்பிராய்.

## YICSD COLLEGE

YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT



### புதிய பிரிவுகள் ஆரம்பம்

**4500/= – 30,000/= வரையிலான கட்டணக்கழிவு**



### அழகுக்கலை

- # Diploma in Beauty Culture & Hairdressing
- # Higher Diploma in Beauty Culture & Hairdressing

சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 11.30 am
கிழமை நாள் 20/08/2018 அன்று 11.30 am & 02.00 pm



### கேக் ஐசிங்

- # Certificate in Cake Making & Decorating
- # Diploma in Cake Making & Decorating
- # Higher Diploma in Cake Making & Decorating

கிழமை நாள் 16/08/2018 அன்று 09.30 am & 02.00 pm
சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 09.00 am & 02.00 pm



### தையல்

- # Certificate in Saree Blouse
- # Diploma in Dress Making (Tailoring)
- # Higher Diploma in Dress Making (Tailoring)

சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 11.30 am & 02.00 pm
கிழமை நாள் 20/08/2018 அன்று 09.00 am

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில் வருகைதரவும்

**இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)

## ZOA

RELIEF | HOPE | RECOVERY

## பதவி வெற்றிடம்

**சோஆ நிறுவனம் இலங்கையில் கடந்த 22 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வருவதோடு சமீபகாலமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீண்டகால நிலையான சமூகப் பொருளாதார அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய இலங்கையர்களுடனும் தமது மனிதாபிமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.**

**சோஆ** நிறுவனம் இலங்கையில் **வடமாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில்** நடை முறைப்படுத்தப்படவிருக்கின்ற செயத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு கீழ்காணும் பதவி வெற்றிடத்திற்குத் தகுதியாக **ஆண் / பெண் இருபாலரிடமிருந்தும்** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. திட்ட இணைப்பாளர் – முல்லைத்தீவு மாவட்டம்

இப்பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பகுதியில் சமூகமேம்பாடு தொடர்பான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டப்படுவர். சிறப்பாக தொழிலாளர் உரிமைகள், பெண் தொழிலாளர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகள், பொருளாதார முன்னேற்றத்திற்கான செயற்பாடுகள் குறிப்பாக சிறு குழு முயற்சிகளில் ஈடுபடுதல் உள்ளடங்களாக சமூகமேம்பாட்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அறிவையும் அனுபவத்தையும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிவெற்றிடங்களுக்காக விண்ணப்பிப்பவர்கள் குறைந்தது இரு சக்கர மோட்டார் வாகனம் செலுத்தக் கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும். அத்துடன் இப்பகுதிகளில் அமைந்துள்ள **சோஆ** அலுவலகங்களில் தங்கியிருந்து பணியாற்ற விருப்பமுள்ளவர்களாகவும் இருத்தல் அவசியம்.

தகுதியானவர்கள் தங்களின் சுயவிவரக் கோவையினை சோஆ நிறுவனத்திற்கு ஆவணி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் மின்னஞ்சல் ஊடாகவோ (colombo@zoasrilanka.org ) அல்லது தபால் மூலமாகவும் ( ZOA, No. 469, Thirunagar South, Kilinochchi) அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**மேற்படி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கும் தகுதியானவர்களுள் திட்டங்கள் நடை முறைப்படுத்தப்படும் பிரதேசங்களில் இருந்து விண்ணப்பிக்கும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

## விசேட ஆடித் தள்ளுபடி !!!



மாதாந்த தவணை கட்டணம்
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

**Discount**
5,000/= to 50,000/=
Until 30th Aug 2018

We Accepted
MasterCard VISA

நீர் சுத்திகரிப்புத்துறையில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) யால் அங்கீகரிக்கப்பட்டு யாழ் மண்ணை தளமாக கொண்டு இயங்கி வரும் ஒரே நிறுவனமாகும்.

SATISFACTION 100% GUARANTEE

**எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**



உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள கல்சியம் , மக்னீசியம் , மாசுக்கள் , கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப 100% சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.



**Water Softener System**

Tiles , Bathroom Fittings , Washing Machine களில் படியும் கல்சியம் , மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!

**கழிவுநீர் சுத்திகரிப்பு**



வீடு , தொழிற்சாலை , உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.



**நீச்சல் தடாக வடிவமைப்பு**

உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து , நிறுவி , பராமரித்துத் தரப்படும்.



**Everpure Hi-Tec (Pvt) Ltd.**

No.341, K.K.S Road, Jaffna. | 021 222 6888, 021 567 7567 | 077 362 6230

Health Serv
*Making families happy*

# இலவச மருத்துவ முகாம்



Organized by
WE CARE FOUNDATION Evolution Events and Corporate Services

இடம்: **Paradise Reception Hall,**
இல. 2-H, மெயின் வீதி, மயோன் மாவத்தை, கல்முனை - 14.
ஓகஸ்ட், 18 மற்றும் 19ம் திகதிகளில்
காலை 10.00 முதல் மாலை 6.00 வரை

அனைவரும் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

சிறப்பு அழைப்பாளர்:
**பிரசித்தி பெற்ற இந்திய பிரசாந்த் வைத்தியசாலையின் வைத்தியர்**
**Dr. கீதாஹரிப்பிரியா, குழந்தையில்லா தம்பதியருக்கான**
**இலவச மருத்துவ ஆலோசனை மற்றும் குழந்தையின்மைக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம், உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்கிறார்..**



பங்கு பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய எண்:
**075 492 7080, 011 2730987**

பிரசித்திப் பெற்ற இலங்கை வைத்திய சாலையினால் சகல நோய்களுக்குமான இலவச மருத்துவ பரிசோதனைகள்


மாபெரும் இரத்ததான முகாம்




**சூரிய சக்தி மூலம் பெறப்படும் மின்சார உபகரணங்கள் பற்றி உங்களுக்கு தெரியுமா?**

**20 வருடங்களுக்கு உற்பத்தி உத்தரவாதமும், 25 வருட செயற்திறன் உத்தரவாதமும் கொண்ட சூரியசக்தி தொகுதிகள்.**

**இலங்கையில் 35 வருடங்களாக தடங்கல் இன்றி நீர் சூடாக்குவதற்கும், மின்சார பாவனைக்கும் சூரியசக்தி உபகரணம் பாவனையில் உள்ளது.**




விலை 39,500/= தொடக்கம்

## வெந்நீர்

- நீண்ட ஆயுட்காலம் ✓
- நீண்ட கால விற்பனையின் பின் சேவை ✓

## மின்சாரம்

- ✓ 43 மெகா வாட்டுக்கு மேலதிகமான சோலர் பனல் இணைப்புக்களை அளித்துள்ள இலங்கையின் மிகப்பெரிய சோலர் பனல் வழங்குநர்.
- ✓ உலக தரங்களில் 40 வருடங்களுக்கு மேலதிகமாக உத்தரவாதமும், நம்பிக்கையும் உள்ள சோலர் பனல் ஆக இருப்பதுடன் இலங்கையில் அதன் வீழ்ச்சி 0% ஆக உள்ளது.



விலை 549,000/= தொடக்கம்

HOT WATER SOLUTIONS
0777 005593 Alpha Thermal Systems (Pvt) Ltd. 121, Castle Street, Colombo 08. mkt@solartherm.lk

SOLAR ENERGY SOLUTIONS
071 4670544 Alpha Solar Energy Systems (Pvt) Ltd. 121, Castle Street, Colombo 08. mkt@solartherm.lk

Powered by SMA
www.solartherm.lk

Since 1982
SOLAR-THERM
SOLAR WATER HEATING & PV ELECTRICITY SYSTEMS

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
26.01.1943



மறைவு
03.08.2016


### தம்பையா இலங்கைநாதன் பாலசுந்தரம்

(பாமினி இஞ்சினியேர்ஸ் அன் கொன்றைக்ரேஸ்
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்)

ஈராண்டுகள் உருண்டோடி விட்டது
எங்கள் விழிகளில் நீர் அலைகள் பாய்கின்றது
நிழல் போல் இருந்தவர் நீங்கள்
நினைவாய் மாறினீர்கள் கண் இமைக்கும் நேரத்தில்
கண்ணீர் துளியானீர்கள் நாங்கள் பனித்துளிபோல்
கண்ணீர் துளியாய் வாழ்கின்றோம் இதயங்கள் நொறுங்க
இமைகள் எல்லாம் நனைய எங்கோ நீங்கள் பயணமானீர்கள்
எங்கள் அழுகுரல் உங்கள் காதுகளில் கேட்கவில்லையா
நீங்கள் எங்களை விட்டு தூரத்தில இல்லை
என்றும் எங்கள் நினைவுகளில் என்றும் இருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### நவரத்தினம் திருநாமச்சந்திரன்

மண்ணில் 20 • 04 • 1951
விண்ணில் 24 • 07 • 2017

திதி: பிரதமை

குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்து
அனைவரையும் அன்புடன் அரவணைத்து
நன்னெறி காட்டி வாழவைத்த எங்கள்
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சந்திர வாசா
கைதடி கிழக்கு, கைதடி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை கார்த்திகேசு



மலர்வு 01.08.1940 உதிர்வு 10.08.2018

யாழ்-அல்லைப்பிட்டியைப்பிறப்பிடமாகவும், 8 ஆம் வட்டாரம், மண்டைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கார்த்திகேசு 10.08.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அன்னம்மா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, கதிராசிப்பிள்ளை, தேவராசா மற்றும் தில்லையம்பலம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுரேந்திரன் (கணக்காளர், அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்), குகதர்ஷன், சுகதர்ஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாநிதி (ஆசிரியை, கிளி/ஆனைவிழுந்தான்குளம் அ.த.க.பாடசாலை), சுரோபா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், சரணியா, சங்கீர்த்தனா, சதுர்ஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் வட்டாரம்,
மண்டைதீவு, யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதியில் இரண்டு பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு தேவை.

077 931 0510

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சந்தைக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது

070 308 1575

## நாய்க்குட்டி விற்பனை

Lion பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

021 222 1273

## தேவை

யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியில் உள்ள ஹாட்வெயர் கடைக்கு ஆள்கள் தேவை.

077 757 0150

## பெயர்மாற்ற அறிவித்தல்

குப்பிளான் தெற்கு, விவசாய வீதியில் வசிக்கும் **ஜெகதீஸ்வரி** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **புவனேஸ்வரி** என மாற்றம் செய்ய உள்ளதால் இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத் தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் **புவனேஸ்வரி** என கையொப்பம் இடுவேன் என்பதை அறியத் தருகின்றேன்.

## பணிப்பெண் தேவை

வடமராட்சிப் பகுதியில் உள்ள வீடொன்றில் வீட்டுப்பணியாற்றுவதற்குப் பெண் பணியாளர் தேவை. (சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.)

077 570 2125

## வாடகைக்கு

யாழ்.நகரின் மையப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

077 467 6243

## வீடு வாடகைக்கு

நாவற்குழி - கேரதீவு வீதியில் நாவற்குழி சந்தியிலிருந்து 1km தூரத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.

077 971 8744

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் அறைகள் வாடகைக்கு உண்டு.
(பெண்களுக்கு மட்டும்)

076 700 5273

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### கிருஸ்ணன் கணேசகுமார்

மலர்வு
11.01.1965

உதிர்வு
24.07.2017

திதி: வெண்பா



ஆண்டொன்று மறைந்து
விட்டது அப்பா!
அகலுமா உங்கள்
பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள்
என்றும் எம் மனதை விட்டு நீங்காது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.


சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

குடும்பத்தினர்

## விழிநீர் சொரிய

### இராஜேந்திரன் தயாளன்

(யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பட்டதாரி 1983 / 1987)



முப்பத்தைந்து ஆண்டுகள் எம்முடன்
முழுநிலவாக ஒளிதந்த நண்பா!
கனிவான உன்பேச்சு கள்ளமற்ற
நட்புணர்வு! காலமெல்லாம் உறவாடி
மகிழும் உத்தமனே! தயாளா!
எங்கள் சிந்தையெல்லாம் நீங்காமல்
நிறைந்தவனே! நாடுகடந்த நண்பர்கள்
நாடி வரும்போது தப்பாது
நாடி வந்து இன்புறுகின்ற
வண்ணமுகம் என்று இனிக் காண்போமடா?
காலத்தின் கோலத்தில் உன்னையிழந்து
தவிக்கின்ற உன்மனையாளும் மகனும்
பெற்றெடுத்த அன்னைக்கும் ஆறுதல் யார் இனி?
மின்னாமல் முழங்காமல் மீளாத்துயில்
கொள்ளும்
எம்மினிய நண்பா! பேரின்பவாழ்வில்
சாந்தி பெற்றிடுக!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா இறைவன் திருவடி நிழலில் சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துயரில் பங்குகொள்ளும்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 1983/1987
வணிக முகாமைத்துவ பட்டதாரி நண்பர்கள்.

த.நந்தகுமாரன்
ஆசிரியர்,
சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## நீங்கா நினைவில் மூன்றாண்டு



### திருமதி சிந்தாமணி (தவம்) கோபாலசிங்கம்

அன்புத் தெய்வமே
மீளாத் துயிலில் நீங்கள்
ஆறாத் துயரில் நாங்கள்
நின் நினைவில்

29/1, நங்கை வீதி,
யாழ்ப்பாணம்.

சு.கோபாலசிங்கம்
குடும்பத்தினர்.

# உங்களின் பட்டதாரி கனவினை நனவாக்குகின்றோம்

**நீங்கள்!**

க.பொ.த(சா.த), க.பொ.த(உ.த) தகைமையுடையவர்களா?
NVQ 3 அல்லது 4, HND தகைமையுடையவர்களா?
அரச, தனியார் துறை அலுவலர்களா? ஆசிரியரா?
பட்டத் தகைமையினை எதிர்பார்ப்பவரா?

## விசேட புலமைப்பரிசில் திட்டம்

**Fast Track Degree Programme - 2018/2019**
**Top Up - English /Tamil Medium - One Year**

### துறைகள், பாடத்தெரிவுகள்

புலமைப்பரிசில் தெரிவின் கீழ் கீழ்வரும் பாடத்தினை விண்ணப்பதாரி தெரிவு செய்து விண்ணப்பிக்க முடியும்.

- Department of English
  - BA in English
- Department of Psychology/Counselling & Nursing
  - B.Sc in Psychology/Counselling
  - B.Sc in Nursing
- Department of Management
  - B.BA in Management
- Department of Computer Science
  - B.Sc in Computer Science
- Department of Education
  - BA in Teaching/Education (Primary school/High school teachers)
- Department of Social Sciences
  - B.Sc in Social Sciences
  - BA in Sociology/Social Work

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் (UGC) அங்கீகாரம்



### புதிதாக அறிமுகப்படுத்தும் துறைகள்

- B.Sc in Agriculture
- B.Sc in Biology
- B.A in Geography
- B.A in Travel & Tourism
- BA in Finearts

### பட்டதாரி கற்கைநெறியின் நன்மைகள்

1. பல்கலை மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம்
2. குறுகிய காலம்
3. மாணவர் வரவேற்பு நிகழ்வு
4. விரிவுரைகள் வாரத்திற்கு ஒரு நாள்
5. ஆன் லைன் ஊடான கல்வி முறை
6. ஒவ்வொரு வருடமும் பட்டமளிப்பு விழா
7. தவணை கட்டண முறைமை
8. வங்கிகடன் வசதி செய்து தரப்படும்
9. அரச, தனியார் துறை வேலைவாய்ப்பு
10. உயர் கற்கைகளுக்கு பொருத்தமானது
11. வெளிநாட்டு கல்வி வாய்ப்புகள்
12. வெளிநாட்டு புலமைப்பரிசில் திட்டம்

பட்டதாரி நிகழ்ச்சித் திட்டத்தின் விசேட புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரி சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிவரக் கோவையினை (பெயர், விலாசம், கல்வித் தகைமை, தொலைபேசி இல. உள்ளடங்கலாக) 24.08.2018 இனுள் கீழ்வரும் முகவரிக்கு சாதாரண தபால் ஊடாக அல்லது e-mail ஊடாக அல்லது நேரில் விண்ணப்பிக்க முடியும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கலாநிதி N. தணிகாசலம்பிள்ளை
தலைவர்,
முகாமைத்துவ நிர்வாக சபை,
தொழில்சார் கற்கைகள் நிறுவனம்,
182, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
e-mail:degreeinfo08@gmail.com



(CS/18387)(10)


மேலதிக விவரங்களுடன் தொடர்புகளுக்கு:
முகாமைத்துவ நிர்வாக சபை,
தொழில்சார் கற்கைகள் நிறுவனம்,
இல.182, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Email: degreeinfo08@gmail.com
021 450 8489/ 076 918 4821/ 077 602 1794

INSTITUTE OF PROFESSIONAL STUDIES · SRI LANKA · Est-2012 · IPS

---

# MODERN City Inn

WiFi Available



Adequate Parking
Satalite TV
Beach Tour-Taxi
Internet Facility
Round Tour
Airport Drops/Picks



Comfortable Air Conditioned Rooms
with Attached Toilets and Hot & Cold Water
**Very Moderate Room Charges**
'Single or Double Occupancy and Family Apartment
Wedding / Small Group Conferance All Kind of Parties
**10 minutes drive from Air Port.**
**You can contact in all Three language**

426, Main Street, Negombo.
(Opposite Cargills Food City - Behind Glitz)
For inquiries and Reservations
Contact No:- 031-2233967 / 031 2231 961 / 076 205 3302
moderncityinn@yahoo.com moderncityinn.com

---

www.unisons.lk

CAREERS

# விற்பனை அதிகாரி

# விற்பனை அதிகாரி பயிலுனர்

**மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா**

யுனிசன்ஸ் கெப்பிட்டல் லீசிங் நிறுவனம் (UCL), வாடிக்கையாளருக்கு நவீன தொழிநுட்ப பொருளாதார தீர்வுகளை அவர்களுக்கு பொருந்தும் வண்ணம் தனிப்பட்ட தேவைக்கமைய வழங்கி, அவர்கள் வாழ்க்கையையும், வாழ்க்கை முறைகளையும் மேம்படுத்தும் ஒரே குறிக்கோளோடு செயற்படுகிறது.

எமது நிறுவனம் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டதினால், சுய முயற்சியுடைய, இளம், சுறுசுறுப்பு மற்றும் ஆர்வம் கொண்டவர்களை பொருத்தமான விற்பனை தொழில் வாய்ப்புகளுக்காக தேடுகின்றது.

**தகுதி, அனுபவம் மற்றும் தொழில் நிலை**

30 வயதுக்கு குறைந்தவர்

தகுந்த சுறுசுறுப்பான சூழ்நிலையில் வேலைசெய்யும் தகுதி

க.பொ.த உயர்தரத்தில் குறைந்தது 3 சித்திகள், எந்த பாடத்திலும்

விற்பனை குறித்த முழு/பகுதியளவிலான பாடநெறியை நிறைவு செய்திருத்தல் மேலதிக தகைமையாகும்

விற்பனை அதிகாரிக்கான தகைமையாக 2 வருட விற்பனையில் ஈடுபட்ட அனுபவம் அவசியமாகும்

நீங்கள் உங்கள் தொழிலில் வேகமாக ஈடுபடவும், எமது நிறுவனத்தோடு வளரவும் விரும்பினால், உங்கள் விண்ணப்பங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். அனுப்பும் மின்னஞ்சல் subject field ல் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு **careers@unisons.lk** க்கு அனுப்பி வையுங்கள்.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் சுயமாய் இயங்கும் தொழில் சூழலுக்கு உள்வாங்கப்படுவர், பயிற்சி காலத்தில் கவர்ச்சிகரமான சம்பள கொடுப்பனவு, ஊக்குவிப்புக்கள் உள்ளடங்கும்.

யாழ்ப்பாணம்/ வவுனியா/ கிளிநொச்சி/ மன்னார்/ முல்லைத்தீவு - கஜன் 773370745
திருகோணமலை/ மட்டக்களப்பு/அம்பாறை - தினேஷ் 773378012

UCL

A Subsidiary of CDB

UNISONS CAPITAL LEASING LIMITED
99, Dharmapala Mawatha, Colombo 7.

# விடுதலை காண யாதொன்றும் பேணாமை கேடு

## செய்யும் வழி தெரிந்து மாற்றம் காண செயலாயுதம் புரிவோம்

உடுவிலூர் கலா



**பெண்மை**
இன்றைய நவீன உலக இயங்குநிலையில் பெண்கள் சாதனை நாயகர்களாக வலம் வருகின்றனர். வியத்தகு செயற்காரியங்களை மனபலம் கொண்டு வல்லமையாய் நிகழ்த்துகின்றனர். சமூகப் பொருண்மையுள் உயர் ஸ்தானங்களை அடைந்துள்ளனர்.

**அடிமைத்தனம்**
அவ்வகையில் சகல நிலைகளிலும் பெண்கள் முன்னிலை பெற்றாலும், ஆண்களுக்கு நிகராக அவர்களுக்கு சரிநிகர் சமானமாக சமூகப் பெறுமானங்களும் குடும்ப நிலைகளும் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. சமூக இடர்பாடுகளின் கண்ணோட்டமாய் இடைவினைக்கு உட்படுத்தப்படுகின்றனர். பெண்ணடிமைத்தனம் எங்கும் நிலை பெற்றுள்ளது. இதிலிருந்து பல பெண்கள் விடுதலை காண முயற்சித்து வருகின்ற போதும், பெண்ணினத்துக்கான சுதந்திரம் என்பது முழுமையாகக் கிடைக்கவில்லை. மாறாக ஆணாதிக்க சித்தாந்தம் முடிவுறுத்தப்படவில்லை. அவை முளையிலேயே கிள்ளி எறியப்படவுமில்லை அழிவு தரும் விருட்சமாக வளர்ந்த பின்பு வேரோடு பிடுங்கி எறியப்படவுமில்லை என்பதே உண்மை.
பெரியார், பாரதியார், பாரதி தாசன் எனப் பலரும் பெண்விடுதலை பற்றி பேசியுள்ளனர். ஆம், "ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலைகுனிந்தார்" என பெண்விடுதலைக் கோஷம் எழுப்பிய பாரதியார் இன்றில்லை. ஆனாலும் பெண் விடுதலை வேண்டிய குரல்கள் நீண்டு ஒலித்தவண்ணமே உள்ளன. இன்னமும் பெண்கள் அடிமைகளாக வாழ்கின்றனர். இந்த நிலை மாற்றம் பெற வேண்டும்.

**உரிமைக்கான போராட்டம்**
ஆரம்ப காலத்தில் அடுப்பூதிய பெண்கள் தமக்கான விடுதலையை வேண்டி நின்றனர். போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றனர். பிரதானமாக கல்வியுரிமைக்காக அவர்கள் போராடினர். அவை சாதாரண போராட்டங்களாக அமையவில்லை. புதுக்கோட்டையில் பிறந்த முத்துலட்சுமி ரெட்டி கல்வி உரிமை மறுக்கப்பட்ட காலத்தில் தந்தையின் விருப்பில் கல்வி கற்க பாடசாலை சென்றார். அவருக்கு சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டது.
ஆண்கள் மட்டும் கற்பதால் வகுப்பறையில் ஒரு திரையிட்டு ஆண்கள் வருவதற்கு முன்பாகவே அத்திரைக்குள் அவர் சென்றுவிட வேண்டும். அதே போன்று பாடசாலை முடிந்ததும் ஆண்கள் போய் முடிந்த பின்னரே அவர் வீட்டுக்குப் போக வேண்டும். அதனை கடைப்பிடித்தார். விடுதலைக்கான ஆயுதப் பயிற்சியாக அதனை மேற்கொண்டார். போராட்ட உணர்வோடு கல்வி கற்று முதல் பெண் மேலவை உறுப்பினராக நியமனம் பெற்றார். அதுவிதமே அன்று கிடைத்த வரையறை உடைய பெண்கல்விக்கான சுதந்திரம் என்பது பல பெண்களை கல்வியியலாளர்களாக மாற்றியது. ஆனாலும் கிடைத்த சுதந்திரத்தை, உரிமையை அனைத்துப் பெண்களும் முழுமையாகப் பயன் கொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.




**சிந்தனைச் சிறப்பும் செயல் வேகமும் வேண்டும்**
'மூட நம்பிக்கைகள், தவறான புரிதல்கள், பழக்க வழக்கங்கள், பாரம்பரியம், பண்பாடு' எனப் பல வரையறைகள் இன்றும் தொடர் நிலை பெற்றுள்ளன. அதன்வழியே பெண்ணடிமைத் தனம் தொடர்கிறது. எமது நாட்டில் மாத்திரமன்றி உலக நாடுகள் அனைத்திலும் பெண்கள் சமத்துவம் இன்றி அவல வாழ்வையே வாழ்ந்து வருகின்றமை கண்கூடு.
சமூகத்தில் பெண்கள் ஆற்றமுடியாத துயரங்களை சுமந்தபடி உலாவருகின்றனர். குடும்பங்களில் அவர்கள் மீது பிரயோகிக்கப்படுகின்ற வன்முறைகள் வெளித் தெரியாது திரையிடப்படுகின்றன. வாழ்வியல் கட்டமைப்பில் சீர்குலைவு ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தின் பாற்பட்டு துரோகங்களைப் பொறுத்தும், அடி உதைகளைத் தாங்கியும், உள்ளத்தில் புலம்பியும், உதட்டில் புன்னகைத்தும் வாழ்கின்றனர். வன்முறைகள் படுகொலையாகவும் தற்கொலையாகவும் உருமாற்றம் பெறும்போது சட்டத்தில் அவை பதிவாகின்றன. தீர்வுகள் ஒருபோதும் தரப்படுவதில்லை.
குடும்பப் பிரச்சினை, சமூகப் பிரச்சினைகள் காரணமாக மனதளவில் பாதிப்பை எதிர் கொள்ளும் பெண்கள் 'தற்கொலை' என்ற மனப் பிறழ்வுக்கு உட்படுகின்றனர். இந்த நிலையை அவர்கள் வெற்றிகொள்ள வேண்டும். தற்துணிவையும் தன்னம்பிக்கையையும் இதற்கான மருந்தாகவும் ஆயுதமாகவும் பயன்கொள்ள வேண்டும். உண்மையில் தன்னமைபிக்கையோடு ஒன்றித்த தற்துணிவு வன்முறைகள் நிறைந்த வாழ்வில் நற் திருப்பு முனைகளை ஏற்படுத்தும். நூறடியில் நீர் இருக்கும் போது நூற்றியொராவது அடியில் தாமரை மலர் தன் முகத்தை காட்டத் தவறுவதில்லை.
பெண்ணடிமை வலுப்பெற்றிருந்த காலத்திலும் பெண்கள் தற்துணிவோடு பல வீரமிக்க செயல்களைச் செய்துள்ளனர். ராஜராஜசோழன் காலத்தில் வாழ்ந்த பெருங்கலை நாயகியார் பஞ்சாயத்து தலைவியாக தீர்ப்புக் கூறியுள்ளார். ஒரு முறை ஆடவன் ஒருவன் கோயிற் சுவரை அசுத்தம் செய்தமைக்காக கோயில் மண்டபம் முழுவதையும் பெருக்கி கழுவி சுத்தம் செய்ய வேண்டும் என ஆணை பிறப்பித்தாள். அதன்படியே அந்த ஆடவனும் பணி செய்தான். இங்கு பெருங்கலை நாயகியின் கணவனாக அவன் இருந்தபோதும் கலக்கமின்றி தற் துணிவோடு ஏவல் புரிந்துள்ளாள் பெருங்கலை நாயகியார். எத்துணை தீர்ப்பாயம். வீரமான பணியாளுகை.

**விடுதலை காண முயற்சிப்போம்**
ஆரம்ப காலத்தில் ஆண் பெண் இருபாலாரதும் உடல்நிலையை வைத்தே அன்று வேலைகள் கொடுக்கப்பட்டன. வயலில் களைபிடுங்கவும், நாற்று நடவும், சுளகில் நெல்லைத் தூற்றவும் பெண்கள் முற்பட்டனர். விறகு கொத்தவும், சூடு மிதிக்கவும், நிலத்தைக் கொத்தவும் ஆண்கள் பயன்கொள்ளப்பட்டனர். ஆக, ஆண்கள் வேகமாக செயற்பட பெண்கள் விவேகமாக செயற்பட்டனர். அதேவிதமாக பெண்ணாணவள் மென்மையான முகத்தோடும் வலிமையான மனதோடும் ஒருயிரைப் பிரசவித்தாள். இன்றும் பிரசவிக்கின்றாள்.

> தன்னம்பிக்கையும் தற்சார்பும் கொண்டு மாற்றம் கொள்வதே பெண் விடுதலைக்கான ஒரேவழி. நேர்மறையான எண்ணங்களில் இருந்து விடுபட முற்சிக்க வேண்டும். வன்முறைகளில் இருந்து விடுபட தன்னம்பிக்கையை ஆயுதமாகக் கொள்ளவேண்டும். இன்னொரு பெண்ணுக்கு நிகழ்கின்ற வன்முறைகளை கண்டும் காணாதவர்கள் போல் இருந்துவிடாது, அடிமைத்தனம் எங்கு தலைதூக்குகிறதோ அங்கு உரிமைக் குரலை ஓங்கி ஒலித்திட வேண்டும். பெண் விடுதலையை நோக்கிப் பயணிக்க முன்வர வேண்டும். உள்ளமெனும் பூங்காவனத்தை பூந்தொட்டியாக மாற்றிட பாரதி சொன்ன திமிரோடு விடுதலை நோக்கிப் பயணிக்க தயாராக வேண்டும்.

இவ்வாறு காலமாற்றங்களோடு ஒப்புமையாக பெண்ணாணவள் தனதான வாழ்க்கைப் பயணத்தை முன்கொண்டு செல்வதை நாம் கண்டுகொள்ள முடிகிறது. எனவே வன்முறைகளில் இருந்து விடுபட மாற்றங்கள் பல கண்டுகொள்ளப்பட வேண்டும். தன்னம்பிக்கையும் தற்சார்பும் கொண்டு மாற்றம் கொள்வதே பெண் விடுதலைக்கான ஒரேவழி. நேர்மறையான எண்ணங்களில் இருந்து விடுபட முற்சிக்க வேண்டும். வன்முறைகளில் இருந்து விடுபட தன்னம்பிக்கையை ஆயுதமாகக் கொள்ள வேண்டும். இன்னொரு பெண்ணுக்கு நிகழ்கின்ற வன்முறைகளை கண்டும் காணாதவர்கள் போல் இருந்துவிடாது. அடிமைத்தனம் எங்கு தலைதூக்குகிறதோ அங்கு உரிமைக் குரலை ஓங்கி ஒலித்திட வேண்டும். பெண் விடுதலையை நோக்கிப் பயணிக்க முன்வர வேண்டும். உள்ளமெனும் பூங்காவனத்தை பூந்தொட்டியாக மாற்றிட பாரதி சொன்ன திமிரோடு விடுதலை நோக்கிப் பயணிக்க தயாராக வேண்டும்.

**விடியு நல்லொளி காணுதி நின்றே,**
**மேவு நாக ரிகம் புதி தொன்றே**
**கொடியர் நம்மை அடிமைகள் என்றே**
**கொண்டு, தாம்முதல் என்றனரன்றே.**
**அடியொ டந்த வழக்கத்தைக் கொன்றே,**
**அறிவு யாவும் பயிற்சியில் வென்றே**
**கடமை செய்வீர்,நந்தேசத்து வீரக்**
**காரிகைக் கணத்தீர்,துணி வுற்றே..!**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சொற்களில் கவனம் தேவை

வடமாகாண மக்கள் அபிவிருத்தி கேட்டுப் போராடுவதில்லை. மாறாக அதிகாரம் வேண்டும், அடையாளம் வேண்டும் என்றுதான் இங்குள்ள மக்கள் போராடுகின்றனர் என்றுள்ளார் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளுராட்சிச்சபைகளில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் ஆளுநருக்கும் இடையில் வியாழனன்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் குரே.

தென்னிலங்கை மக்கள் வீதி வசதி, தண்ணீர் வசதி, உயர் கல்வி என்பவை கோரித்தான் போராடுகின்றனர். ஆனால் வடக்கிலோ அடையாளத்துக்கும் அதிகாரத்துக்கும் மட்டுமே போராடுகின்றனர் என்றவாறாக அந்தச் சந்திப்பில் சாடியுள்ளார் அவர். வடக்கு ஆளுநர் என்ற அடிப்படையில் குரேயின் கருத்து மிகவும் கனதியானது. பன்னாட்டுச்சமூகம்வரையும் பாயக்கூடிய வல்லமை அதற்குண்டு. வடக்கில் உள்ள முக்கிய மக்கள் பிரதிநிதி என்ற வகையில் அவர் தனது வார்த்தைகளை கூடுதல் கவனத்துடன் வெளிப்படுத்தல் வேண்டும். மாறாக ஒப்பீடுகள் அதுவும் சுண்மூடித்தனமான ஒப்பீடுகள் கூடவேகூடாது.

30 வருடகால ஆயுதப் போர் வடக்கின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் புரட்டிப் போட்டுள்ளது. போரால் ஒட்டுமொத்த இலங்கையும் பாதிக்கப்பட்டது என்பதற்கு எவரிடமும் மாற்றுக் கருத்து இல்லை. ஆயினும் வேறு எந்த மாகாணமும் அடைந்திராத சேதத்தை, இழப்பை, துன்பியலை, பேரவலத்தை வடக்கு மாகாணம் சந்தித்தது என்பது மலையில் ஏற்றி வைத்த தீபம். எனவே தமது பொருளாதாரம் இன்ன நிலையில்தான் உள்ளது என்பதை தமிழ் மக்கள் போராடி வெளிப்படுத்தித்தான் அது கொழும்புக்குத் தெரிய வேண்டுமென்பது அல்ல. வடக்கு மாகாணத்தின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குள்தான் உள்ளது என்பது இந்தத் தீவின் ஆகக்கூடிய அதிகாரபீடமான அரச தலைவருக்கும் வெட்ட வெளிச்சம். இதை அரச தலைவரும் பல முறை தெரிவித்திருக்கிறார். எனின், வடக்கு மக்கள் வேறு எவரது கவனத்தை ஈர்க்க வேண்டும் என்று குரே குறிப்பிடுகிறார்?. தான் சார்ந்த அரசு இதய சுத்தியுடன்தான் செயற்படுகிறதா என்பதை ஆளுநர் ஒன்றுக்குப் பலமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உணவு என்பதை விட உரிமை என்பதை மூச்சாகக் கொண்டவர்கள் தமிழர்கள். ஆக, அடையாளத்துக்கும், அதிகாரத்துக்குமான தேடல் அவர்களுக்கு இருக்கத்தான் செய்யும். தென்னிலங்கை மக்கள் இனப்பாகுபாட்டுடன் நடத்தப்படுவதில்லை, புதிய அரசமைப்புக்கு உரிய தேவை அவர்களுக்கு இல்லை, பெரும்பான்மை மக்கள் என்ற வகையில் அவர்கள் முழு அதிகாரத்துடன் உள்ளார்கள். ஆக, அதிகாரமும் அடையாளமும் அவர்களுக்கு உண்டு. எனவே அவர்கள் அபிவிருத்தி கோரிப் போராடுகிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் தமது அதிகாரத்தையும், அடையாளத்தையும் இழந்த, இழக்கின்ற நிலையில்தான் உள்ளார்கள். எனவே அபிவிருந்தி என்பதைக் காட்டிலும் அதிகாரமும், அடையாளமும் அவர்களுக்குப் பெரிதாய்த்தான் தெரியும். அடையாளத்தையும், அதிகாரத்தையும் தொலைத்த அபிவிருத்தி எதற்கு?. சுருங்கச்சொல்லின், காலுள்ளவன் செருப்புக்கு அழுவான்; காலில்லாதவன் காலுக்குத்தான் அழுவான் என்கிற நிலைப்பாடுதான் இது. இந்த வேறுபாட்டை ஆளுநர் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் ரீதியில் பெரும்பான்மை மக்களுக்கு நிகராகத் தமிழர்கள் நடத்தப்படுகிறார்களா என்பதை உறுதிப்படுத்திய பின்னர், அவர் தனது ஒப்பிடலை மேற்கொள்ளவேண்டும்.

# நாடு பொருளாதார மீட்சிபெறும்வரை சம்பள அதிகரிப்புக்களுக்கு வாய்ப்பில்லை

■ சேரலாதன்



நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்களை அதிகரிப்பது தொடர்பான செய்திகள் சமீப நாள்களாக முக்கியத்துவம் பெற்றுவருகின்றன. ஆரம்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவில் 200 வீதத்துக்கும் அதிகமான உயர்வு ஏற்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. இதைப் பார்த்த ஏனையவர்கள் அதிர்ச்சியடைந்தனர். நாட்டிலுள்ள சாமானிய மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இந்த வேளையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏனிந்தச் சம்பள அதிகரிப்பு என முணு முணுக்காதவர்கள் இல்லையென்றுதான் கூறவேண்டும்.

### விலைவாசி உயர்வினால் நாட்டு மக்கள் திண்டாட்டம்

நாட்டுமக்கள் விலைவாசி உயர்வினால் தமது அன்றாட, அத்தியாவசிய உணவுப்பொருள்களை வாங்குவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மாதாந்தச் சம்பளம் பெற்று வரும் அரச துறையைச் சேர்ந்த பணியாளர்களும், தனியார் துறை ஊழியர்களும் தாம் பெறுகின்ற சம்பளத்தைக்கொண்டு தமது வாழ்க்கையை ஓட்ட இயலாத நிலையில் திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். தமது பிள்ளைகளின் கல்வித் தேவைகளையும் அவர்களால் சமாளிக்க முடியவில்லை. இந்த நிலையில் அரசியல்வாதிகள் தத்தமக்குச் சாதகமாக நடந்துகொள்வதை அவர்கள் சகித்துக் கொள்வார்களென எதிர்பார்க்க முடியாது.

இதேவேளை மறுபுறத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மேலதிக கொடுப்பனவை வழங்க முடியாதென அரசதலைவர் ஏற்கனவே அறிவித்துவிட்டார். தற்போது தலைமை அமைச்சரும் அதை உறுதிசெய்திருக்கிறார்.

நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும்பங்கு அரசின் நிர்வாகச் செலவுகளுக்கே பயன்படுத்தப்படுகின்றது. இதில் அரசதலைவர், தலைமை அமைச்சர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவுகளும் அடங்குகின்றன.

### பல்வேறு சலுகைகளை அனுபவிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏராளமான சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப் பத்திர சலுகையும் அடங்கும். இந்தச் சலுகை மாகாணசபை உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளில் அதிகரிப்புச் செய்யப்படுமானால், மாகாணசபை உறுப்பினர்கள் மட்டுமல்லாது, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் தமக்குரிய கொடுப்பனவுகளை அதிகரித்து வழங்குமாறு கோரிக்கை விடுக்கக்கூடும். இதனால் அரசு பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடலாம். அரச ஊழியர்கள் கூடத் தமது சம்பளத்தை அதிகரிக்குமாறு போராட்டங்களில் ஈடுபடக்கூடும். இதனால் பெரும் நிதி நெருக்கடிக்கு அரசு முகம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகிவிடும்.

ஒரு நாட்டின் தேசிய வருமானமே அதன் பொருளாதார நிலைமையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் செலவினங்களுக்கு ஏற்ற வகையில் தேசிய வருமானம் போதுமானதான அமைந்திருக்கவில்லை. இங்கு உற்பத்தியாகும் பொருள்களின் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் நாட்டுக்குப் பெரும் வருமானத்தை ஈட்டித் தந்த தேயிலைத்துறையும், றப்பர்துறையும் இன்று பெரும் வீழ்ச்சியைச் சந்தித்து வருகின்றன. தேயிலைத் தோட்டங்கள் தனியார் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டதால், அவர்கள் தேயிலைத் தோட்டங்களைப் பராமரிப்பதற்குப் பதிலாக அங்கு காணப்படுகின்ற பெரு மரங்களைத் தறித்து விற்பனை செய்வதிலேயே குறியாகச் செயற்படுகின்றனர். இதனால் குறைந்த அளவான தேயிலைக் கொழுந்துகளையே அறுவடை செய்ய முடிகின்றது. இதன் காரணமாகவே தேயிலைத் தூளின் ஏற்றுமதியில் பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது. தேசிய வருமானமும் இதனால் வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.

### நாடு பெரும் கடன்சுமையில் சிக்கித் தவிக்கிறது

நாடு பெரும் கடன் சுமைக்குள் சிக்கித் தவிப்பதாகக் கூறப்படுகின்றது. நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் தலையையும் இந்தக் கடன்சுமை நெரித்துக் கொண்டிருக்கின்றது. அன்றாடச் செலவினங்களுக்குக் கூட கடன் வாங்க வேண்டிய நிலையில் அரசு இருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் அரசைத் தாங்கி நிற்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்குரிய கொடுப்பனவில் அதிகரிப்பை எதிர்பார்ப்பதும், அதைப் பெற்றுக்கொள்ள முற்படுவதும் ஏற்கத் தக்கதாகத் தெரியவில்லை.

நாடு பொருளாதாரத்தில் மீட்சி பெறுமானால், கொடுப்பனவுகளின் அதிகரிப்பை எவருமே எதிர்க்க மாட்டார்கள். "அதுவரை பொறுமையாக இருப்பதுதான் இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நாட்டுக்குப் புரிகின்ற மிகப்பெரிய உதவியாக அமையும். "நாடு உனக்கு என்ன செய்தது என்பதைச் சிந்திக்காது நீ நாட்டுக்கு என்ன செய்தாய் என்பதை முதலில் சிந்தி" என அறிஞர் ஒருவர் கூறியது இப்போது நினைவுக்கு வருகின்றது. இது இந்த நாட்டில் வாழ்கின்ற அனைவருக்கும் பொருந்தும். ■



# தென்றல் என்னைத் தொட்டதில்லை தீயைத் தாண்டியிருக்கிறேன்

தேவநாயகம் தேவானந்த்

## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி - 04

கருணாநிதியின் அரசியல் வாழ்வில் திருப்பு முனையை ஏற்படுத்தியதில் சிவாஜிகணேசன் முதல் முதலாக நடித்து வெளிவந்த பராசக்திப் படம் முக்கியமானது. அதற்குக் கருணாநிதியே வசனம் எழுதியிருந்தார். அதில் வரும் நீதி மன்றக்காட்சியில், சிவாஜி கணேசன் மிக அற்புதமாக சமூக நீதிக்கருத்துக்களை கருணாநிதியின் வசனத்தில் அசத்துவார். அதில் ஒருவசனம் தான் "தென்றல் என்னைத் தொட்டதில்லை; தீயைத் தாண்டியிருக்கிறேன்." என்பது.



கருணாநிதியின் வாழ்வில் தென்றல் வீசுகிறது. அவரது ஆட்சியில் ஊழல் மலிந்து விட்டது என்று அவரது தோழனும், திராவிட முன்னேற்றக்கழகத்தின் அப்போதைய பொருளாளருமாயிருந்த எம்.ஜி.ஆர் போர்க்கொடி தூக்கினார். எம்.ஜி.ஆர் என்ற அந்த நெருப்பைத் தாண்டுவதற்கு கருணாநிதிபாதபாடுபட்டார். இருந்தாலும் கட்சியைக் காத்து தீயைத் தாண்டி வந்திருக்கிறார்.

1962 ஆம் ஆண்டுச் சட்டமன்றத் தேர்தலில் தஞ்சைத் தொகுதியில் கருணாநிதி போட்டியிட்டு வென்றார். தேர்தலில் திமுக 50 தொகுதிகளில் வெற்றி பெற்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்ட மன்றக் கொறடாவாக கருணாநிதி தேர்ந்தெடுக்கப்பட்டார். 1965ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மீண்டும் களமிறங்கியது. கருணாநிதி அதில் தீவிரமாக ஈடுபட்டார். கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் தள்ளப்பட்டார்.

### 1967 தேர்தல்மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது தி.மு.க

1967ஆம் ஆண்டுச் சட்டமன்றத் தேர்தலில் வென்று திமுக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. அண்ணா முதலமைச்சராக பதவி ஏற்றார். கருணாநிதி பொதுப் பணித்துறை அமைச்சரானார். பின்னர் அண்ணா திடீரென சுகவீனமுற்று இறந்துபோனார். அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் எம்.ஜி.ஆர் போன்றோரின் துணையோடு கருணாநிதி முதல் முறையாக 1969 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அதே ஆண்டில் ஜூலை 27ஆம் தேதி தி.மு.க தலைவரானார் கருணாநிதி. எம்.ஜி.ஆர் பொருளாளரானார். அடுத்து வந்த 1971ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் கருணாநிதியின் தலைமையில் தி.மு.க மகத்தான வெற்றி கண்டது. 203 இடங்களில் போட்டி இட்டு 184 இடங்களை கைப்பற்றியது. இரண்டாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் கருணாநிதி.



### கட்சிக் கணக்கைக் கேட்ட எம்.ஜி.ஆர்

1972ல் திமுக வில் பிரிவு ஏற்பட்டது. எம்.ஜி.ஆர் , கட்சிக் கணக்கைக் கேட்டார். சட்டமன்ற தி.மு.க. உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு சொத்துகள் உள்ளன என்று வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டார். இத்தகைய சூழ்நிலையில், 1972 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ஆம் தேதியன்று, (பழைய) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்றத்தில் தி.மு.கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு எம்.ஜி.ஆர் பின்வருமாறு பேசினார். "அறிஞர் அண்ணாவின் பெயரால் ஆட்சியைக் கைப்பற்றிய கலைஞரின் தலைமையில் செயற்படும் தி.மு.க. அரசின் ஆட்சியில் இலஞ்சமும் ஊழலும் பெருகிவிட்டன எனப் பொதுமக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது. இது எம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கிவிட்ட அறிஞர் அண்ணாவுக்கு நாம் செய்யும் கைமாறு ஆகாது. இலஞ்சத்தையும் ஊழலையும் ஒழித்துத் தூய்மையான நல்லாட்சியை நடத்துவதுதான் நாம் அண்ணாவுக்குச் செய்கிற நன்றிக்கடனாகும்; பெருமை ஆகும். கழகத் தலைவர்கள் அனைவரும் தங்கள் சொத்துக் கணக்கைப் பொதுமக்கள் முன்னால் சமர்ப்பிக்க வேண்டும். கழகச் சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தத்தமது சொத்துக் கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்வதுதான் தமிழ்நாட்டில் இலஞ்சத்தையும் ஊழலையும் ஒழிப்பதற்கு ஆரம்பப்பணியாய் இருக்கும். அறிஞர் அண்ணா கைவிடத் துணியாத மது விலக்குக் கொள்கையைக் கைவிட்டது, கலைஞர் அரசு அண்ணாவுக்குசெய்தமிகப்பெரிய துரோக மாகும். அண்ணாவுக்கு மட்டுமல்ல, தமிழகமக்களுக்கு இது மிகப்பெரிய துரோகமாகும்'' என எம்.ஜி.ஆர் தெரிவித்தார். எம்.ஜி.ஆரின் இந்த முழக்கம் கருணாநிதியை அதிர்ச்சியடையச் செய்தது.

### கட்சியிலிருந்து எம்.ஜி.ஆர் தற்காலிகமாக நீக்கம்

உடனே கழகச் செயற்குழுவும் பொதுக் குழுவும் கூட்டப்பட்டன. இந்த இரு குழுக்களிலும் அங்கம் வகித்த பெரும்பாலானவர்கள் கருணாநிதிக்குக் கட்டுப்பட்டவர்கள். இலட்சிய நடிகர் என்று போற்றப்பட்ட எஸ்.எஸ். ராஜேந்திரனைப் போன்றவர்கள் எம்.ஜி.ஆரை விலக்குவதை எதிர்த்தார்கள். இருந்தாலும் பெரும்பாலானவர்கள் ஏகோபித்த குரலில் எம்.ஜி.ஆரைக் கழகத்தில் இருந்து தூக்கியெறிய வேண்டும் என்றனர். அதைத் தொடர்ந்து தி.மு.க. தலைமை எம்.ஜி.ஆரைத் தி.மு.க.விலிருந்து தற்காலிகமாக நீக்கிவைத்திருப்பதாக அறிவித்தது. அன்று 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாளாகும்.

தி.மு.க. தலைமை, கழகத்தை விட்டுத் தன்னை நீக்கிய அன்று புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். காலையிலிருந்து சத்யா படப்பிடிப்பு நிலையத்தில் நடந்த ஒரு படப்பிடிப்பில் கலந்துகொண்டிருந்தார். தி.மு.க. தலைமைப் பணிமனையில் இருந்து சத்யா படப்பிடிப்பு நிலையத்திற்கு விரைந்த வந்த பத்திரிகைச் செய்தியாளர் ஒருவர் புரட்சி நடிகரை அணுகி, அந்தத் தகவலைத் தயங்கித் தயங்கிச் சொன்னார். அதைக் கேட்ட புரட்சி நடிகர் தமக்கே உரிய புன்னகை மாறாமல், "அப்படியா? மிக்க மகிழ்ச்சி!" என்றார். "இன்றுதான் நான் மிகவும் நிம்மதியடைகிறேன்; மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்; வாருங்கள். சாப்பிடலாம்!" என்று எம்.ஜி.ஆர். அந்தப் பத்திரிகைச் செய்தியாளரை அழைத்தார். அவர் தயங்குவதைக் கண்டு, "பரவாயில்லை. இந்த நல்ல செய்தியைச் சொன்ன உங்களுக்குநான் இனிப்பு வழங்க விரும்புகிறேன். கொஞ்சம் பாயாசமாவது சாப்பிடுங்கள்" என்று கூறி, அந்தச் செய்தியாளரையும் அங்கிருந்த ஏனையோரையும் அழைத்துச் சென்றார். பாயசம் கொண்டுவரச் செய்வித்து எல்லோருக்கும் வழங்கித் தானும் பாயசம் சாப்பிட்டார்.

## ஆசிரியருக்கான கடிதம்

### ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ள எதிர்ப்புக் குரல்கள்

வட பகுதியில், மிகக் குறிப்பாக போரினால் பெருமளவில் பாதிக்கப்பட்டவன்னிப்பிரதேசத்தில்பொதுமக்கள்மத்தியில்நுண்கடன்களை வழங்கி, நியாயமற்ற பெருந்தொகை வட்டியுடன் அதனை மாதாமாதம் பகுதி பகுதியாக அறவிடும் நுண்நிதி நிறுவனங்களது செயற்பாடுகள் குறித்து பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அண்மைக் காலமாக முன்வைக்கப்பட்டு வருவது எம்மில் பலரும் அறிந்ததொன்றே. அத்தகைய கடன் வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளோ அல்லது ஊழியர்களோ குறித்த கடன் வழங்கும் மற்றும் அறவிடும் செயற்பாடுகளுக்காக கிராமப்புறங்களுக்கு வரக்கூடாதென ஊர் மக்கள் குறிப்பாக மாதர் சங்கங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் அளவுக்கு குறித்த நிறுவனங்களது செயற்பாடுகள் நீதி நியாயமற்ற விதத்தில் அமைவதாகக் கொள்ள முடிகிறது. இதுவிடயம் குறித்து அரச உயர் மட்ட நடவடிக்கையை பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளபோதிலும், அது குறித்த அரசின் மௌனப்போக்கு பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவிப்பது தவிர்க்க முடியாததே.

*உ.பேரம்பலம்,வவுனியா*

## இது உதயன் வாசகர்களது கவனத்துக்கானது

உதயனது "ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு" தமது கருத்துக்களை முன்வைக்கும் வாசகர்கள், தாம் அனுப்பி வைக்கும் விடயங்கள் தனிப்பட்ட அல்லது ஒரு குடும்பம் சார்ந்த பிரச்சினை என்ற விதத்தில் அல்லாமல், சமூக நல நோக்கிலான, சமூகத்தின் நலனுக்குகந்ததாக அமையும் விதத்திலான விடயங்களெனத் தாம் கருதுபவற்றை அனுப்பிவைத்தல் சிறப்புடைத்து. அவற்றின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தும் விதத்தில் தமது பெயர், முகவரி போன்ற சுய விபரங்களையும் தமது கடிதத்தில் உள்ளடக்க வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பு. தமது சுய விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படுவதை விரும்பாத வாசகர்கள், தமது புனைபெயர்களைக் குறிப்பிட்டு அனுப்பிவைப்பினும், தமது சுய விபரங்களையும் கடிதத்தில் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் அவசியமாகும். உதயனின் ஆசிரியருக்கான கடிதம் பகுதியில் பிரசுரமாகும் தகவல்களின் உண்மைத் தன்மையை உதயன் வாசகர்கள் உறுதி செய்து கொள்வதற்கு இது உதவும்.



# நித்திய சுகம் 377

உடலே கோயில்

# செயற்பக்குவமே (நி)தானமாய் உடல் ஆரோக்கியம் பேணும்

சமூக மருத்துவர்

**ஆலயங்களும் விருந்தோம்பல் பண்பும்**

ஆலயங்களில் திருவிழாக்கள் ஆரம்பித்துவிட்டாலே இறைத்துவம் எங்கும் தழைத்தோங்கும். பக்தியின் திருப்பொலிவு அவ்வூர் எங்கும் அமைதியை செந்தளிக்கும். மனம், வாக்கு, காயத்தால் அடியவர்கள் அனைவரும் இறையருளின் சித்தமாய் அருள் மணம் கமழ்வர். சாந்த சொரூபமாய் திருத் தொண்டுகள் பல செய்வர். ஆம், 'அன்னதானம் வழங்கல், தாகசாந்தி செய்தல்' என விருந்தோம்பல் பண்பு ஆலய சுற்றுப் புறச் சுழலில் தனித்துவப் பேறு தரும். அடியவர்களை அன்பால் அரவணைப்பது ஆங்கு சுற்றம் பேணலாய் திருநிலை பெறும்.

ஆலயச் சூழலில் நிலைப்படுத்தப்படுகின்ற மேற்படி கைங்கரியங்கள் யாவும் தொன்றுதொட்டே எம்மவர்களால் ஆற்றப்பட்டுவருகின்ற ஆன்மிகத்தின் பாற்பட்ட புண்ணிய காரியங்களாக விளங்குகின்றன. அதன்வழியே அடியார்கள் இறை தரிசனமும் விருந்தோம்பலின் நிறையன்பும் கண்டு கொள்கின்றனர். உடல் அயர்ச்சி நீங்கப் பெற்று உற்சாகமாக வீடு திரும்புகின்றனர். திருத் தொண்டில் ஈடுபட்டோரும் மனதளவில் பண்பால் உய்வுறுகின்றனர்.

**செயல் நேர்த்தி வேண்டும்**

ஆக, இந்தச் சந்தர்ப்பங்கள் அவதானத்துக்குரியவை. காரியங்கள் யாவும் புனிதத் தன்மையோடு மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவரை காலமும் பக்குவத்தோடும், மிகுந்த எச்சரிக்கை உணர்வோடும், தகுந்த மேற்பார்வையோடும் இத் தொண்டுகள் ஆற்றப்பட்டுவந்தமை மகிழ்ச்சி தரும் விடயம். எடுத்துக்கூறக் கூடிய வகையில் எதுவிதமான அசம்பாவிதங்களும் கடந்த காலங்களில் இடம்பெறவில்லை. ஆனால் அண்மைக் காலங்களில் சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளமையை அச்சு ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிந்துள்ளது. இது குறித்து சிந்தனையும் விழிப்புணர்வும் பெற வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

இன்றைய இயந்திரத் தனமான வாழ்க்கைப் பயணத்தின் கால நகர்வில் நாம் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் உளப் பக்குவத்தையும் செயல் பக்குவத்தையும் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறன்றி மேற்படி இறைத்துவம் உடைய ஆன்மிகச் செயற் காரியங்களை ஆற்றும் போதும், அவற்றைப் பரிமாறும் போதும் பக்குவத்தன்மையை பேணிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இல்லாது போனால் உணவு தொற்றுகைக்குள்ளாகின்றது.

தொற்றுகைக்குள்ளான உணவை உட்கொள்வோர் பலவிதமான வயிற்று உபாதைகளுக்கு உள்ளாகின்றனர். நோயுறும் நிலையை அடைகின்றனர். நோய்த் தொற்றுகையின் தீவிரம் காரணமாக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நிலை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பெரும் எண்ணிக்கையானோருக்கு மருத்துவசேவையை வழங்குவதில் இட நெருக்கடி நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு இயல்பாகவே கிடைக்க வேண்டிய மருத்துவ சேவையில் காலதாமதமும் சிரமமும் ஏற்படுகிறது.

பெரும் எண்ணிக்கையான அடியவர்களுக்கு இவ்வாறான இடர்பாடுகள் நிகழாவண்ணம் இருப்பதை உறுதி செய்வதற்கு பல விடயங்கள் குறித்து நாம் அவதானம் கொள்ள


> ஒரு சிறிய இடத்தில் உணவை, தயார் செய்யும் போது, 'இடச் சுத்தம், தனிநபர் சுத்தம், உணவு கையாளுவதில் சுத்தம், உணவு பரிமாறலில் சுத்தம்' என்பன தொடர்பில் அதீத கரிசனையும் செயல் நேர்த்தியும் வேண்டப்படுகிறது.

வேண்டும். குறிப்பாக ஒரு சிறிய இடத்தில் உணவை தயார் செய்யும் போது, 'இடச் சுத்தம், தனிநபர் சுத்தம், உணவு கையாளுவதில் சுத்தம், உணவு பரிமாறலின் சுத்தம்' என்பன தொடர்பில் அதீத கரிசனையும் செயல் நேர்த்தியும் வேண்டப்படுகிறது. ஆன்மிகத்தின் சிறத்தலாய் தானங்களை செய்வதானால் உளத்தூய்மையுடனும், செயல் தூய்மையுடனும் செயலாற்ற வேண்டும். அப்போது வேண்டிய நன்மைகள் அத்தனையும் நிறைவாகக் கிடைக்கும். இறை ஆசி என்றும் நிலைத்திருக்கும்.

**அடிப்படைச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவோம்**

ஆகவே, "அன்னதானம், தாகசாந்தி மற்றும் பெரும்படிச் சமையல்" போன்ற திருத் தொண்டுகளை செய்கின்ற வேளைகளில் தூய்மையான, பாதுகாப்பான உணவு வழங்கலை மேற்கொள்ள முயற்சிப்போம். இதற்கு பின்வரும் அடிப்படைச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல் நன்று.


- அன்னதான ஆயத்தங்களை மேற்கொள்வதற்கு முன்பாகவே அப்பகுதி சுகாதார மருத்துவ அதிகாரிக்கோ அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கோ (PHI) அறிவித்தல் வேண்டும். அவர்களின் ஆலோசனைகளின் படி ஆயத்தங்களை மேற்கொள்ளுதல் நன்று.
- பாவனைக்கிணற்றை குளோரீன் இட்டு சுத்தமாக்கி இறைத்தல் வேண்டும். அவ்வாறே நீர் சேமித்து வைக்கும் நீர்த்தாங்கியையும் குளோரீன் கொண்டு சுத்தம் செய்தல் வேண்டும். இதன் மூலம் சுத்தமான நீர் உபயோகத்தை உறுதி செய்து கொள்ள முடியும்.
- உணவுதயாரிப்பதற்கு அனுபவமுள்ள, குடிப்பழக்கமற்ற, பாதுகாப்பான உணவு வழங்கலை உறுதி செய்யக்கூடிய உணவு கையாள்வோருக்கான தகுதி மருத்துவச் சான்றிதழை பெற்றுக் கொண்டவர்களையே பணிக்கமர்த்த வேண்டும்.
- உணவு தயாரிப்பதற்கு முன்பாகவும், உணவைப் பரிமாறுவதற்கு முன்பாகவும் கைகளை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவிக் கொள்ள வேண்டும்.
- உணவு தயாரிப்பிலும் பரிமாறலிலும் ஈடுபடுவோர் கூடுமானவரை தனி மனித சுகாதார நிலையை பேணிக் கொள்ள வேண்டும். குறிப்பாக, 'தலைமயிர், நகங்களை கட்டையாக வெட்டுதல், சுத்தமான பருத்தி ஆடையை அணிதல்' போன்ற சுகாதார கடமைகளை குறிப்பிடலாம்.
- பாவிக்கப்படும் உணவுப் பொதிகளில் பொறிக்கப்பட்ட காலாவதியாகும் திகதியை கவனத்தில் கொண்டு உணவுப் பொதிகளை கொள்வனவு செய்ய வேண்டும். தகுந்த முறையில் பொதியிடப்படாத, உடைந்த அல்லது கிழிந்த நிலையிலுள்ள உணவுப் பொதியிலுள்ள உணவு மூலப் பொருள்களை கொள்வனவு செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- கைகளிலோ அன்றி விரல்களிலோ வெட்டுக் காயங்களோ, புண்களோ இருப்பின் உணவு கையாள்வதை தவிர்த்துக் கொள்ளவும். அதே போன்று நீண்டகால இருமல், தும்மல் போன்ற நோய் நிலை உள்ளோர் தகுந்த சிகிச்சை பெற்ற பின்பே உணவு கையாளலில் ஈடுபட வேண்டும்.
- மரக்கறி வெட்டும் பலகைகள், கத்திகள் என்பவற்றை நிலத்தில் வைப்பதை தவிர்க்க வேண்டும். பாவனையின் முன்பாக சவர்க்காரமிட்டு நன்கு கழுவிக் கொள்ள வேண்டும்.
- உணவு பரிமாறலுக்கு பயன்படுத்தும் இலைகளை பாவிப்பதற்கு முன்பாக அவற்றை நீரால் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.
- இலை வகை மரக்கறி உணவை சமைக்காத நிலையில் பச்சையாக பரிமாறுவதை தவிர்த்தல் நன்று.
- சோற்றுக்கு உப்பு சேர்ப்பதை தவிர்த்துக் கொள்ளுதல் நன்று.




- அச்சாறு, ஊறுகாய் என்பவற்றை பரிமாறுவதற்கு அலுமினியப் பாத்திரங்களை தவிர்த்து மட்பாண்டத்தினால் ஆன பாத்திரங்களை பயன்படுத்த வேண்டும்.
- சமைத்த உணவுகளை எப்போதும் மூடி வைத்தல் வேண்டும். மூடியற்ற பாத்திரங்களில் சமைத்த உணவுகளை சேமித்து வைப்பதை தவிர்க்க வேண்டும்.
- சமைத்த உடன் சுடு நிலையிலேயே உணவைப் பரிமாறுவதே சிறப்பாகும்.
- பிளாஸ்ரிக் மூலப்பொருள் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒருநாள் குவளைகளில் பாயாசம் பரிமாறுவதை தவிர்க்க வேண்டும். சில்வர் குவளைகளை பயன்படுத்த வேண்டும்.
- முழுப்பாவாடை அணிந்து, பந்தியில் உணவுப் பரிமாறலில் ஈடுபடும் சிறுமிகளின் ஆடை நிலம் கூட்டுவது போலமையாது, கணுக்கால் முட்டியளவில் இருப்பதே விரும்பத்தக்கது. இலைகளில் பரிமாறப்பட்ட பின்னரான உணவு மாசடைதல் இதன் மூலம் தவிர்க்கப்படலாம்.
- தண்ணீர் பந்தல்களில் செயற்கையான இனிப்பூட்டப்பட்ட பானங்களுக்கு பதிலாக இயற்கையான மூலிகைப் பானங்கள் வழங்குதல் சிறப்பு. உதாரணம், 'மோர், மூலிகைப் பானம், இலைக்கஞ்சி'
- இயற்கையான பழச்சாறுகளை தயாரிக்கும் போது சீனியை உள்ளீடாக சேர்ப்பதைத் தவிர்த்தல் நன்று.
- உணவு பொதியிட பொலித்தீன் தாள்களை பாவிக்கும் நடைமுறையை தவிர்க்க வேண்டும்.
- உணவுக் கழிவுகளை இடுவதற்குத் தனியான குப்பைத் தொட்டிகளை பயன்படுத்த வேண்டும். நாள்தோறும் கழிவுகள் உடனுக்குடன் அகற்றப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- கழிவு நீரை நன்கு சூரிய ஒளிபடக்கூடிய இடத்தில் உலர விடுதல் வேண்டும். இடவசதி சிறிதாக இருப்பின் கழிவு நீர் சேகரிக்கும் தொட்டியினுள் அதனை சேர்ப்பிக்க வேண்டும். அவை உடனுக்குடன் அகற்றப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- உபயோகிக்காத அல்லது எஞ்சிய உணவை தகுந்த முறையில் அகற்றிக் கொள்ள வேண்டும்.

*கட்டுரையாளர்: மருத்துவர், நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ். போதனா மருத்துவமனை.*

சூரியகாந்தி
உதயன்
12.08.2018



# கலைஞர் கருணாநிதியும் ஈழத்தமிழர்களும்...


கட்டுரை

த.செல்வராசா

கடந்த 7ஆம் திகதியன்று கலைஞர் கருணாநிதி தனது 95ஆவது வயதில் இறந்தார். மறுநாள் மெரீனா கடற்கரையில் பல இலட்சம் மக்களின் கண்ணீர் மல்க, மண்ணில் புதைக்கப்பட்டது அவரது உடல். முழு இந்தியாவும் துக்கத்தில் மூழ்கியிருந்தது. இந்தியத் தேசியக் கொடியால் போர்த்தப்பட்ட கலைஞரின் பூதவுடல், 21 வரையான மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் அடக்கம் செய்யப்பட்டது. அவரது இறப்புக்கும் சமாதி ஆக்கப்பட்டதற்கும் இடையில் 24மணிநேரங்கள் இருந்தபோதிலும் ஈழத்தமிழர்கள் ஒரு கறுப்புக் கொடியைக்கூடத் தமது துக்கத்தை வெளிப்படுத்துவதற்குப் பறக்கவிடவில்லை. கடையடைப்பு இல்லை. சோக கீதம் இல்லை. இந்தச் சிறிய மக்கள் கூட்டம். ஏன் அவருடைய சாவிலும் சினம் கொண்டது? என்பதே இன்றுள்ள கேள்வி.

தொப்புள் கொடி உறவு தங்களுக்கும் ஈழத் தமிழருக்கும் உண்டு என்று மேடையில் முழங்குகின்ற தமிழ்நாட்டுத் தலைவர்கள் ஈழத்தமிழருக்குத் தமிழீழம் பெற்றுத் தரவில்லை என்றோ, இந்தியாவிலிருக்கும் அகதித் தமிழருக்குக் குடியுரிமை பெற்றுத் தரவில்லை என்றோ ஈழத்தமிழர்கள் கவலைப்பட்டால் அது ஈழத்தமிழரின் குறைபாடே. (இன்று உச்சமடைந்திருக்கும் புலம்பெயர் இளையதலைமுறையினரின் சீமான் ஆதரவுத் தளத்தினரும் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்)

> **கருணாநிதி ஒரு தமிழ் அறிஞர் என்று எடுத்துக் கொண்டால்கூட ஈழத் தமிழர்கள் தலைமேல் வைத்துப் போற்றியதாக இல்லை. அரசியல் சாணக்கியன் என்ற நோக்கில் பார்த்தால்கூட, அதிலும் அவர், ஈழத் தமிழர்களின் மனங்களை வென்றதாக இல்லை.**



கருணாநிதி தமிழுக்காக உழைத்தார். திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக உழைத்தார். இந்திரா காங்கிரஸ் என்கிற மத்திய அரச கட்சிக்காக உழைத்தார். இந்திரா காங்கிரசுக்காக அவர் உழைத்ததை உறுதிப்படுத்தும் வகையில் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, கலைஞரின் உடல் அடக்கம் செய்யப்படும் வரை கலைஞரின் ஓர் உறவுக்காரரைப்போல கால் கடுக்கக் காத்திருந்தார். துக்கப்பட்டார். இந்தியா என்கிற தேசியக் கொடியையே கலைஞருக்குப் போர்த்தியிருந்தார்கள். அதையே அவர் விரும்பியும் இருந்தார். தமிழீழக் கொடியைப் போர்த்த அவர் தயாராக இருக்கவில்லை.

### கலைஞருக்குக் கவலை தெரிவிக்கவில்லை

சேரர்கள் பற்றியும், சோழர்கள் பற்றியும், பாண்டியர்கள் பற்றியும் பல காவியங்களையும் கதைகளையும் எழுதிய கலைஞர், திரைப்படத்தின் மூலமே மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தார். பேச்சுக்கள், எழுத்துக்கள் என்பதை விடத்திரைப்படங்களையே பல கோடி மக்கள், பல தடவைகள் பார்த்தார்கள். ஈழத் தமிழர்களும் பார்த்தார்கள். ஆனால், கலைஞர் மீது கரிசனை வரவில்லை.

குறைந்த பட்சம் தமிழ்ப் பல்கலைக்கழமாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கூட பேரறிஞர் அண்ணாவினுடைய ஒளிப்படமோ, கலைஞர் கருணாநிதியின் ஒளிப்படமோ (தமிழ்த் துறையின் சுவர்களில்கூட) தொங்கவிடப்படவில்லை. கருணாநிதி ஒரு தமிழ் அறிஞர் என்று எடுத்துக் கொண்டால்கூட ஈழத் தமிழர்கள் அவரைத் தலைமேல் வைத்துப் போற்றியதாக இல்லை. அர சியல் சாணக்கியன் என்ற நோக்கில் பார்த்தால்கூட, அதிலும் அவர், ஈழத் தமிழர்களின் மனங்களை வென்றதாக இல்லை.

### இந்தியத் தலைவர்கள் பற்றிய ஈழத்தமிழர் மனநிலை

'விடுதலை' என்ற பெயரில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய நூலில் (கட்டுரைத் தொகுப்பு) பின்வரும் விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அந்த நூலில 'எம். ஜி. ஆரும் புலிகளும் – விடுதலைக்கு வித்திட்ட மாமனிதர்' என்ற தலைப்பில் பதிப்பாகியிருக்கிற கட்டுரையில், புலிகள் இயக்கத்துக்கு 5 கோடி ரூபா நிதியை எம். ஜி. ஆரிடம் கேட்டபோது பண்டுருட்டி ராமச்சந்திரனும் அருகில் இருந்தார் எனவும், சேர்த்து வைத்துள்ள நான்கு கோடி ரூபாவை ஈழத் தமிழருக்காகச் வழங்குவதற்குச் சம்மதித்தார் எனவும் அதைக் காசோலையாகக் கொடுக்க முற்பட்ட வேளை, அதைத் தலைமை அமைச்சர் ரஜீவ் காந்தி சம்மதிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. அதுகாரணமாக "ஈழத் தமிழர்களுக்குத் திரட்டிய நிதியை அந்த மக்களின் உரிமைக்காகப் போராடும் விடுதலை இயக்கத்துக்குக் கொடுப்பதில் என்ன தவறு? இதைத் தலைமை அமைச்சர் புரிந்து செயற்படுகிறார் இல்லையே." என்று எம். ஜி. ஆர் கூறினார். பின்னர் "அந்தக் காசோலையைத் திருப்பித் தாருங்கள். நாளை இரவு எனது வீட்டுக்கு வாருங்கள் எனது சொந்தப் பணத்தில் நான்கு கோடி ரூபா தருகிறேன்" என்றார். மறுநாள் இரவு எம். ஜி. ஆரின் பாதாளப் பண அறையிலிருந்து நான்கு கோடி ரூபா புலிகளின் கைக்குக் கிட்டியது" என்பதாக அன்ரன் பாலசிங்கம் அந்த நூலில் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியிருந்தார். இப்படியிருக்கையில், ஈழத் தமிழர்கள் இந்தியத் தலைவர்களை எப்படிப் பார்த்தார்கள், இந்தியத் தலைவர்கள் பற்றிய ஈழத் தமிழ் மக்களின் மனநிலை என்ன? என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எம். ஜி. ஆரிடம் பணம் வாங்கிய சம்பவத்தை வைத்து நான்கு விடயங்களை ஈழத் தமிழர்கள் புரிந்துகொள்ள முடியும். இந்தியத் தலைமை அமைச்சர் ரஜீவ்காந்திக்குத் தெரிந்தே இவ்வளவு தொகைப் பணம் வழங்கப்பட்டது என்பது முதலாவது. பணத்தைக் காசோலையாக வழங்கினால், அது ஓர் ஆதாரமாகி எதிர்கால அரசியலைப் பாதிக்கும் என்று அவர்கள் கருதியது இரண்டாவது. எம். ஜீ. ஆரிடம் கறுப்புப் பண அறை ஒன்று இருந்தது மூன்றாவது. தீர்மானங்களை எடுப்பது தமிழ் நாட்டுத் தலைவர்களோ, சென்னையோ அல்ல. மத்திய அரசின் தலைவர்களும் டில்லியும்தான் என்பது நான்காவது. இந்த நான்காவது பற்றியே ஈழத் தமிழர்கள் அதிகம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

### சாவில் மகிழ்ச்சி காண்பது அருவருப்பு

கலைஞரின் இறுதிச் சடங்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதைத் தொலைக்காட்சி வாயிலாகப் பார்த்துக்கொண்டிருந்த வடக்கு இளைஞர்கள் சிலர் பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தனர் என்று சில செய்திகளில் அறிய முடிகிறது. ஒரு மனிதனின் துயரத்தில், அல்லது சாவில் இன்பம் காண்பது மிகக் குரூரமான சிந்தனை அல்லது மன நோய் என்றே கூறமுடியும்.

கலைஞர் மீது ஈழத் தமிழர்கள் கொதிப்படைவதற்கான முக்கிய காரணம், 2009மே இறுதிப் போரின் போது தமிழ் நாட்டின் முதல மைச்சராகக் கருணாநிதி இருந்தபோதிலும் போரை நிறுத்தவில்லை என்பதாலேயே. இதில் ஈழத்தமிழரின் நோக்கு நிலையில்தான் தவறு இருக்கிறது. தமிழ் நாட்டுத் தமிழருக்கும் ஈழத் தமிழருக்கும் உண்மையான 'தொப்புள் கொடி உறவு இருக்கவில்லை என்பதும் இந்தியா என்றால், அது புது டில்லியே தவிர சென்னை அல்ல என்பதிலும் ஈழத்தமிழருக்கு இருக்கும் தெளிவின்மை காரணமாகவே கருணாநிதியிடம் தாம் எதிர்பார்த்ததன் தவறைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றனர்.

### நிர்வகிப்பு என்பது அங்கு மத்திய அரசே

1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட இனக் கலவரத்தின் பின்பு ஆயுதப் பயிற்சி பெறுவதற்காக ஈழத் தமிழ் இயக்கங்களுக்கான பண உதவிகளையோ, ஆயுத உதவிகளையோ, பாசறைப் பயிற்சிகளையோ டில்லி நிர்வாகத்துக்குத் தெரியாமல் தமிழ நாட்டுத தலைவர்கள் செய்யவில்லை. அப்போது டில்லி நிர்வாகத்துக்கு அதுவே தேவைப்பட்டது. அதைத் தெரிந்துகொண்டே இந்திரா காந்தியும், ரஜீவ காந்தியும அதை அனுமதித்தார்கள். அந்த உதவியால் ஈழத் தமிழரையும் டில்லி நிர்வாகம் கட்டுக்குள் வைத்திருந்தது என்பதே உண்மை.

ஜனநாகய அரசியல என்பது பெரும்பான்மை மக்களின் விரும்பமாகும். அவ்வாறு பார்த்தால், சிறு தொகையினரான ஈழத்தமிழருக்காகக் குரல் கொடுத்துப் பெரும் தொகையினரான இந்தியத் தமிழரின் வாழ்வியலைப் பாதிக்கும் விடயத்தில் தமிழ நாட்டுத் தலைவர்கள் எப்படி இறங்குவர்? அவர்களுக்கு ஈழத் தமிழர்களைவிட இந்தியாவில் வாழ்கின்ற தமிழர்களே முக்கியமானவர்கள். அத்தோடு ஈழத்தில அவ்வேளை அரசியல் செய்துகொண்டிருந்த தமிழ்த் தலைவர்கள் மீது இல்லாத கோபம் கடல் தாண்டிய கருணாநிதி மீது ஈழத்தவர்களுக்கு இன்னமும் இருப்பது கவலைக்குரியதுதான்.

### கலைஞர் ரீ.வியைப் பார்க்கின்ற பெண்கள்கூடக் கண்ணீர் விடவில்லை

திரைப்படம், தொடர் நாடகம், நடை உடை பாவனை எனப் பலவிடயங்களில் ஈழத் தமிழர்கள் தென்னிந்தியாவில் தொங்கிக்கொண்டிருந்தாலும் கலைஞர் தொலைக்காட்சியில் தொடர்களைப் பார்க்கின்ற யாழ்ப்பாணத்துப் பெண்கள்கூட ஒரு கறுப்புத் துணியைக் கலைஞரின் சாவுக்கு மதிப்பளிக்கும் வகையில் தமது வீடுகளில் தொங்கவிடவில்லை. இதை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதர் மற்றும் தூதரக அதிகாரிகள் பார்த்து அதிர்ச்சியடைந்திருப்பார்கள்.

### விக்கினேஸ்வரனின் இரங்கல்

இந்தியாதான் எமக்குத் தீர்வு தரவேண்டும் என்று கோரும் வடக்கு முதல்வர் விக்கினேஸ்வரன்கூட ஒப்புக்கு ஓர் இரங்கல் செய்தியை வெளியிட்டாரே தவிர, வடமாகாணக் கொடியைக் கலைஞரின் இழப்புக்காக அரைக் கம்பத்தில் பறக்க விடுமாறு உத்தியோக பூர்வ அறிவித்தல எதையும் அவர் விடுக்கவில்லை. அது ஈழத்தமிழர்களில் பெரும்பாலானவர்களைப் பாதிக்கும் என்பதும், இரண்டாவது தடவையாகவும் முதல்வராவதற்கு எதிர்பார்த்துக் காத்திருப்பதற்கு அது பங்கம் விளைவிக்கும் என்பதையும் விக்கினேஸ்வரன் நன்கு அறிந்திருக்கிறார் என்பது புரிகிறது.

கலைஞரின் சாவு ஈழத்தமிழர் மத்தியில் ஒரு பேரதிர்வையோ, தக்கத்தையோ ஏற்படுத்தவில்லை. ஈழத் தமிழர்கள் தாம் வாக்களித்துத் தெரிவு செய்த தமிழ அரசியல்வாதிகளே தமக்குக் கிடைக்கக்கூடிய எதையும் பெற்றுத் தராது இருக்கும்போது படையெடுத்து வந்து (10ஆம் நூற்றாண்டில் சோழர்கள், 20ஆம் நூற்றாண்டில் இந்திய இராணுவம்) இலங்கையின் சொதுக்களைச சூறையாடிய அந்த நாட்டின் தலைவர்கள் எமக்காகக் குரல் கொடுக்கவில்லை என்று குறைப்படுவதில் அர்த்தமில்லை.

இன்றும்கூடத் தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கைக் கரைக்கு வருவது ஈழத் தமிழருக்குச் சொந்தமான மீன்களை அள்ளிச் செல்லவும், ஈழத்தமிழருக்குத் தேவைப்படாத கேரளக் கஞ்சாவை விற்பதற்காகவுமே.

தொப்புள்கொடி உறவு வைத்திருப்பவர்களுக்குரிய இலட்சணம் இதுவல்ல. கலைஞரிடமிருந்து ஈழத்தமிழ் அரசியல் தலைவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியது, கோடிக்கணக்கான சொத்துக்களைத் தனது குடும்பங்களுக்கு எவ்வாறு கலைஞர் சேர்த்தார் என்பதையல்ல. ஒரு சாதாரண மனிதன் எவ்வாறு அங்குள்ள கோடிக்கணக்கான மக்களின் மனதில் இடம் பிடித்தார் என்பதைத்தான்.



ஆயிரக்கணக்கான மக்களை வைத்துக் கொண்டு அரசியல் நடத்துவதற்குத் திண்டாடுகிறார்கள் ஈழத் தமிழ்த் தலைவர்கள். இவர்களைக் காட்டிலும் பல மடங்கு உழைப்பின் காரணமாகக் கோடிக்கணக்கான தமிழ் மக்களின் அரசியல் தலைவராக அரை நூற்றாண்டுகளைக் கருணாநிதியால் முழுமை செய்ய முடிந்திருக்கிறது. அவர் ஈழத்தமிழர்களுக்காக இல்லாவிட்டாலும் இந்தியத் தமிழர்களுக்காகவும், தமிழுக்காகவும் சாதித்திருப்பதுதான் வரலாற்று உண்மை.

facebook Home Profile Inbox Friends Account



## ஓய்ந்தது கட்டுமரம்

இறைவனடி சேர்ந்த "கலைஞர் கருணாநிதிக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள். இன ரீதியாக உம்மை நான் வெறுத்தாலும் உங்களது கலைத்திறனுக்கு நான் எப்போதும் அடிமையே சிறந்த கலைப்படைப்புகளை உம்மிடம் இருந்து கற்றேன். இரசித்தேன் அந்த வகையில். எதுவாக இருந்தாலும் ஒருவரது சாவுக்கு அஞ்சலி செலுத்த வேண்டியது மனிதாபிமானம். மீண்டும் ஒருமுறை ஆழ்ந்த அனுதாபங்கள்

*இலங்கைத்தமிழன்*


அரட்டை

மேரிகிறேஸ வரதராஜன்

# சிந்தா ஓர் facebook அரட்டை

## சொத்துக்களை மதிப்பீடு செய்தல் வேண்டும்!

தனது பரம்பரைக்குச் சொத்துக்களைச் சேகரித்து விட்டு அரசியல் பிரவேசம் செய்தவர்கள். செய்பவர்கள் மக்களின் பொருளாதார அபிவிருத்திக்குப் புதிதாக எதுவும் செய்யமாட்டார்கள். ஒருவர் அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்னர் அவரது சொத்துக்களை மதிப்பீடு செய்தல் வேண்டும்.



Status Photo Ask Question M

"மெரினா ஓர்அழகிய கடற்கரை
அங்கு குப்பைகளைக்
கொட்ட வேண்டாம்"
கொட்டியாச்சு...
கொட்டியாச்சு....

கருணாநிதியின் மறைவை ஒட்டி, ஈழத் தமிழர் பகுதிகளில் இரங்கல்களும், வெடி கொளுத்திக் கொண்டாட்டங்களும் பரவலாகவே நடந்தேறியிருக்கின்றன. இது சார்ந்த ஏகப்பட்ட கருத்துப் பதிவுகள் இந்த வார முகநூலில் கொட்டிக் கிடக்கின்றன. எல்லாவற்றிலும் கலைஞர்தான் ஹீரோ!



# கருணாநிதியே கதாநாயகன்!

இந்த வாரம் முகநூலில் அதிகம் அலசப்படுகின்ற விடயம் கருணாநிதியின் இறப்பே. ஆகையால் முகநூலின் இந்த வாரக் கதாநாயகன் கருணாநிதியே.

"கருணாநிதி இனத்துரோகிதான். மாற்று கருத்துக்கு இடமில்லை. ஆனால் அதையும் தாண்டி ஒருவருடைய சாவில் மகிழ்ச்சி கொள்வது மனிதச் செயலே இல்லை. ஒருவர் உயிருடன் இருக்கும் போது அவரது தவறுகளை எடுத்துக் காட்டுங்கள். இறந்தபோது அவர் செய்த நன்மைகளை மட்டும் பேசுங்கள். வயதுக்கு மரியாதை கொடுத்து மனித நேயத்துடன் நடந்து கொள்ளலாம். நாளை எமக்கும் வயதாகும். அதற்காகக் கருணாநிதியை உத்தமன் என்று சொல்லவில்லை. தமிழ் நாட்டில் எந்த அரசியல்வாதி உத்தமன்? சாவை இரசிப்பவன் நிச்சயமாகத் தமிழனாக இருக்க முடியாது.''



மெரினாவில் கலைஞருக்கு இடமில்லையாமே. இழுபறிக்குப் பிறகு தானாம் புதைப்பதற்கு இடம் கிடைத்தது.
தென்னிந்தியா முழுவதும் திருடி, அடிச்சு நிலத்தை வாங்கிப் போட்டாலும், கடைசியில, ஆறடி நிலத்துக்குப் பிச்சை எடுக்க வைச்சான் பாருங்க, அவன் தான் கடவுள்!


**தெய்வம் நின்று கொல்லும்.**

## "மகளின் படத்தை முகப்புத்தகத்தில் வெளியிடுவேன்"

இது இந்தியாவில் அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று. இரண்டு பேர் கைதாகியிருக்கிறார்கள். நெல்லை வி.எம்.சத்திரத்தைச் சேர்ந்த ஆறுமுகநாத் கடந்த மாத நடுப்பகுதியில் மதுரைக்குச் சென்றபோது பஸ் நிலையத்தில் அவருடைய கைப்பையைத் தவறவிட்டிருக்கிறார். அதில், 2 கைபேசிகள், தங்கத் தோடு, 'பென்ட்ரைவ்' ஆகியவை இருந்திருக்கின்றன. இது பற்றி அவர், பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருக்கிறார்.

இதன் பின்னர் ஆறுமுகநாத்தின் கைபேசிக்கு ஓர் அழைப்பு வந்துள்ளது. ஒருவர் பேசியுள்ளார். பஸ்ஸில் தவறவிட்ட கைப்பை தன்னிடம் இருக்கிறது. 25 ஆயிரம் ரூபா கொடுத்தால் தருவேன் எனக் கூறிவிட்டு இணைப்பைத் துண்டித்திருக்கிறார். மீண்டும், அதே நபர் பேசியபோது, கேட்ட பணம் தராவிடில், 'பென்ட்ரைவிலுள்ள உனது மகளின் ஒளிப்படத்தை முகநூல், 'வட்ஸ்அப்'பில் தவறாக வெளியிடுவேன்'' என மிரட்டி உள்ளார்.

வேறு வழியின்றி, அந்த நபரை ஆறுமுகநாத் குறிப்பிட்ட இடத்துக்கு வரவழைத்தார். இது பற்றி முன்கூட்டியே பொலிசாருக்கும் அவர் தகவல் கொடுத்தார். ஆறுமுகநாத்திடம் பேசிய நபர், தனது நண்பருடன் அங்கு வந்தார். திட்டமிட்டபடி, இருவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். பிறகென்ன அவர்களிடமிருந்த பொருள்களை மீட்டதோடு, சிறையிலும் அடைக்கப்பட்டனர்.



மது அருந்தும்போது உடலுக்குள் இருக்கும் ஓர் உறுப்பு மட்டும் மது அருந்துபவரைக் காப்பாற்றவும், அவரது குருதியில் கலந்த அற்ககோலைப் பிரிக்கவும் ஒரு நொடிகூட ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும்! அதை உழைப்பு என்று கூடச் சொல்ல முடியாது.

## படித்ததில் பிடித்தது

அது ஒரு பெரும் போராட்டம். அப்படிப் போராடும் உறுப்பின் பெயர் கல்லீரல் ! மனிதனுக்கு மிகப் பெரிய நண்பன் யாரென்று பார்த்தால் அது அவனது கல்லீரல்தான். இது செயற்பாடு இழந்து அல்லது நோய் வாய்ப்பட்டு விட்டால் உயிர் வாழ வழியில்லை.

கல்லீரலும் அப்படித்தான் நீங்கள் குடிக்கக் குடிக்க மது என்னும் விசத்தோடு ஓயாமல் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கும்! இப்படியாகக் கல்லீரல் உயிர் வாழ்வுக்குப் பல வழிகளிலும் உதவுவது பற்றிப் பல தகவல்களைப் பதிந்து இத்தகைய கல்லீரலைக் காப்பாற்ற மதுவையும் புகையும் தவிர்க்க வேண்டும். என்று விழிப்பூட்டுகின்றது பதிவு ஒன்று.

# புத்திஜீவித்தனத்தின் புரட்டல்கள்

## மேற்குலகப் புத்திஜீவிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கிய நூல்

இந்தவாரக் கருத்தாளர்

மு.பொன்னம்பலம்




இன்று சில காலங்களாக மேற்குலகில் பின் நவீனத்துவம் பற்றிப்பேசும் 'புத்திஜீவிகள்' எனப்படுவோரின் புரட்டல்களும், ஏமாற்றுதல்களும் அம்பலப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதோடு அவை தொடர்பான வாதப் பிரதிவாதங்களும் நடந்துகொண்டிருக்கின்றன. இது பற்றித் தமிழ் எழுத்தாளர்கள் மத்தியில் அதிகம் பேசப்படாது இருப்பது வியப்புக்குரியது.

இத்தனைக்கும் காரண்மாக இருப்பவர் நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் பேராசிரியர் 'அலன் சோகல்' (alan sokal) ஆவார். அலன் சோகல், தனது நண்பர் 'ஜீன் பிறிக்மொன்ற்' (jean bricmont) என்பவரோடு இணைந்து வெளியிட்ட 'இன்ரெலெக்சுவல் இம்போஸ்ரெர்ஸ்' (intellectual impostures-புத்தி ஜீவித்தனத்தின் புரட்டல்கள் அல்லது ஏமாற்றுதல்கள்) என்னும் நூலே இதைச் செய்துள்ளது.

அதாவது கணிதவியல், இயற்பியல், அறிவியல் என்பவற்றில் பாவிக்கப்பட்ட எண்ணக்கருக்கள், அவற்றின் துறைசார்ந்த சொற்கள் இந்தப் பின் நவீனத்துவப் புத்திஜீவிகளால் வேறு துறைகளுக்கு 'இறக்குமதி' செய்யப்பட்டு அவற்றின் கருத்துக்களே அர்த்தமற்றவையாக ஆக்கப்படுவதோடு தாம் சொல்ல வந்ததையும் புரியாத ஒன்றாக்கி தாம் மேன்மையானவர்கள்போல் பாவனை காட்டுகின்ற தன்மைதான் இவ்வாறாக அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான பாவித்தல்களை ஒருவர் வாசிக்கும்போது அவர் ஏதும் விளங்கிக் கொள்ள முடியாது போவாராகில், அது அதன் மேன்மையான கருத்துக்களால், ஏற்படுகின்றது என்று நினைத்துவிட வேண்டாம். மாறாக அவை கருத்தற்ற வெற்று வாக்கியங்கள் என்பதாலேயே. இதையே, இவர்களது கூற்றுக்களைக் கட்டவிழ்த்த 'அலன் சோகல்' பின்வருமாறு கூறுகிறார்.

'இன் மெனி கேஸஸ் வி ஷால் டெர்னோம்ஸ்ற்றேட் தற் இவ் ரெக்ஸ்ற் சீம் இன்கொம்பிறீஸைபிள், இற் இஸ் போ தி எக்ஸிலென்ற் றீசன் தே மீன் ப்றெஸ்செஸ்லி நோட்திங்' (in many cases we shall demomstrate that if texts seem incomprehensiple, it is for the excellent reason they mean precisely nothing) இத்தகைய அதிர்ச்சியைத் தந்த நூல் வெளிவருவதற்குக் காரணமாய் இருந்த பின்னணியை அறிந்து கொள்வது இன்னும் சுவையானதாகும். அதாவது, 'இன்ரெலெக்சுவல் இம்போஸ்ரார்ஸ்' என்னும் நூல் வெளிவருவதற்கு 'ஏ ட்றான்ஸ்போர்மற்றிவ் ஹெர்மேனியுரிக்ஸ் ஒவ் குவாண்டம் க்றாவிட்டி' (a tr ansformative hermeneutics of quantum gravity) என்ற தலைப்பில் எழுதப்பட்ட தந்திரோபயமான ஏமாற்றுக் கட்டுரையே காரணம். இந்தக் கட்டுரையானது அமெரிக்க பண்பாட்டு ஆய்வுக்குரிய சஞ்சிகையான 'சோசல் ரெக்ஸ்ற்' (social text) என்ற சஞ்சிகைக்கு அனுப்பப்பட்டது. இது பின் நவீனத்துவப் பாணியில் அதைக் கேலி செய்ய எழுதப்பட்ட கட்டுரையாகும். வேடிக்கை என்னவென்றால், இதில் தரப்பட்டிருந்த கணிதவியல், இயற்பியல் சம்பந்தப்பட்ட மேற்கோள்கள் உண்மையானவையாக இருந்தன. உடனேயே இந்தக் கட்டுரை பின் நவீனத்தும் சார்பானதாகக் கருதப்பட்டு 'சோசல் ரெக்ஸ்ற்' சஞ்சிகையில் பதிப்பாக்கப்பட்டது.




இது பதிப்பாகியதுதான் தாமதம் சோகலும் அவரது நண்பர்களும் 'சோசல் ரெக்ஸ்' இல் பதிப்பாகிய மேற்படிக் கட்டுரையின் போலித்தனத்தை வெளிப்படுத்தினர். அதில் தரப்பட்டிருந்த உண்மையான மேற்கோள்கள் எந்தவித அர்த்தமும் தராதவையாகப் புகுத்தப்பட்டிருந்தன. இதைத்தான் இன்றைய புத்திஜீவிகள் எனச் சொல்லப்படுவோர் செய்கின்றனர் என்று அவர்கள் கூறி, lacan, kristeva, baudrillard, delouse ஆகிய பிரஞ்சுப் புத்திஜீவிகள் எவ்வாறு அறிவியல் சம்பந்தப்பட்ட எண்ணக்கருக்கள், சொற்பாவனைகள் என்பவற்றைத் தாம் கூற வந்த பின்னணிக்குப் பொருத்தமற்றதாகவும், வீணடிப்புச் செய்யும் முறையிலும் பாவித்தனர் என்பதோடு அதற்கான தர்க்க ரீதியான நியாயப்படுத்தல்களைக் காட்ட முடியாதவர்களாகவும் இருந்தனர் என்பதையும் வெளிப்படுத்தினர். மேற்குலகப் புத்திஜீவிகள் மத்தியில் இது பேரதிர்ச்சியை ஏற்படுத்திற்று.

இந்த நூலை வெளியிடுவதன் முக்கிய நோக்கம் பற்றி ஆசிரியர்கள் குறிப்பிடுகையில், புகைத்திரள் போன்ற தெளிவற்றதென எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் நவீனத்துவம் என்று எம்மால் அழைக்கப்படும் ஒன்று பற்றிய வரைவுக்குட்பட்ட ஆனால், தற்புதுமையான விமர்சனத்தை முன்வைப்பதையே இந்த நூல் நோக்கமாகக் கொண்டுள்ளது. அதே நேரம் நாம் பொதுவாகப் பின்நவீனத்துவச் சிந்தனை பற்றி அலசி ஆய்வு செய்ய முற்படவில்லை.

மாறாக அதிகமாகத் தெரியப்படாதிருந்த அதன் சிறிய ஒரு பகுதியை அதாவது கணிதவியல், இயற்பியல் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் சொற்கள் மற்றும் எண்ணங்கருக்கள் ஆகியவற்றில் தொடர்ந்து இடம் பெறும் தவறான சொற்பயன்பாட்டை வாசகர்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதே நமது நோக்கம்.

உண்மையில் இந்த தவறான சொற்பயன்பாடு என்பது, அதாவது அறிவியல் ரீதியான கோட்பாடுகள் பற்றிய விளக்கங்களின்போது அவை பற்றிய தெளிவற்ற நிலையால் இவர்கள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர். ஒரு துறை சார்ந்த வார்த்தை எதைக் குறிப்பிடுகின்றது என்பது பற்றிய கவலை இன்றி இவர்கள் இந்தச் சொற்களைப் பாவிப்பதே வேடிக்கையானது. இயற்கை அறிவியலில் இருந்து 'இறக்குமதி' செய்யப்படும் எண்ணக்கருக்கள், மானிடவியல் அல்லது சமூக அறிவியல் என்பவற்றுக்குள் புகுத்தப்படும்போது அதற்குரிய சிறிதளவேனும் அனுபவ ரீதியான பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் நியாயப்படுத்தல்கள் இல்லாது ஏன் பயன்படுத்தப்படுகின்றன?

இவை பற்றிய மேலோட்டமான அறிவோடு வெட்கக்கேடான முறையில் இத்தகைய கலைச் சொற்களை அவற்றுக்குக் கொஞ்சமும் பொருந்தாத பின்னணியில் தற்போக்காக வீசி எறிந்து இவர்கள் போவது ஏன்? இதற்கான காரணம் தமது மேன்மையைத் தூக்கலாகக் காட்டுவதற்கு விஞ்ஞானம் பற்றிய அறிவில்லாத வாசகர்களைப் பயமுறுத்தவும் தமது 'மேன்மையை' அழுத்தவுமே நடைபெறுகிறது. இதற்கு lacan, kristeva, baudrillard latour எவரும் விதி விலக்கல்ல என்றே சொல்ல வேண்டும். lacan தான் அண்மைக்காலத்தில் வளர்ச்சி பெற்றுள்ள கணிதம் சம்பந்தப்பட்ட topology பற்றிப் பெரிதாகப் பீற்றுவது தெரிகிறது. மற்றும் latour என்பவர் தான் ஐன்ஸ்டீனுக்கு ஏதாவது கற்பித்திருக்கிறாரோ(!) என்று பெருமைப் பட்டுக் கொள்கிறார். இத்தகைய புத்தி ஜீவிகள் மத்தியில் Jacques derrida மட்டுமே அதிக கண்டனத்துக்கு உள்ளாகாமல் தப்புகிறார்.

சோகல் ஆரம்பத்தில் பின் நவீனத்துவத்தைப் பகிடி பண்ணும் கட்டுரையை பதிப்பாக்கியபோது, பல புத்திஜீவிகள் அது பற்றிப் 'பெரிதாக வியாக்கியானப்படுத்த முற்பட்டபோது சோகல் அந்தக் கட்டுரையானது பின் நவீனத்துவத்தை கேலி பண்ணும் கட்டுரை என அம்பலப்படுத்தினார். அது பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தமிழ் நாட்டிலும் அந்தக் கட்டுரை பற்றிப் பெரிதாகப் பேசியவர்களும் மூக்குடைப்பட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நூலான 'திறனாய்வின் புதிய திசைகள்' என்ற நூலில் உள்ள ' கிழக்கின் சிந்தனை மேற்கில் திசை திரும்பல்' என்ற கட்டுரை மேலே நான் சுட்டிய விஷயங்களோடு ஒத்த ஒன்றையே செய்கிறது. அதாவது கிழக்கத்தேய ஞானிகள் ஆத்மீகப் பரிமாணங்களை விளக்குவதற்குப் பயன்படுத்திய எண்ணக்கருக்களை மேற்கத்தேயத் தத்துவவாதிகள் தமது அரசியல், சமூக கொள்கைகளை விளக்குவதற்கு 'இறக்குமதி' செய்து பாவித்தபோது ஆத்மீக உண்மையே தடம் புரண்டது.

இந்தக் கட்டுரையானது இலங்கையின் கலைக் கழக ஆய்வாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. 'திறனாய்வின் புதிய திசைகள்' நூல் உலகப் புத்தகப் போட்டியில் மலேசிய கூட்டுறவு நிறுவனத்தின் 10ஆயிரம் டொலர் பரிசைப் பெற்றது.

## எமது கிராமம்

பண்டையோர் பாதையிட்ட
பலமான கிராமம்
பண்பால் இணைக்கப்பட்ட
பச்சிளம் சிசுவின் உறைவிடம்

பேதங்கள் தகர்த்தெறிந்து
பேதையவளுக்கு
வாழ்வளிப்பதில்
பேரார்வம் மிக்க
பெரியோர் வளர்ந்த கிராமம்

விதியின் கையில்
விளையாட்டுக்குக்கூட
விலைபோகாத எம்
விசால பூமி
மதியின் செயலால்
மண்டியிட்டுக் கிடப்பதை
கண்டேன்
மண் அகழ மனிதர் உண்டு
எம்மவர்
மனக்குறை தீர்க்க மாந்தர்
உண்டோ?

வன்மம் படைத்த
வலியோனின் வலையில்
மீண்டு
வறட்டுக் கௌரவத்திடம்
வலிந்து சிக்கினோம்

வரமாய் வலிந்து
கேட்கிறோம்

வஞ்சம் கொண்ட
நெஞ்சம்தனை
வளரவிடாதீர்கள் அது
எம்மவர்
வளர்ச்சியையே
சிதைத்துவிடும்.

கவிதை

ஞா.கீர்த்தனோஜினி



கருத்து

# மாட்டிறைச்சியும் பசுவதையும்

முருகேசு சச்சிதானந்தம்



ஜூன் மாதத்தின் முதலாவது வார. ஞாயிறு சூரியகாந்தி இதழில் என்னால் எழுதப்பட்டிருந்த கட்டுரை ஒன்று குறித்துக் கடந்தவாரம் சு.தர்மலிங்கம் என்பவர் சில கருத்துக்களை எழுதியிருந்தார். அதை உதயன் பதிப்பித்திருந்தது. மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். தெளிவடைதல்களுக்கு இத்தகைய கருத்தாடல்களே துணைபுரியும். எனது கட்டுரை ஒன்றுக்கு எதிர்வினை ஒன்று எழுதப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.
பதிப்பித்த உதயனுக்கும் பாராட்டுக்கள். இந்தப் பாரம்பரியம் தமிழ் ஊடகங்களில் அதிகம் ஏற்படவேண்டும் என்பதே எனது விரும்பம் சு.தர்மலிங்கத்துக்கு எனது நன்றிகளும் வாழ்த்துக்களும்.
சு.தர்மலிங்கத்தின் மறுப்பில் காணப்படுகின்ற முக்கிய எண்ண ஓட்டம், 'மாட்டிறைச்சி' என்பதை நான் பசு மாட்டிறைச்சி, நாம்பன் மாட்டிறைச்சி எனப் பிரித்துக் காட்டவில்லை என்பதாகவே இருக்கிறது. இதற்கு மிகச் சாதாரணமான ஒரு பதில்தான் என்னிடம் உண்டு. உணவுச் சங்கிலியைத் தவிர்த்து, தாங்கள் சொல்வதுபோல் 'உயிரைக் கொல்லுதல்' என்று அதை வரையறுத்தால்கூட, நாம்பன் மாட்டின் உயிர் மதிப்பற்றது, பசு மாட்டின் உயிர் மதிப்புக்குரியது என்பதை என்னால், ஏற்றுக்கொள்ளமுடியாது.
அத்தகைய சர்ந்தர்ப்பத்தில் இரண்டு உயிர்களும்சமமானவை என்பதே எனது வாதம். இல்லாவிடில் 'பெண்கள் உரிமைகள்' அமைப்பைப்போல் 'நாம்பன் உரிமைகள்' அமைப்பொன்றும் உங்களுக்குத் தேவைப்படும்.

## பெற்றோர்களைப் பேணுங்கள் பசுக்களைப் பிறகு பார்க்கலாம்

ஒரு மாட்டுப் பட்டியை எடுத்துக் கொண்டால் 90சதவிகிதத்துக்குமேல் பசு மாடுகளே காணப்படுகின்றன. மிகுதி 10வீத நாம்பன்களை வெட்டுவதானால் இவ்வளவு மாட்டிறைச்சிக் கடைகளும் பிளாஸ்ரிக்கில் செய்த இறைச்சியைத்தான் விற்க வேண்டும். பசு மாடுகளின் தொகை அதிகமாகக் காணப்படுவதற்குக் காரணம் ஒரு பசுவைக் கன்றுகள் ஈனும் வல்லமை இருக்கும் வரை வளர்ப்பதாலேயே. மாடு வளர்ப்பவர்கள் மத்தியில் "உது இனிக் கண்டுபோடாது; இறைச்சிக்குத் தட்டிவிடு" எனும் பாரம்பரியத்தை மிகச் சாதாரணமாகக் காணலாம். அப்படியில்லாமல் கோமாதா என்று இந்துக்கள் பூசிக்கின்ற வயதான பசுக்கள், கன்று ஈனுகிற வல்லமையை இழந்த பின்பும் சாகும்வரை சாப்பாடுபோட்டு எவராவது வளர்க்கிறார்களா? அவ்வாறு வளர்த்தால், இயற்கையாக அவை வயதாகி இறக்கும்போது அவற்றுக்குச் சமயச் சடங்குகள் செய்து அடக்கம் செய்யும் வழக்கம் ஏதும் இந்துக்களிடம் உண்டா?
பெற்றோர்கள் தமக்குப் பயன்படமாட்டார்கள் என்ற முடிவு எடுக்கப்பட்டதன்பின்னால், பல இந்துக் குடும்பத்துப் பிள்ளைகள் தமது பெற்றோரை வயோதிப மடங்களில் விட்டுவிடுகின்றனர். கைதடி வயோதிபர் இல்லத்தில் இடப்பற்றாக் குறை நிலவும் அளவுக்கு நிலைமை மோசமைடைந்து விட்டது. தாய், தந்தையர்களுக்கே இந்த நிலை என்றால், இவர்களுக்கு மத்தியிலிருக்கின்ற வயதான பசுக்களின் நிலை எப்படியிருக்கும்?

## சமூகங்களில் குழப்பம் விளைவித்ததை அறிக!

சிவசேனா அமைப்பு மற்றைய இனங்களைச் சீண்டவில்லை, எவ்வகையிலும் பாதிக்கவில்லை என்று அவர் கூறியிருப்பது வியப்பளிக்கின்றது. சிவசேனா சாவகச்சேரியில் நடத்திய போராட்டம் ("இது பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்குமான நாடு") ஏனைய சமூகங்களை மாத்திரமன்றி பல இந்துக்களையும் கூடச்சினம் கொள்ளச் செய்திருந்தது. அவ்வேளை கிளம்பிய அதற்கான பெரியளவிலான எதிர்ப்புக்களை அவர் அறியாமலிருப்பது ஆச்சரியம் அளிக்காமல் என்ன செய்யும்?
சிவசேனா அமைப்பு வலுவடைந்திருக்கிற இந்தியாவில் பசுவதைக்கு இடமிருக்காது என்பது அவரது ஊகம் மாத்திரமே. உலகின் முன்னணி மாட்டிறைச்சி ஏற்றுமதி நாடுகளின் வரிசையில் இந்தியா முதலிடம் பெறுவதே உண்மை. 'பீவ் எக்ஸ்போர்ட் கன்றி இன் த வேர்ள்ட்' என்றதும், இன்னும் பல இணையத்தளங்களிலுமாக இதைப் பார்க்க முடியும். அத்துடன் சிவசேனா வலுவடைந்திருப்பதால், இந்தியா மாட்டிறைச்சி ஏற்றுமதியில் முன்னணி வகிக்கக்கூடாது என்று எதிர்பார்ப்பதும் தவறு. இந்தியா இந்துக்கள் மாத்திரம் வாழ்க்கை நடத்தும் தேசமல்ல. இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சி என்கிற நரேந்திர மோடியின் இந்து ஆட்சியில் மாடு வெட்டுவதற்குத் தடை போடப்பட்டதால், மாட்டிறைச்சி விற்பனையை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் கிளர்ந்தெழுந்தனர் அதன் பின்னர் மெதுவாகக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது.



## கொலையில் என்ன கருணையிருக்கிறது?

வளர்ச்சியடைந்த நாடுகளில் ஜீவகாருணிய முறையில் கருணைக்கொலை செய்தே மாடுகளைக் கொல்கின்றனர் என்கிறார் தர்மலிங்கம். கொலை என்பது கொலைதான். அதிலென்ன கருணை இருக்கிறது? இவரது கருத்துப்படி ஒரு மிருகத்தைக் குரூரமாகக் கொல்லாது, வேறு வகையில் கொல்லாலாம் என்பது தவறானது. உலகின் முன்னணிப் பாலுற்பத்தி நாடு நியூசிலாந்து. இங்கு பண்ணைகள் யாவும் வர்த்தகத் திட்டத்துக்கு (பிஸ்னஸ் பிளான்) ஏற்பவே வளர்க்கப்படுகின்றன. ஆயிரம் மாடுகள் உள்ள பட்டியில் வருடா வருடம் 950கன்றுகள் ஆவது பிறக்கின்றன. இதில் மிகக் குறைந்த தொகைக் கன்றுக் குட்டிகளை வைத்துக்கொண்டு, (எப்போதும் ஆயிரம் மாடுகளைப் பேணுவதும் வயதானவற்றைக் கழிப்பதும்) ஏனைய கன்றுக் குட்டிகளை பிறந்து நான்கு நாள்களுக்குள் கொன்று விடுகின்றனர். இவ்வாறு வருடா வருடம் இருபது இலட்சம் (2மில்லியன்) கன்றுக் குட்டிகள் கொல்லப்பட்டு வருவது தர்மலிங்கத்துக்கோ, சிவசேனா அமைப்புக்கோ தெரிந்திருக்கவில்லை. இந்தக் கன்றுக் குட்டிகளின் கொலைகளைத் தர்மலிங்கத்தின் பாணியில் கருணைக் கொலையாக ஏற்றுக்கொள்ளும் மனநிலை எனக்கில்லை.

## மாட்டிறைச்சி மன நிலை

அத்தோடு தர்மலிங்கம் சொல்வதுபோல், 'பதார்த்த குணங்கள்' என்ற நூலின் பிரகாரம் மாட்டிறைச்சி உண்பவர்களுக்குத் தோல் நோய் ஏற்படுமாம். இப்படிப் பார்த்தால், யாழ்ப்பாணத்திலேயே பெரும்பாலானவர்கள் (அதிகளவில் இளைஞர்கள்) தோல் நோயால் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். உலகம் முழுவதும் அதிகமானோர் இந்த நோயுடன் இருந்திருக்கவேண்டும். மாடுகள் இயற்கையாகப் புல்லை மட்டும் உண்பதால் அவற்றின் இறைச்சி உடலுக்கு ஆரோக்கியமானது. அதனால்தான் குமுளமுனை மற்றும் வன்னிப் பிரதேச மாடுகள் பட்டியாகத் தீர்த்து வாங்கப்படுகின்றன. மாட்டிறைச்சியை வழமையாக உண்ணுகின்ற கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் புண்ணுடன்தான் வாழ்கின்றனரா? எதையும் பொதுமைப்படுத்திப் பார்க்கவேண்டும். ஏனைய சமூகங்களுடன் கலந்து பழகுவதன்மூலமே இந்த 'மாட்டிறைச்சி' மன நிலையை மாற்றிக்கொள்ள முடியும்.
சிவசேனா அமைப்பு இந்து சமயத்தையும் (இலங்கையில் சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்ட சைவ அமைப்பு என்பதை அறிக) அதைச் சார்ந்தவர்களையும் நல்வழிப்படுத்திக் கவனிக்கும் ஓர் அமைப்பு என்கிறார் தர்மலிங்கம். அவ்வாறென்றால் மக்கள், சமூகம் என அணுகாது எவ்வாறு அந்த அமைப்பால் கண்காணிக்கவோ, நல்வழிப்படுத்தவோ முடியும்?

## மாட்டிறைச்சியானது விலை குறைந்த பொருள் அல்ல

ஒரு கிலோ விளைமீன் 750ரூபா. ஆனால் ஒரு கிலோ மாட்டிறைச்சி 900ரூபா என்பதை அறிக. மாற்றீடாக எதைக் கொண்டு வந்தாலும், அது மாட்டிறைச்சியின் விலைக்குக் குறைவாக இருக்கப்போவதில்லை. கோரோசனை மாட்டின் திமிலில் இருந்தா, வயிற்றுப் பகுதியில் இருந்தா பெறப்படுகிறது என்பதல்ல பிரச்சினை. அது மாட்டில் இருந்து எடுக்கப்படுகிறது என்பதுதான் முக்கியமானது. அத்தோடு போதைக் குடிபானத்தை மருந்தாகப் பயன்படுத்துபவர் குடிகாரராகி விடார், என்பதையும் தூய்மையான இந்து ஒருவர் மருந்தாக மாட்டிறைச்சியை உண்பதால் புனிதம் இழந்துவிடார் என்பதையும் உவமைப்படுத்தி ஒற்றுமையாக்கியிருப்பதில் உள்ள தவறை அவர் உணர்ந்துகொள்ளவேண்டும்.
முல்லைத்தீவில் குமுளமுனை என்ற கிராமம் மாடு வளர்ப்பில் மிகவும் பிரசித்தமானது. 1980களில் அந்த ஊரின் வீதிகள் சாணத்தால் மூடப்படும் அளவுக்கு மேய்ச்சலுக்குப் போகும் பட்டி மாடுகள் சாணம் போட்டிருக்கும். கரும்பச்சை நிறமாகவே வீதிகள் காணப்படும். (தற்போது புல், வைக்கோல் போடாது 'மாஸ்' போடுவதால் மாடுகளின் சாணம் நாய்களின் மலம்போலக் காணப்படுகிறது. கையால் அள்ள முடியாத அளவுக்குத் துர் நாற்றமும் வீசுகிறது) இப்போது குமுளமுனைக் கிராமத்துக்குச் செல்ல வேண்டும். அங்கிருந்த ஆயிரக்கணக்கான மாடுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிக்கொணர்வதுடன் இனிமேல் அவ்வாறு நிகழாதவாறு புதிய ஏற்பாடுகளை மேற்கொள்வேண்டும். அதுவே பசுக்களாகிய 'கோமாதாக்கள்' மீது அவர்கள் வைத்திருக்கும் உண்மை அன்பாக இருக்க முடியும்.
2010ஆம் ஆண்டின் பின்னர் இத்தகைய மாட்டுப் பட்டிகள் முழுமையாக விலைபேசப்பட்டு வவுனியாவுக்கு ஏற்றப்பட்டு பின்னர் இறைச்சியாக்கப்பட்டு கொழும்புக்கு ஏற்றப்பட்டு வருகின்றன. இதில் 90வீதத்துக்கு மேல் பசு மாடுகளே. அவை அனைத்தும் 'கோமாதாக்கள்'. மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மேய்ச்சல் தரவைகள் அருகி வருவதால் பெருமளவு மாடு வளர்க்கின்ற பலர் தமது மாடுகளைப் பட்டியாக விற்றுவிட்டு வேறு தொழில் முயற்சிகளில் இறங்கி வருகின்றனர். இந்த நடவடிக்கையின் மூலம் அதிக பசுக்கள் இறைச்சியாக்கி விற்கப்படுகின்றன.
கிளிநொச்சி - ஜெயந்தி நகரில் ஓர் ஏழைத்தாயின் கோமாதா கன்று ஈனவிருந்தநிலையில் இறைச்சிக்காக வெட்டப்பட்டிருக்கிறது. துயரப் படங்களை ஊடகங்களில் கண்டு வேதனையடைந்தேன். எனது வேதனையைவிட ஆயிரம் மடங்கு வேதனை சிவசேனை அமைப்புக்கும் தர்மலிங்கம் போன்றவர்களுக்கும் இருக்கவேண்டும். 'கோமாதா' என்கிற பசுக்களைக் காப்பாற்றும் முயற்சியில் அவசரமாக இறங்கவேண்டிய தேவை. சிவசேனா அமைப்புக்கு உண்டு. அதற்கு முன்னதாகத் தர்மலிங்கம் போன்றோர்களுக்குப் பல தெளிவுபடுத்தல்கள் தேவை. கோமாதாவை நாங்கள் நமக்குள் போற்றலாம், கொண்டாடலாம். அதை மற்றையவர்கள் மீதும் திணிப்பது தவறு. உணவு அவரவர் உரிமை. அத்தோடு இதற்காக அமைப்புக்கள், குழுக்கள் என்று கூடி வேறு அரசியல் செய்வதைவிடுத்து, தனிநபராகிலும் பரவாயில்லை, மனத்தூய்மையுடன் உண்மையுடன் குறிக்கோளைச் சரிவரக் கடைப்பிடிப்பதே முறையானதாகும்.


# லெசூரு

4 வாரம் ஒரு நாடு

கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்

மஞ்சள் ஆற்றைப் பற்றி அறிந்திருப்பீர்கள். செங்கடலும் உங்களுக்குத் தெரியாததல்ல! அப்படியானால் செம்மஞ்சள் நதியைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளீர்களா? தென் ஆபிரிக்காவின் நீண்ட நதி. லெசூரு நாட்டின் மலைகளிலிருந்துதான் அது ஆரம்பிக்கின்றது. பின்பு வடக்கு நோக்கி பாய்ந்து, தென் ஆபிரிக்காவினூடாக ஓடி, சமுத்திரத்தில் போய்க் கலக்கின்றது. தென் ஆபிரிக்காவுக்கும், லைசூருவுக்கும் தேவையான மின்சார உற்பத்தி இந்த ஆற்றின் மூலம் சாத்தியப்படுகின்றது.




### ஆகாய நாடு

ஆபிரிக்க நாடான லைசூருவை உச்சரிக்கும்போது, ஆங்கில எழுத்துக்கள் வேறு உச்சரிப்பைத் தந்தாலும் (லெசோதோ, லிசோதோ) இந்த நாட்டைநாம் லைசூரு என்றே அழைக்கிறோம். இன்று இந்த நாடு 'லைசூரு' என்று அறியப்பட்டாலும், இதன் பழைய பெயர் 'பஸ் ரோலான்ட்'!. லைசூரு என்பது 'செஸோத்தோ மொழி பேசுகின்ற மக்களின் நாடு' என்ற அர்த்தத்தை தருகின்றது.

ஆகாயத்தில் வீற்றிருக்கும் இராஜ்யம் என்று சொல்லும் வகையில், கடல் மட்டத்திலிருந்து ஆயிரம் மீற்றர்கள் உயரத்துக்கு மேல் இந்த நாடு அமைந்திருக்கின்றது. உலக நாடுகளில், இவ்வளவு உயரத்தில் அமைந்துள்ள நாடு இதுதான்! லைசூருவின் மிகத் தாழ்ந்த பகுதி ஆயிரத்து 400மீற்றர்கள் உயரத்தில் தான் காணப்படுகின்றது.

ஒரு நாட்டையே தனது சுற்றுப்புறம் முழுதுமாக எல்லையாகக் கொண்ட ஆபிரிக்க நாடுதான் லைசூரு! இதைச் சூழ்ந்துள்ள அந்த நாடு தென் ஆபிரிக்கா. லெசூருவின் பரப்பளவு 30ஆயிரம் சதுர கிலோமீற்றர்கள். இதன் சனத்தொகை கிட்டத்தட்ட 2மில்லியன்கள். பிரித்தானியர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இந்த நாடு, 1966ஆம் ஆண்டு ஒக்ரோபர் 4ஆம் திகதி சுதந்திரம் பெற்றது.

### மன்னரும் உண்டு
### தலைமை அமைச்சரும் உண்டு

இந்த நவீன 'நாடு' என்று அழைக்கும் அதே நேரத்தில், பழைய 'இராச்சியம்' என்று சொல்வதிலும் தவறில்லை. காரணம் தலைமை அமைச்சர் ஒருவர் இருப்பதுடன், இங்கு மன்னர் ஒருவரும் இருக்கிறார். 1822ஆம் ஆண்டு தொடக்கம் 1868ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் முதலாம் மோசோசோ மன்னர் இந்த நாட்டை ஆண்டிருக்கிறார். பின்னர், பிரிட்டனின் ஆட்சி இங்கு நிலவியமை மன்னரும், தலைமை அமைச்சரும் இங்கிருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். தலைமை அமைச்சர், உதவித் தலைமை அமைச்சர், சபாநாயகர் என்று இருப்பது போல, மன்னரும் இருக்கிறார். பிரிட்டனைப்போலவே ஆட்சி முறை இருப்பதை அவதானிக்க முடியும். ஆட்சி முறையில் மூக்கை நுழைக்கும் அதிகாரம் மன்னருக்குக் கொடுக்கப்படவில்லை.

செனட் சபை இருக்கின்றது. இதில் 22முக்கிய தலைவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பரம்பரை பரம்பரையாக செனட் சபை அங்கத்துவம் பெறுபவர்கள். இதில் 11பேர் மன்னரால் நியமனம் பெறுபவர்கள். ஆனால் இந்த நியமனம், தலைமை அமைச்சருடன் மன்னர் கலந்தாலோசித்து எடுக்கும் முடிவிலேயே தங்கியிருக்கிறது.

### சின்னச் சின்ன இராணுவப் புரட்சிகள்

நாடு சுதந்திரம் அடைந்த பின்பு, 1970 ஆம் ஆண்டில் தான் தனது முதலாவது பொதுத் தேர்தலைச் சந்தித்திருக்கின்றது. தலைமை அமைச்சராக இருந்த லீபுவா ஜொனாத்தனின் கட்சி தோற்றாலும், ஆட்சியைக் கைவிடுவதற்கு அவர் தயாராக இல்லை. தேர்தலில் வென்ற பஸோத்தோ காங்கிரஸ் கட்சித் தலைவரைச் சிறைப்பிடித்ததோடு, பலவந்தமாக ஆட்சியைத் தக்க வைத்துள்ளார்கள். 1986ஆம் ஆண்டில் ஓர் இராணுவப் புட்சி வெடித்துள்ளது. அப்பொழுது மன்னராக இருந்த இரண்டாவது மோசோசோவுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால் 1987ஆம் ஆண்டில் இவர் கோரிய கூடுதல் அதிகாரங்களை அரசு வழங்காமையால், நாட்டை விட்டு ஓடும் நிலை மன்னருக்கு வந்தது. அடுத்த கட்டமாக இவரது மகன் நாட்டின் மன்னராகினார். இப்படியாகத் தொடர்ந்து இந்த நாட்டின் ஆட்சி பல குழப்ப நிலைகளைச் சந்தித்து வந்துள்ளது. இறுதியாக 2014ஆம் ஆண்டு ஒகஸ்ட் 30ஆம் திகதி வெடித்த ஓர் இராணுவப் புரட்சி, இன்றைய தலைமை அமைச்சர் தபானேயை, நாட்டை விட்டு ஓடி, 3நாள்கள்வரை தென் ஆபிரிக்காவில் தஞ்சம்புக வைத்திருக்கின்றது.

### அதிருப்தி அளிக்கும் போக்குவரத்து வசதிகள்


உலகில் மிகச் சிறிய தெருக்களைக் கொண்டுள்ள நாடுகளில், லைசூருவும் ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது. நாடு சுதந்திரமடைந்தபோது, அரச மாளிகையிலிருந்து, விமான நிலையம் வரையில் அமைக்கப்பட்டு இருந்த ஒரு முதன்மை வீதி மாத்திரமே இங்கு வீதியாக இருந்திருக்கின்றது. இதற்கெல்லாம் காரணம் மலைப் பாங்கான தரையமைப்பைக் கொண்ட இந்த நாடு மேகத்தை முட்டினாற்போல உயரமாக அமைந்திருப்பதுதான்! அடிக்கடி வீதி விபத்துகள் இங்கு நடப்பதாகக் கூறுகிறார்கள். அதிலும் இரவில் பயணிப்பது மிக ஆபத்தானது.

இங்கே பஸ், வாடகைக் கார் சேவை இருந்தாலும், பஸ் வண்டிகளில் அதிக பயணிகளை ஏற்றுவது, நல்ல நிலையில் இல்லாத வாகனங்கள், நன்கு பயிற்சி பெறாத சாரதிகள் என்று பல காரணங்களுக்காக இங்கு இரவுப் பயணங்கள் தவிர்க்கப்படுகின்றன. தெரு விளக்குகள் அதிகமில்லை. கார்களை வழிமறித்துக் கடத்துதல் என்று வேறு சில காரணங்களும் இருக்கின்றன. ரயில் சேவை இங்கு அடியோடு இல்லை.

நன்றாகச் செப்பனிடாத, ஒடுக்கமான தெருக்கள் பயணிகளுக்கு அசௌகரியத்தைத் தருகின்றன. குதிரைகளில் நடமாடும் பொலிசார்தான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டை கவனிக்கிறார்கள். சாரதிகள் அவசரகாலங்களில் இவர்களைத்தான் தொடர்பு கொள்ள வேண்டும்.

### பாம்புப் பிரியர்களுக்குக் கொண்டாட்டம்

தென் ஆபிரிக்காவின் எல்லையை ஒட்டியிருக்கும் 'குவாச்சா நெக்' பூங்கா, இந்த நாட்டில் தனித்துவமானது. 4 மீற்றர் தூரத்துக்குத் தனது வாயிலிருந்து விடத்தை துப்பும் நாகபாம்பு தொடக்கம் 'மம்பா' என்பப்படும் பொல்லாத பாம்பு வரை பல இனப் பாம்புகளை இங்கே காணலாம். ஆபிரிக்கக் கண்டத்துக்கே உரிய 'மம்பா'வும் நாகபாம்புக் குடும்பத்தைச் சேர்ந்ததுதான்! மிக வேகமாக ஓடக்கூடிய மம்பா இனங்களில் மூன்று, பச்சை நிறத்திலேயே காணப்படுகின்றன. நான்காவது இனமான கறுப்பு மம்பா இனம், தடித்த சாம்பர் நிறம் கொண்டது. இதனுடைய வாய் கறுப்பாக இருக்கும்.



### உணவும் உள்ளூர் உற்பத்திகளும்

இங்குள்ள சனத்தொகையில் 40வீதமானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள். பெண்களில் பலர் ஏதோவொரு தொழிலைச் செய்து வருகிறார்கள். இங்குள்ள 75வீதமானவர்களின் தொழில் கால்நடைகளை வளர்ப்பதும், விவசாயம் செய்வதும் தான்! 10வீதமான தரைப் பகுதியே விவசாயத்துக்கு ஏற்றதாக இருக்கின்றது. அயல் நாடான தென் ஆபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும் என்ற கட்டாயத்தைத் தவிர்க்க, அவரவருக்குத் தேவையான கோதுமை, சோளம், கோவா, பூசணி ஆகிய சிலவற்றை அவரவர் தத்தமது நிலங்களில் பயிரிட்டுக் கொள்கிறார்கள். இங்கு மாட்டிறைச்சிதான் முக்கிய உணவு. அரபு நாடுகளில் ஒட்டகம்போல, வீட்டுக்கு வருபவர்களுக்குச் சுவையான உணவுகள் வழங்க வேண்டும் என்பதால், திருமண வீடுகளும், சாவு வீடுகளும் பெரும் செலவைச் சந்திக்கின்றன. பணத்தை விடப் பசுவே இங்கு அதிக மதிப்பைக் கொண்டிருக்கின்றது.

### பணம்

பெரும்பான்மையானவர்கள் அயல் நாட்டில்(தென்ஆபிரிக்கா) வேலை செய்து கொண்டு வரும் பணமே நாட்டின் பொருளாதாரத்தில் கணிசமான அளவு பங்கேற்கிறது. இங்கு புழக்கத்திள்ள பணத்தை 'மலொட்டி' என்று அழைக்கிறார்கள். 400 மலொட்டி 30டொலர்களுக்குச் சமமானதாக இருக்கிறது. இங்கு பாவனையிலுள்ள பொருள்களில் 90வீதமானவை தென் ஆபிரிக்க உற்பத்திகள்தான்.

### வைரங்களை அகழ்கிறார்கள்..

நாட்டுக்கு 9வீதமான அளவு பொருளாதாரம் இங்கு அகழப்படுகின்ற வைரங்கள் மூலம் கிடைக்கின்றது. லைசூருவில் 'லெட்செங்' என்று அழைக்கப்படும் வைரச் சுரங்கமே உலகிலேயே மிக அதி உயரமான (3ஆயிரத்து 100 மீற்றர்)இடத்திலுள்ள சுரங்கம். உலகில் அகழ்ந்தெடுக்கப்படும் வைரங்களில் மிகப் பெரியவை இங்கேதான் விளைகின்றன. இந்தச் சுரங்கத்தின் வெப்பநிலை உறைநிலை 20பாகை சென்டிகிரேட்டுக்கு வீழ்ச்சியடைந்திருக்கும். மாரி காலத்தில் பனி கொட்டுவது இங்கு சாதாரண விடயம். ஆனால் ஆபிரிக்க கண்டத்தைப் பொறுத்த மட்டில் இது அசாதாரணம்! 2006ஆம் ஆண்டு ஒக்ரோபர் 4ஆம் திகதி இந்தச் சுரங்கத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட 603 காரட் வெள்ளை வைரம் தான், இன்றுவரையில், இந்தச் சுரங்கத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மிகப் பெரிய வைரமாகும். உலகின் 15ஆவது மிகப் பெரிய வைரமாக இது கணிக்கப்பட்டது.

### ஆபிரிக்காவின் சுவிட்சர்லாந்து

லைசூருவின் மூன்றில் இரண்டு பகுதி நிலம் மலைப்பாங்கானதாக இருப்பதால், ஆபிரிக்காவின் சுவிட்சர்லாந்து என்றொரு செல்லப்பெயரும் இதற்குண்டு. 'ட்றேக்கன்பேர்க்' மலைகள் என்று அழைக்கப்படுவனவற்றின் பகுதிகளாகவே இந்த நாட்டின் உயர் நிலங்கள் இருக்கின்றன. கிழக்கில் உயர்ந்து, பின்பு தென் ஆபிரிக்க எல்லையில் கீழிறங்குகின்றன. நாட்டின் மத்தியிலுள்ளது மலொற்றிமலை. இங்கே ஒன்றைக் கவனியுங்கள். இங்குள்ள நாணயத்தின் பெயர் மலொட்டி. (நாணயமும் மலையும் ஒரே பெயர் கொண்டிருப்பதை கவனிக்கவும்) இங்குள்ள அழிந்து போன குகைகளில், நரமாமிசம் உண்பவர்கள் ஒரு காலத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். உங்களைப் பயமுறுத்தும் டைனோசர்கள் இந்த நாட்டில் ஒரு காலத்தில் வாழ்ந்து அழிந்ததாக நம்புகிறார்கள்.

### தங்க முட்டையிடும் வாத்து


கற்சே அணைக்கட்டு லைசூரு நாட்டுக்கு கிடைத்த இன்னொரு வரப்பிரசாதம். 185 மீற்றர் உயரமும், 710 மீற்றர் நீளமும் உடைய இந்த இராட்சத அணைக்கட்டை 8பில்லியன் டொலர் செலவில் 1996ஆம் ஆண்டில் லைசூரு அரசு கட்டி முடித்தது. இதிலிருந்து தென் ஆபிரிக்காவுக்கான தண்ணீர் விநியோகம் 1998ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நீருக்காகத் தென் ஆபிரிக்க கொடுக்கும் பணம் எவ்வளவு தெரியுமா? கிட்டத்தட்ட 35 மில்லியன் டொலர்கள். தென்னாபிரிக்காவுக்குள் சூழ்கியிருக்கும் குட்டித் தேசம், தென்னாபிரிக்காவிடம் உழைக்கும் வித்தையைப் பார்த்தீர்களா?

# காட்டுக்குள் ஒரு பெருநகரம் லண்டன்

கட்டுரை

சமஸ்

அன்று அதிகாலையிலேயே எழுந்துவிட்டேன். மரங்களுக்காக அந்த ஒரு முழு நாளை ஒதுக்கிக்கொள்வது என்று முந்தைய இரவில் முடிவெடுத்தேன். ஏழு நாள்கள் லண்டன் பயணத்தில், மரங்களுக்காக ஒரு நாள் எனும் திட்டத்தை யோசித்தபோது மனதுக்குத் திருப்தி அளிப்பதாக இருந்தது. அது எவ்வளவு பெரிய அசட்டுத்தனம் என்பது விடுதியை விட்டுப் புறப்பட்டு வீதியில் கால் வைத்ததும் புரிந்தது. விடுதியைச் சுற்றியே இப்போது ஏராளமான மரங்கள் நின்றன. பெரிய பெரிய மரங்கள். நிறைய வயதான மரங்கள். எப்படி முதல் நாள் முழுமையிலும் கண்ணில் படாமல் போயின!



**முதல் நாள் அன்று!**

அன்றைக்கு மழை இன்னும் தொடங்கியிருக்கவில்லை. இரவு மழை பெய்த தடம் காற்றில் கலந்திருந்தாலும் மண் உலர்ந்திருந்தது. வானம் கருநீலம் பூத்திருந்தது. மேகங்கள் கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. லண்டனிலிருந்து கடல் தூரம். ஆனால், காற்றில் கடல் வாடையடித்தது. ஒருவேளை இதுவரை அறிந்திராத ஏதேனும் ஒரு மரத்திலிருந்து வெளிப்படும் மணமாகவும் இருக்கலாம். அதிகாலைகளை மரங்கள் தங்களுடையதாக மாற்றிவிடுகின்றன. கறுத்த, வெளுத்த, பழுப்பேறிய, சாம்பல் பூத்த மரங்களை ஒவ்வொன்றாகக் கடந்தேன். இன்னும் வெளிச்சம் முழுவதுமாகச் சூழாத அந்த அதிகாலையிலேயே நகரம் சுறுசுறுப்பாகியிருந்தது.

விக்டோரியாப் பூங்காவுக்கு வரச்சொல்லியிருந்தார் ஹெலன். அங்கிருந்து ஒவ்வொரு பூங்காவாகப் பார்க்கலாம் என்று திட்டம். வாழ்க்கையை எவ்வளவு எளிமையாகத் திட்டமிட்டுவிடுகிறது ஒரு தமிழ் மனம்? மூன்று பூங்காக்களைப் பார்த்த மாத்திரத்தில் திட்டத்தின் அபத்தம் பல் இளித்தது. நகரம் எங்கிலும் முழுவதுமாக 3ஆயிரம் பூங்காக்கள். பூங்கா என்பது பெயர்தான். எல்லாம் சிறு, குறு காடுகள். 35ஆயிரம் ஹெக்டேயருக்கு இவை பசுமை போர்த்தியிருக்கின்றன. சொல்லப்போனால், லண்டன் பெரிய நகர்ப்புறக் காட்டைத் தன்னுள்ளே உருவாக்கிக் கொண்டிருக்கும் பெருநகரம் என்று சொல்லலாம். அல்லது வளர வளரப் பெருக்கும் ஒரு பெருநகரத்தைத் தன்னுள் உள்ளடக்கி விரித்துக்கொண்டேயிருக்கும் காடு என்றும் அதைச் சொல்லலாம். ஹெலன் சிரித்தார்.

"இங்குள்ள மரங்களைப் பார்க்க உங்களுக்கு ஓர் ஆயுள் போதாது சமஸ். லண்டனில் இன்றுள்ள மரங்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 84இலட்சம். இன்றைய மக்கள் தொகையுடன் ஒப்பிட்டால் கிட்டத்தட்ட ஒவ்வொரு லண்டன் வாசிக்கும் ஒரு மரம். மக்கள் தொகை ஏற ஏற இந்த எண்ணிக்கையையும் அதிகரிக்க முயற்சி நடக்கிறது. இந்த மரங்கள் அத்தனையையும் ஒரே இடத்தில் தொகுத்தால் நகரின் 20சதவிகித இடங்கள் மரங்களால் மட்டும் நிறைந்திருக்கும்."

"எனக்கு உண்மையாகவே பெரிய பிரமிப்பாக இருக்கிறது ஹெலன். லண்டனைக் காட்டிலும் விகிதாசார அடிப்படையில் கூடுதலான பசுமைப் பரப்பைக் கொண்ட நகரங்கள் ஐரோப்பாவில் உண்டு என்பதை அறிவேன். ஆனாலும், லண்டனில் இவ்வளவு மரங்கள் ஆச்சரியம்தான். தொழில் மயமாக்கலை உலகுக்கு அறிமுகப்படுத்திய நாட்டின் தலைநகரம். அதன் எல்லாச் சீரழிவுகளையும் பார்த்த நகரம். உலகிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட நகரங்களில் ஒன்றாக வளர்ந்த நகரம். இன்னும் விரிந்து கொண்டேயிருக்கும் நகரம். எப்படி உங்களால் மரங்களைத் தொடர்ந்து காக்க முடிகிறது?"

"தொடர்ந்து பாதுகாத்தோம் என்று சொல்ல முடியாது. நீங்கள் குறிப்பிட்ட விடயம்தான். தொழில்மயமாக்கல் காலகட்டம் பெரிய நாசத்தை லண்டனில் உருவாக்கியது. கணிசமான மரங்களை இழந்தோம். நீர் நிலைகள் நாசமாகின. காற்றுக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. லண்டனில் பனி நாள்களில் தொழிற்சாலைப் புகையால் மக்கள் வெளியவே வர முடியாத சூழல் எல்லாம் இருந்திருக்கிறது. நான் சொல்வதெல்லாம் நூறு, இருநூறு வருடங்களுக்கு முன்பு. தொழில்மயமாக்கல் தொடங்கியே இருநூற்றைம்பது வருடங்கள் தொடுகின்றன அல்லவா? 1950களில் கூட நிலைமை சீரடைந்தது என்று சொல்ல முடியாது. ஆனால், மரங்கள் மீது கை வைப்பது என்பது ஏதோ ஒருவகையில் புனிதத்தோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. வருடத்தில் மரங்களைக் கொண்டாட மட்டும் லண்டனில் 60 நிகழ்ச்சிகள் நடக்கும்."

**தமிழரும் மரங்களும்**

"எங்கள் தமிழ்க் கலாச்சாரத்திலும் மரங்களுக்குப் பெரிய இடம் உண்டு. சொல்லப்போனால், தலவிருட்சம் என்ற பெயரில் கோயிலுக்குக் கோயில் தனி மரங்கள் உண்டு. நாட்டார் மரபில் மரங்களே கடவுளாக வணங்கப்படுவதும் உண்டு. நெடிய கிராமியப் பண்பாடு எங்களுக்கு உண்டு என்பதை நீங்கள் படித்திருப்பீர்கள். அதற்கு இணையான இரண்டாயிரம் வருட நகரியப் பண்பாடும் உண்டு. என்னை எடுத்துக்கொண்டால், என்னுடைய சொந்த ஊரான மன்னார்குடி, ஒரு சிறுநகரம். கிட்டத்தட்ட ஆயிரம் வருடப் பழமையான ஊர். கச்சிதமாகத் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட நகரங்களில் ஒன்று அது. சின்ன ஊரில் நூறு குளங்கள் இருந்தன. ஊர் எல்லையில் சிறிய வனங்கள் பராமரிக்கப்பட்டன. வரலாற்றின் ஏதோ ஒரு கணத்தில் இவ்வளவும் சடசடவென்று மக்களின் மறதிக்குள் போய்விட்டன. இன்று எல்லாம் மாறிவிட்டது. மரங்களை வெட்டுவது மிகச் சாதாரணமாகிவிட்டது. 'வளர்ச்சி', 'விரிவாக்கம்' என்ற பெயரில் ஒவ்வொரு நாளும் எங்கோ மரங்கள் கீழே வீழ்ந்தபடியே இருக்கின்றன."

"மேம்பாடுத்தல் என்பது வேண்டியதுதான். ஆனால், எதைக் கொடுத்து எதை வாங்குகிறோம் என்று ஒரு கேள்வி இருக்கிறது இல்லையா?"

"மனித வாழ்க்கையில் மிக முக்கியமான கேள்வி அது. எதைக் கொடுத்து எதை வாங்குகிறோம்? அது ஒன்றை ஞாபகத்தில் வைத்திருந்தால் பல பிரச்சினைகளுக்குத் தேவையே இல்லை! மக்கள் தொகைப் பிரச்சினையை எப்படி எதிர்கொள்கிறீர்கள்? வளரும் மக்கள் தொகைக்கு ஏற்ப நகரத்தை விரிவாக்கும்போது மரங்களை எப்படிப் பாதுகாக்கிறீர்கள்?"

"இரண்டாயிரம் வருட வரலாற்றில் லண்டன் எல்லாக் காலங்களிலும் வளர்ந்தபடியே வந்திருக்கிறது. 1750 இலேயே பிரிட்டனின் மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கினர், 6.75இலட்சம் பேர் லண்டனில் இருந்தார்கள். உலகில் முதலில் ஒரு மில்லியன் மக்கள் தொகையைத் தொட்ட ஐந்து நகரங்களில் ஒன்று இது. ஐம்பது இலட்சம் மக்கள் தொகையைக் கடந்த முதல் நகரமும் இதுதான். தொழில்மயமாக்கல் காலகட்டத்தில் லீட்ஸ், மான்செஸ்டரில் ஏராளமான மக்கள் குவிந்தார்கள். அவ்வளவு தொழிற்சாலைகள் இங்கிருந்தன என்று சொல்லத்தக்க அளவுக்கு லண்டன் சூழல் இல்லை என்றாலும், லண்டனில் மக்கள் குவிவது நிற்கவே இல்லை. இன்றும் ஒரு சின்ன அறைக்குள் வாழ்பவர்கள் அவ்வளவு பேர் இருக்கிறார்கள். ஆனால், நகரம் கொங்கிரீட் மேடாக மாறிவிடக்கூடாது என்ற எண்ணம் மட்டும் மக்களிடம் இருக்கிறது. ஒரு பட்ட மரத்தைக்கூட முன் அனுமதியில்லாமல் இங்கே வெட்டிவிட முடியாது. நீங்கள் அறிந்தே ஒரு மரம் சேதமடையக் காரணமாக இருந்திருக்கிறீர்கள் என்றால், 20 ஆயிரம் பவுண்டுகள் வரை அபராதம் உண்டு. ஒருவேளை ஒரு மரத்தை வெட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டாலும் அதற்கு மாற்றாக இன்னொரு மரத்தை வளர்க்க வேண்டும்."

**லண்டன் வாசிகளுக்குச் சலாம்**

"இதற்காகவே லண்டன்வாசிகளுக்குப் பெரிய சலாம் போடுவேன் நான்!" "உங்கள் பாராட்டை நீங்கள் லண்டன் மேயரை நேரில் சந்திக்கும்போது சொன்னால் அவர் சந்தோஷப்படுவார். ஏனென்றால், அடுத்தடுத்து வரும் மேயர்கள் எல்லோருமே மரம் வளர்ப்பில் எவ்வளவு அக்கறையைக் காட்டினாலும், 'இதெல்லாம் போதாது' என்றே பெரும்பான்மை லண்டன்வாசிகள் நினைக்கிறார்கள். நான் உட்பட. விளைவாக, காற்று மாசை எதிர்கொள்ள மரம் வளர்ப்பு நீங்கலாக செயற்கை மரங்களை இப்போது நகரத்தின் முக்கியப் பகுதிகளில் அமைக்கிறார்கள்.' அப்படியான மரம் ஒன்றையும் ஹெலன் எனக்குக் காட்டினார். 'சிட்டி ட்ரீ' என்று அந்தக் கட்டுமானத்தைச் சொல்கிறார்கள்.' நான்கு வீதிச் சந்திப்பு ஒன்றில் அதைப் பார்த்தேன். செங்குத்தான புதர் வேலிப் பலகையை நிற்கவைத்ததுபோல அது காட்சியளிக்கிறது. பார்க்க பச்சைப் பசேலென்று இருக்கிறது. ஒருவகைப் பாசியில் செய்கிறார்களாம். அதில் உள்ள ஈரப்பசை காற்றில் கலந்து வரும் மாசுத்துகள்களையும், கெடுதல் செய்யும் கிருமிகளையும் ஈர்த்துக்கொள்ளுமாம். கிட்டத்தட்ட 275 மரங்கள் உறிஞ்சும் அளவுக்கு இணையான மாசை இந்த 'சிட்டி ட்ரீ' ஒவ்வொன்றும் உறிஞ்சுகிறதாம். லண்டன்வாசிகளின் மனநலன் சார்ந்து மட்டும் ஆண்டுக்கு 260 கோடி பவுண்டுகளைச் செலவிடுகிறார்கள். இப்படி ஒவ்வொரு நோய்க்கான காரணத்தையும் செலவையும் சுற்றுச்சூழலோடு பொருத்திப் பார்க்கிறார்கள். ஒவ்வொரு மரமும் இந்த வகையில் விலைமதிப்பற்றதாக மாறிவிடுகிறது.

"மரங்களால் நகரின் பொருளாதாரத்துக்கு மறைமுகப் பலன் அதிகம். காற்றில் கலக்கும் கரியமில வாயுவை வெளியேற்றி உயிர் வாயுவை மரங்கள் வாரி வழங்குகின்றன. நகரில் மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படாமல் காக்கின்றன. நகரின் வெப்பத்தைத் தணிக்கின்றன. மேய்ச்சல் நிலங்களைக்காட்டிலும் மரங்கள் அடர்ந்த பகுதியின் நிலம் மழை நீரை 60 மடங்கு அதிகம் உறிஞ்சிக்கொள்கிறது. முக்கியமாக நச்சுக்காற்றால் மோசமாகாமல், மக்களுடைய சுகாதாரம் பாதிக்கப்படாமல் மரங்கள் தணிக்கின்றன. இதன் மதிப்பு மட்டும் ஆண்டுக்கு ஆயிரத்து 327இலட்சம் பவுண்டுகள் என்று சொல்வேன். குழந்தைகளிடம் நான் முக்கியமாகச் சொல்வதே லண்டனில் 13ஆயிரம் வகை ஜீவராசிகள் இருக்கின்றன. இந்த ஜீவராசிகளில் மனிதனும் ஒன்று என்ற புரிதல் நமக்கு வேண்டும் என்பதைத்தான். இன்று உலகில் இறக்கும் ஏழு பேரில் ஒருவர் காற்று மாசால் இறக்கிறார். பிரிட்டனை எடுத்துக்கொண்டால் வருடத்துக்கு 40ஆயிரம் பேர் காற்று மாசால் இறக்கிறார்கள். மரங்களை வெட்டுபவர்கள் ஒருவகையில் கொலையாளிகள்" என்கிறார் ரேவன் எல்லிசன்.

ஆயிரம் வருடங்களைக் கடந்த பல மரங்கள் லண்டனில் இருப்பதாகச் சொன்னார் ஹெலன். 'டாட்டரிட்ஜ் யியூ'வில் உள்ள மரம் மிகப் புராதனமானது என்றார். அந்திரேயர் தேவாலய வளாகத்தில் உள்ள இந்த மரம் 2ஆயிரம் வருடங்கள் பழமையானதாம். "ஐயாயிரம் வருடப் பழமையான மரங்கள் அமெரிக்கக் கண்டத்தில் இருக்கின்றன. அந்த வகையில் பார்த்தால் நாங்கள் ஏழைகள்" என்றார்.

"ரொம்ப ஏழைகள்தான்" என்றேன். அன்று மாலை சற்று நேரத்துடனேயே ஹெலன் விடைபெற்றுக்கொண்டார். நன்கு இருட்டியும் விடுதிக்குத் திரும்ப மனமில்லாமல் வீதிகளில் சுற்றிக்கொண்டேயிருந்தேன். அநேகமாக எல்லா வீடுகளை ஒட்டியும் மரங்கள் நிற்கின்றன. வீட்டின் வாசலில், மாடி பால்கனியில் கொடிகளைப் படரவிட்டிருக்கிறார்கள். வீட்டுக்குப் பின்புறம் சின்னத் தோட்டம். வீதிகளில் மரங்கள். மழைத் தூறல்கள் விழுந்தன. குடையை விரிக்க மனமில்லை. உடலும் குளிரவில்லை. இலக்கின்றி நடந்துகொண்டிருந்தேன். நெஞ்சமெல்லாம் குற்றவுணர்வு அப்பிக்கொண்டிருந்தது. எதை வாங்குவதற்காக இப்படி எல்லாவற்றையும் பறிகொடுத்துக்கொண்டிருக்கிறோம்?

நன்றி: தி ஹிந்து

சிறைச்சாலைக்குரிய கட்டடப்பொருள்கள் தொடக்கம் சிறுநீர் கழிப்பதற்குப் பயன்படும் தகர வாளிகள் வரை எல்லாப் பொருள்களும் களஞ்சியத்தில் இருக்கும். நான் கண்ட சிறைச்சாலைக் களஞ்சியங்களில் பெரியது போகாம்பரைச் சிறைச்சாலைக் களஞ்சியமே. அநேகமாக 24 மணித்தியாலமும் திறந்து இருக்கும். அது ஒரு பெரிய சிறைச் சாலையாக இருப்பதால் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து இரவு இரவாகக் கைதிகள் கொண்டுவரப்படுவதும், வெளியே எடுத்துச் செல்லப்படுவதும் தொடராக நடைபெறும்.

# சிறைக் கதவில் எத்தனை கம்பிகள்?

தொடர்

தாஸ் மாஸ்ரர்

10

சிறைச்சாலைகளின் நிர்வாகம் நீண்டகாலமாக நீதி அமைச்சின் கீழேயே இருந்து வந்தது. (தற்போது சிறைச்சாலைகள் மற்றும் சீரமைப்பு அமைச்சு எனத் தனியாக உள்ளது) ஆனால் ஐக்கிய தேசிய முன்னனி அரசு பதவிக்கு வந்த பின்னர் (2002ஆம் ஆண்டு ஜனவரி) உள்துறை அமைச்சின் கீழ் சிறைச்சாலைகளின் நிர்வாகம் கொண்டுவரப்பட்டது.

கைதி ஒருவர் ஏனைய கைதியால் கொல்லப்பட்டால் அதுபற்றிய விசாரணைகளைப் பொலிஸாரே நடத்துகின்றனர். ஆனால் பிரத்தியேகமாக இன்னொரு விசாரணை வெலிக்கடையில் உள்ள ஆணையாளர் அலுவலகத்தாலும் நடத்தப்படுகின்றது. இதற்கான காரணம் கொலை நடந்த சந்தர்ப்பத்தில் சிறைச்சாலை நிர்வாகம் விட்ட தவறைக் கண்டறிந்து அது மீண்டும் நிகழாத வண்ணம் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதே.

சிறைச்சாலை ஊழியர்கள் தமது வேலை நேரத்தை ஒரு சீரான முறையிலேயே மாற்றுகின்றனர். காலை 8மணிக்குக் கடமையை ஏற்பவர்கள் மாலை 5.30மணிவரை கடமையில் இருக்க வேண்டும். மாலை 5.30மணிக்குக் கடமையைப் பொறுப்பேற்பவர்கள் இரண்டு சுற்றுக்களாக வேலை செய்ய வேண்டி இருக்கும்.

முதல் சுற்று - மாலை 5.30மணி தொடக்கம் இரவு 9மணி வரை (அதே ஊழியர்கள் மீண்டும் இரவு 2மணியிலிருந்து காலை 7மணிவரைப் பணியாற்றுகின்றனர்)

இரண்டாவது சுற்று - இரவு 9மணிக்குப் பொறுப்பேற்பவர்கள் அதிகாலை 2மணிக்குத் தமது கடமையை முடிவுறுத்திப் பின்னர் காலை 7மணி தொடக்கம் 8.30வரை கடமையில் இருப்பர்.

ஊழியர்களைச் சிறைச்சாலையின் எந்தப் பகுதிக்கு வேலைக்கு அமர்த்துவது என்பதைத் தீர்மானிப்பதற்காக அணிவகுப்பு இடம்பெறும். அணிவகுப்பின் பின் யார் எந்தப் பகுதியில் வேலை செய்வது என்பதை நெறிப்படுத்துவார்கள். சிறைச்சாலை ஊழியர்கள் சிறைச்சாலைக்கு வெளியில் செல்லும்போதும், உள்ளே வரும்போதும் உடல் பரிசோதனை செய்து, தடைசெய்யப்பட்ட பொருள்கள் வைத்திருந்தால் அவற்றைப் பறிமுதல் செய்து அதற்கான அறிக்கையை எழுத வேண்டிய பொறுப்பு, குறிப்பிட்ட பணிக்கமர்த்தப்பட்ட ஊழியருக்கு உண்டு.

ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமை சிறப்பு அணிவகுப்பு நடைபெறும். அதில் சிறைச்சாலை ஆணையாளர், உதவி ஆணையாளர், பிரதம சிறை அதிகாரி உட்பட அனைவரும் கலந்து கொள்வர். சிறைச்சாலையில் உள்ள நடைமுறைகள், ஊழியர்கள் விடுகின்ற தவறுகள், சீருடை, சப்பாத்து, சவரம் செய்தல், நகம் வெட்டுதல் போன்றன எல்லாமே கவனிக்கப்படும். மட்டக்களப்புச் சிறைச்சாலையில் சிறப்பு அணிவகுப்பு நடைபெறும்போது ஊழியர்கள் தொப்பி இல்லாது ஓடித்திரிவதைக் காண முடியும். அங்கு சில ஊழியர்களிடம் சிறைச்சாலைத் தொப்பி இருப்பதில்லை. அவர்கள் களவு கொடுத்து அல்லது தொலைத்து விடுகிறார்கள். இந்த அணிவகுப்பில் கலந்து கொள்ளாது தமது கடமைக்குரிய இடத்திலேயே இருப்பவர்களிடம், தொப்பி இல்லாத ஊழியர்கள் ஓடிவந்து அவர்களின் தொப்பியை வாங்குவதையும், கடமையில் இருப்பவர் தொப்பியைக் கொடுப்பதற்குச் சிகரட், வெற்றிலை, சாராயம் போன்றவற்றுக்குப் பேரம் பேசுவதையும் காண முடியும்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் நான் கண்ட இன்னொரு புதினம் நலன்புரி அதிகாரியானவர் ஜெயிலர் வேலை பார்ப்பது. அங்கு ஜெயிலர்களே இருந்தார்கள். ஒரு நலன்புரி அதிகாரி காலை அணிவகுப்புக்குத் தலைமை தாங்குவார். இது சிறைச்சாலை சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதல்ல என்று நினைக்கிறேன். வேறு சிறைகளில் நலன்புரி அதிகாரிகள் இவ்வாறான விடயங்களில் கலந்து கொள்வதில்லை. ஆனால், மட்டக்களப்புச் சிறையைப் பொறுத்தவரையில் அவர், எந்த நேரத்தில் ஜெயிலராக இருப்பார், எந்த நேரத்தில் நலன்புரி அலுவலராகப் பாத்திரம் ஏற்பார், என்பதைப் பிரித்து அறிவது சற்றுச் சிரமமானது.

சிறைச்சாலையில் இரவு, பகலுக்கான வேலைகள் ஒரு சக்கரம் போல மாறி மாறி வரும். அதேவேளை ஒரே இடத்தில் தொடர்ந்தும் ஒருவரைப் பணிக்கு அமர்த்துவதில்லை. இது கைதிகளுடன் அவர்கள் நல்லுறவு வளர்ப்பதையும், கைதிகளுக்குத் தேவையான பொருள்களைச் சட்டபூர்வமற்ற முறையில் விற்பனை செய்வதையும் தடுப்பதற்கான முதன்மை நோக்கமாகும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் கடமையில் இருக்கும் சிறைச்சாலை ஊழியரை வேறு ஒரு பகுதிக்குச் சென்றுவர அனுமதிக்க மாட்டார்கள். இவர்கள் ஓரளவுக்கே கண்காணிக்கப்படுவதால், ஹெரோயின், கஞ்சா போன்ற போதைப் பொருள்களைக் கடத்திச் சென்று கொடுப்பதும் நடக்கத்தான் செய்கின்றது.

மாலையில் கைதிகளைப் பூட்டுவதற்கு முன்பு சிறை அறைகளின் முக்கிய இடங்களில் நீளமான பட்டிபோன்ற ஒரு வெள்ளைத் தாளை ஒட்டுவார்கள். அதில் கடமையில் உள்ள ஊழியர் கையெழுத்து இடுவார். ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு தடவை ஜெயிலர் தரத்தில் உள்ள ஒருவர் அதில் சிவப்புப் பேனையால் கையெழுத்துடுவார். தலைமை ஜெயிலர், உதவி அத்தியட்சகர், இரண்டுக்கும் இடைப்பட்ட தரத்தில் உள்ளவர்கள் சிறைச்சாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அதில் கையெழுத்திடுவர். போகம்பரையில் இந்த விடயம் சரிவர நடக்கும். இரவு 'விசிற்' செய்தால் அதற்கெனச் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு 750 ரூபா மேலதிக படியாகக் கிடைத்தது (2000ஆம் ஆண்டு மற்றும் 2002ஆம் ஆண்டுக் காலப்பகுதி) சிறை உடைப்பு, தப்பி ஓடுவது, வேறு கலகங்கள் ஏதேனும் நடந்தால் அந்தச் சம்பவம் நடப்பதற்குச் சற்று முன்னர் சுவரில் ஒட்டப்பட்ட குறித்த தாளில் கையெழுத்திட்ட அதிகாரியே பதில் சொல்ல வேண்டி இருக்கும். அவ்வாறான செயற்பாடு பற்றித் தெரியாது இருந்தாலும், தெரிந்து அதுபற்றி உடனடி நடவடிக்கை எடுக்காது இருந்தாலும் அவை அவருடைய குற்றங்களாகக் கொள்ளப்படும். இரவு நேரங்களில் உயர் அதிகாரிகள் வரும்போது உரிய இடத்தில் கடமையில் இருப்பவர் இல்லாது இருந்தால் சத்தமாக பேசுவதை கேட்க முடியும்.

எல்லாச் சிறைச்சாலைகளிலும் களஞ்சியப் பகுதி ஒன்று இருக்கும். அங்கு தான் கைதிகளின் அடையாள அட்டைகள், வேறு பொருள்கள், (பணம் இருப்பின்) என வைக்கப்படும். ஒரு சிறையில் இருந்து மற்றொரு சிறைக்குக் குறிப்பிட்ட கைதியை மாற்றும்போது, கைதிகளின் உடைமைகளையும் கையளிப்பதே பொதுவான நடைமுறையாகும். பூசாவில் ஒருநாள் காலையில் சிறைச்சாலை அத்தியட்சகர் திடீரெனக் கைதிகள் தடுத்து வைக்கப்படுகின்ற பக்கம் வந்து கட்டடத்தின் பின்பக்கமாகப் பார்க்கச் சென்றபோது புதிதாகப் பயிற்சி முடிந்த ஊழியர் (காக்கிக் காற் சட்டையும் வெள்ளை நிறச் மேற்சட்டையும் அணிந்தவர்) பின்பக்கக் காவற்பகுதியில் நல்ல நித்திரை. அவரை எழுப்பி இரண்டு மதில் சுவர்களுக்கிடையில் குறிப்பிட்ட தடவைகள் வரை ஓடுமாறு கட்டாய உத்தரவு போட்டார். அவர் நீண்ட நேரம் ஓடிக் கொண்டிருந்தார். மருத்துவப் பிரிவில் உள்ள ஓர் ஊழியர் எந்த நேரமும் மது போதையில் தான் இருப்பார். அவருக்குத் தண்டனை, சிறைக்குப் பின்பகுதிக் காவல் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்தார் (10நாள்கள் வரை). சோதனைச் சாவடிக்குள் இருப்பவர் கதிரையில் தொடர்ந்தும் நித்திரை கொள்வார். திடீரெனச் சிறைச்சாலை அத்தியட்சகர் உள்ளே வரும் சந்தர்ப்பத்தில் கைதிகள் சிறிய கற்களை நித்திரை கொள்பவரை நோக்கி எறிந்து எழுப்புவது உண்டு. அங்கு பொது உடையில் அத்தியட்சகர் வருவார். எழுந்தவர் உடனே தயாராக இருப்பார். சில இளம் வயதுக் கைதிகள் இவற்றைச் சில சந்தர்ப்பங்களில் பகிடியாகச் செய்வதுண்டு. இதனால் அவரை நிம்மதியான நித்திரை கொள்ள அனுமதிப்பதில்லை).



சிறைச்சாலைக்குரிய கட்டடப்பொருள்கள் தொடக்கம் சிறுநீர் கழிப்பதற்குப் பயன்படும் தகர வாளிகள் வரை எல்லாப் பொருள்களும் களஞ்சியத்தில் இருக்கும். நான் கண்ட சிறைச்சாலைக் களஞ்சியங்களில் பெரியது, போகாம்பரைச் சிறைச்சாலைக் களஞ்சியமே. அனேகமாக 24 மணித்தியாலமும் திறந்து இருக்கும். அது ஒரு பெரிய சிறைச்சாலையாக இருப்பதால் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து இரவு இரவாகக் கைதிகள் கொண்டுவரப்படுவதும், வெளியே எடுத்துச் செல்லப்படுவதும் தொடராக நடைபெறும்.

(தொடரும்)

தொடர்கதை

# நின்னைச் சரணடைந்தேன்

அத்தியாயம் 26

கே.எஸ்.ஆனந்தன்



சாதுவாக இருப்பவனைச் சீண்டிப் பார்த்து அதுவே பெரும் பிரச்சினைகளை உருவாக்கி விட்டிருக்கிறது.சந்தர்ப்பசூழ்நிலைக்கு ஏற்ப கதைக்கும்போது சில விடயங்களுக்குப் பொருள் விளங்காதிருக்கலாம். ஆனால் பாதிப்படைபவர் அந்தச் சந்தர்ப்பத்தின் தன்மையைப் பொருளாகக் கொண்டு விட்டால் அதைப்போல பிரச்சினை வேறு எதுவுமே இருக்க முடியாது. காரில் வரும்போது தான் இதை உணர்ந்து கொண்டாள் சுவேதா.

அன்று முழுதும் சாப்பிடாததால் ரவிசங்கருக்குச் சரியான பசி. தாயின் வீட்டுக்கு நேராக வண்டியைச் செலுத்தினான். அவளுடன் எதுவும் பேசவில்லை. அன்றொரு நாள் நடந்ததுபோல ஏதும் கதைக்கப் போய் ஆபத்தில் முடிந்து விட்டாலும் என்று அவளும் எதுவும் பேசாது மௌனமாகவே வந்தாள். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. வீட்டுக்குச் சமீபமாக வந்ததும் விழிகளைத் துடைத்துக் கொண்டு கீழே இறங்கினாள். வாசலில் வந்து நின்ற செல்லம்மா இருவரையும் வரவேற்றாள். ரவி சங்கர் எதுவும் பேசாமல் நேராகத் தனது அறைக்குச் சென்று உடை மாற்றிக்கொண்டு குளிக்கச் சென்றான்.

• • •

"ஏன் சுவேதா இவன் மத்தியானம் சாப்பிட வரவில்லை. எங்க சாப்பிட்டவனாம்? ஒரு போன் கூடப் பண்ணவில்லை?" என்றாள் செல்லம்மா.

"அவர் இன்டைக்குச் சாப்பிடவில்லைப் போலிருக்கு. நேற்றிரவு...." என்று தொடங்கி நடந்தவற்றைக் கூறி முடித்தாள் சுவேதா.

"அது சரியம்மா. அவன் எதையும் பொறுத்துக் கொள்வான். புத்திமதியும் சொல்வான். அவனுக்குப் பிடிக்காத விடயம் ஏதாவது செய்தால் இப்படித் தான் நடந்து கொள்வான். பின்பு தானாகவே சாந்தமாகிவிடுவான்" என்று கூறிக் கொண்டிருக்கையில் குளித்து விட்டு வந்து சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்தான் ரவி.

"என்னம்மா சாப்பாடு? சரியாப் பசிக்குது எடுத்து வையுங்கள்" என்றான்.

"இடியப்பமும் சீரகச் சொதியும் வைச்சனான். முட்டை பொரிக் கட்டுமா?"

"பொரியுங்கள்" கூறிவிட்டுக் கோப்பையில் இடியப்பத்தை எடுத்து வைத்தான். அவள் எதுவும் பேசாமலிருந்தாள்.

"நீ சாப்பிடவில்லையா? உட்கார்" என்று கோப்பையை எடுத்து வைத்து இடியப்பங்களை எடுத்துக் கோப்பையில் போட்டான். சுவேதா சொதியை எடுத்து பக்கத்தில் வைத்தாள். அவனே கரண்டியால் தனது கோப்பையில் ஊற்றி விட்டு, "அளவாக நீயே ஊற்றிக் கொள்" என்று கூறிவிட்டுச் சாப்பிட ஆரம்பித்தான்.

செல்லம்மா முட்டைப் பொரியலுடன் வந்தாள்.

"அட சாப்பிடத் தொடங்கீட்டீங்களா? நல்ல பசிபோல இருக்கே. ஏன்டா ரவி மத்தியானம் போன் பண்ணியிருந்தால், சாப்பாட்டைக் குடுத்தனுப்பியிருப்பேனே" என்றாள்.

"கொஞ்சம் தலைவலியாயிருந்தது அதுதான் சாப்பாட்டுக்கு மனமில்லாமல் இருந்தது. வரவில்லை. சுவேதாவும் சாப்பிடவில்லை இடியப்பம் எடுத்து வையம்மா" என்றான்.

"எனக்குப்போதும் அவருக்குத் தான் போடுங்கள் அத்தை" என்று தனது தட்டிலிருந்த முட்டைப் பொரியலில் அரைவாசியை எடுத்து அவனுடைய தட்டில் போட்டாள். அவன் ஒரு பெருமூச்சு விட்ட பின் அதையும் சாப்பிட்டு முடித்தான்.

"அம்மா நீங்கள் சாப்பிடவில்லையா?"

"நேரம் இருக்கு ஆறுதலாகச் சாப்பிடலாம்"

• • •

"சுவேதா அப்பாவுக்குப் போன் பண்ணி இங்கே நிற்பதைக் கூறிவிடு எங்களைக் காணவில்லை என்று தேடப்போறார்."

அது சரி ரவி! இரவு யாரோ ஒருவரை வழி மறித்து அடித்து விட்டு ஓடி விட்டாங்களாமே. பக்கத்து வீட்டு தம்பி சொன்னான்" என்று ஆரம்பித்தாள் செல்லம்மா.

"ஓ அதுவா. சுவேதாவின் ஒவ்பீஸில் வேலை செய்கின்ற 'சீவ் கிளாக்கரைத்' தான் அடித்தார்கள். ஆனால் தன்னை யாரும் அடிக்கவில்லை என்று பொலிசுக்கு வாக்குமூலம் கொடுத்திருக்கிறார் அவர்"

"ஏன் அப்படி அந்தாள் அடிச்சதை மறைக்கிறார். மரியாதை இல்லை என்றா?"

"அப்படியில்லையம்மா. அவருடைய சுயரூபம் அம்பலமாகிவிடும் என்பதால் தான் மறைத்துள்ளார்"

"நல்ல மனிதராச்சே. ஏன் அப்படி நடக்க வேண்டும்?"

"அம்மா அவருக்கு விழுந்த அடி இவளுக்கு விழ வேண்டியது. ஆனால் இவளுடைய குணம் தெரிந்து அவர் செய்த பிழைக்குத் தான் அடிச்சவங்கள்"

"ஏன் சுவேதா அந்தாள் உன்ர பெயரைச் சொல்லி ஏதும் பிழையாக நடந்தாரோ?"

"இவர் தான் சொல்லுகிறார். எனக்கு ஒன்றும் புரியவில்லை" என்றாள்.

"அம்மா அந்தாள் பணத்தாசையால் தான் அடிவாங்கினார். தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்க அனுமதிக் கடிதம் கேட்டு விண்ணப்பித்துள்ளனர் இரண்டு பகுதியினர். இவள் லீவில் நிக்கும்போது அவர் ஒரு பகுதியிடம் ரூபா இரண்டு லட்சம் லஞ்சம் வாங்கிக் கொண்டு நிபந்தனையின் பேரில் அனுமதி கொடுத்துள்ளார். அவங்கள் ஒரு இலட்சம் பேரம் பேசியிருக்கின்றாங்கள். இவர் சுவேதா மேடத்துக்கும் கொடுத்தால் தான் அனுமதிப்பார் என்று கூறி முழுவதையும் அமுக்கியுள்ளார். இவளுக்கு ஏதோ சொல்லிச் சமாளித்து விட்டார். இவள் மற்றப் பகுதிக்கும் நிபந்தனைக்குட்பட்டதாக கடிதம் வாங்கிக் கொண்டு அவர்களுக்கும் அனுமதியளிக்கச் சொல்லியுள்ளாள். பிறகு அவர், அவங்களின்ரை புறோக்கரிட்டைப் போய் பேரம் பேசிவிட்டு வரும்போது மற்றப்பகுதியாள்கள் போட்டுப் பிடிச்சிருக்கிறான்கள்" என்று முடித்தான்.

"படுபாவி! அப்பாவிப் பிள்ளையின்ரை பெயரைக் கெடுத்துப் பணம் பண்ணுறானா? அடிச்சது போதாது. காசு வாங்கிற கையை முறிச்சிருக்கணும் விட்டிட்டாங்களே" என்றாள் செல்லம்மா.

சுவேதா எதுவும் பேசவில்லை. இந்த விடயம் எல்லாம் இவருக்கு எப்படித் தெரியும். எனக்குத் தெரியாமல் எனது ஒவ்பீஸில் இப்படி எல்லாம் நடக்குதா? நடக்குமா? என்ன ஆதாரத்தைக் கொண்டு இவர் கதைக்கிறார். விஸ்வலிங்கம் உண்மையில் அப்படிச் செய்திருப்பாரா? அவளால் நம்பவும் முடியவில்லை. நம்பாமலிருக்கவும் முடியவில்லை. இடையில் எதையும் கதைத்துப் பிரச்சினையை வளர்க்க விரும்பாது பேசாமலிருந்தாள். ஒவ்பீசில் நாளைக்கு முழு விசாரணை நடத்த வேண்டும் எனத் தீர்மானித்தாள்.

"சுவேதா அப்பாவுக்குப் போன் பண்ணி இங்கே நிற்பதைக் கூறிவிடு எங்களைக் காணவில்லை என்று தேடப்போறார். அது சரி ரவி இரவு யாரே ஒருவரை வழி மறித்து அடித்து விட்டு ஓடி விட்டாங்களாமே. பக்கத்து வீட்டு தம்பி சொன்னான்" என்று ஆரம்பித்தாள் செல்லம்மா. "ஓ அதுவா. சுவேதாவின் ஒவ்பீஸில் வேலை செய்கின்ற 'சீவ் கிளாக்கரைத்' தான் அடித்தார்கள். ஆனால் தன்னை யாரும் அடிக்கவில்லை என்று பொலிசுக்கு வாக்குமூலம் கொடுத்திருக்கிறார் அவர்"

"ஏன் சுவேதா! உன்னை வைத்துக் கொண்டே அந்நாள் இப்படி எல்லாம் விளையாடுறானா? உனக்குத் தானேயம்மா கெட்ட பெயர் வரும்" என்றாள் செல்லம்மா.

"அத்தை இவர் சொல்வதை நம்பவும் முடியவில்லை. நம்பாமலிருக்கவும் முடியவில்லை. இவற்றுக்கு ஆதாரமில்லாமல் எதுவும் செய்ய முடியாது"

ஆதாரமில்லாமல் ஒரு மனிதர் மீது அநாவசியமாக நான் எதுவும் சொல்ல மாட்டேன். இது இப்ப நடந்த விடயமல்ல. சிறுகச் சிறுக நடந்து இப்ப பெரிதாக நடந்திருக்கு. உன் அம்மாவின் சாவுவீட்டின்போது வீட்டுக்குப் பைலுடன் வந்தாரே அந்தப் பைலில் உள்ள கடிதங்களுக்கு நீ சைன் பண்ணாதே என்று சொன்னேன். நீ சைன் பண்ணவில்லை. அந்த விடயத்தை எப்படி நசூக்காக நகர்த்தியுள்ளார் என்பதிலிருந்தாவது நீ புரிந்து கொள்ளாமல் அந்தாளின்ரை பசப்பு வார்த்தைகளைக் கேட்டு நீ சம்மதித்துள்ளாய். அதுவே அந்தாளுக்கு வாய்ப்பாகப் போய்விட்டது. ஆதாரம் தானே நான் தருவேன். அந்த ஆதாரத்தை தந்த அந்த நல்லவனைக் காட்டிக் கொடுக்க நான் விரும்பவில்லை. மிக விரைவில் நீயே அவரைத் தூக்கி எறியும் நாள் வரும். அப்போது தெரியும் உனக்கு. சரி நடப்பது அங்கே மாமா தூங்காமலிருக்கப் போகின்றார்" என்று கூறி உடை மாற்றச் சென்றான்.

• • •

"பார்த்தாயா நான் சொன்னமாதிரி அவன் சாந்தமாகிவிட்டான். அவனுடைய குணமே இது தான். எதையும் கதைப்பான் கோபிக்கமாட்டான். ஆனால் அவனது தன் மானத்துக்கு ஊறு ஏற்படும்படி கதைத்தாலோ. நடந்தாலோ பொறுத்துக் கொள்ள மாட்டான். அமைதியான முறையில் செயலில் ஈடுபடுவான். நீ ஒரு நிமிடம் செய்த செயலுக்கு இன்று முழுக்க உன்னைக் கலங்கடித்து விட்டான். ஆனால், கோபிக்கமாட்டான். சரி வாறான் சந்தோஷமாய் போய் வாருங்கள். ஏதும் பிரச்சினை என்றால்...போன் செய்யம்மா" என்று விடை கொடுத்தனுப்பினாள்.

வண்டியில் செல்லும்போது இருவரும் மௌனமாகவே சென்றனர். எதிரே வந்த வண்டி ஒன்று அவனது வண்டியை நிறுத்தும்படி சமிக்ஞை மூலம் தெரியப்படுத்தியது. வண்டியை ஓரமாக நிறுத்தினான். அந்த வண்டியிலிருந்து இருவர் இறங்கி வந்தனர். அவனும் வண்டியை விட்டு இறங்கினான்.

(தொடரும்)





# கருணாநிதி எனும் சகாப்தம்

80 ஆண்டுகால பொது வாழ்க்கை. சுமார் 50 ஆண்டுகால அரசியல் வாழ்க்கை என்று மிகப்பெரும் சாதனைகள் படைத்திட்ட முப்பெரும் தமிழ்த் தலைவர் மு.கருணாநிதியின் மறைவுதான் இந்த வாரம் பரபரப்பு.

காவேரி மருத்துவமனையில் 11 நாள்களாகக் கவலைக்கிடமான நிலையில் ஏற்ற இறக்கங்களுடன் சிகிச்சை பெற்றுவந்த அவர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6.10 மணியளவில் இவ்வுலக வாழ்வை முடித்துச் சென்றுள்ளார்.

கலைஞர் கருணாநிதியின் ஆளுமை. தலைமை. எழுத்துலகு. அரசியல். சமூக சீர்திருத்தம் என்று அனைத்தையும் பொதுமைப்படுத்திச் சிந்தித்தால் அவர் ஒரு சகாப்தம் என்றே சொல்லிக்கொள்ள வேண்டும்.

அரசியலுக்கு. குறிப்பாகத் தமிழுக்கு ஒப்பற்ற சேவையாற்றிய உன்னதத் தலைவர் தன் உயிர்மூச்சை இழந்திருப்பதென்பது தமிழர்களுக்குப் அதிலும் குறிப்பாக வடதிசைத் தமிழர்களுக்குப் பேரிழப்பே. தமிழ்த் தாய் தனது தவப்புதல்வனை இழந்துள்ளாள். அது ஈடு செய்யப்பட முடியாத இழப்பும்கூட. சாதியத்துக்கு எதிரான போராட்டத்தில் பெரியாரின் பிரதிநிதியாக தன்னை இணைத்துக் கொண்டிருந்த கருணாநிதி, திராவிடச் சிந்தனைகளுக்குள் அறிஞர் அண்ணாவுடன் பயணித்த கருணாநிதி இன்று தனது பயணத்தை நிறுத்தியிருக்கிறார்.

தனது தென்திசைச் சொந்தங்களுக்கு தனது அதிகாரத்துக்கு ஏற்றவகையில் அவர் சேவையாற்றவில்லை என்கிற குற்றச்சாட்டு பொதுவாக இருக்கின்ற போதிலும் அனைத்தையும் கடந்து தமிழ் என்று வரும்போது கலைஞரின் இழப்பு பேரிழப்பே.

*'பெரியார்... அண்ணா... கருணாநிதி...'*

## ரவுண்ட் த வேர்ள்ட்

தொகுப்பு

பிரகாஸ்

# அமெரிக்கா மீது ஈரான் பாய்ச்சல்



ஈரான் அமெரிக்கா இடையிலான உறவில் மீண்டும் அவ்வளவு இலகுவில் ஒட்டிவிட முடியாத அளவுக்கு விரிசல் ஏற்பட்டுள்ளது.

ஈரானுடனான அணுவாயுத ஒப்பந்தத்தில் இருந்து கடந்த சில வாரங்களுக்கு முன்னா விலகியது அமெரிக்கா. இதையடுத்து அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் கருத்து மோதல்கள் உச்சம் பெற்றிருந்தன. இந்த மோதல்கள் தற்போது மேலும் வலுபெற்றுள்ளன.

கடந்த வாரம் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது அமெரிக்கா. இந்தத் தடைகள் மேலும் இறுக்கப்படும் என்ற எச்சரிக்கையும் அது கொடுத்தது இதைத் தொடர்ந்தே அமெரிக்காவை கடுமையாகச் சாடியுள்ளது ஈரான்.

ஈரான அயலுறவுத்துறை அமைச்சர் முகமத் ஜாவத சாரிப் தெரிவிக்கையில் "அமெரிக்காவுடன் இனியும் பேச்சு நடத்வோம் என்று நினைத்துக் கூட பார்க்க முடியாது. நாங்கள் அமெரிக்காவை எப்படி நம்ப முடியும். தன்னுடைய ஒழுங்கற்ற முடிவுகளால் அமெரிக்கா உலக நாடுகளிடையே நம்பிக்கையை இழந்துவிட்டது" என்று முழங்கித் தள்ளியுள்ளார்.

*'கச்சா இருக்கும் வரை ஈரான் பணியாது...'*



ஐரோப்பிய நாடுகள் கடும் வெயிலால் தற்போது பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் ஆங்காங்கே தற்போது பரவலாக காட்டுத் தீ ஏற்பட்டு வருகிறது. போர்த்துக்கலும் அவ்வாறு பெரும் காட்டுத் தீ இடருக்குள் சிக்கியுள்ளது. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது.



# இந்தோனேசியாவில் இமாலய அதிர்வு!

இந்தோனேசியா மற்றுமொரு நிலநடுக்கத்துக்கு முகம் கொடுத்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிச்டர் அளவுகோலில் 7 அலகுகளாக இந்த நிலஅதிர்வு ஏற்பட்டது. ஆனால் கடலுக்கடியில் வெறும் பத்தே கிலோமீற்றர் ஆழத்தில் நிலஅதிர்வு உணரப்பட்டதால் அதன் தாக்கங்களும் தாறுமாறாக இருந்தன. நூற்றுக் கணக்கான வீடுகள் இடிந்தன. கட்டடங்கள் சீட்டுக் கட்டுக்களைப்போன்று சரிந்தன. 350க்கும் குறையாத உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. ஆக, நிலநடுக்கங்களைக கண்டு பழகிப்போன இந்தோனேசியா இன்னுமொரு நிலநடுக்கத்துக்கு முகம் கொடுத்துள்ளது.

*'இந்தோனேசியாவும் நிலநடுக்கமும் இரண்டறக் கலந்தவைதானே...'*

# ரஷ்யா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிப்பு

வடகொரியா. ஈரான். கட்டார். வெனிசுலா நாடுகளுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்திருந்த அமெரிக்கா தற்போது ரஷ்யா மீது கைவைத்துள்ளது. ரஷ்யாவின் உளவாளியாக இருந்து ரஷ்யாவுக்கு எதிராகவே உளவு பார்த்த ஸ்கிர்போல் அண்மையில் இரசாயனத் தாக்குதலுக்கு உள்ளானார். இந்த விவகாரத்திலேயே பொருளாதாரத் தடை ரஷ்யாவுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன்-ரஷ்யா இடையிலான மோதல் உச்சம் பெற்றிருந்த காலத்தில் ரஷ்ய உளவாளி ஸ்கிர்போல் ரஷ்யாவுக்கு எதிராக பிரிட்டனுக்காக உளவு பார்த்தார். இதனால் அவரை கொல்வதற்கு ரஷ்யா பலமுறை முயன்றது. எனினும் பிரிட்டனில் பாதுகாப்பாக அடைக்கலம் கொடுக்கப்பட்டிருந்தார். கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கொடிய இரசாயனத்தால் ஸ்கிர்போலும் அவரின் மகளும் தாக்கப்பட்டனர். [illegible]ரணையில் அவர்கள் இருவரையும் ரஷ்ய[illegible]வே தாக்கியது என்று தெரியவந்தது. இதை[illegible]டுத்து அவர்கள் இருவருக்கும் அமெ[illegible]க்க [illegible] அடை[illegible]க்கலம் கொடுத்தது. அதன் தொட[illegible]சியாக ரஷ்யாவுக்கு எதிராக தற்போது பொரு[illegible]ாதாரத் தடையையும் விதித்துள்ளது.

*'மற்[illegible]ாரு [illegible]றுகலுக்கான விதை...'*





# 'அல்வ்பா'

**கதை**

20ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் பனி யுகம் இருந்த காலத்தில் படத்தின் கதை நடக்கிறது. பதின்மப் பருவத்தை நிறைவுசெய்யும் வயதில் இருக்கும் ஓர் இளைஞன் காட்டெருதுகளை வேட்டையாடுவதற்காகத் தனது குழுவோடு போகிறான். அங்கே அந்தக் குழுவிலிருந்து தொலைந்து போகும் அவன் ஒரு விபத்தில் காயமடைந்து சாவை எதிர்நோக்கி இருக்கிறான். இந்த நிலையில், அதே போன்ற நிலையில் இருக்கும் ஓர் ஓநாயைச் சந்திக்கிறான். இயல்பில் தன்து எதிரியான ஓநாயை, அந்தக் கடின நிலை காரணமாக நண்பனாக மாற்றுகிறான். தனது தந்தையின் தாரகமந்திரமான 'தலைவன் இல்லாதபோது அவனாக நீயே மாறு' என்ற சொல்லைப் பின்பற்றி நடைபோடுகிறான். வழியில் கொடூர விலங்குகள், கடுங்குளிர் காலத்தின் தொடக்கம், அபாயகரமான நில அமைப்பு என அடுத்தடுத்த சவால்களைத் தன்னுடைய புதிய நண்பனின் உதவியுடன் எதிர்கொண்டு தனது இருப்பிடத்துக்குத் திரும்பும் சாகசமே மீதிப் படம்.





'சர்வைவல்' படங்களின் திரைக்கதையில் சுவாரசியத்துக்காகச் சேர்க்கப்படுகின்ற வரலாற்றுக்கு முந்தைய 'பேலியோலித்திக்' காலப் பின்னணிதான் இந்தப் படத்திலும் கையாளப்பட்டிருக்கிறது. மனிதன் தனது முதல் நண்பனாக நாய் இனத்தைக் கண்டு கொள்வது, சாதாரண மனிதன் ஒருவன் சூழல் காரணமாகத் தலைவனாகத் தன்னை அடையாளம் காண்பது உள்ளிட்ட இழைகளைச் சுவாரசியத்துக்காகச் சேர்த்திருக்கிறார்கள்.

**இலங்கைப் பாத்திரம்**

அல்போர்ட் ஹ்யூஸ் இயக்கியுள்ள இந்தப் படத்தில் கோடி ஸ்மித், லியோனர் வரெலா உள்ளிட்டோர் நடித்துள்ளனர். துணைக் கதாபாத்திரங்களாக இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவரும் கனடா நடிகையுமான ப்ரியா ராஜரத்தினமும் நடிக்கிறார். கடந்த செப்டம்பரில் அறிவிக்கப்பட்ட இந்தத் திரைப்படத்தின் வெளியீடு பலமுறை ஒத்திவைக்கப்பட்டுக் கிட்டத்தட்ட ஒரு வருடம் தாமதமாகவே தற்போது திரைக்கு வருகிறது.

**தாமதத்துக்குக் காரணம்**

இந்தப் படம் 2015ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் திகதி அன்று முதன்முதலாக அறிவிக்கப்பட்டது. அல்போர்ட் ஹ்யூஸ் இயக்குநராக உறுதிப்படுத்தப்பட்டார். இது வடிவமைப்பில் தயாரிக்கப்பட்டு வந்தது. 2016 பெப்ரவரி 19 அன்று நடிகர்கள் உறுதி செய்யப்பட்டனர். படப்பிடிப்பானது வான்கூவர் மற்றும் டிரம்ஹெல்லர் ஆகிய பகுதிகளிலும், பின்னர் ஐஸ்லாந்திலும் நடந்தது. வன்கூவரில் 2016 பெப்ரவரி 22 இல் தொடங்கிய படப்பிடிப்பானது, மே 20 அன்று முடிவடைந்தது. 2016 ஏப்ரல் மாதத்தில் கனடாவின் பாட்ரிசியா ஆல்பர்டாவுக்கு அருகிலுள்ள டைனோசர் மாகாண பூங்காவில் படப்பிடிப்பு நடந்தது. அவ்வேளை காட்சிக்காக ஐந்து வரையான 'அல்பர்டா' இனக் காட்டெருதுகள் கொல்லப்பட்டதாகப் படக்குழுவிடம் விசாரணை செய்யப்பட்டது. படம் தாமதமாகியது.

**பெயர் மாற்றம்**

2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை படத்தின் பெயரானது 'தி சாலட்டிரியன்' என்பதாகவே அறிவிப்பிலிருந்தது. பின்னர் 'அல்வ்பா' என்று மாற்றப்பட்டது. அதேபோலவே 2017ஆம் ஆண்டு செப்ரெம்பரில் வெளியிடப்படுவதாக அறிவிக்கப்பட்ட படத்தின் வெளியீடு பின்னர், 2018 மார்ச் 2 அன்று வெளியிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் 2018 செப்ரெம்பர் 14க்கு ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அதுவும் மாற்றப்பட்டு 2018 ஒகஸ்ற் 17ஆம் திகதியன்று வெளியாவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட திகதியிலாவது இந்தப் படம் வெளிவருமா என்பதை, இன்னும் இரண்டு நாள்கள் வரை பொறுத்திருந்துதான் பார்க்கலாமே!



# வெனிசுவெலா திரை விழா

அடிமட்ட மக்களுக்குத் தோழனாகவும் ஆதிக்க சக்திகளின் எதிரியாகவும் திகழ்ந்த ஹியூகோ சாவேசின் சோசலிசப் புரட்சியில் கிளர்ந்தெழுந்த தேசம் வெனிசுவெலா. இலத்தின் அமெரிக்காவின் சின்னஞ்சிறு நாடான வெனிசுவெலாவை மேற்கு அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாக்கியவர் அவர். 'நாளை என்பது மிகத் தாமதம்' என்று முழங்கிய அந்தப் பெருந்தலைவர் மடிந்த பிறகு வெனிசுவெலாவின் திரைத் துறை உட்பட அத்தனை துறைகளும் தலைகீழான அரசியல் சூழலில் சிக்கின. மற்றைய இலத்தின் அமெரிக்க நாடுகளைப்போல வலுவான அரசியல் திரைப் படைப்புகள் இன்று வெனிசுவெலாவில் படைக்கப்படுவதில்லை. காரணம், அந்த நாட்டின் இன்றைய அதிபர் நிகோலஸ் மதுரோவின் மகன்தான் அங்குத் திரைப் பள்ளிக்கூடம் ஒன்றை நடத்திவருகிறார். சினிமாத் தயாரிப்பில் அந்த நாட்டு அரசு பெருமுனைப்புக் காட்டுவதால் ஆட்சி அதிகாரத்தை விமர்சிக்கக்கூடிய அரசியல் சினிமாக்களின் வருகை முடக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் 120 ஆண்டுகால வரலாறு கொண்டது வெனிசுவெலா சினிமா. அரசியலையும் அழகியலையும் நுட்பமான திரை மொழியில் வடித்த வெனிசுவெலாவின் அதிக சினிமாக்கள் இருக்கின்றன. 2012ஆம் ஆண்டுக்கு முன்னதாக வெனிசுலாவில் தயாரிக்கப்பட்ட இத்தகைய, மிகச் சிறந்த சினிமாக்கள் இந்தியாவின் சென்னையில் திரையிடப்பட்டிருக்கின்றன.

சென்னை பன்னாட்டுப் படவிழாவை ஒருங்கிணைத்துவரும் 'இண்டோ சினி அப்ரிசியேஷன் வ்பவுண்டேஷன்' திரைப்படச் சங்கம் புது டெல்லியில் உள்ள வெனிசுவெலா தூதரகத்துடன் இணைந்து சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள 'இன்ஸ்சிற்றியூட் மேக்ஸ் முல்லர் பவனில்' ஒகஸ்ட் 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை மூன்று நாள்கள் மாலைப் பொழுதுகளில் குறித்த திரை விழாவை நடத்தியிருக்கிறது.

## 'டெத் இன் ஹய் கொன்ற்றஸ்ற்'

பொலிஸ் முகவராகப் பணிபுரிந்துவரும் கேப்ரியலின் பெற்றோர் மர்ம நபர்களால் படுகொலை செய்யப்படுகிறார்கள். தான் பொலிசைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அந்தப் பாதையில் தனக்கான நீதி கிடைக்காது என்று முடிவுக்கு வருகிறார் கேப்ரியல். பத்திரிகையாளர் ஒருவரின் துணையோடு குற்றவாளிகளைக் கண்டுபிடித்துப் பழிவாங்கப் புறப்படுகிறார். இது 'டெத் இன் ஹய் கொன்ற்றஸ்ற்' இன் கதை இந்தத் திரைப்படத்தோடு ஆரம்பித்திருந்தது குறித்த படவிழா.








## 'இற் டவ்னெட் சட்டென்லி'

தலைநகர் கராகஸ் நகரத்தின் ஓர் இரவு, புரட்சிப் படையினரால் ஆட்கொள்ளப்படுகிறது. குறிப்பாக அந்த நகரத்தின் மேட்டுக்குடிப் பகுதி ஒன்றில் இராணுவத்தினருக்கும் புரட்சிப் படையினருக்கும் இடையில் போர் மூள்கிறது. இதனால் சிறை பிடிக்கப்பட்டதுபோல பயந்து நடுங்குகிறார்கள் அங்கு வசிக்கும் பணக்காரர்கள். இந்தச் சிக்கலைத் தொலைக்காட்சிச் செய்தி ஊடகமும் வானொலியும் முற்றிலுமாக வேறு கோணத்தில் உலகத்துக்குக் கொண்டுசெல்லும் போலித்தனத்தைத் திரையில் விரிக்கிறது, 'இற் டவ்னெட் சட்டென்லி' திரைப்படம்.




'தி கிட் வூ லய்ஸ்'

தன்னுடைய பொய்களால் ஆறுதல் அடையும் பதின்பருவச் சிறுவனின் கதை, 'தி கிட் வூ லய்ஸ்' நிலச்சரிவில் சிக்கிச் சிதைந்துபோன தன்னுடைய குடும்பத்தின் கதையைச் சந்திப்பவர்களிடம் எல்லாம் விவரித்தபடியே பயணிக்கிறான் ஒரு சிறுவன். எதற்கெடுத்தாலும் பொய் புளுகுபவன் என்று உலகம் நினைக்கும்போது அந்தப் பொய்களுக்குள் ஒளிந்திருக்கும் உண்மைகளும் அவனுடைய வலிகளும் பார்வையாளர்களைக் கலங்கடிக்கின்றன.




## 'டேய்ஸ் ஒவ் பவர்'

சர்வாதிகாரி மார்கோஸ் பெரிஸ்மெனிஸின் வீழ்ச்சிக்குப் பிறகு கராகஸ் சமூகம் 60களில் என்னவாக மாறியது என்பதின் திரை வடிவம் 'டேய்ஸ் ஒவ் பவர்' போரும், சாவும், குழப்பமும் பிழைத்தாட்டும் வெனிசுலாவில் வாழும் ஒரு வீர இளமங்கைக்கும் இராணுவ வீரன் ஒருவனுக்கும் இடையில் காதல் மலர்வதே, கதை.



சிறுகதை

# கரந்தாய் பிள்ளையாரும் கந்தசாமி பிள்ளையும்

கோகி

அதிகாலை நேரம். ஊரே அமைதிப் போர்வையில் மூழ்கியிருக்கின்றது. கந்தசாமிப்பிள்ளை தன்னை மறந்து, ஆழ்ந்த சயனத்தில், திருமால் பள்ளி கொள்வதைப் போல உறக்கத்தில் இருந்தார். மார்கழி மாதத்தில் திருப்பள்ளி எழுச்சி பாடுவதைப்போல சேவலும் தனது சிறகுகளை அடித்துக் கூவியது. காதுகளால் ஒலியை உள்வாங்கிய அவர் திடுதிப்பென எழுந்து பாசாங்குக் குளியலைச் செய்தார். காரிருளிலும் கைகளில் அகப்பட்ட தோட்டத்து மலர்களைப் பறித்துவிட்டுப் பரபரப்புடன் கரந்தாய்ப் பிள்ளையாரை நோக்கி விரைந்தார்.

கந்தசாமிப்பிள்ளை பெயருக்கு ஏற்றாற்போல குழந்தைக் குணம் கொண்டவர். யார் எதிர்ப்பட்டாலும் வயது வித்தியாசம் பாராது அன்பாகப் பேசுவார். முகத்தில் என்றும் தெய்வீக அம்சம் நிறைந்திருக்கும். அதை வயது முதிர்ந்த அனுபவத்தால் கிடைக்கப்பெற்ற ஞானம் எனலாம். மேனி எல்லாம் வெண்ணீற்றால் அலங்கரித்திருப்பார். வேட்டியும் முண்டாசும் இவரைப் பாரதிபோல் மிடுக்குடன் காட்டிவிடும். அப்பர் சுவாமியை நேரிலே காணவில்லை என்ற கவலை வேண்டாம். இவரைப் பார்த்தாலே போதும் என்ன. அப்பர் உழவாரத்தைக் கையில் வைத்திருப்பார்; இவர் விளக்குமாறும் கையுமாக நிற்பார். கரந்தாய்ப் பிள்ளையார்தான் இவரது ஆத்மீகமான நண்பன். ஒரு நாளும் அவரைக் காணாது இருக்கமாட்டார். அடிக்கடி இருவரும் சந்திப்பதையும் சம்பாசனைகள் புரிவதையும் யாரும் உணர்ந்திருக்கமாட்டார்கள். எம்மவர்கள் இதைப் பக்தி என்பர். நான் இதை நட்பு என்றுதான் கூறுவேன். இருவரது நட்பும் துரியோதனனும் கர்ணனும் போன்று மிக நெருக்கமானதாகும். காற்றிலே அசைந்தாடும் கிளைகளைப் பரப்பிய ஆலமர நிழலிலே சிறிதாகக் கட்டப்பட்ட ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் அமைதியாக உருவானவர்; இல்லை உருவாக்கப்பட்டவர்தான் கரந்தாய்ப்பிள்ளையார். குளத்திலே பட்டுத்தெறிக்கும் குளிர் காற்றிலே குதூகலமாக அமர்ந்திருந்து ஊரிலே நடக்கும் வேடிக்கைகளை வியந்து பார்த்துக் கொண்டிருப்பார். வழமையாக அயல் வீட்டுப் பூசாரியார் இரண்டு நேரப் பூசைகளையும் தவறாது மேற்கொள்வார். இந்த வீதியின் வழியாகச்செல்லும் பக்தர்களும் எதையோ தேடுவதைப்போல

பூசை நேரம் நெருங்கியது. பூசாரியார் பக்தர்கள் சூழ பூசையை கண்மூடித் திறப்பதற்குள் முடித்துவட்டார். பிள்ளையாருக்கு உள்ளூரப் பூரிப்பு. "இண்டைக்கு எனக்கு ஒரு மோதகம் கிடைக்கப் போகிறது" என்று அகமகிழ்ந்தார். பூசாரியார் செருகி வைக்கப்பட்ட உறைப்பையை உதறிவிட்டு விரித்தார். "பிள்ளையாருக்குப் படைத்தது பூசாரிக்குத்தானே சொந்தம்" அனைத்தையும் அள்ளிப் போட்டார். அவர் பாட்டுக்கு வீடு போய்ச் சேர்ந்திருப்பார்.

அவ்விடத்தில் மட்டும் [illegible] குனிந்து செல்வர். [illegible] அந்தக் கிராம மக்களால் விசேட காலங்களில் பூசை வழிபாடு [illegible] வெகு [illegible] இத்தகைய விசேட [illegible] கந்தசாமிப்பிள்ளைக்கு வேலைப்பளு [illegible] முகம் சுளைக்காமல். [illegible] வேலைகளையும் செய்து [illegible]
"[illegible] இண்டைக்கு என்ன அதிகா[illegible] [illegible]? ஏதும் விசேசமோ?"

எனப் பிள்ளையார் வீண் வம்புக்கு இழுப்பதுபோல் கதைவளர்த்தார். "உமக்குத் தெரியாதது உந்த உலகத்தில என்ன இருக்கு...? இண்டைக்கு ஆவணிச் சதுர்த்தி"
"ஓம்! ஓம்! எனக்கு மறந்தே போச்சு... ஆயிரம் விசேசகாலமெண்டா ஆருக்குத்தான் ஞாபகம் வரும். ஆமாம் நீர் என்ன செய்யப்போவதாக உத்தேசம்"
"அப்பனே நீர் பேசாமல் வழமைபோல இருந்து பாரும்" என கையிலே விளக்குமாற்றை எடுத்துக் கொண்டு ஆலயச் சுற்றுப்புறச் சூழலைக் கூட்டித் தூய்மைப்ப டுத்தினார். ஒரு வாளியில் நீரை எடுத்து வந்து ஆலய முன்றிலில் அள்ளித் தெளித்தார். பறித்து வைத்திருந்த பூக்களைக் கொண்டு மாலை தொடுத்து வைத்தார். அவர் ஆயைத் தொண்டை முடிக்கும் தருவாயில் தனது கங்குலைத் திரை அகற்றிட ஆயிரம் கரங்களை அள்ளிவீசி மலர்ந்தான் ஆதித்தியன். பறவைகளும். மாடுகளும் தமது கடமைகளுக்காக வெளியே தலைகாட்டி வலம் வந்தன. இயற்கையில் இறைவனின் விந்தைகளை வியந்த வண்ணம் ஆலயத் தூணில் பரந்த மணற்பரப்பில் அப்பனுக்கு அருகில் அமைதியாக அமர்ந்தார். இடைக்கிடையே அன்னப்பறவையைப்போல தலையைத் தூக்கிக் கிழக்கு வீதியில் தனது பார்வையை வீசுவது ஏதோ ஒன்றை எதிர்பார்ப்பதை உணர்த்தியது.
"ஏன் கந்தையார். என்ன அந்தப் பக்கம் பார்க்கிறீர்.. ஆரும் வரவேணுமோ?"
"அது ஒண்டுமில்ல... இண்டைக்குத் தவராசாவின்ரை பூசை எண்டு சொன்னவர். ஆளின்ரை சிலமனக் காணோம்"
"அப்படியெண்டால் இண்டைக்கு அன்னதான ஏற்பாடெல்லாம் உண்டோ?"
"அன்னதானம் இல்லாமல் எந்த விசேசப் பூசை நடந்திருக்கு... உமக்கு மோதகம், வடை எண்டு நல்ல கவனிப்புத்தான்."
என தனது நாவினிக்க கந்தையார் பெருமூச்சு விட்டார்.
"நல்லாச் சொன்னீர்கள். பகட்டுக்குப் படைக்கிறது. ஆனால் எனக்கொண்டும் தருவதில்லை. இதுதானே உந்தச் சனத்தினுடைய பக்தி. நம்பி இருந்திருந்தாலும் நம்பிக்கையா இருக்கலாம். உம்மை நம்பி இருந்து என்ன பிரயோசனம்?"
"உந்தத் தடவை நீர் கவலைப்படாதீர். உமக்கு ஒரு மோதகம் கிடைக்கும்! அதற்கு நான் பொறுப்பு. பொறுமையாய் இரும்..." என்று கூறிக் கொண்டு எழுந்தவர். தவராசா தனது குடும்பத்தினரோடு ஆலயம் நோக்கி கரைந்து வருவதைக் கண்டு தனக்குள் அகமகிழ்ந்தார். அன்னதானச் சமையலுக்கான ஏற்பாடுகள் ஒரு பக்கம் அவசர அவசரமாக இடம்பெறுகின்றன. பூசைகளுக்கான ஏற்பாடுகள் மின்னல் வேகத்தில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. குறிப்பறிந்து பூசகரும் அவ்விடம் வநதுவிட்டார். பொங்கல், மோதகம். வடை. பழங்கல் எனப் படையல்கள் தயாராகிவிட்டன. இவை யாவற்றுக்கும் சகல வகையிலும் ஒத்தாசைகளைக் கந்தசாமிப் பிள்ளை வழங்கினார்.

பூசை நேரம் நெருங்கியது. பூசாரியார். பக்தர்கள் சூழ பூசையைக் கண்மூடித் திறப்பதற்குள் முடித்துவிட்டார். பிள்ளையாருக்கு உள்ளூரப் பூரிப்பு.

"இண்டைக்கு எனக்கு ஒரு மோதகம் கிடைக்கப் போகிறது" என்று அகமகிழ்ந்தார். பூசாரியார் இடுப்பில் செருகி வைத்திருந்த உறைப்பையை உதறிவிட்டு விரித்தார். "பிள்ளையாருக்குப் படைத்தது பூசாரிக்குத்தானே சொந்தம்" அனைத்தையும் அள்ளிப் போட்டார். அவர் பாட்டுக்கு வீடு போய்ச் சேர்ந்திருப்பார்.
"இதெல்லாம் வழமைதானே" என்று தன்னைச் சமாதானப்படுத்தினார் பிள்ளையார். தனது அகலக் கண்ணைத் திறந்து "எங்கே எனது நண்பன்?" எனத் தேடுவதைப் போன்று விருப்புடன் எதிர்பார்த்திருந்தார். கந்தசாமிப்பிள்ளை அன்னதானம் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உள்ள மாமரத்தின் அடியில் அமர்ந்தார். உணவு உண்ண ஆரம்பிப்பதற்கு முன்னர் தனக்கு வைத்திருந்த மோதகத்தைப் பிள்ளையாருக்குக் கொடுத்த வாக்கிற்கிணங்க அவருக்கே வழங்குவதற்காக அதைத் துணியால் மறைத்து இடுப்பிலே செருகி வைத்தார். உள்ளுக்குள் ஆனந்தம் அருவியாய்ப் பொங்கிப் பிரவாகித்தது. மெதுமெதுவாகக் கூட்டமும் கலைந்தது.
தனது ஆருயிர் நண்பனைக் காணும் பொருட்டு அகமும் முகமும் மலர ஆலயத்துக்குள் அடியெடுத்து வைத்தார். எதிர்பார்த்திருந்த பிள்ளையார் இரட்டிப்பு மகிழ்வுடன் "என்ன காணும் இவ்வளவு நேரம் செய்தீர்? பசி வயிற்றைக் கிள்ளுகிறது. சாப்பிட என்ன கொணர்ந்தீர்?" என்று கந்தசாமிப்பிள்ளையின் குறிப்பை அறிந்துகொள்ளும் வகையில் கேட்டார்.
"உமக்கில்லாமலா? இந்தாரும் மோதகம்" என இடுப்பிலே மறைத்து வைத்திருந்த துணியை எடுத்து விரித்தார்.
கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பது போல மோதகம் அவருடைய பிடியிலிருந்து தவறி மண்ணைப் பற்றியது. பிள்ளையாருக்கு மோதகத்தைக் கொடுக்க முடியவில்லையே எனத் தன்னுடைய தலையில் கைவைத்து அந்த இடத்திலேயே அமர்ந்துவிட்டார். தனது நண்பனின் மனநிலையை உணர்ந்த பிள்ளையார்
"நீர் ஒன்றும் கவலைப்படாதீர். இந்த ஒரு மோதகம் என்னுடைய பானை வயிற்றுக்குப் போதுமானதா? இது என்னுடைய பசியைப் போக்குமா?" என்று ஆறுதல் படுத்தினார். தனது தவறை உணர்ந்த கந்தசாமிப்பிள்ளை தான் அளித்த வாக்கைக் காக்க முடியாமல் மௌனியாகி, வெட்கித் தலை கவிழ்ந்தார். மீண்டும் ஒரு விசேட தினம் வராதா என்று... ■

# அருவி ஆற்றுத் திட்டம்

கட்டுரை

நா.லோகதயாளன்

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் நிலையான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் ஒரு பெரிய திட்டமாக அருவி ஆற்றுத் திட்டத்தைக் குறிப்பிடுகின்றது தேசிய நீர்வழங்கல் மற்றும் முகாமைத்துவ சபை. அதை நடைமுறைப் படுத்துவதன் ஊடாக ஒரு லட்சத்து 23ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களில் தங்கு தடையற்றதாக இரண்டு போகங்களுக்கும் விவசாயம் செய்வதற்கு வழியமைக்க முடியும் என அது சுட்டிக்காட்டுகின்றது. குறித்த



திணைக்களம் ஊடாக மேற்கொள்ளுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது இந்த நீர்வழங்கும் திட்டம்.

### மல்வத்து ஓயா மற்றும் அருவி ஆறு

அருவி ஆறு அல்லது மல்வத்து ஓயா என்பது 145கிலோ மீற்றர் நீளமான ஆறு. இதில் 39கிலோ மீற்றர் தூரம்வரையான பகுதி தமிழர் பிரதேசத்துக்குள். அதாவது வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்குள் அடங்குகின்றது. அதையே அருவி ஆறு என்கின்றனர். அது தவிர்ந்த 106கிலோமீற்றர் தூரமும் சிங்களப் பகுதிகளின் ஊடாகச் செல்கின்றது. அந்தப் பகுதிகளையே மல்வத்து ஓயா என்கின்றனர். இந்த ஆற்றின் ஓட்டம் மன்னாரில் போய் நிறைவடைகிறது. மாரி காலத்தில் குறித்த ஆற்றின் மூலம் பாய்ந்து வரும் அதிக நீரின் காரணமாகக் காலத்துக்குக் காலம் மன்னார் மாவட்டம் நீரில் மிதப்பதும் நடக்கின்றது. வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் எல்லைப்பகுதியில், தேக்கம் என்னும் இடத்தில் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் இந்த ஆறு சார்ந்து அமைக்கப்பட்ட அணையுள்ளது. அந்தப் பகுதியில் குறித்த ஆற்றோட்டம் இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதி (இடதுகரை) அகத்திமுறிப்புக் குளத்துக்கும். மறு பகுதி (வலது கரை) கட்டுக்கரைக் குளத்துக்கும் செல்கின்றன. அதை விவசாயத்துக்குப் பயன்படுத்தவோ, சேமிக்கவோ, தடுக்கவோ வாய்ப்பு இல்லாமையால், அல்லது போதிய தொழில் நுட்பம் இல்லாமையால், அங்குள்ள பகுதிகளில் நிறைந்த பின்பு நீர் வழிந்தோடுகிறது. மழைக் காலத்தில் மன்னார் மாவட்டம் நீரில் மூழ்கியும் கொள்கின்றது.



### சேமிக்கும், பயன்பெறும் திட்டங்கள்

கீழ்மத்து ஓயா - தந்திரிமலையை உள்ளடக்கிய செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு பெரிய அணையை அமைத்து, ஒரு நீர்த் தேக்கத்தை உருவாக்குவதற்குத் திட்டமிடப்படுகின்றது. இதற்காக 3.6கிலோ மீற்றர்கள் நீளமான அணைக்கட்டு ஒன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்படுகின்றது. இதன் மூலம் மன்னார் மாவட்டத்தின் இரண்டு நீர்த்தேக்கங்களுக்குத் தேவையான அளவு நீரை அனுமதித்துவிட்டு ஊர்மனை மற்றும் கடலுக்குள் செல்லும் மேலதிக நீரைத் தடுத்துச் சேமிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இவ்வாறு நீரைத் தேக்கித் திறக்கும் பகுதியில் இருந்து மின் உற்பத்தியையும் பெறமுடியும். அதன் மூலம் வருடாந்தம் குறிப்பிட்டளவு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### பயன்கள்

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், இதனுடன் தொடர்புபட்டிருக்கின்ற 3பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த ஒரு லட்சத்து 23ஆயிரம் ஏக்கர் வயல்காணிகலும் இரண்டு போகங்களுக்கும் தங்கு தடையின்றி நெற்செய்கையில் ஈடுபட முடியும். வருடம் தோறும் மழைக் காலத்தில் மன்னார் மாவட்டம் வெள்ளத்தில் மிதப்பதும் தடுக்கப்படும். மதவாச்சி, செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட மக்களின் குடிநீர்த் தேவையை 2மில்லியன் மீற்றர் கியூப் நீர் வரையில் பெற்றுப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

### பாதிப்புக்கள்

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வேளையில் பயன்கள் உள்ளதைப்போன்றே பாதிப்புக்களும் உள்ளன. தற்போது வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் 5குளங்கள் வரை இருக்கின்றன. அந்த 5சிறு குளங்களும் ஒரே நீர்த் தேக்கமாக மாற்றப்படும். இதனால் அந்தக் குளங்களின் அருகே உள்ள 200வரையான விவசாயிகள். தம்முடைய 630ஏக்கர் வயல் காணிகளை இழக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தப் பகுதியில் தற்போது வசிக்கும் 10குடும்பங்களும் இடம்பெயர வேண்டிய கட்டாயமும் ஏற்படும். இந்தப் பாதிப்புக்களைத் தவிர்த்துப் பார்த்தாலேயே குறிப்பிட்ட ஆற்றுத் திட்டம் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும்.

### தீர்மானங்கள்

குறித்த திட்டத்துக்கான அனுமதி தொடர்பில் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்வதான செயற்பாடுகள் காலதாமதமடைந்து கொண்டிருக்கின்றன. குறித்த திட்டத்தால் குறிப்பிட்டளவு தீமைகள் உள்ளபோதும் அதிக நன்மைகள் உள்ளடங்குவதையே அவதானிக்க முடிகிறது. அதிக வருமானம் ஈட்டும் திட்டமாகவும் காணப்படுகிறது. இந்தத் திட்டத்துக்குள் அநுராதபுரம், வவுனியா, மன்னார் மாவட்டங்கள் உள்ளடங்கினாலும் பெரும்பகுதி வவுனியாவையே சேர்வதால், வவுனியா மாவட்ட மக்களின் கருத்தறியப்படுதலும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு பாதிக்கப்படும் பகுதியினராக மேலே குறிப்பிட்ட, இந்தத் திட்டத்தால், இடப்பெயர்வை எதிர்கொள்ளும் குடும்பங்களுக்கான மாற்று இருப்பிட வசதிகளும், வயல் காணிகளை இழக்கும் குடும்பங்களுக்கு நீர்ப்பாசன வசதியுள்ள இடத்தில் வயல் நிலங்களும் வழங்கப்படுமானால் (அவர்கள் விரும்புவதற்கு இணங்க) குறித்த திட்டம் எவரையும் பாதிக்காத, அனைவருக்கும் நலன் பயக்கின்ற நல்ல திட்டமாக அமையலாம்.


*கட்டுரையாளர்-மாநகரசபை உறுப்பினர்*

---

## சோதனைக் காலத்துச் சோதனைகள்

கவிதை

இரா.ஜெயக்குமார்



உள்ளதெல்லாம் அள்ளுகின்ற
கள்ள மனிதரிடை
குள்ள மனிதரும் வந்திட்டார்!
குழப்பத்தை ஏற்படுத்த
இனியா பஞ்சம்?
கேட்கும் உரிமைகளை
போட்டு இழுத்தடிக்க
வாட்டும் வாள்வெட்டு!
மீண்டு எழக் கற்பவர்களுக்கு
மிரட்டும் மின் வெட்டு!
நூலகத்தைப் பொசுக்கியும்
தரப்படுத்தித் தாழ்த்தியும்
கொத்தாய்க் கொன்றொழித்தும்
உரம் குன்றா மாணவரை
பரீட்சையிலே பழுதாக்க
கயமைகள் தரும் தடையோ?

---



## தவிப்பு

அழகாலும் அன்பாலும்
பழகும் பண்பாலும்
கட்டி வைத்த கன்னியே!
படியோரம் பதுமையாய்
நளினமாய் அசைகையிலே
கலைகளைக் கண்டேன்!
சிரிக்கும் போதெல்லாம்
சிலிர்த்து நின்றேன்!
கதைக்க வழி தேடிக்
காத்திருக்கின்றேன்
உன் அழைப்பிலே உள்ளது
என் உயிர்ப் பிழைப்பு!

கவிதை

மேகதூதன்

கட்டுரை

ராஜேஸ்மணாளன்

# நடப்பது எல்லாம் நன்மைக்கே!



'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முன்னோர் வாக்கு. கோடி கோடியாகப் பணம் வைத்திருந்தாலும் அவற்றை அனுபவிப்பதற்கு நோயில்லாத உடல் வேண்டும். எனவேதான் நோய்கள் வராமல் உடலைக் காத்துக்கொள்வது அவசியம் என்கின்றனர் மருத்துவர்கள். நடைப் பயிற்சி மேற்கொள்பவர்களை நோய்கள் எளிதில் தாக்குவதில்லை என்றும் கூறுகின்றனர்.

தினமும் தவறாமல் நடைப் பயிற்சி மேற்கொண்டால் எடை குறையும், தசை வலுவடையும், இதய நோய்கள் எட்டிப்பார்க்காது, நீரிழிவு நோய் கட்டுப்படும், குருதி அழுத்தம் சீராகும், முதுகுவலி ஏற்படாது என்கின்றனர் மருத்துவர்கள். நாம் ஒரே இடத்தில் வெகுநேரம் உட்கார்ந்துகொண்டோ, நின்று கொண்டோ வேலை செய்பவராக இருந்தால், நமது கால்களில் உள்ள குருதிக் குழாய்களுக்கு அங்குள்ள குருதியைத் திரும்பவும் இதயத்துக்கு அனுப்புவதற்குப் போதுமான அள்வு அழுத்தம் கிடைப்பதில்லை. இதனால குருதி ஓட்டம் உடலின் எல்லாப் பாகங்களுக்கும் சீராக இருப்பதில்லை. ஆனால், நடக்கும்போது நமது கால்களில் உள்ள தசைகள் இயங்கி, அருகிலுள்ள குருதிக் குழாய்களை அழுத்திக் குருதியை இதயத்துக்கு அனுப்புவதற்குத் தேவையான சக்தியை அளிக்கின்றன. நடப்பது நல்லது என்பது இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கும். ஆனாலும் அதை நடைமுறைப் படுத்துவதில்தான் சிக்கல்கள் என்கிறீர்களா? உங்களுக்காகவே இந்தத் தகவல்கள்.



"நடப்பது நடக்கட்டும் என்று அலட்சியமாக இருந்து விடவேண்டாம். உடல் நலந் தானே நமக்கு முக்கியம்?"

### நடைப் பயிற்சியில் ஈடுபாடு ஏற்படுவதற்கு...

'பீடோ மீற்றர்' எனும் கருவியை அணிந்துகொண்டு நடக்கலாம். நாம் எவ்வளவு தூரம் நடந்திருக்கிறோம் என்பதை இந்தக் கருவி காண்பிக்கும். நடைப்பயிற்சி செய்வதற்காகவே, அதற்கென இருக்கும் பிரத்தியேகக் காலணியை வாங்கலாம். இதை மற்றைய நேரங்களில் பயன்படுத்தக்கூடாது. தினமும் நடக்கும் தூரத்தைக் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும். இது, நமது நடைப் பயிற்சியின் வளர்ச்சி விகிதத்தை அறிந்துகொள்ள உதவும்.

### அரைமணி நேர நடை:

வேலை செய்யவேண்டிய இடத்துக்குப் பல கிலோ மீற்றர்களுக்கு நடந்து செல்லவேண்டிய நிலைமை எல்லாம் இன்று இல்லை. வீட்டு வாசலுக்கும், அலுவலக வாசலுக்கும் போக்குவரத்துப் புரியும் சொகுசு வாகனங்கள், அலுங்காமல் குலுங்காமல் நம்மைக் கொண்டு சேர்க்கும் பணியை வெகு சிறப்பாகச் செய்கின்றன. இப்படி உடல் உழைப்புக்கு வாய்ப்பே இல்லாதவர்கள், தினமும் குறைந்தது அரை மணி நேரமாவது நடைப்பயிற்சி செய்யவேண்டியது அவசியம்.

### உறுப்புகளுக்கு நம்பிக்கைத் துரோகம்:

மூளை, இதயம், நுரையீரல், கல்லீரல் என நமது உடல் உறுப்புகள் அனைத்தும் நம்மை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்காக இடைவிடாமல் இயங்கிக்கொண்டேதான் இருக்கின்றன. அவை அனைத்தையும் தாங்கிப் பிடித்திருக்கும் நாம்தான் ஓடாமல், நடக்காமல் உள் உறுப்புகளுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் நம்பிக்கைத் துரோகம் செய்துகொண்டிருக்கிறோம். நடைப்பயிற்சி, உள் உறுப்புகளுக்குத் தேவையான குருதி ஓட்டத்தையும், பிராண வாயுச் செறிவையும் ஏற்படுத்திச் சிறப்பாகச் செயல்படவைக்கும்.

நோய்கள் வராமல் பாதுகாப்பதற்கு நம்மிடையே இருக்கும் மிக முக்கிய சாதனம் நடைப்பயிற்சி. ஆனால், அந்தச் சாதனத்தைப் பயன்படுத்தாமல் துருப்பிடிக்க வைத்துவிடுவதுதான் நோய்களுக்குக் கொண்டாட்டமாகப் போய்விடுகிறது.

### பயன்கள்:

நடைபயிற்சியால் பல பயன்கள் கிடைக்கின்றன. உயர் குருதி அழுத்தத்தைக் குறைக்கவும், உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருக்கவும் உதவும். குருதி ஓட்டத்தை முறைப்படுத்தி, குருதிக் குழாய்களில் தேங்கியிருக்கும் கொழுப்புத் திட்டுகளை நீக்கப் பயன்படும். சிறு வயது முதலே விளையாட்டுடன்கூடிய நடைப்பயிற்சி, முதுமையைத் தள்ளிப்போடும். நீரிழிவு தினமும் தவறாமல் நடைப்பயிற்சி செய்யவேண்டியது அவசியம். நுரையீரலில் ஒட்சிசனின் கொள்ளளவு பன்மடங்கு அதிகரிக்கும். எலும்புகளுக்கும் தசைகளுக்கும் வலிமையைக் கொடுக்கும். உடல் எப்போதும் சுறுசுறுப்பாகச் செயல்படும். உடல் எடை குறைக்க நடைபோடுபவர்கள், நொறுக்குத்தீனிகளை கொறித்துக் கொண்டே சென்றால், நடப்பதில் எந்தப் பயனும் இல்லை. உடல் பருமனைக் குறைப்பதற்கு நடைப்பயிற்சியோடு, யோகப் பயிற்சிகளையும் சேர்த்துச் செய்யலாம்.

### புத்துணர்ச்சி அடையும்

எடை அதிகரிப்பால் ஆங்காங்கே தசைகள் தளர்ந்து, உடல் அமைப்பு ஒழுங்கான வடிவமின்றிக் காணப்படும். இவர்கள் நடைப் பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் உடலில் உள்ள தளர்வான தசைகள் வலுவடையும், காலை வேளைகளில் மேற்கொள்ளும் நடைப் பயிற்சியால் உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி அடைகிறது.

### நீரிழிவு கட்டுப்படும்

தினசரி காலை, மாலை இரண்டு வேளைகளிலும் 45 நிமிடங்கள் வரையில் நடைப் பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு நீரிழிவு நோய் கட்டுப்பாட்டுக்குள் வருவது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே நீரிழிவு நேயால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டிப்பாக நடைப் பயிற்சி மேற்கொள்ளவேண்டும் என்பது மருத்துவர்களின் அறிவுரை.

### கொழுப்புக் குறையும்

நடைப் பயிற்சியின் மூலம் உடலில் தேவையற்ற இடங்களில் சேர்ந்துள்ள கொழுப்புக் குறைகிறது. குருதி நாளங்களில் படிந்துள்ள கொழுப்புக் குறைவதால் குருதி ஓட்டம் சீராகிறது. இதனால் இதய நோய் பாதிப்புக் குறைகிறது. குருதி அழுத்த நோய் கட்டுப்படுகிறது.

### நடைப்பயிற்சிக்கு நேரம் ஒதுக்க முடியாதவர்கள் செய்யவேண்டியவை

அலுவலகத்தில் ஒருவரிடம் பேசவேண்டியிருக்கும் போது, அதற்கான அவருக்கு மின்னஞ்சல் அனுப்புவதை, மற்றும்பிற தொடர்பு சாதனங்கள் மூலம் அவரைத் தொடர்பு கொள்வதைத் தவிர்க்கலாம்: எழுந்து சென்று அவரிடம் நேரில் பேசிவிட்டு வரலாம்.

தொலைபேசியில் பேசும்போது நடந்துகொண்டே பேசலாம். தொலைக்காட்சி 'ரிமோட்'டை வேறு அறையில் வைக்கலாம். ஒவ்வொரு முறையும் அலைவரிசைகளை மாற்றும்போது எழுந்து சென்று 'ரிமோட்'டை எடுத்து வரலாம்; இதனால் சில அடிகள் கூடுதலாக நடப்பீர்கள். தொலைக்காட்சியில் ஒவ்வொருமுறையும் விளம்பர இடைவேளைகள் வரும்போதும் எழுந்து அறைக்குள்ளேயே நடக்கலாம்.

விளம்பர இடைவேளை மற்றும் தொலைக்காட்சி பார்க்கும் ஓய்வான நேரங்களில் நொறுக்குத் தீனியைக் கனவிலும் நினைக்கக் கூடாது.

30 நிமிடங்களுக்கு ஒரு முறை அலாரம் வைத்து எழுந்து சில அடிகள் நடக்கலாம். 'லிப்ட்', 'எஸ்கலேட்டர்'களைத் தவிர்த்துவிட்டு முடிந்தவரை ஏறி இறங்குவதற்குப் படிகளைப் பயன்படுத்தலாம். அருகிலிருக்கும் கடைகளுக்கு நடந்து செல்வதை வழக்கப்படுத்திக் கொள்ளலாம்

### நலம் தரும் நடை எது?

நடைப் பயிற்சி இலகுவான பயிற்சிதான் என்றாலும், இதற்கென்று சில விதிமுறைகள் உள்ளன. அவற்றைப் பின்பற்றினால்தான் பயன்கள் முழுமையாகக் கிடைக்கும். அவை:

ஒருவர் தனியாகவும் நடக்கலாம். துணைக்கு யாரையாவது சேர்த்துக்கொண்டும் நடக்கலாம். குழுவாகவும் நடக்கலாம். நடைப்பயிற்சி என்றாலே, மூச்சிரைக்க நடக்க வேண்டும் என்றுதான் எல்லோரும் நினைக்கிறார்கள். அது தேவையற்றது. இரண்டு பேர் பேசிக்கொண்டே நடந்துசெல்லும்போது, ஒருவர் பேசுவது அடுத்தவருக்குத் தெளிவாகப் புரிய வேண்டும். அந்த வேகம் போதுமானது. தூய காற்றோட்டமுள்ள திறந்த வெளிகளில், பூங்காக்களில் நடைப் பயிற்சி செய்வது ஆரோக்கியமானது. அதிகாலை ஐந்து மணி முதல் ஏழரை மணி வரை அல்லது மாலை ஐந்து மணி முதல் ஆறரை மணி வரை நடைப்பயிற்சிக்கு ஏற்ற நேரம். இந்த நேரத்தில், சுற்றுச் சூழலில் மாசு குறைவாக இருக்கும் என்பதுதான் இதற்குக் காரணம். வெறுங்காலில் நடக்க வேண்டாம். சரியான அளவுள்ள, மென்மையான பதணிகளையும் வியர்வையை உறிஞ்சும் பருத்தித் துணியாலான காலுறைகளையும் அணிந்து நடக்க வேண்டும்.

### உங்களுக்குத் தெரியுமா?

தினமும் 10ஆயிரம் அடிகள் நடந்தால், வாரத்துக்கு 2ஆயிரம் முதல் 3ஆயிரத்து 500 கலோரிகள் வரை எரிக்கப்படுகிறதாம்! இதைக் குறைந்த அடிகளில் தொடங்கியே படிப்படியாகப் 10ஆயிரம் அடிகளை எட்ட வேண்டும். 2ஆயிரம் அடிகள் நடப்பது ஒரு மைல் நடந்ததற்குச் சமம். நடக்கும்போது கைகளை வீசி நடப்பது, கலோரிகளை எரிப்பதை அதிகரிக்கச் செய்யும். நடப்பது நடக்கட்டும் என்று அலட்சியமாக இருந்து விடவேண்டாம். உடல் நலந்தானே எமக்கு முக்கியம்? எழுந்து நடவுங்கள்.

# நினைவழித்தல்





எப்பிடிப் பாருங்கோ நாட்டு நடப்புகள்? ஜீலை83 நினைவுகள் முடிஞ்சுது. இனி வாற வருசம் ஜீலை மாசம் அதைப்பற்றிக் கதைக்கலாம் என்ன? எல்லாமே அப்பிடித்தானே போகுது. அந்தந்த நாளுகளிலை அதுகளைப பற்றி ஆளாளுககு நிகழ்சியளைச் செய்து செய்தியளிலை வரப பண்ணினால் காணும் எண்டது தரனே நிலைப்பாடு. காணாமல ஆக்கப்பட்டவையைத் தேடியலையிற ஆக்களையும், காணிவிடுவிப்புப் போராட்டக்காறரையும் இதுக்குள்ள சேர்க்கேலாது. அதுகள் பாவங்கள் தொடர்ந்து விடாமல் ஒரு முடிவு கேட்டு நிக்குதுகள்.

'பெரியாக்கள்' அதைப்பற்றி ஒரு கதையும் இல்லை. அவைக்குச் சோலியள் கூடவல்லே? என்னைப் போலை உங்களைப்போலை அவையும் இருக்கேலுமோ? இந்தாவெண்டு மாகாணத் தேர்தல் வந்துட்டுது. ஆரோட ஆர் சேருறது? ஆரிலையிருந்து ஆர் பிரியிறது? பெரிய கதிரைக்கு ஆள் பிடிக்கிறது? அது... இதுவெண்டு எதிர்காலத்தைப பற்றி யோசிக்கிறதோடையும், இரகசியமான ராச தந்திரக் கதையளோடையும் அவையின்ர பொழுதுகள் போகுது. இப்போதைக்கு யோசிக்க கதைக்க வேறையொண்டும் இல்லைப்போலை.

• • • •

அரசியல் கதைக்கிறதெண்டிறது நானாக் கதைக்கிறேல்லை. கதைக்கப் பண்ணிக் கதைக்கிறது தான். மற்றும்படி எனக்கு உதுகளிலை வெறுப்புத்தான் பாருங்கோ. நல்லாப் பட்டுத் தெளிஞ்சிட்டன். ஆனால் சொல்ல வேண்டியதுகளைச் சொல்லத்தானே வேணும். அதுக்கும் வீட்டிலை பிரச்சினைதான். முந்தியும் கனதரம்



சொல்லியிருக்கிறன். என்ர குடும்பக்காரர் ஆருக்கும் ஒண்டும் சொல்லிப் போடாதையுங்கோ. கடும் பிரச்சனையாகிப் போகுடும். பிறகு வழக்குப் போட்டு அதுஇதுவெண்டு சிக்கலாகிப்போகுடும். சரி சொல்ல வந்தது என்னவெண்டா செப்ரெம்பர் மாசம் வருகுதல்லே? என்னே? அதுக்கென்னவோ? முக்கியமான மாதமல்லே. அதுதான் திலீபன் உண்ணா விரதமிருந்து தன்ர உயிரைக் கொடுத்து அகிம்சை தேசத்துக்குப் படிப்பிச்ச மாதமல்லே. உங்களைச் சொல்லிக் குற்றமில்லை அவங்கட தியாகத்தையும் அர்ப்பணிப்புகளையும் சொல்லிச் சொல்லியே பிளைப்பு நடத்திறவை. உதுகளை அப்பிடி மாத்திப்போட்டினம். இப்ப அதைப் பற்றிக் கவனமில்லாம இருக்கிறதுதான் பெரிய குற்றம். குற்றமில்லைத் துரோகம். நான் சொல்லுறது சரிதானே?

• • • •

நலலூர்த் திருவிழாக் கடையளுக்கு ஏலம் போடேக்கையெண்டாலும் நினைப்பு வந்திருக்க வேண்டாமோ? மாநகரக்காரருக்கு? அப்பகூட நினைப்புக்கு வரயில்லையோ? மாகாணத் தேர்தலுக்கு நாங்கள்தானே உடைஞ்ச நினைத்தூபியைக் கட்டினது எண்டு மேடையிலை முழங்கலாமெண்டுதானும் யோசிக்கயில்லை. கொஞ்சம் பிந்தி எண்டாலும் யோசிச்சது பிழையில்லை. ஆனால் திருவிழா முடிஞ்ச பிறகு எல்லோ கட்டப் போகினமாம். ஆயிரக் கணக்கிலை இல்லை. லச்சக் கணக்கிலை சனம் கூடப்போகுது திருவிழாவிலை. கோயிலுக்குப் போகுதோ இல்லையோ சுத்தியிருக்கிற ஐஸ்கிறீம் கடையளிலை சனம் அலைமோதத்தான் போகுது. ஐஸ்கிறீம் குடிக்கப் போறதுக்கு முன்னுக்கு, காலுக்கை கேப்பாரில்லாமல் நினைவுத்தூபி யின்ர அடிக்கட்டு மட்டும் கிடக்குது. அதைப் புதுப்பிச்சு ஒரு வரலாற்றைப் பதிவு செய்யிற வேலையை ஒருதருமே செய்யயில்லை. தீர்மானம் மட்டும் போட்டு அப்படியே விட்டாச்சுது. புலிக்குப் பிறகு தாங்கள்தான் அவையின்ர கொள்கையைக் காவிக்கொண்டு திரியுறம் எண்டு. இப்ப யாருமே அந்த அகிம்சையைக் கண்டுகொள்ளுறமாதிரி இல்லை.

"தூபியைக் கட்டுறது. புலியைப் புதுப்பிக்கிறது மாதிரியாப் போகுடும் எண்டு பயப்பிடுகினமோ? என்னவோ?" எண்டு பரமலிங்கண்ணை சொன்னதை ஆராயவேணும் பாருங்கோ.

"சிலவேளை திலீபன் தங்கடை நிர்வாக எல்லையைச் சேரயில்லை எண்டுதான் மாநகரக்காரர் கவனிக்கயில்லையோ?" எண்டு சின்னத்துரையர் கேட்கிறார். சின்னத்துரையர் தெளிவாத்தான் இருக்கிறார்போலை. இல்லையெண்டு சொல்லுறியளோ?

எது எப்பிடியோ எண்டு விடமுடியுமே? நல்லூர்க் கோயிலின்ரை வட கிழக்கு மூலையிலை திலீபன்ரை மேடையிருந்த இடத்திலையிருந்த நினைவுக் கல்லையாவது திரும்பவும் நடலாமல்லே? ஆர் செய்யிறது? செப்ரெம்பர்26 அண்டைக்குத் தேங்காயுடைச்சுக் கற்பூரம் கொழுத்துறதையும், நெடுமேற் ஸ்ராண்டிலை சுடரேத்துறதையும் பற்றி யோசிக்கவேணும் பாருங்கோ? இதுகளைப் பெரிசாக்கிச் சொல்லிப்போடாதையுங்கோ. நான் கக்கூஸ் கட்டுறதுக்கு அவங்களிட்டைப் பெமிசனுக்குப் போகவேணும். இழுத்தடிச்சுத் தராமவிட்டாலும் விட்டுடுவங்கள். ■



## பண்பாட்டின் மண்ணில்


பண்பாட்டின்
மண்ணில் இன்று
பதை பதைக்கும்
காட்சிகள்
வாள்வெட்டாய்
வன்முறையாய்
நாளும் செய்திகள்
நிறைத்தபடி
நாம் வாழ்வு
யார் குற்றம்?
எங்கே பிழை?
ஆராய்ச்சி செய்து
அறிக்கை விடும்
நேரம் இதுவல்ல
கோயில்களில் மட்டும்
திருவிழாக்கள்
கொண்டாடிப் பயன் என்ன
பண்பாட்டு
விழாக்களை நடத்திக்
கண்டதென்ன?
நேற்றைய காலத்தைச் சொல்லி
தப்பிவிடும் பலரிடமும்
இன்றைய காலத்தை,
மாற்றத்தை எதிர்கொள்ளும்
துணிவில்லை
வேறெதைச் சொல்ல....?

கவிதைகள்

புலோலியூர் வேல்நந்தன்

## வீதிகளில் விதியெழுதி

வீதிகளில்
விதியெழுதிக் கொல்லும்
காலத்திடம்
தோற்றுப் போய்
அழுகிறோம்
வாழ வேண்டிய வயதில்
எங்கள் குருத்தோலைகள்
தோரணங்களாகிட
கண்ணீர் அஞ்சலிகளில்
கனக்கிறது இதயம்
என்ன நம் தேசம்
ஓயாமல்
உயிர் பறிக்கும்
முதுமரமா?
என்றுதான்
எண்ணத் தோன்றுதய்யா...!



# ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய விளக்குகள் 21

1993ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து வெளியிட்டு வைக்கப்பட்ட விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள் பார்வை.

தொகுப்பு
செ.மகேஷ்

## ஆசிரியரும் வாண்மையும்

வாண்மை என்ற உயர்ந்த நிலையில் வைத்து எண்ணப்படும் தொழில்கள் எவை? ஆசிரியம் அவற்றுள் ஒன்றா? வாண்மைக்குரிய அடிப்படை அம்சங்கள் எவை? என்ற கேள்விகளுக்கு விளக்கம் தரும் வகையில், யாழ்ப்பாணம்-சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் அந்த நாள் ஆசிரியராக இருந்த திரு அ.சந்திரகுமார் விளக்கு சஞ்சிகையில் எழுதிய கட்டுரையை வாசகர்களின் கவனத்துக்குத் தருகின்றோம்.

இன்றைய நவீன உலகில் மக்கள் பல வகையான தொழில்களில் ஈடுபடுகின்றார்கள். சிக்கல் நிறைந்த இன்றைய சமூக அமைப்பில் மனிதன் ஒருவனின் சமூக மதிப்பு, பொருளாதார நிலை என்பவற்றில் அவன் செய்யும் தொழில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மனித நாகரிக வளர்ச்சியால் புதிய பல தொழில் துறைகள் உருவாகி, வளர்ச்சியடைந்துள்ளன. எண்ணிக்கை அதிகரிப்புடன் அவற்றிடையே உள்ள பண்பு வேறுபாடுகளும் தெளிவாகக் காணப்படுகின்றன. பல்கிப் பெருகியுள்ள தொழில்களுள் சில வா[illegible] மிகுந்தவை என்று சிறப்பாகக் [illegible]ிடப்படுகின்றன. வாண்மையினர் சமூ[illegible]ப்பு, பொருளாதார நிலை என்பவற்றில் மற்றைய தொழிலாளர்களைவிட மேன்மையுடையோராகக் கணிக்கப்படுகின்றனர்.

மத்திய கால ஐரோப்பாவில் பல்கலைக்கழகங்களின் வளர்ச்சியுடன் 'வாண்மை என்னும் எண்ணக்கரு உதயமானது. நூல்சார் கல்வியை இந்தப் பல்கலைக் கழகங்கள் வழங்க, தொழில் கல்வியைத் தொழில் கூடங்கள் வழங்கின. தொழிற்கூடங்களில் கற்று வெளியேறித் தொழில் புரிந்தோர் வாண்மையினர் என அழைக்கப்படவில்லை.

**வாண்மைத் தொழில்கள் யாவை?**

பல்வேறு அறிஞர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் பண்புகளைக் கொண்டுள்ளவை வாண்மைத் தொழில்களாகக் கருதப்பட்டன. ஆற்றப்படும் தொழிலானது இலாபமீட்டுதல் என்னும் நோக்குடன் அமையாது சமூகத்துக்குச் சேவையாற்றுதல் என்னும் நோக்கில் அமைந்ததாக இருத்தல்.

வாண்மையினரின் நடைமுறைகளைத் தீர்மானிப்பதற்கு நிறுவன அமைப்பும் நெறிப்படுத்தல் ஒழுக்கக் கோவையும் உருவாக்கப்பட்டிருத்தல். வாண்மைக்குரிய சிறப்பான அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி, நுட்பம் என்பவற்றைப் பெற்றிருத்தல்.

வாண்மைக்குரிய சிறப்பார்ந்த அறிவையும் பயிற்சியையும் பெற்றவர்களைத் தவிர்ந்த பிறரால் குறித்த வாண்மையை மேற்கொள்ளாது இருப்பதற்கான சட்டவரையறைகளைக் கொண்டிருத்தல்.

வாண்மையினர் தமது செயல்முறை முடிவுகளைத் தீர்மானிப்பதற்குச் சுதந்திரத்தையும், சுய கட்டுப்பாட்டையும் பெற்றிருத்தல்.

இவற்றின் அடிப்படையில் பார்[illegible]கும்போது மருத்துவம், பொறி[illegible]யியல், சட்டம், கணக்கியல், போன்றவை வாண்மையாகக் கணிக்கப்படுகின்றன.

**ஆசிரியம் என்பது...**

ஆசிரியத்தின் நிலை என்ன? இதை ஒரு வாண்மையாகக் கணிக்க முடியாதா? என்ற கேள்வி எழுகிறது. ஆசிரியம் என்பது உலகின் தொன்மையானதும், நவீனத்துவம் அடைந்து வருவதும், மிகப் பெரியதுமான ஒரு தொழிலாகும். இது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற பல அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வாண்மையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எமது நாட்டில் இது வாண்மைக்குரிய சில பண்புகளைக் கொண்டிருப்பினும், பல பண்புகளைக் கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்கலாம். எனவே ஆசிரியம் எமது நாட்டில் முழுமையான ஒரு வாண்மையாகக் கணிக்கப்படுவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வோம்.

வைத்தியத் தொழிலைப்போல் தன்னலமற்ற ஓர் உயர்ந்த சமூகசேவையை ஆசிரியம் கொண்டிருப்பினும் அது ஆசிரியர்களின் நடைமுறைகளைத் தீர்மானிப்பதற்கு நிறுவன அமைப்பையும், நெறிப்படுத்தல் ஒழுக்கக் கோவையையும் கொண்டிருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. எனவே ஆசிரியம் ஒரு வாண்மையாகக் கணிக்கப்படுவதற்கு, ஆசிரியர்களின் நடைமுறையைத் தீர்மானிப்பதற்கு நிறுவன அமைப்பும், நெறிப்படுத்தல் ஒழுக்கக்கோவையும் உருவாக்கப்படுதல் அவசியமாகும்.

தாய்மொழி மூலக்கல்வி, இலவசக்கல்வி, பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றல் என்பவற்றால் எல்லோருக்கும் கல்வி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவாகக் கல்வி கற்கும் மாணவர்களின் தொகை அதிகரிக்க அதற்கு ஏற்றால்போல் ஆசிரியர்களின் தொகையையும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் ஆசிரியர்களின் கல்வீ அறிவையும், பயிற்சியையும் உயர்ந்த தரத்தில் பேணுவதில் பாதிப்பு ஏற்பட்டது. ஆசிரியத் தொழிலில் கிடைக்கும் குறைவிீன ஊதியம், பல சிறப்பார்ந்த அறிவு பெற்றவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடாது விடுவதற்கான முதன்மைக் காரணியாக அமைகின்றது. ஆசிரியத் தொழிலில் சிறந்த அறிவு பெற்றவர்கள் வேறு தொழில்களை அல்லது கல்வி நிர்வாக சேவையை நாடிச் செல்கின்றனர். எனவே சிறந்த அறிவாற்றல் பெற்றவர்களை ஆசிரியத் தொழிலில் சேர்த்து, அவர்களை அந்தத் தொழிலில் நிலைத்து இருக்கச் செய்வதற்குச் சம்பளத்திட்டத்தில் தகுந்த மாற்றம் செய்யப்படல் வேண்டும். அத்துடன் ஆசிரியர்கள் தமது அறிவை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

> எமது நாட்டில் ஆசிரியர்கள் தமது செயல்முறை முடிவுகளைத் தீர்மானிப்பதற்குச் சுதந்திரத்தைக் கொண்டிருக்கிறார்களா என்பது கேள்விக் குறியே! ஆசிரியம் ஒரு வாண்மையாகக் குறிக்கப்பட வேண்டுமாயின் தமது செயல்முறை முடிவுகளைத் தீர்மானிப்பதற்கு ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும்.

**ஆசிரியர்களுக்கான பயிற்சிகள்**

ஆசிரியர் ஒருவர் கற்பிக்கத் தொடங்குவதற்குமுன் ஆசிரியப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்னும் சிந்தனை உருவாகி அதைச் செயற்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இன்று கல்விக் கல்லூரிகள் திறக்கப்பட்டு அவற்றில் பயிற்சி வழங்கப்பட்டு பின்னர் அவர்களை ஆசிரிய சேவையில் சேர்க்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மரபு ரீதியாகப் பயிற்சிகளை வழங்கி வந்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளும் பயிற்சியை வழங்கி வருகின்றன. இவற்றுக்குப் புறம்பாகத் தேசிய கல்வி நிறுவனம், தொலைக்கல்வி மூலம் பரந்த ரீதியில் பயிற்சி வழங்கி வருகின்றது. பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முழுச் சம்பளத்துடனான ஒருவருட லீவு திரும்பவும் வழங்கப்பட்டமை, பயிற்சிக்கு நிபந்தனையாக இருந்த மூன்று வருட சேவை நீடிக்கப்பட்டமை, தேசிய கல்வி நிறுவனம் மூலம் பெருமளவில் பயிற்சி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை என்பவை மூலம் பயிற்சி வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான ஆசிரியர்களுக்கான பயிற்சி வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டாலும் பல ஆசிரியர்க்ள் பயிற்சி பெறாமலேயே கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். இந்த நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும். பயிற்சி ஆசிரியர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை மீள் பயிற்சி வழங்குதல் எனும் நவீன சிந்தனையையும் கருத்தில் கொண்டு ஆசிரியர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கல்விக் கல்லூரிகள் மூலம் பயிற்சி வழங்கும் செயற்பாடு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் திருப்திகரமாகச் செயற்படுத்தப்படல் வேண்டும்.



இந்த நாட்டில் ஆசிரியர்கள் தமது செயல்முறை முடிவுகளைத் தீர்மானிப்பதற்குச் சுதந்திரத்தைக் கொண்டிருக்கிறார்களா? என்பது கேள்விக் குறியே! ஆசிரியம் ஒரு வாண்மையாகக் குறிக்கப்பட வேண்டுமாயின் தமது செயல்முறை முடிவுகளைத் தீர்மானிப்பதற்கு ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். இது ஆசிரியர்களுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்குவதன்று. மாறாக நோக்குடன் கூடிய சுதந்திரத்தை வழங்குவது ஆகும். இதன் மூலம் ஆசிரியர்களிடத்தே எழும் ஆற்றல், புதுமை படைக்கும் ஆற்றல் என்பவற்றை வளர்த்தெடுக்க முடியும். எல்லா வாண்மையினரிடமும் காணப்படும் சுயகட்டுப்பாடு என்பதும் ஆசிரியரிடமும் வேண்டப்படும் ஓர் இயல்பாகும்.

**ஆசிரியத் தொழில் பற்றி எதிர்வினைகள்**

ஒரு வாண்மைக்கான சிறப்பார்ந்த அறிவும் பயிற்சியும் பெறாதோர் அந்த வாண்மையை மேற்கொள்ளாது இருப்பதற்குச் சட்ட வரையறைவுகளைக் கொண்டிருப்பது வாண்மையின் இயல்பாகும். இதுபோன்ற ஒரு நடவடிக்கையை ஆசிரியத்திலும் மேற்கொள்ளலாமா? ஆசிரியர்களுக்கான சிறப்பார்ந்த அறிவும், பயிற்சியும் பெற்றுச் சட்டப்படி ஆசிரியர்களாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் மத்திரமே ஆசிரியத் தொழிலில் ஈடுபடலாம். மற்றையோர் ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவது சட்டத்தின் மூலம் தடை செய்யப்படவேண்டும் என்பது பல எதிர் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்பதால் இது பற்றி நன்கு ஆராயப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு ஆசிரியம் ஒரு வாண்மையாகக் கணிக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாதது ஆகும். வாண்மை என்பதன் பொருள் மிகவும் அர்த்தம் மிக்கது என்பதையும் அதன் இயங்குநிலை இயல்புகள் மக்களால் மதிப்புடன் நோக்கப்படுபவை என்பதையும் இந்தக் கட்டுரை தெளிவுபடுத்துகிறது. இந்த உண்மையைக் கருத்தில் கொண்டு விளக்கு சஞ்சிகை அன்று, இதைப் பதிப்பித்திருந்தது.

(தொடரும்)



கவிதை

ஈழ நல்லூர் கண்ணதாசன்

# ஒற்றைப் புள்ளியினது தவிப்பு

சிந்தனையிலேயே கரைந்து முடிகிறது
காலக் கரைசல்
ஒரு கைவிடப்பட்ட காதலனாய் அன்றி
காதலியாய்
தனிமை தரும் நிராதரவு மனோநிலை
எதிர்வரும் மனிதரெல்லாம்
விழிகளுக்குப் பதிலாக
ஈட்டிகளைச் செருகிக்கொண்டு
உலவித் திரிவதாய்த் தெரிகிறது எனக்கு

நானும் அன்பெனும் அமுதை என்னில் நிரப்பி
எங்கும் ஏங்கித் திரிகிறேன்
எவருமெனைக் கண்டுகொள்வதாயில்லை
மனதை வருடும் பூஞ் சிறகாய்

ஆக்கி வைத்திருக்கிறேன் எனது நாக்கை
எவருமதை மதிப்பதில்லை
ஒரே தோரணையிலான
நீண்ட, நெடிய வாழ்க்கைப் பயணத்தில்
சுயம் தொலைதல் சாத்தியமே-எனினும்
எதற்காகத் தொலைகின்றோமென்பதில் தான்
சுகமும், துக்கமுமிருக்கிறது

காத்திருக்கிறேன் ஒற்றைப் புள்ளியாய்
முற்றுப் புள்ளியாய் அல்ல,
உயிரெழுத்தோடு இணைந்து
உயிர் மெய்யெழுத்தொன்றை உருவாக்கும்
தவிப்புடைய மெய்யெழுத்தின்
மேற்புள்ளியாய் ■

# புதுப் புதிர் இது...?

சிரிப்பு

செ.செல்வராஜா

பரமசிவம் சொன்ன அவரது பக்கத்து வீட்டுக்காரின் கதைதான் இது. பக்கத்து வீடு என்ன, பக்கத்து வீடு? உண்மையில் மிஸ்ஸிஸ் பரமசிவத்தின் சிறிய தாயாரான தாளம்பூச் சித்தியின் வீடுதான் பக்கத்து வீடு. சித்தியின் கணவர் நடனசிகாமணி. ஆடியபாதம் வீதிக்கு ஆடியபாதம் வீதி எனப் பெயர்வைத்து, எக்காலமும் அதில் ஆடி ஆடியே வாகனாதிகள் பயணிப்பதுபோல இவருக்கும் நடனசிகாமணி.

கையில் காசு இல்லாவிட்டால் நல்ல மனுசன், காசு இருந்துவிட்டால் 'பொல்லா' மனுசன்.

'பொல்' அல்லது கல்லோயாச் சாராயம் எனப்படுகின்ற 'கல்' போட்டுவிட்டு வந்தால், என்ன செய்வதென்று தெரியாது தடுமாறுவார். நடனமும் ஆடுவார். மனைவியின் அடியிலிருந்து தப்புவதற்குக் காலை உயர்த்தி, அங்குமிங்கும் தடுமாறி ஓடுவதைத்தான் நான் நடனம் என்கின்றேன். அதனாலேயோ என்னவோ பிற்பாடும் அவருக்கு நடனசிகாமணி பொருந்தியே போயிற்று. அவர் மனைவியிடம் அடிவாங்கி இயலாமற் போனால் "உன்னைப்போல ஒரு பெண் சாதியை இந்த உலகத்தில் நான் காணவில்லை" என்று திட்டுவார். அதற்குத் திருமதி நடனசிகாமணி எவ்வாறு 'பொருள் கோடல்' செய்கிறாரோ தெரியாது. "அப்ப பல பெண்சாதிகளை உனக்குத் தெரியும்" என்கின்றதாக அவர் அர்த்தப்படுத்திக் கொண்டிருக்கலாம். அதற்கு மேலதிக போனஸாகவும் அவருக்கு அடிதான் விழும்.



> கையில் காசு இல்லாவிட்டால் நல்ல மனுசன். காசு இருந்துவிட்டால் ' பொல்லா' மனுசன், 'பொல்' அல்லது கல்லோயா சாராயம் எனப்படுகின்ற 'கல்' போட்டுவிட்டு வந்தால் என் செய்வதென்று தெரியாது தடுமாறுவார், நடனமும் ஆடுவார்,

●●●

தொடக்ககாலத்தில் 'பொத் பொத்' எனச் சத்தம் கேட்கும். அவவுக்கு இவர் அடிக்கிறாரா? அல்லது அவர்தான் அவாவுக்குப் போட்டுத் தாக்குகிறாரா? எனப் புரியாத புதிராக இருந்தது. பின்னாளில் அவர் அடிவாங்குகிறார் என்பதே உறுதி செய்யப்பட்டது. அதை அறிந்து கொள்ளவே பல காலம் எடுத்தது. அவ்வளவு நாசுக்காகத் தாக்குதல் மேற்கொள்ளப்படும். காயங்களைப் பார்த்தே கண்டுகொண்டோம். அவர் குடித்து, விழுந்து காயம் பட்டதாகக் கூறப்பட்டாலும், அது அடிகாயம் என்பது உறுதி செய்யப்பட்டது தளும்புகளிலிருந்தே.

நடனத்தார், ஏன் குடிக்கிறார் எப்படிக் குடிக்கிறார் என்பதெல்லாம் தனி ஓர் அத்தியாயத்தில் ஆராயப்பட வேண்டியது. அது பற்றிப் பின்னர் பார்ப்போம். ஆனால் கடந்த ஆடிச் செவ்வாயன்று ஊரே அல்லோல கல்லோலப்பட்டுவிட்டது. வேறொன்றுமில்லை நடனசிகாமணி தவறான முடிவெடுத்துத் தனது உயிரை மாய்க்கும் முயற்சியில் ஈடுபட்டதே அதற்குக் காரணம்!



●●●

வெளிநாட்டிலிருக்கின்ற பிள்ளைகள் அனுப்பிய காசில் ஒரு கொஞ்சக் காசு. அவர் குடிப்பதற்கு வழங்கப்படாமையே விரத நாளில் பிரச்சினைக்குக் காரணமாயிற்று. அந்த மனுசன் ஓர் ஆறு முழ நீளமுள்ளதும், யுனிசெப் நிறுவனம் அகதிகள் உடுப்புத் தோய்த்துக் காயவிடுவதற்காக வழங்குகின்ற விரல் தடிப்பமுள்ளது போன்ற நைலோன் கயிற்றை எடுத்துக்கொண்டு தூக்கில் தொங்குவதற்காக ஓடிப் போகத்தான் களேபரமானது அந்தக் குடியிருப்பு.

மனுசன் கயிற்றோடு, ஒரு ஸ்ரூலையுமல்லவா எடுத்துச் சென்றார். அப்போது அங்குள்ளவர்களுக்கு அவர் தவறான முடிவெடுத்துத் தனது உயிரை மாய்க்கின்ற முயற்சியில் ஈடுபடப் போகின்றார் என்பது புரிந்துவிட்டது. தாளம்பூச் சித்தியின் சகோதரங்களின் பிள்ளைகள் ஒன்றும் அதுபற்றி அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் நடனசிகாமணியின் சகோதரர்களின் பிள்ளைகள் ஒரு கத்துக் கத்திவிட்டுதுகள். அதுவும் அவர் மரத்துக்குக் கீழே ஸ்ரூலை வைத்து, அதில் ஏறி நின்று கொப்பிலே கயிற்றை மாட்டும்போதுதான் அழுது குளறத் தொடங்கினர்.

பரமசிவமும் ஓடிப்போய்ப் பார்த்தார். போகும்போதே திருமதி பரமசிவம், "அங்கை ஒன்றும் வாய் கொடுக்காமல், கதைக்காமல் கொள்ளமால் இருந்துட்டு வாருங்கோ" என்று கட்டளை பிறப்பித்துவிட்டதால் அதை சிரமேற்கொண்டு சென்று, பார்த்து வந்திருந்தார். ஆனாலும் சில சந்தேகங்கள் அவர் சிந்தையைக் குடைந்து கொண்டேயிருந்தன.

●●●

ஊர்ப்பிள்ளைகள் ஊஞ்சல் கட்டி ஆடுகின்ற ஓரளவு உயரமான வேப்பமரம் இருக்க அதற்கு அருகேயிருந்த, நாட்டி மூன்று, நான்கு ஆண்டுகளேயான அந்த ஈரப் பலா மரத்தை ஏன் அவர் தூக்குப் போட்டுச் சாவதற்குத் தேர்ந்தெடுத்தார் என்பது அதில் முதலாவது.

அந்த ஈரப்பலா மரத்தின் கிளைகள் நிலத்தைத் தொடுகின்ற அளவு தாழ்ந்திருக்க, அதில் தூக்குப் போட்டுச் சாவது எப்படிச் சாத்தியம்? அப்படியிருக்க 'ஸ்ரூலையும்' உடன் கொண்டுசென்றார் என்பது அடுத்த சந்தேகம். நிலத்தில் நின்றவாறே, கயிற்றை மாட்டக் கூடிய உயரத்திலேயே அதன் கிளைகள் யாவும் இருந்தும், ஏன் அந்த ஸ்ரூலை எடுத்துச்சென்றார்?

பரமசிவத்துக்கு எல்லாமே புரியாத புதிராகவே இருந்தது. நிலத்தில் நின்று மெதுவாகப் பிடித்து அந்தக் கிளைகளை இழுத்தால். அவை முழங்கால் அளவுக்குப் பதிந்துவிடும் என்பது குழந்தைப் பிள்ளைகளுக்கும் தெரியும். அல்லாமலும், அந்த ஈரப்பலா மரத்தின் கிளைகள் மிகவும் மெலிதாக இருப்பதால், தூக்கைப்போட்டாலும் இவருடைய பாரம் தாங்காமல் அது முறிந்து விழவும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு முறிந்து விழுந்தால் சிலவேலை சாவு ஏற்படலாம்.

வேப்பமரத்தைத் தவிர்த்து இந்த ஈரப்பலா மரத்தை நடனசிகாமணி தனது உயிரை மாய்க்கும் முயற்சிக்குத் தேர்ந்தெடுத்த காரணம் புரியாமல், தற்போதுவரை சிறுபிள்ளை மாதிரி யோசித்துக்கொண்டே இருக்கிறார் பரமசிவம். உங்களுக்கு இது புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்...! ■



சிரிப்பு

# ஓட்டம்...

மிருசுவில் தமிழ்தாசன்

"எப்படியாவது இன்றிரவு கோஷ்டி பார்க்கத் தான் வேண்டும்"
இது சிவப்பி என்னும் சிவப்பிரகாசத்தின் உறுதியான முடிவு. பனையடிக்குளத்து அம்மன் கோயிலில் இன்று பத்தாம் திருவிழாவாம். கோஷ்டி என்றால், சும்மா உள்ளூர்ச் சாதாரண கோஷ்டியல்ல. பல இலட்சங்கள் செலவு பண்ணிக் கொழும்பிலிருந்து சிறப்பாக அழைக்கப்பட்ட இசைக்குழு அது. இதைக் கேள்விப்பட்ட நேரம்முதல் பம்பரமாகச் சுழன்றடித்துக் கொண்டிருந்தான் சிவப்பி.
பெண் பாடகிகளின் பாடல்களைவிட அவர்களின் ஆட்டங்களையும், சேட்டைகளையும் வீணி வழிந்தோடப் பார்த்து, இரசிப்பதில் கொள்ளை ஆசை அவனுக்கு. ஒரு தடவை இவன் இசைக்குழுப் பாடகிகளின் ஆடல், பாடல்களை வீணி ஒழுக இரசித்துக் கொண்டிருக்கும் சமயம், பக்கத்தில் இவனருகில் அமர்ந்திருந்த கணேசன் ஒருபுடிப் புழுதி மண்ணை அள்ளிச் சிவப்பியின் வாய்க்குள் போட்டும் அவன் எதுவித சலனங்களுக்கும் ஆளாகாமல் நிதானமாக இருந்து இரசித்துக் கொண்டிருந்தானாம்!
இசையில் மட்டுமல்ல அதை இசைக்கும் இளம் சிட்டுக்களின் அழகிலும் அதிகமாக மயங்கிவிடுவான். அப்படிப்பட்ட சிவப்பி இன்று இசைக்குழு பார்க்கப் போகாது விடுவானா! கண்டிப்பாகப் போயே ஆவான்.

O O O O

சிவப்பிக்கு வயது எப்படியும் நாற்பதாவது தேறும். ஆனால் திருமணம் செய்வதற்குத்தான் இன்னமும் எம்பெருமான் திருவருள் பாலிக்கவில்லை. எப்படிப் பாலிப்பார்? வாய் நிறையப் பற்கள்! பற்களா அவை! பாறாங்கற்கள். முகம் நிறையத் தாடி, மீசை. ஸ்ரெப்பீஸ் புல்வெளியாக மண்டிக்கிடக்க, கன்னங்கரேல் மேனியுடன் இருந்துகொண்டு "நானும் ஓர் ஆண்மகன் தான். என்னை யாராவது திருமணம் செய்யுங்கள்" என்று பெண்களைப் பார்த்துக் கேட்பதற்கு அவனுக்கு எத்துணை நெஞ்சழுத்தம் வேண்டும். கண்ணில்லாதவள்கூட அவனைத் திருமணம் செய்யச் சம்மதிக்கவே மாட்டாள் என்பது ஊர், உலகறிந்த சமாச்சாரம். எனவே இந்தச் சிவப்பி என்னும் கறுப்புச் சீவனுக்குத் திருமண பாக்கியம் அரிது என்றே சாஸ்திரபலன் கூறுகின்றது. சரி! இருந்துவிட்டுப் போகட்டும். பெண்களைத் திருமணம் செய்ய முடியாவிட்டாலும் அவர்களின் லாவண்யத்தைப் பார்த்து இரசிப்பதற்கு யாரும் தடைபோட முடியாதல்லவா. அதுவும் இசைக் குழுவில் பாடி, ஆடி இரசிகர்களை விதம் விதமாகச் சுண்டியிழுக்கும் அந்தச் சுந்தரிகளின் அழகையும் அவர்களின் துடிப்பான சேட்டைகளையும் வீணி ஒழுகப் பார்த்துக் கொண்டிருப்பதில் சிவப்பிக்கு ஏதோவொரு சுகானுபவம் கிடைக்கின்றது போலும். அதற்காகவே இசைக்குழு பார்ப்பான்.

O O O O


பொழுதும் இருட்டிக்கொண்டு வந்தது. இப்போது புறப்பட்டால்தான் நாலுகிலோ மீற்றர் தூரத்தைக் கால் நடையாக நடந்து அம்மன் கோயிலை அடையலாம். அடைந்தால் மட்டும் போதுமா! ஓடிச்சென்று அங்கே சபையிலிருப்பவர்களை இடித்துத்தள்ளி, முண்டியடித்து முன்வரிசையில் போய் அமர்ந்து கொள்ள வேண்டுமல்லவா! சைக்கிளும் அவனிடமில்லை. சரி ஒரு பேச்சுக்கு இருக்கின்றது என்று வைத்துக் கொண்டாலும் அவனால் அதை ஓட்ட முடியாதே! அதையும் தான் ஒருமுறை பழகி ஓட்டுவோம் என்று அவன் எத்தனை பாடுகள் பட்டான். இருந்தும் அது எட்டாக்கனியாகிவிட்டது. கிணற்றடிக் கிளியனின் சைக்கிளை ஒரு தடவை கெஞ்சி மன்றாடி இரவல் வாங்கி ஓட்டித்தான் பார்த்தான். முடியவேயில்லை. கல்றோட்டில் சைக்கிளுடன் முகங்குப்புற வீழ்ந்து படக்கூடாத இடத்திலெல்லாம் அடிபட்டு முகத்தில் மட்டும் சிறுகாயம்கூட இல்லாது தப்பித்துக்கொண்டான். பல்வரிசையில் பலமான அடி வீழ்ந்தும் எதுவித சேதாரங்களுமில்லாது தப்பிக்கொண்ட பற்கள் இனி எப்போதும் உடையப்போவதில்லை. யானைக்குத் தந்தம் எவ்வளவு பெறுமதியோ சிவப்பிக்கும் அவனுடைய பல்வரிசை ஒரு காலத்தில் சாவின் பின்பு ஏலத்தில் நல்ல விலை போகவும் வாய்ப்புண்டு. எது எப்படியோ! இப்போதெல்லாம் சிவப்பி எங்கே போனாலும் கால்கோச்சிதான்.
"கடவுளே! நல்லாய் இருண்டும் போச்சுது இனி உந்த சனப்புழக்கம் குறைஞ்ச காட்டுப்பத்தைப் பாதையாலை கோயிலுக்குப் போறதெண்டால்...!"
மனதுக்குள் பயந்தான் சிவப்பி. அவன் பயந்ததுபோல் அந்த அரை இருளில் ஏதோ ஓர் உருவம் தெரிந்தது. அது மனித உருவமா! பேயா! அல்லது ஏதாவது மிருகமா! எதையும் தீர்மானிக்க முடியவில்லை.
"உவடமெல்லாம் பத்தையள் வழிய கள்ளர் எண்டு மனேச்சர் மயிலரும் சொன்னவர் எல்லே!"
இது நினைவுக்கு வந்ததும் நடையின் வேகத்தைச் சற்று அதிகரித்தான்.
"பேய் நில்லடா! ஆரடா நீ!"
கேட்டது மனிதக் குரலே. அப்படியென்றால் இவன் திருடன் தான் என மனம் சொல்லிக்கொள்ள இப்போது நடை ஓட்டமாகப் பரிணாமம் பெற்றது.

அவன் நினைத்ததுபோல் அந்த மனிதன் திருடன் தான் என்பது உண்மையே! சிவப்பி ஓடினான்... ஓடினான்... பற்றைக் காட்டின் ஓரத்துக்கே ஓடினான். அவன் ஓடிய இந்த ஓட்டத்தை ஓர் ஓட்டப் போட்டியில் மைல் ஓட்டமாகவே அல்லது மரதன் ஓட்டமாகவோ ஓடியிருந்திருப்பானாகில் முதற் பரிசும் சம்பியனும் அவனுக்குக் கிடைத்தேயிருந்திருக்கும். அப்படி ஓர் ஓட்டம்! இருந்தும் கண்டது என்ன! துரத்தி வந்தவன், சிவப்பியின் கழுத்தில் உடும்புப்பிடியாக இரும்புப்பிடியைப் பிடித்து கழுத்தை நெரித்தான்.
"ஏன்டா ஓடினனி!"
மீண்டும் அதே மனிதன் பயமுறுத்தும் தோரணையில் கர்ச்சித்தான்.
"சும்மா!" எச்சிலை விழுங்கியபடி சமாளித்தான் சிவப்பி.
"என்னடா பொக்கெற்றிலை"
கேட்டபடி சிவப்பியின் சட்டைப்பையைத் துலாவத் தொடங்கினான். ஒரு பத்து ரூபா நாணயக்குற்றி! கூடவே இரண்டு பீடித் துண்டுகள்!
"எடே! உதை வைச்சுக் கொண்டே உந்த ஓட்டம் ஓடினனி! ஏன்ரா என்னை அலைக்கழிச்சனி!"
கோபத்தால் கத்தியவன் பத்துக் கிலோவில் ஒரு குத்துவிட்டான் சிவப்பியின் முகத்தில். சன்மார்க் பப்படமாக மாறிய முகம் சிவப்பியை இனம் காட்ட முடியாதளவுக்குக் காணப்பட்டது. மீண்டும் ஆவேசத்துடன் ஒரு குத்து! நல்ல வேளை! அதிர்ஷ்டவசமாக அது அவுட்.
"அடிக்காதேங்கோ அண்ணை! நான் ஏன் ஓடினனான் எண்டு சொல்லுறன்"
கெஞ்சினான் சிவப்பி
"அது அண்ணை! நான் நினைச்சது என்னெண்டால் நான் சேட்டுக் கை மடிப்பிலை ஒளிச்சு வைச்சிருக்கிற ஆயிரம் ரூபாயைக் கண்டிட்டுத்தான் என்னைக் கலைக்கிறீங்களாக்குமெண்டு நினைச்சுத்தான் பயத்திலை ஓடினனான்."
"நீ பொய் சொல்லுறாய்! எங்கை காட்டு பாப்பம்"
தாடிக்கார முரடனும் விடுவதாயில்லை.
மளமளவெனத் தனது சேர்ட்டின் கை மடிப்பை விரித்தான் சிவப்பி. புத்தம் புதிய ஆயிரம் ரூபா நோட்டொன்று தரையில் வீழ்ந்தது. மகிழ்ச்சியுடன் அதை எடுத்துக்கொண்டு மெல்ல நடந்தான் முரடன். சிவப்பியும் மெல்ல நடந்தான். திருவிழாவுக்கல்ல. தன்னுடைய முட்டாள் தனத்தை எண்ணி அழுதபடி வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தான்.



கவிதை

டேட.த.எட்வின்



# குடும்பம்

குதூகல மானநல் குடும்பமே அன்பெனும்
மார்க்கத்தின் கோயில் – அந்த
குதூகல மாவது குடும்பம் என்கின்ற
சொர்க்கத்தின் வாயில்
குதூகலம் என்பது இல்லை குடும்பம்
பெறுகின்ற வருவாயில் – துன்பம்
எதுவாகி லும் ஏற்கின் சிக்குண்டு களிக்கும்
குதூகலம் எனும் வலையில்

இன்பம், மகிழ்ச்சி, காதல் பாசம்
ஆசை கொண்டதே – ஒரு
துன்பம் அற்றநல் தூய குதூகலக்
குடும்பம் என்பதே
பண்பும் பணிவும் பயனுள்ள செயலும்
ரிவும் உள்ளதே – உண்மை
அன்பும் அறமும் தியாகமுமே நல்ல
டும்பம் எனச் சொல்வதே

ருவர் சொல்வதை ஒருவர் கேட்டு
தன்படி நடந்து – மற்
றொருவர் தவறினை மற்றவர் சகித்து
அத்தவறை மறந்து
இருவர், மூவர், இன்னும் பலரும் நாம்
ருவரென நினைந்து– யாவரும்
ருவராய் மாறின் மகிழ்வுறும் நல்லதோர்
டும்பமாய் அமைந்து

டுக்கண் ஆயிரம் அடுக்காய் வரினும்
ன்புற்ற மனம்களித்த – துன்பம்
ாடுக்கும் பலவகை கொடுமைகள் வரினும்
ம் கொண் டதையழித்து
டுக்கும் தீய சக்திகள் யாவும்
ணிவுகொண் டேயொழித்து – தீமை
க்கும் தைரியத் தோடே வாழும்
ம்பம் வரும்.செழித்து

# சுற்றுலாத்துறையில் சுவடு பதிக்க முனையும் மன்னார்!




கட்டுரை

ஸ்டோஸ்வாமி

> மாதோட்டம் என்னும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற துறைமுகத்தை கொண்டிருக்கும் மன்னார், முத்துக்குளிப்பு நடவடிக்கைக்கும் பெயர் போன பிரதேச மாகும். முத்தரிப்புத் துறையில் காணப்படும் சிதிலமடைந்தடொறிக் கோட்டை, பிரதேசத்தின் பெருமையைபறை சாற்றுவதுடன், சுற்றுலாவிகளையும் கவர்கிறது.

மன்னார் மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. இதன் ஒருகட்டமாக இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனமும், கனேடிய உலக பல்கலைக்கழகமும் இணைந்து நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. மன்னாரில் உள்ள சுற்றுலாத் தலங்களை அடையாளம் கண்டு அபிவிருத்தி செய்வதன் மூலமும், சுற்றுலாவிகளை மன்னாரை நோக்கி ஈர்க்கச் செய்வதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காகவும், சுற்றுலாவிகளுக்கான விடுதி வசதிகளைஅபிவிருத்தி செய்வதன் மூலமாக விருந்தோம்பல் துறைசார்ந்த வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தவும் இந்த திட்டமிடலில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.





மன்னாரில் சுற்றுலாத் துறையின் போட்டித்தன்மையை மேம்படுத்துதல் (எம்.ஐ.சி) என்னும்தொனிப் பொருளில்சுற்றுலாத்துறை சார்ந்து தொழிற்படக்கூடிய தரப்புக்கள் அண்மையில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த பன்னாட்மடு நாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் மாநாடு ஒன்றைக் கூட்டியிருந்தன. சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகாரங்க ளுக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்க, இலங்கை விடுதிகள் சங்கத்தின் தலை வரான சனத் உக்வத்த, கனடிய உலகப் பல்கலைக்கழகத்தின் இலங்கைப் பணிப்பாளர் எஸ்தர் மிக்கின் றொஷ் மற்றும் இலங்கை தேசிய வர்த்தக சம்மேளன தலைவர் சுஜீவசமர வீர ஆகியோர் அதில் பங்கேற்றிருந்தனர்.

'எம்.ஐ.சி.' என்று குறிப்பிடப்படும் இந்த முன்னெடுப்பு.மேற்படியான ஒரு திட்டத்தை பிலிப்பைன்ஸ் நாட்டின் மனிலா நகரத்திலுள்ள போகொல் பிரதேசத்தில் ஏலவே நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டதை அடிப்படையாகக்கொண்டு, அது தொடர்பான களப்பயணத்தின் பின்பே இது முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. அத்துடன் உள்ளூருக்குப் பொருத்தமான வகையில் மாற்றங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் வடமேற்குக் கரைப்பகுதியில் பெருநிலப்பரப்பையும் தீவையும் கொண்டிருக்கும் மன்னார் மாவட்டம், பெற்றோலிய வளம் காரணமாக அறியப்பட்ட அளவுக்கு சுற்றுலாத் துறையில் அறியப்படவில்லை. எனினும் ஆன்மீகச் சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் சார் சுற்றுலாவுக்குமான அடிப்படைகளை கொண்டிருக்கிறது.

எனினும் அவை சுற்றுலாவிகளைக் கவரும் தன்மையானத் தக்க வைக்க வேண்டிய தேவையும் அவை தொடர்பிலான தகவல்கள் உல்லாசப் பிரயாணிகளை சென்றடைய வேண்டிய தேவையும் இருக்கிறது.

சுற்றுலாவுக்கான தயார்ப்படுத்தல் நிகழ்ச்சி நிரலில் மன்னார் மாவட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. குறிப்பாகப் பிறமாவட்டங்களிலிருந்து மன்னார் மாவட்டத்தைச் சென்றடையும் வீதிகள் மற்றும் உள்ளூர் வீதிகள் என்பன சீரமைக்கப்பட இருக்கின்றன. வீதிவலையமைப்பில் மாத்திரமல்லாது, நீர் மற்றும் மின்சாரவசதிகள் தொடர்பிலும் வான் வழிப் பயண வசதிகள் பற்றியும் ஆராயப்பட்டிருக்கிறது.

### ஆன்மிகச் சுற்றுலாத் தலங்கள்!

நாட்டின் சகலபாகங்களிலிருந்தும் இன, மத வேறுபாடின்றி மக்களை ஈர்க்கும் மடுத் தேவாலயம், தேவாரப்பாடல் பாடப்பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரம் என்பன பழமை வாய்ந்த ஆன்மிகத் தலங்களாகக் காணப்படுவதுடன் வருடாவருடம் பெருமளவுமக்கள் வந்து செல்லும் இடமாகவும் விளங்குகின்றன.

இதைவிடவேறு றோமன் கத்தோலிக்க மதத்துடன் தொடர்புடைய ஆன்மீகச்சுற்றுலாவுக்கான இடங்களும் மன்னாரில் உண்டு. அண்மையில் மடுப்பிரதேசம் புனிதபிரதேசமாக அறிவிக்கப்பட்டமையும் இங்குகுறிப்பிடத்தக்கது.

### சுற்றுச்சூழல் சார் சுற்றுலாத்தலங்கள்!

மன்னார் மாவட்டநெற்செய்கைக்கானபிரதான நீர்ப்பாசனக் குளமாக விளங்கும் கட்டுக்கரைக் குளம், குஞ்சுக்குளம் பகுதியில் காணப்படும் தொங்குபாலம்,அதை அண்மித்த தேக்கம், வலசைப் பறவைகளின் நடமாட்டத்தை அவதானிக்கக்கூடியபறவைகள் சரணாலயப்பகுதி, அருவி ஆறு என்பவற்றுடன் கண்டல் தாவரம் தொடர்பானபிரதேசங்களும் உண்டு.

### வரலாற்றுப் பிரசித்திபெற்ற இடங்கள்!

மாதோட்டம் என்னும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற துறைமுகத்தைக் கொண்டிருக்கும் மன்னார், முத்துக்குளிப்பு நடவடிக்கைக்கும் பெயர் போனபிரதேசமாகும். முத்தரிப்புத்துறையில் காணப்படும் சிதிலமடைந்த டொறிக் கோட்டை, பிரதேசத்தின் பெருமையைப் பறைசாற்றுவதுடன், சுற்றுலாவிகளையும் கவர்கிறது. அண்மையில் இந்தக் கோட்டை இலங்கைத் தபால் திணைக்களத்தின் முத்திரையிலும் இடம்பிடித்திருந்தது.

இதைவிட, ஆதாம் பாலம் அல்லது இராமர் பாலம் என்றுஅழைக்கப்படும் மண் தீடைகளும் உல்லாசப் பயணிகளுக்கு வியப்பூட்டுகின்றனவாக அமைகின்றன.

### பாடல் வெளியீடு!

மன்னார் மாவட்டத்தின் பெருமைகளைக் கூறி அதன் பிரசித்திபெற்ற இடங்களைக் காணொலியாக கொண்டபாடல் ஒன்று அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டிருக்கிறது. "'மாங்காய்' தீவின் வடமேற்கில் மன்னார் என்னும் மாவட்டம், மகத்தாய் உள்ளது பாரீர் பாரீர்" என்று அழைக்கும் அந்தப் பாடல்,மேலேகுறிப்பிட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒருபடியாகும்.

### தங்குமிட வசதிகளைஅதிகரிக்க எத்தனிப்பு

உள்ளூர் மற்றும் வெளியூர் உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்கான முயற்சியில் இறங்கியுள்ள திட்டமிடலில், தற்போதைய நிலையில் காணப்படக்கூடிய விடுதி அல்லது தங்குமிட வசதிகள் தொடர்பான பற்றாக்குறை கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது.

குறித்த நிலைவரத்தை அடிப்படையாகக் கொண்டு விருந்தோம்பல் துறைசார்ந்த முதலீடுகளை மன்னாரை நோக்கி நகர்த்தவும், கணிசமான அளவுவேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகி றது.

மண்டையோடுகளும் மனிதஎலும்புகளும் வெளிவரும் போருக்குப் பின்னரான சூழலில், சுற்றுலாத்துறையின் நுழைவானது வடபிராந்தியந்தின் சிறப்புக்களைப்புற உலகுக்குத் தெரியப்படுத்துகிறது.

அதேவேளை, இது பிராந்தியத்தின் மனித வளத்தை வினைத்திறனாகப் பயன்படுத்ததுவதற்கான சந்தர்ப்பங்களையும் கொண்டிருக்கிறது என்பதை புறந்தள்ளிவிட முடியாது. இத்தகைய முயற்சிகளுக்கு வரவேற்பளிக்கும் அதேநேரத்தில் அந்த நுழைவு, எமது பாரம்பரியங்களையும், கலாசாரப் பெருமைகளையும் மாத்திரமல்ல சுற்றுச்சூழலையும் மாசுபடுத்தாது இருக்கவேண்டும் என்பதிலும் அக்கறை கொள்ள வேண்டும்.





# தெரிந்துகொள்ளுங்கள்

- உலகின் மிகப்பெரிய சட்ட சபையைக் கொண்டுள்ள நாடு - சீனா
- ஒரு தலைமுறை என்பது - 28ஆண்டுகளைக் குறிக்கும்
- செயற்கை நதி ஒன்று லிபியா நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.
- வெள்ளைப்பிரம்பின் தந்தை ஜீன்டிலேக்
- சுவாமி ஞானப்பிரகாசத்துக்கு முத்திரை வெளியிட்டு மதிப்பளித்த நாடு ஜேர்மனி.
- 'வியாழன்' கோளை ஆராய்ந்த செயற்கைக்கோள் பயனியர் -10
- பூமி சூரியனைச் சுற்றுவதற்கு எடுக்கும் நேரம் 365 நாள்கள், 5 மணி, 48 நிமிடம், 48செக்கன்.
- அபாயமில்லாத சுரங்க விளக்கைக் கண்டுபிடித்தவர் ஓக்டோகான் (ஜேர்மனியர் 1941)
- சினிமாத்துறையின் சிறந்த படத்தை எடுத்தவர், நடிகர், இயக்குநர் ஆகியோருக்கு வழங்கப்படும் ஒஸ்கார்விருதுகள் 1928 ஆம் ஆண்டில் இருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

## கணினி சொன்ன பதில்



திருமணம் ஆகாத ஒருவர் தனக்கு எப்படிப்பட்ட மனைவி வேண்டும் என்பதை ஒரு கணினி மூலம் தெரிந்து கொள்ள விரும்பினார். அவர் கணினிக்குத் தனக்கு அமைய வேண்டிய மனைவி குறித்து பின்வரும் தகவல்களைக் கொடுத்தார்.

அழகாக இருக்க வேண்டும். உருவம் சிறியதாக இருக்க வேண்டும். சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். எதையும் தேடிச் சேகரிக்கும் மனோ பாவம் வேண்டும். அங்குமிங்கும் பறந்து கொண்டே இருக்க வேண்டும். இன்பம் அனுபவிப்பதில் ஈடுபாடு காட்ட வேண்டும்.

இந்தத் தகவல்களைப் பெற்றுக்கொண்ட கணினி பளிச் சென்று பதில் சொல்லிற்று. "நீங்கள் மணக்க வேண்டியது ஒரு சிட்டுக்குருவியை".





## பாத்திரம் அறிந்து பிச்சை இடு

அப்பொழுது நான் க.பொ.த. உயர்தரத்தில் பயின்றுகொண்டிருந்தேன். மேலதிக வகுப்பு முடிந்து வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது வழியில் என்னை ஒருவர் இடைமறித்தார். 60தொடக்கம்70 வரையான வயது மதிக்கத்தக்க அந்த மனிதன் தனது மனைவியைப் பிரவசத்துக்காக வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாகவும் தான் உடனே செல்ல வேண்டுமென்றும் கையில் இருந்த பணம் தொலைந்து விட்டதென்றும் அதனால் பண உதவி ஏதாவது செய்ய வேண்டியும் என்னிடம் கண்கலங்கிய படி கேட்டார். அவர் சொன்னதைக் கேட்ட நான் ஒரு நிமிடம் கூட யோசிக்காமல் கையில் இருந்த 50 ரூபாய்த் தாளை அவரிடம் கொடுத்தேன். ஆனால் அதைப் பெற்றுக் கொண்ட அவர் என்னைத் திட்டத் தொடங்கினார். "வைத்தியசாலைக்குச் செல்ல 50ரூபா போதுமா? இதை வைத்துக்கொண்டு நான் எப்படி பஸ்ஸில் செல்ல முடியும்? உனக்கு அறிவில்லையா?" என்று ஏதோவெல்லாம் பேசிக் கத்தத் தொடங்கினார். அப்போது அங்கே போக்குவரத்துச் செய்துகொண்டிருந்த பயணிகள் என்னை ஒரு மாதிரி ஏளனத்துடன் பார்ப்பது போல இருந்தது. நான் அவரது பேச்சிலும் பயந்து போய் அங்கிருந்து ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். பின்னர் ஆறுதலாக இருந்து யோசித்த போதுதான் நான் விட்ட தவறு எனக்குப் புரிந்தது. மிகவும் வயதான ஒருவர் தனது மனைவி பிரசவத்துக்குச் சென்றிருக்கிறார் என்று கூறியபோதே அது எந்தளவு உண்மையாக இருக்கும் என்பதைக் கொஞ்சமாவது யோசித்திருக்க வேண்டும்? அது மட்டுமல்லாமல் என் பணத்தை வாங்கிக்கொண்டு என்னையே திட்டிய அந்த மனிதனை நான் சும்மா விட்டிருக்கக் கூடாது. பயந்து ஓடாமல் அவருக்குச் சரியான தண்டனையை நான் அப்போதே கொடுத்திருக்கவேண்டும். எனது பயந்த சுபாவத்தையும் தோற்றத்தையும்கண்டு தான் அவர் அப்படி நடந்திருப்பார். ஆனால் அந்த உடனேயே நான் அவருக்கு பதிலடி கொடுத்திருந்தால் அவர் என்னைப் போல இன்னொருவரிடம் அப்படி நடக்கப் பயந்திருப்பார். ஆனால் நானே அவரை ஊக்குவிக்கும்படி ஆகி விட்டதே என கவலைப்பட்டேன்.

## என் கதை கேளீர்

எனது பெயர் வானொலி. என்னை விரும்பாதவர்கள் இந்த உலகில் எவரும் இருக்க முடியாது. இன்றைய நவீன யுகத்தில் என்னைவிட எளிதான பொழுது போக்குச் சாதனம் வேறெதுவுமில்லை எனலாம். ஓரிடத்தில் பேசுவதைப் பல மைல்களுக்கு அப்பால் எந்தவிதமான கம்பித் தொடர்புமின்றிக் கேட்க முடியும் என்பதை நாம் கற்பனை செய்து பார்த்திருக்க மாட்டோம். ஆனால் என் மூலம் அரிய இந்தச் சாதனையைச் செய்தவர் மார்க்கோனி. அவரது இந்த அரிய சாதனையை உலக மக்கள் என்றுமே நன்றியுடன் போற்றுவார்கள். என் தோற்றத்துக்கு நான் முதலில் மார்க்கோனிக்கு நன்றி சொல்ல வேண்டும். அவரின்றி நான் தோன்றியிருக்க முடியாது.




நான் பிரசித்தி பெற்ற ஒரு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டவன். என்னைப்போல் எத்தனையோ பேர் உருவாக்கப்படுகின்றனர். நான் எத்தனையோ முன்னேற்றங்களைக் கண்டு இன்று புதிய வடிவில் உங்கள் முன் காட்சியளிக்கிறேன். பெரிய வடிவத்திலிருந்து சிறிய வடிவம் வரை பல விதமான அவதாரங்களை நான் எடுத்து வருகிறேன். எந்த வடிவில் நான் இருந்தாலும் என்னுடைய பயனை எவரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

நான் உங்களுக்குப் பல வகையில் உதவுகிறேன். நான் வெறும் பொழுதுபோக்குச் சாதனம் மட்டுமல்ல உலகின் எந்த மூலை, முடுக்குகளிலும் நடைபெறும் சம்பவங்களையும் உடனுக்குடன் செய்திகளாகத் தந்து உங்களுக்கு நான் உதவுகின்றேன். தகவல்களை மக்களுக்குத் தெரியப்படுத்தியதில் என் மூலமாகப் பெரும் புரட்சியே ஏற்பட்டிருக்கிறது என்றால் அது மிகையல்ல. உலக மக்கள் எதையும் அறிந்து கொள்ள என்னையே நாடுகிறார்கள.


இன்றுநான் இல்லாத இல்லமே இல்லை எனச் சொல்லி விடலாம். சிறுவர் முதல் பெரியோர்வரை என்னைச் சுற்றி அமர்ந்துகொண்டு பாட்டு, கதை, நாடகம் எல்லாம் கேட்கிறார்கள். ஏன் வியாபாரிகள் கூட அதிகளவில் சந்தை நிலவரங்களை என் மூலமே அறிந்துகொள்கிறார்கள். நான் மாணவர்களுக்குக் கல்வியறிவு புகட்டும் சாதனமாகவும் இருந்து வருகிறேன்.

ஒருகாலத்தில் நான் விலை உயர்ந்தபொருளாகக் கருதப்பட்டேன். செல்வந்தவர்களின் ஆடம்பரப்பொருளாகவும் மதிக்கப்பட்டேன். இப்பொழுது ஏழை மக்களும் வாங்கக் கூடிய வகையில் மிகக் குறைந்தவிலையில் கிடைக்கிறேன். மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்துவிட்டேன்.

இவ்வேளையில் உங்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகிறேன். காலப்போக்கில் என்னுடைய பயன்கள் மேலும் அதிகமாகிக்கொண்டே யிருக்கும். என்னை நீங்கள் கையாளும்போது மிகுந்த மென்மையுடன் கையாளுங்கள். கவனமாகப் பேணுங்கள் நான் உங்கள் வீட்டுப்பிள்ளை என்பதை மறவாதீர்கள்.



பி.வோஜினி.
தரம் - 4.
யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை.



இ.சங்கீதா.
தரம் - 5.
ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்தியாலயம்

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | 6 | | 7 | | 8 | |
| 3 | | | | | | | | 2 |
| | | 4 | | | | 7 | | |
| 9 | | | 7 | | 2 | | | 5 |
| | 4 | | | 1 | | | 3 | |
| 1 | | | 3 | | 6 | | | 8 |
| | | 9 | | | | 4 | | |
| 8 | | | | | | | | 9 |
| | 3 | | 9 | | 1 | | 5 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 4 | 8 | 2 | 5 | 1 | 6 | 3 |
| 6 | 8 | 1 | 3 | 9 | 7 | 2 | 5 | 4 |
| 3 | 2 | 5 | 6 | 1 | 4 | 8 | 9 | 7 |
| 7 | 4 | 8 | 5 | 6 | 3 | 9 | 2 | 1 |
| 2 | 6 | 9 | 1 | 7 | 8 | 4 | 3 | 5 |
| 5 | 1 | 3 | 2 | 4 | 9 | 7 | 8 | 6 |
| 1 | 9 | 2 | 4 | 3 | 6 | 5 | 7 | 8 |
| 8 | 3 | 7 | 9 | 5 | 1 | 6 | 4 | 2 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 2 | 3 | 1 | 9 |

நேற்றைய விடை




# பாட்டியாக நடிக்கும் சமந்தா!

தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வந்து கொண்டு இருப்பவர் நடிகை சமந்தா. இவரது 4 படங்கள் திரைக்குவரத் தயாராக உள்ளன. இதனைத் தொடர்ந்து புதிய படம் ஒன்றிலும் நடிக்கவுள்ளார். அதில், அவர் 80 வயது பாட்டியாக நடிக்கவுள்ளார் என்று கூறப் படுகிறது. தென்கொரியாவில் வெளியான ஒரு படத்தைத் தழுவி இந்த படம் எடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## கணக்கு டீச்சர் பர்த்டே கேக் மாணவர்கள் ரெடி பண்ணியிருக்கிறார்கள்....




கலக்கிட்டாங்க பசங்க...




**சந்தோசம்**
வந்தா சீக்கிரம்
அனுபவிச்சிடனும்

**கஷ்டம்**
வந்தா சீக்கிரம்
அனுப்பி
வைச்சிடனும்



# திரும்பி பார்க்காதே! முன்னால் பார்...

கலைஞரை நோக்கி ஒரு முறை அவருக்கு நெருக்கமான பத்திரிகை யாளர் கேட்டார். "ஓய்வு, ஒழிச்சல் இல்லாமல் தொடர்ச்சியாக இத்தனை ஆண்டுகளாக உழைத்துக்கொண்டே இருக்கிறீர்களே, இவற்றையெல் லாம் விட்டுவிட்டு உங்கள் மனதை மகிழ்ச்சிப்படுத்தக் கூடிய பணிக ளில் ஈடுபடலாமே என்று எப்போதுமே தோன்றியதில்லையா?" அந்தப் பத்திரிகையாளருக்கு கலைஞர் சொன்ன பதில்தான், அவருடைய சிறுவயது எதிர்நீச்சல் கதை.

"பள்ளிப் பருவத்தில், நானும் என்னுடைய உயிர்த் தோழனுமான தென்னனும் எப்போதும் திருவாரூரின் மிகப்பெரிய கோயில் குளமான கமலாலயத்தில் நீந்திக் களித்துக் கொண்டிருப்போம். ஒரு நாள் இரு வருக்கும் அந்தக் குளத்தின் மைய மண்டபத்துக்கு நீந்திச்செல்ல வேண்டும் என்கிற ஆர்வம் ஏற்பட்டது. கோயில் குளங்களிலேயே மிகப்பெரியது கமலாலயம்தான். நீந்திக் கடக்க முடியுமா என்கிற சந் தேகம் இருந்தாலும், இருவரும் ஒரு வேகத்தில் நீந்த ஆரம்பித்து விட்டோம். பாதி தூரத்துக்கும் மேலாக நீந்திவிட்டோம். இருவருக்கும் மூச்சு இரைக்கிறது. தென்னன், பயந்துப் போனான். நானும்தான். "திரும்பிவிடலாம் கருணாநிதி" என்றான்.

மனசுக்குள் அச்சமிருந்தாலும், தென்னனுக்கு தைரியம் அளிக்கும் விதமாக நான் சொன்னேன். "தென்னா, இதுவரை முக்கால் பங்கு நீந்திவிட்டோம். மையத்துக்குச் செல்வதென்றால் இன்னும் கால் பங் குதான். திரும்புவதென்றால் இன்னும் அதிக தூரம் நீந்த வேண்டும். தெரிந்தோ, தெரியாமலோ ஓர் இலக்கை நிர்ணயித்து விட்டோம். அதை எட்டுவோம், வா" என்று அழைத்தேன். அதன்படியே மைய மண்ட பத்தை அடைந்தோம். சில நிமிடங்கள் ஓய்வெடுத்து விட்டு மீண்டும் உற்சாகமாகக் கரைநோக்கி நீந்த ஆரம்பித்தோம். எங்கள் இலக்கை எட்டிய மகிழ்ச்சியின் காரணமாக, திரும்பி வரும்போது எங்களுக்கு அலுப்பே இல்லை.

அன்றைய சிறுவன் கருணாநிதிக்கு இருந்த அதே போர்க்குணம், இன்றும் எனக்கு இருக்கிறது. முன் வைத்த காலை நான் என்றுமே பின் வைக்க விரும்புவதில்லை. அரசியல் துறையை விரும்பித்தான் தேர்ந்தெடுத்தேன். எல்லாப் பாதையிலுமே குளிர் சோலையும் இருக் கும், சுடும் பாலையும் இருக்கும். பாலையைக் கண்டு பயந்து திரும்பு பவன் குளிர் சோலையின் இடத்தை எட்டுவதே இல்லை..." என்று சொன்னார் கலைஞர். கலைஞரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அடிப்படைப் பண்பு இதுதான்.

## நேரம்



காத்திருக்கும் போது
மெதுவாக நகரும்

தாமதமாகும் போது
வேகமாக நகரும்

மகிழ்ச்சியில் போனது
தெரியாது

சோகத்தில் நகராது

நேரம் மனதைப் பொறுத்தது நேரத்தை பயனுள்ளதாக மாற்றுவோம்

## நாளை

**13.08.2018**

திங்கட்கிழமை

**ஆடி 28**

திதி: துதிகை பி.ப. 12.02 வரை
நட்சத்திரம்: பூரம் மு.ப. 12.32 வரை
சுபநேரம்: 12.5 – 01.35 வரை
ராகுகாலம்: 07.35 – 09.05 வரை






**மேஷம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். உறவினருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும்.

**இடபம்:** எதிர்பார்ப்பு ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில் வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த சலுகை கிடைக்கும்.

**மிதுனம்:** கடந்த கால உழைப்பின் பயனை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிதான அணுகுமுறை பின்பற்று வது நல்லது. சுமாரான அளவில் பணவரவு இருக்கும்.

**கடகம்:** உங்களை புகழ்ந்து பேசுபவரிடம் விழிப்புடன் இருக்கவும். தொழில் வியாபாரத்தில் விடாமுயற்சியால் வெற்றி காண்பீர்கள்.

**சிங்கம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். செயலில் நேர்த்தியும் வசீகரமும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**கன்னி:** உங்களின் நல்ல குணங்களை பலரும் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**துலாம்:** பொது விஷயங்களில் விலகியிருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். போட்டி பந்தயத்தில் ஈடுபட வேண்டாம்.

**விருச்சிகம்:** பணிகள் நிறைவேற முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற சிரம சூழ்நிலையை சரி செய்வீர்கள்.

**தனுசு:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை மலரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. வருமானத்தில் எதிர்கால தேவை கருதி கொஞ்சம் சேமிப்பீர்கள்.

**மகரம்:** பணிச்சுமை உருவாகி அல்லல் தரலாம். அறிமுகம் இல்லாதவரிடம் அதிக நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபா ரத்தில் திட்டமிட்ட வளர்ச்சிக்கு கூடுதல் உழைப்புத் தேவை.

**கும்பம்:** உறவினரிடம் இருந்த உங்கள் மீது கொண்ட மனஸ்தாபம் சரியாகும். தொழில், வியாபாரம் வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**மீனம்:** சிலர் உங்களுக்கு தந்த வாக்குறுதியை மீறி நடக்கலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலன் குறித்து ஆலோசிப்பர்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 110 | 100 | 100 | 90 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 120 |
| மரவள்ளி | 50 | 80 | 40 | 40 |
| பயிற்றை | 180 | 200 | 170 | 180 |
| பாகல் | 280 | 300 | 250 | 280 |
| க.கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 110 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 100 | 140 | 140 |
| பூசணி | 80 | 100 | 80 | 60 |
| தக்காளி | 180 | 180 | 180 | 160 |
| வாழைக்காய் | 70 | 100 | 100 | 80 |
| கீரை | 20 | 30 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 40 |
| ப.மிளகாய் | 320 | 300 | 300 | 400 |
| புடோல் | 110 | 120 | 100 | 100 |
| கோவா | 150 | 140 | 160 | 160 |
| வெண்டி | 100 | 120 | 100 | 90 |
| போஞ்சி | 280 | 200 | 240 | 280 |
| லீக்ஸ் | 240 | 180 | 200 | 180 |
| தேங்காய் | 70 | 60 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 40 | 40 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 240 | 260 | 300 |
| கரட் | 280 | 300 | 320 | 220 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 70 | 180 |

# அறுகம்புல் சாறு குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்



பல நோய்களை கட்டுப்படுத்தும் ஆற்றல் அறுகம்புல்லுக்கு உண்டு.
அறுகம்புல் சாறைப் பருகினால் உடலில் ஏற்படும் பல வியாதிகளுக்கு விடைகொடுக்கலாம்.

1. நாம் எப்பொழுதும் உற்சாகமாகவும், சுறு சுறுப்பாகவும் இருக்கலாம்.
2. குருதிச் சோகை நீங்கி, குருதி அதிகரிக்கும்.
3. வயிற்றுப் புண் குணமாகும்.
4. குருதி அழுத்தம் (பீ.பி) குணமாகும்.
5. நீரிழிவு நோயாளிகளுக்கு நீரிழிவு அளவை கட்டுப் படுத்தும்.
6. சளி, சைனஸ், ஆஸ்துமா போன்ற நோய்களை குணப்படுத்தும்.
7. நரம்புத் தளர்ச்சி, தோல் வியாதி ஆகியவை நீங்கும்.
8. மலச்சிக்கல் நீங்கும்.
9. புற்று நோய்க்கு நல்ல மருந்து.
10. உடல் இளைக்க உதவும்.
11. இரவில் நல்ல தூக்கம் வரும்.
12. பல், ஈறு கோளாறுகள் நீங்கும்.
13. மூட்டு வலி நீங்கும்.
14. கர்ப்பப்பை கோளாறுகள் நீங்கும்.
15. உடலைப் புத்துணர்ச்சியாக வைத்துக் கொள்ளும்.


இது புதுசு
பெண்களுக்கான செருப்பு வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 930 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 1100 | 1000 | 1400 | 1000 |
| நண்டு | 600 | 500 | 700 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 800 | 900 | 800 | 1100 |
| சுறா | 900 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 500 | 700 |
| முரல் | 400 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 400 | 300 |
| சூடை | 180 | 150 | 300 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 400 | 300 |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |

# மருத்துவக் குணங்கள் நிறைந்தது அவரை

### மருத்துவ குணம்

வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கப்படும் அவரைக்காய் அரிய வகை மருத்துவக் குணங்களை கொண்டுள்ளது. அவரைக்காயில் பிஞ்சுக்காயே அதிக அளவில் உணவாகச் சேர்க்கப்படுகிறது. நல்ல சுவையைக் கொண்டது. எளிதில் ஜீரணமாகும் தன்மை கொண்டதால் இதன் சத்துக்கள் விரைவில் உடலில் சேரும். இதில் சுண்ணாம்புச்சத்து, விற்றமின்கள் இருப்பதால் இளைத்த உடல் தேறும்.

### உடலுக்கு வலிமை

அவரைப் பிஞ்சுகளை எடுத்து நறுக்கி அதனுடன் சின்ன வெங்காயம், பூண்டு, மிளகு சேர்த்து வதக்கி உணவில் சேர்த்துக் கொண்டால் உடல் வலுப்பெறும். நோய்க்கு மருந்துண்ணும் காலங்களிலும், விரதம் இருக்கும் காலங்களிலும் அவ ரைக்காயை அதிகம் சேர்த்துக்கொள்ளலாம். இது உடலுக்கு வலுவைக் கொடுப்பதுடன் விரத மன அமைதியைப் பெருக்கவும் உதவும். சிந்தனையைத் தெளிவுபடுத்தும்.
பித்தத்தினால் உண்டாகும் கண்சூடு, கண்பார்வை மங்கல் போன்ற கண் பாதிப்புகளுக்கு அவரைக்காய் சிறந்த மருந்தாகும். அவரைப்பிஞ்சினை வாரம் இரு முறை சமைத்து உண்டுவந்தால் பித்தம் குறைந்து கண் நரம்புகள் குளிர்ச்சியடைந்து மங்கிய பார்வை தெளிவடையும். அவரைக்காயை அதிகம் உண்டுவந்தால் வெள்ளெழுத்து குறைபாடுகள் நீங்கும்.

### குருதியைச் சுத்தமாக்கும்

அவரைப் பிஞ்சில் துவர்ப்புச் சுவை உள்ளதால் இது குருதியைச் சுத்தப்படுத்தும். குருதி நாளங்களில் உள்ள கொழுப்பைக் குறைக்கும். குருதி அழுத்தம், இதய நோய் உள்ளவர்கள் அவரைக்காயை அதிகம் சேர்த்துக்கொள்வது நல்லது. உடலுக்கும், மனதிற்கும் சாந்தத்தைக் கொடுக்க வல்லது.



### நீரிழிவை குணமாக்கும்

சர்க்கரை நோய் உள்ளவர்கள் அவரைக்காயை அதிகம் சேர்த்துக்கொண்டால், நீரிழிவு நோயால் உண்டாகும் மயக்கம், தலைச்சுற்றல், கை, கால் மரத்துப்போதல் போன்றவை கட்டுப்படும்.
ம்லச்சிக்கலைப் போக்கும், வயிற்றுப் பொருமலை நீக்கும். மூலநோய் தாக்கம் உள்ளவர்கள் அவரைக்காயை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்வது நல்லது. சிறுநீரைப் பெருக்கும். சளி, இருமலைப் போக்கும்

### சரும நோய்களை குணமாக்கும்

முதுமையில் உண்டாகும் நோயின் தன்மையை அவரைப் பிஞ்சு மாற்றும். தசை நார்களை வலுப்படுத்தும். உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும். சருமத்தில் உண்டாகும் பாதிப்புகளைக் குறைக்கும். இரவு உணவில் அவரைக்காய் சேர்த்துக் கொண்டால் சுகமான நித்திரை கிடைக்கும்.
முற்றிய அவரைக்காயை உணவாக சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக முற்றிய அவரைக்காய், முற்றிய வெண்டைக்காய் போன்றவற்றை சேர்த்து சூப் செய்து அருந்தினால் உடல் பலமடையும். ஆண்மைச் சக்தி அதிகரிக்கும்.

### நினைவாற்றலைத் தூண்டும்

அவரையில் உடலுக்கு ஊட்டச்சத்தும் மருந்தும் ஆகும் பொருள்கள் மலிந்துள்ளன. அவரையில் "போலேட்" என்னும் விட்டமின் சத்து மிகுதியாக உள்ளது. ஒரு கோப்பை அவரையில் ஒரு மனிதனுக்கு சராசரியாக ஒரு நாளைக்குத் தேவையான "போலேட்" விற்றமின் சத்தில் 44% அளவு உள்ளது. இந்த "போலேட்" தாவர ரசாயன மாற்றங்களுக்கு உறுதுணையாய் நின்று மரபு அணுக்களின் உற்பத்திக்கும், செல்களின் வளர்ச்சிக்கும், அமினோ அமிலங்கள் உருவாவதற்கும் உதவுகிறது. மேலும் கர்ப்பிணிகளின் வயிற்றில் வளருகின்ற குழந்தைகளுக்கு போதிய ஊட்டச்சத்தினைத் தருவதாகவும் "போலேட்" உதவுகின்றன.
ஒரு கோப்பை அவரைக்காயில் சராசரியாக ஒருவருக்கு ஒரு நாளைக்குத் தேவைப்படும் இரும்புச் சத்தில் 33% அளவு இருக்கின்றது. உடல் முழுவதும் பிராண வாயுவைக் (ஒக்ஸிஜன்) கொண்டு செல்லும் பணிக்கு உதவுவதோடு நோய் எதிர்ப்பு சக்திக்கும், உடல் உஷ்ணம் பெறுவதற்கும், மூளையினின்று செல்லும் மின் சமிக்ஞைகள் சீராகச் செல்வதற்கும் உறுதுணையாக விளங்குகின்றது.
இதனால் துத்தநாகச் சத்து மனித உடல் சீராக வளர்வதற்கும், உடல் ஊனம் ஏற்படாமல் காப்பதற்கும், நரம்பு சம்பந்தமான குறைபாடுகள் வராமல் இருப்பதற்கும் இந்த துத்தநாகச் சத்து உதவுகிறது. ஒரு கோப்பை அவரைக்காயில் தினசரி தேவையில் 15% சத்தினை அவரை தரும் என்பது ஆய்வுகளின் முடிவு. அவரைக்காயில் மிகுந்த நார்ச்சத்தும் அடங்கி உள்ளது. சராசரி தேவையில் பெரும்பகுதி நார்ச்சத்தை அவரை தருகிறது. ஒரு கோப்பை அவரைக் காயில் 36 கிராம் நார்ச்சத்து உள்ளது என்த் தெரிய வருகின்றது.
இந்த நார்ச்சத்து சீரண உறுப்புகளைச் சீராக இயங்க வைக்க உதவுகின்றது. இதனால் மலச்சிக்கல் அறவே இல்லாமல் இருப்பதோடு உடலில் தன்னிச்சையாகச் செயல்பட்டு ஒருங்கு சேர்ந்து புண்களை உருவாக்கி நாளடைவில் புற்று நோயாக மாறச் செய்யும் மாசுக்களை (டாக்ஸின்) உடலில் தங்காத வண்ணம் வெளியேற்ற உதவுகிறது.
நீரிழிவு நோயாளிகளுக்கு உரித்தான மலச்சிக்கல் நோய்க்கும் இது மருந்தாகிறது. அவரையில் பொதிந்துள்ள புரதச் சத்தும், நார்ச்சத்தும் ஒருங்கே சேர்ந்து உடல் எடை குறைவதற்கு உதவுகின்றது. இது உடலில் சேர்ந்த கொழுப்புச் சத்தை வெளியேற்றவும் வகை செய்கிறது. இதனால் இதய நாளங்களில் அடைப்புகள் ஏற்படாமல் பாதுகாக்கிறது.

கவிதை

முல்லை யோகா

# தோற்றது தோற்றதுதான்

ஆண்டுகள் பலகோடியாய்
அழகிய உலகில்
ஆயிரம் ஆயிரம்
உயிர்கள் நீண்ட
பெருங்காடுகள்
மலைகள் நதிகள்
பெருங்கடல்கள்
யாவிலும் வாழ்ந்தன
நிலையாய் நிம்மதியாய்

ஓரறிவுடை உயிர்
தொடக்கம் ஐந்தறிவுடைய
உயிர் வரைக்கும்
உலகத்தை உருக்குலைத்தாய்
இல்லை வரலாறு
இதுவரைக்கும்

கோடி உயிர்கள்
கோளப் பந்தில்
தோன்றி வாழ்ந்து
மறையும் மாயப்
பயணத்தில் மகத்துவம்
மிக்க உயிராய்
மனிதனைக் கண்டது
இவ் உலகு

ஆறாம் அறிவாய்
அவன் பெற்ற
பகுத்து அறியும்
அறிவால் உயர்
தகைமை அவனுக்கு உண்டென்று
உலகம் நம்பியது

உடலால் உழைத்து
உள்ளத்தால் மகிழ்ந்து
உள்ளங்கை அளவே
உணவாயினும் உவகை
மிகவுடை உயர்
வாழ்வை உறுதியாய்ப்
பெற்றான் மனிதன்

எதிலும் இல்லை
இரட்டை வேடம்
உள்ளத்து உதிப்பதெல்லாம்
உயர் எண்ணங்கள்
ஒருபோதும்
இல்லை முரண்
எண்ணங்கள்
உதட்டில் பிறப்பது
எல்லாம் உள்ளத்துப் பிறந்த



நேரிடை எண்ணங்கள்

கை மண் அளவு
கற்ற போது
கை கொடுத்து
கண் திறந்து
துயர் பகிர்ந்து
பசியறிந்து
பகுத்துண்டு
கொடுத்து வாங்கி
வாழ்ந்த பெருமை
உலகளவு கற்க

முயன்ற போது மனிதன்
உருக்குலைந்தான்
உள்ளம் மரத்தான்
உதவ மறுத்தான்
அடுத்தவன் துயரை
இரசித்திட்டு
மகிழ்ந்தான்

அளவுக்கு மிஞ்சியே
குவித்திட்ட சொத்தை
அடுத்தவன் வயிறு
துடிக்கத் துடிக்க
பெருக்கிப் பெருக்கி
பெரும் பேத்தையாய்
ஒரு நாள் உயிர்
பிரிந்திடும் வாழ்வைப் பெற்றான்

நிகழ்காலம் மட்டும்
நிஜமென்றே எதிர்கால
தலைமுறைக்கு எதுவும்
விட்டிடாமல் முழு
நுகர்வை பெற்றிடப்
பித்தனாய் பெரும்
பித்தனாய் புரள்கிறான் உலகில்

## சொற்சிலம்பம் போட்டி இல: 535

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | | | 8 | | |
| | ■ | 9 | ■ | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | | |
| ■ | | ■ | 16 | | | | ■ |
| 17 | | 18 | | ■ | ■ | ■ | 19 |
| 20 | | | | | ■ | 21 | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:..............................................................

### இடமிருந்து வலம்

1. ஈழத் தமிழர்கள் நம்பி இருந்த தலைவர்களில் இவரும் ஒருவர்
5. ஆடை
7. கடவுளர், மனிதர்களது உருவங்களது பிம்பம் (எழுத்துக்கள் மாறியுள்ளன)
8. வடபுலத்துக்கு சேவைக்கென அம்புலன்ஸ் வண்டிகளை வழங்கிய ஒரு நாடு (முதலெழுத்து இழந்துள்ளது)
10. ஆறு
11. சீனி தயாரிப்பின் மூலப்பொருள்
13. நிலத்திலும் நீரிலும் செயற்படும் அமெரிக்காவின் ஓர்படைப்பிரிவு
14. குடும்பத்தில் பெண்பிள்ளை (குழம்பியுள்ளது)
15. ஆலயங்களில் பேணப்பட வேண்டியது
16. கவிஞர்
17. செய்திப்பரிமாற்றம் (குழம்பியுள்ளது)
20. மிகச் சரியாக
21. படி

### மேலிருந்து கீழ்

1. கல்வித்தெய்வம். இப்படியும் அழைப்பர்
2. நாக்கு அறியும் சுவை
3. பணம்
4. நான்
12. இலைகள் வெப்பத்தால் வாடுதல் (குழம்பியுள்ளது)
16. பெருங்காற்று (குழம்பியுள்ளது)
18. தற்போது இப்படியான காலம் எனக் கூறப்படுகிறது
19. நிறுத்து

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 533 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)விவாதி (4)அஞ்சாமை (7)நாகரீகம் (9)சய (10) சரை (11)சமாதானம் (13)சக (14)ரம் (15)உற்சாகம் (18) பயறு (19)தரு (20)பாலைவனம் (22)சவுக்கு (23) திம்பு

**மேலிருந்து கீழ்**

(1) விநாசம் (2)வாகரை (3)திரி (4)அம்மா (5)சாசனம் (6) மையம் (8) கசகசா (12)தாரம் (13)சற்று (15)உயர்வு (16)கவலை (17)விரும்பு (19)தனம் (19)தனம் (20)பாகு (21)வதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.535**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிரைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர். (22.08.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 533 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

து. குலநாயகம்,
ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை,
மானிப்பாய்.

**2 ஆம் பரிசு**

யோ. சிவசோதி,
இல.38, சுங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**

சியாமளா கிறிஸ்தோப்பர்,
கன்னியர் மடவீதி,
பெற்றா, மன்னார்.

**4 ஆம் பரிசு**

கு. ஜெனகன்,
4.ஆம்கட்டை, மன்னார் வீதி,
பூநகரி.

**5 ஆம் பரிசு**

செ.சக்திவேல்,
குச்சம் வீதி, வல்வெட்டித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

யோகராசா சுபாஷினி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

செல்வி இந்துஜா
அருள்லிங்கம்,
இல. 364/B, சாந்தசோலை வீதி,
தம்பனைச்சோலை, வவுனியா.

பொன். துரைராசா,
இல. 308 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல.535 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 26.08.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக்கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 533 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

## 12.08.2018 முதல் 18.08.2018 வரை

*உங்களுக்கு எப்படி?*



## மேடம்

புதன், குரு, சந்திரனால் நற்பலன் கிடைக்கும். பழகுபவர்களிடம் நிதானித்து பேச வேண்டும். தம்பி, தங்கையர் ஓரளவு உதவுவர். குடும்பத்தில் ஒற்றுமை கூடும். வெளியூர் பயணத்தால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகள் சில விஷயங்களில் பிடிவாதம் கொள்வர். சத்தான உணவை உண்டு மகிழ்வீர்கள். மனைவியின் குளறுபடியான செயலை இதமான அணுகுமுறையால் சரி செய்யவும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் கவனமுடன் படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.



## இடபம்

சூரியன், ராகு, சுக்கிரனால் அளப்பரிய நன்மை வந்து சேரும். அன்றாட பணிகள் சிறப்பாக நிறைவேறி புதிய அனுபவம் உண்டாகும். தம்பி, தங்கை கருத்து ஒற்றுமையுடன் உதவுவர். வாகன பயன்பாடு சீராக இருக்கும். பூர்வீக சொத்து பராமரிப்பில் நம்பகமானவர்களை பணியமர்த்தவும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றி சந்தோஷம் தருவீர்கள். சத்தான உணவு உண்டு மகிழ்வீர்கள். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். தொழிற்சாலை பணியாளர்கள் பாதுகாப்பு தவறாமல் பின்பற்றவும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க கூடாது. மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பரால் உதவி உண்டு.

## மிதுனம்

சுக்கிரன், குரு, சந்திரன் வியத்தகு அளவில் நற்பலன் தருவர். சுயதிறமையால் முயற்சி முழு அளவில் நிறைவேறும். புகழும், பணவரவும் அதிகரிக்கும். இஷ்டதெய்வ அருள்பலம் துணை நிற்கும். வாகன பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலைத் திறனில் மேம்படுவர். நோய் தொந்தரவு குறையும். மனைவி ஒற்றுமை உணர்வுடன் நடந்து கொள்வார். சுப நிகழ்வுகளில் ஆர்வமுடன் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து ஆதாயம் உயரும். பணியாளர்களுக்கு சலுகையும் விரும்பிய இடமாற்றமும் கிடைக்கும். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறி இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் ஆசிரியர், பெற்றோரின் அறிவுரையை ஏற்பர்.

## கடகம்

சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரன் ஓரளவு நற்பலன் தருவர். உறவினரின் ஆதரவு ஊக்கம் தரும். சமூகப்பணியிலும் ஈடுபடுவீர்கள். புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. பிள்ளைகளின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். எதிரியினால் இருந்த தொந்தரவு குறையும். மனைவி குடும்பநலன் சிறக்க தேவையான பணி மேற்கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பணவரவும் சீராக இருக்கும். பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். சுற்றுலா திட்டத்தில் திடீர் மாற்றம் ஏற்படலாம். பெண்கள் கணவரின் அன்பில் மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.



## சிங்கம்

சுக்கிரன், செவ்வாய், கேது நற்பலன் வழங்குவர். பணிகளை குறித்த காலத்தில் நிறைவேற்றுவீர்கள். தம்பி, தங்கை அதிக அன்பு பாராட்டுவர். பிள்ளைகள் உங்கள் வழிகாட்டுதலால் கிடைத்த நற்பலனை பெற்று மகிழ்வர். வெளியூர் பயணம் பயனறிந்து மேற்கொள்ளலாம். வழக்கு, விவகாரத்தில் தீர்வு கிடைக்கும். மனைவி உங்களின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி செய்வீர்கள். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் உறவினர்களை நன்கு உபசரித்து குடும்பத்திற்கு பெருமை சேர்ப்பர். மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறுவர்.



## கன்னி

பெரும்பான்மை கிரகங்கள் அளப்பரிய நன்மை வழங்குவர். புதிய திட்டம் செயல்படுத்த வாய்ப்பு கிடைக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கும். வாகனப்பயணம் இனிமை சேர்க்கும். பிள்ளைகள் படிப்பு, வேலைத் திறனில் மேம்படுவர். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு உருவாகும். மனைவி அதிக அன்பு கொள்வர். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரம் செழித்து தாராள பணவரவு கிடைக்கும். பூர்வீகச் சொத்து மூலம் பணவரவு கூடும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, சலுகை பெறுவர். பெண்கள் வீட்டு அலங்கார பொருள்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

## துலாம்

சூரியன், சுக்கிரன், புதன், சனீஸ்வரர் அனுகூல அமர்வில் உள்ளனர். பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். புதியவர்களின் நட்பும் ஆதரவும் கிடைக்கும். தாய் வழி சார்ந்த சொத்து கிடைக்க வாய்ப்புண்டு. பிள்ளைகளின் அறிவார்ந்த செயல் வியப்பும், மகிழ்ச்சியும் தரும். வழக்கு விவகாரத்தில் சமரச தீர்வு பெற இதமான அணுகுமுறை வேண்டும். மனைவியின் அன்பு நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் போட்டி விலகி வளர்ச்சி அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## விருச்சிகம்

செவ்வாய், கேது, சுக்கிரன் நற்பலன் தருவர். மாறுபட்ட நிகழ்வுகளை வாழ்வில் எதிர்கொள்வீர்கள். குடும்பத்தினரின் உதவி கிடைக்கும். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறை பின்பற்றவும். பிள்ளைகள் புதுமை எண்ணங்களில் விருப்பம் கொள்வர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் உதவி தேவையான சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கு கடின உழைப்பு தேவைப்படும். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். பெண்கள் கணவரின் அன்பில் மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துவர். மாணவர்கள் நன்கு படித்து பரிசு, பாராட்டுப் பெறுவர்.



## தனுசு

புதன், சுக்கிரன், குரு, சந்திரனால் நற்பலன் கிடைக்கும். பொது இடங்களில் நண்பர்களிடம் நிதானித்து பேசுவீர்கள். திட்டமிட்ட செயல்களில் முன்னேற்றம் ஏற்படும். தாய்வழி உறவினர் உதவி செய்வர். பிள்ளைகளின் செயல்பாடு சிறக்கும். இஷ்ட தெய்வ அருள்பலம் துணை நிற்கும். குடும்பத்தில் வெகுநாள் பிரச்சினைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். மனைவியின் கடந்த கால நற்செயல் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு கூடும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டுப் பெறுவர். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

## மகரம்

சுக்கிரன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். பணிகளை நிறைவேற்ற மதிநுட்பத்துடன் செயல்படுவது நல்லது. குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வாகனப் பயணங்களில் உரிய பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றுவது நல்லது. பிள்ளைகள் பெற்றோரிடம் வெளிப்படையான மனதுடன் பழகுவர். உடல் ஆரோக்கியம் சீராக மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். மனைவி சொல்லும் ஆலோசனை நம்பிக்கையளிக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து வளரும். பணியாளர்கள் கடின உழைப்பால் முன்னேற்றம் காண்பர். பெண்கள் குடும்பச் செலவில் சிக்கனம் மேற்கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேற கூடுதல் பயிற்சி உதவும்.

## கும்பம்

நவக்கிரகங்களில் ஏழு கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். பேசுவதில் நிதானம் வெளிப்படும். தெளிந்த சிந்தனையுடன் செயல்படுவீர்கள். அதிர்ஷ்டகரமாக வாழ்வில் நன்மை வந்து சேரும். புதிய வீடு, வாகனம் திட்டமிட்டபடி வாங்கலாம். பிள்ளைகள் நண்பர்களுக்கு இணையாக உங்களிடம் பழகுவர். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவியின் ஆர்வமிகு செயல்கள் நிறைவேற உதவுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து பணம் சேமிப்பாகும். அரசு சார்ந்த உதவி கிடைக்கும். பணியாளர்கள் விரைவாக இலக்கை முடித்து சலுகை பெறுவர். பெண்களுக்கு பொன், பொருள் சேரும். மாணவர்கள், ஆசிரியரின் வழிகாட்டுதல் பின்பற்றி படிப்பில் முன்னேறுவர்.

## மீனம்

செவ்வாய், கேது, சந்திரனால் நன்மையுண்டாகும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகளை உத்வேகமுடன் துவங்குவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமையை பேணிப் பாதுகாப்பது நல்லது. அறிமுகமில்லாதவர்க்கு வீடு, வாகனத்தில் இடம் தரக் கூடாது. பிள்ளைகளின் குறைகளை இதமாக சரி செய்யவும். வழக்கு விவகாரத்தில் நல்ல தீர்வு தாமதமாகலாம். மனைவியின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை உதவும். தொழில், வியாபாரத்தில் இடையூறை சரி செய்வதால் வளர்ச்சியும், பணவரவும் சீராகும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிபுரிவது அவசியம். பெண்கள் தாய் வீட்டாரின் உதவியை கேட்டுப் பெறுவர். மாணவர்கள் படிப்பு தவிர பிற விவாதம் பேசக் கூடாது.



# மணியார் குடும்பம்

## தம்பி ராமையாவின் முயற்சி

பரம்பரைச் சொத்துக் கரைந்தாலும் மரியாதை குறையாமல் வாழ்கிறது மணியார் குடும்பம். தாங்கள் இழந்த சொத்தை மீண்டும் சம்பாதிக்க ஒரு முயற்சி எடுக்கிறார்கள். முயற்சி கைகூடியதா, கைநழுவிப்போனதா என்பது தான் படத்தின் ஒருவரிக்கதை.

**கதை**

குடும்பச் சொத்தைக் குதிரைப் பந்தயத்தில் அழித்தவர் நார்த்தங்காய் சாமி (தம்பி ராமையா). மணியார் குடும்பத்தை வெகுளிக் குடும்பம் எனக் கூப்பிடும் அளவுக்கு வெகுளி அவர். அவரது ஒரே மகன் குட்டி மணியார். வேலை வெட்டி இல்லாமல் கலர் கலராய் சொக்காய் போட்டுத் திரியும் வழக்கமான கிராமத்து நாயகன். அவருக்கு அந்தக் கிராமத்திலேயே வெளீர் என இருக்கும் வழக்கமான ஒரு முறைப்பெண். முறைப் பெண்ணின் கரம் பிடிப்பதற்காகப் பண அந்தஸ்தைக் காட்டிக் குறுக்கே நிற்கிறார் குட்டி மணியின் மாமா. "இந்த நாளை உன் டையரியில் குறிச்சு வைச்சுக்கோ" என மாமாவிடம் ஒரு சபதத்தைப் போட்டுச் சம்பாதிக்கப் புறப்படுகிறார் குட்டிமணி. டையரியில் குறித்துவைக்கச் சொன்னதுபோல் சாதித்துக் காட்டினாரா, இல்லையா. சாதனைக்கு முன் என்னனென்ன வேதனைகளைச் சந்தித்தார் எனச் செல்கிறது திரைக்கதை.

**இயக்குநர் தம்பி ராமையா!**

ஒரு ரகமான குடும்பத்தைக் களத்தில் இறக்கிப் படத்தை இயக்கியிருக்கிறார் தம்பி ராமையா. நாயகன் குட்டி மணியாக உமாபதி ராமையா. அட்டகாசமாய் நடனமாடுகிறார், ஆக்ரோஷமாகச் சண்டை போடுகிறார். நடிப்பிலும் கவனம் செலுத்தினால், நல்ல எதிர்காலம் இருக்கிறது. எழுத்து, பாடல்கள், இசை, இயக்கம், நடிப்பு என இழுத்துப்போட்டு உழைத்திருக்கிறார் தம்பி ராமையா. சில இடங்களில் "எனக்கு நடிக்கத்தெரியும்" என்பது தெரிய நடித்திருப்பது மட்டும் பார்வையாளர்களைச் சோதிக்கிறது. நாயகியாக மிருதுளா முரளி. நடிக்க இடமே கொடுக்கவில்லை. பாடல்களுக்கும் ஒரு காட்சிக்கும் மட்டும் வந்து தனது இருப்பைப் பதிவு செய்கிறார். ஜெயப்பிரகாஷ், விவேக் பிரசன்னா, பவன், ஹநான் கடவுள்' ராஜேந்திரன், சமுத்திரகனி, ராதா ரவி, சிங்கம்புலி, சிங்க முத்து, ராமர், டைகர் கார்டன் தங்கதுரை என நட்சத்திரப் பட்டாளம் நீள்கிறது.

**குறை, நிறைகள்**

எளிமையான கதை, வண்ணமயமான நகைச்சுவைகள், காதல், கால்வாசி ஆக்சன் அரைவாசி எனக் கலவையாக இருக்கிறது திரைக்கதை. அதேநேரம் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை ஊகிக்க முடிவதும் படத்தின் மிகப் பெரும் குறை. அரை மணி நேரத்திலேயே இறுதிக்காட்சி இப்படித்தான் அமையும் என்றும் தெரிந்துவிடுகிறது. "பாட்டி சொல்லும் ஞாயிற்றுக்கிழமை கதையெல்லாம் இந்த கதைக்கு தேவைதானா" எனச் சிந்திக்கவைத்துவிடுகிறது. முதல் பாதியில், ஒரு இயக்குநராக "அட பரவாயில்லையே" என்று நிமிர்ந்து உட்காரவைக்கிற தம்பி ராமையா, இரண்டாம் பாதியில் ஏமாற்றிவிடுகிறார்.

**இசை, ஒளிப்பதிவு**

தம்பி ராமையாவின் இசையில் முதல் பாடல் பரவாயில்லை. பெண் கேட்டுப் போகும் காட்சியில் பின்னணி இசையில் கவனிக்க வைத்து, அதன்பிறகு காதுவலிக்க வைக்கிறார். பாடல் வரிகளைக் கேட்கும்போதே சிரிப்பு வருகிறது. பி.கே.வர்மாவின் ஒளிப்பதிவுக்கு மணியார் குடும்பம் கடன்பட்டிருக்க வேண்டும். படத்தின் மிகப்பெரும் பலம் ஒளிப்பதிவு. முதற்பாதியில், படத்தொகுப்பில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்.

தம்பி ராமையா தனது குடும்பத்தி லிருந்து ஒரு சினிமா நாயகனை, (மகனுக்கு )நட்சத்திர மதிப்பை உருவாக்குவதற்குப் பல முயற்சிகளைச் செய்திருக்கிறார். ஆனால், அது எடுபடவில்லை.



**கதை**

ஆர்யாவின் அப்பா 'ஆடுகளம்' நரேன், நடிகர் ரஜினிமீது வெறிபிடித்த இரசிகர். நிறைமாதமாக இருக்கும் தனது மனைவியை, ரஜினியின் 'தர்மத்தின் தலைவன்' படத்துக்கு அழைத்துச் செல்கிறார். திரையரங்கிலேயே குழந்தை (ஆர்யா) பிறக்கிறது. 'தலைவர்' மீதான பாசத்தால், மகனுக்கு 'ரஜினிகாந்த்' என நாமம் சூட்டி மகிழ்கிறார் நரேன். பிரசவ காலத்தில் 'ஞாபக மறதி' ரஜினியை இலயித்துப் பார்த்ததாலோ என்னவோ, வளர வளர ஆர்யாவையும் ஞாபக மறதி தொற்றிக் கொள்கிறது. இதனால், அவருக்குத் திருமண வாய்ப்புத் தொடர்ந்து தள்ளிப்போகிறது. "இந்த ஜென்மத்தில் உனக்குக் கல்யாணம் ஆகாது" என்று அப்பா வெறுத்துப்போய்க் கூறுகிறார். அந்தத் தருணத்தில் நாயகி சாயிஷா சைகலின் கடைக்கண் பார்வை, ஆர்யா மீது விழுகிறது. தனக்கு மறதி நோய் இருப்பதைக் காதலியிடம் காட்டிக் கொடுக்காமல் மறைத்து, நண்பர்கள் சதீஷ், கருணாகரன் உதவியோடு சமாளித்து, சாயிஷாவின் இதயத்தில் இடம்பிடிக்கிறார் ஆர்யா. இந்தச் சூழலில், நாயகியின் தந்தையான சம்பத்துக்கு ஆர்யா ஒரு 'கஜினி'காந்த் என்று தெரியவர, அவரை வெறுக்கிறார். இதற்கிடையில், முரட்டுப் பொலிஸ் அதிகாரியான சாயிஷா மீதான அஜய்யின் ஒருதலைக் காதல் வேறு. இந்தத் தடைகளைத் தாண்டி காதலி சாயிஷாவை ஆர்யா கைப்பிடித்தாரா, இல்லையா? என்பதே கஜினிகாந்தின் கதை.

**பாத்திரங்கள்**

**மறதி இளைஞன் மற்றும் காதலிக்காக உருகும் கதாபாத்திரம் என இரண்டு மாத்திரங்களிலும் கச்சிதமாகப்** பொருந்துகிறார் ஆர்யா. அவரது நண்பர்களாக வரும் கருணாகரன், சதீஷ் ஆகிய இரண்டு நகைச்சுவை நடிகர்களையும் சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்டதால், படத்தின் 2ஆவது பாதி தப்பித்துவிடுகிறது. நாயகி சாயிஷா நன்றாக நடனம் ஆடுகிறார். காதல் காட்சிகளில் உருகுகிறார். நடிப்பிலும் ஓரளவுக்குத் தேறியிருக்கிறார். அப்பா பாத்திரத்தில் நரேன், சம்பத்தும் சொல்லிக்கொள்ளும்படியாக நடித்திருக்கின்றனர். பொலிஸ் அதிகாரி அஜய்யின் கதாபாத்திரத்தில் எந்தப் புதுமையும் இல்லை. மொட்டை ராஜேந்திரனின் நகைச்சுவைப்போக்கு படத்துடன் ஒட்டவில்லை.

**பலவீனங்கள் பல**

'ஹர ஹர மகாதேவகி', 'இருட்டு அறையில் முரட்டுக் குத்து' படங்களை இயக்கிய சந்தோஷ் பி. ஜெயக்குமாரின் அடுத்த படம் இது. முதல் 2படங்களுடனும் ஒப்பிடும்போது, இதை அனைத்து வயதினருக்குமான படமாகத் தந்திருப்பது பெரிய ஆறுதல் தான். 'பாஸ் என்கிற பாஸ்கரன்' போல ஒரு நிறைவான நகைச்சுவைப் படமாக்கிப் படத்துடன் இரசிகர்களை லயிக்க வைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டி ஆர்யாவுடன் களம் இறங்கியுள்ளார். இதற்காக, தெலுங்கில் ஏற்கெனவே வந்த 'பலே பலே மகாடிவோய்' படத்தை 'ரீமேக்' செய்திருக்கிறார். ஆனால், வலுவான திரைக்கதையோ, காட்சி அமைப்போ இல்லை. மேலோட்டமான கதை நகர்வு, அர்த்தமற்ற நகைச்சுவை எனப் படம் சலிப்பாக நகர்கிறது.

**இன்னமும் முயற்சி தேவை**

படத்தில் வேளாண் விஞ்ஞானியாக வருகிறார் ஆர்யா. கடந்த நிமிட நிகழ்வுகூட மறந்துபோகும் ஒருவர் எப்படி விஞ்ஞானி ஆனார்? நாயகன் சொல்வதை அப்படியே நம்பும் அப்பிராணியாக நாயகி சாயிஷா ஏன் இருக்கிறார்? என்பது தெரியவில்லை. கதாநாயகனின் மறதியே கதையின் முக்கிய பிரச்சினை. ஆனால், அதை மையமாகக் கொண்ட நகைச்சுவைகள் அவ்வளவாக இல்லை. பல்லுவின் ஒளிப்பதிவும் பாலமுரளிபாலுவின் இசையும் படத்துக்கு பலம். இருந்தாலும், நல்ல ஒருவரிக் கதைக்கு போதுமான சுவாரசியம் காட்சிகளில் சேர்க்கப்பட்டிருந்தால், நினைவுகளில் இன்னும் சிலகாலம் தங்கியிருப்பான் 'கஜினிகாந்த்'.

## மறதிச் சினிமா





தொகுப்பு
அனார்கலி



# தென்கிழக்கு திசையில் இருந்து

## அம்பாறை மாவட்டச் செயலர்

அம்பாறை மாவட்டத்தின் புதிய மாவட்டச் செயலராக டி.எம்.எல். பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.. பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஊவாமாகாண பிரதி பிரதம செயலாளராகக் கடமையாற்றி வந்த நிலையில் தற்போது இந்த நியமனத்தை பெற்றுக்கொண்டுள்ளார். இதுவரை மாவட்டச் செயலராக கடமையாற்றிவந்த துசித பி.வணிகசிங்க பொது நிர்வாக உள்ளாட்டலுவல்கள் அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே, 'தமிழ்பேசும் மகன் ஒருவர் இந்தக் கதிரையில் அமரும் காலம்தான் வருமா?' எனக் கேட்கிறார்கள் அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்கள்!



## புதிய உப வேந்தர்

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்குப் புதிய உப வேந்தர் ஒருவர் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளார்.

பல்கலைக்கழக உபவேந்தர் எம்.எம்.எம்.நாஜிமின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து புதிய உபவேந்தருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இதன்படி புதிய உபவேந்தர் நியமனத்துக்கென முன்னாள் உப வேந்தர் நாஜிம் உட்பட 15 பேர் வரை விண்ணப்பித்திருந்தனர்.

குறிப்பிட்ட விண்ண்ப்பதாரிகள் தொடர்பில் பல்கலைக்கழக பேரவையில் (கவுன்சில்) இடம் பெற்ற வாக்கெடுப்பில் முன்னாள் உபவேந்தர் நாஜிம் 13 வாக்குகளையும் அடுத்து மேலும் இருவர் முறையே 11, 10 வாக்குகளையும் பெற்றுள்ளனர். குறித்த மூவரது பெயர்களும் அரச தலைவருக்கு சிபார்சு செய்யப்படவுள்ளதாகவும், இந்த மூவருள் ஒருவரை அவர் புதிய உபவேந்தராக நியமிப்பாரெனவும் தகவல் தெரிவிக்கப்படு கின்றது. பெரும்பாலும் முன்னாள் உபவேந்தர் நாஜிமே மீண்டும் உபவேந்தராக நியமிக்கப்படலாமென தென்கிழக்கில் கருத்துப் பரி மாற்றங்கள் இடம்பெற்று

## வேண்டாம் அவர்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தராக முன்னாள் உபவேந்தர் எம்.எம்.எம்.நாஜிமை மீண்டும் நியமிக்க வேண்டாமென பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

இந்த ஆட்சேபனையை அரச தலைவர் மற்றும் பல்கலைக்கழக உயரிடங்களுக்கு தமது ஆசிரிய சங்கம் வலியுறுத்தியுள்ளதாகவும், உபவேந்தர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட வரை மீண்டும் அப்பதவிக்கு இணைத்துக் கொள்வது பொருத்தமற்றது எனவும் பல்கலைக்கழக ஆசிரிய சங்கத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான எம்.அப்துல் ஜப்பார் தெரிவித்துள்ளார்.

***கலகம் பிறந்தால் வழி பிறக்கும்***

## ஹஸனலியின் கவலை

"வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம். இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு சம உரிமையான அதிகாரங்களுடன்கூடிய அரசியல் தீர்வு எட்டப்படவேண்டுமென முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.அஷ்ரப் வலியுறுத்தி வந்தார்.

ஆனால் அவரது பாராம்பரியத்தில் வந்ததாகக் கூறிக்கொள்ளும் முஸ்லிம் காங்கிரஸின் இன்றைய தலைமை, அவருடைய கருத்துக்களை ஏற்று நடக்காது பயணிப்பது கவலையளிக்கிறது." என ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் தலைவரும், முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகமுமான எம்.ரி.ஹஸனலி கருத்து தெரிவித்துள்ளார்.



அக்கரைப்பற்றில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



## நெல் விலை வீழ்ச்சி!

அம்பாறை மாவட்டத்தின் முக்கிய விவசாயப் பிரிவுகளில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நீர் பற்றாக்குறை காரணமாக பல கண்டங்களில் நெற்செய்கைக்கு அனுமதி அளிக்கப்படாத நிலையில் நெல்விலை அதிகரிக்குமென விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால் நெல்விலை வெளிச்சந்தையில்கூட உயர்வடையவில்லை. தற்சமயம் அறுவடை செய்யப்பட்டு வரும் நெல்லை பொது இடங்களில் பரப்பி, வெய்யிலில் உலரவைத்து சேமித்து வைப்பதில் பெரும்பாலான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

## கோரிக்கை

அம்பாறை மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாப் பிரதேசமான பொத்துவில் அரச மருத்துவமனையை மத்திய அரசின் கீழ் பொறுப்பேற்று தரமுயர்த்துமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொத்துவிலில் இருந்து அக்கரைப்பற்று, அம்பாறை, கல்முனை, மொனராகல மருத்துவமனைகள் மிக நீண்ட தூரத்தில் (சுமார் 70கிலோ மீற்றர்) அமைந்திருப்பதால், சகல வசதிகளையும் கொண்டதாக பொத்துவில் மருத்துவமனை தரமுயர்த்தப்படுவது அவசியமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பிரதி சுகாதார அமைச்சர் கவனம் கொள்வாரா?

## பாய்வதற்கு உபாயமாம்

புதிய தேர்தல் முறையைத் தோற்கடிப்பதற்கு ஒன்றிணைந்த எதிரணியுடனும் பேசி ஆதரவைக்கோரப் போவதாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் சிலாகித்துப் பேசப்படுகின்றது.

முஸ்லிம் மாநாட்டில் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ள மேற்படி சூசகமான கருத்தாடல் குறித்து ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் தலைவரும் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகமுமான எம்.ரி.ஹஸனலியிடம் கருத்துக்கேட்டபோது, "மகிந்த பக்கம் பாய்வதற்கு எடுக்கும் ஹக்கீமின் உபாயம் இது" -என்றார்.

***அரச தலைவர் தேர்தல் ஞாபகத்துக்கு வருகிறது***



## காரை தீவிலும் போராட்டம்!

ஆள்சேர்ப்புத் திட்டத்துக்கு மாறாக கிழக்கு மாகாண ஆளுநரால் மேற்கொள்ளப்பட்ட சிற்றூழியர் நியமனங்களை ஆட்சேபித்தும், அமைய, சமயா சமய அடிப்படையில் பல வருடங்கள் கடமையாற்றி வரும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரியும் காரைதீவு பிரதேச சபையில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் இரு தினங்கள் முகாம் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதேச சபை நுழைவாயிலை மூடியும், எதிர்ப்பு வாசகங்களை உடைய பதாகைகளை ஏந்தியும் பிரதேச சபை முன்பாக பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

***வந்த காகம் இருந்த காகத்தைத் துரத்திய கதைதான்!***






## ரொனால்டோவுக்கு பதிலாக பேல்?

ரொனால்டோவின் இடத்தில் பேலை ஒப்பிட முடியுமா?. இந்தக் கேள்வியைக் கேட்டால் ரொனால்டோவின் ரசிகர்கள் சிலருக்குக் குருதிக் கொதிப்பு வந்துவிடலாம். ஆனால் இந்த ஒப்பீடு சரியானது என்கின்றனர் ரியல் மட்ரிட் நிர்வா கத்தினர்.

போர்த்துக்கல் அணியின் தலைவரான ரொனால்டோ கழகத்தைப் பொறுத்த மட்டில் ஸ்பெய்னின் ரியல் மட்ரிட்டுக்காக விளையாடி வந்தார். ரொனால்டோவுக்கும் மட்ரிட்டுக்கும் இடையில் ஏற்பட்ட ஊதிய ஒப்பந்தப் பிரச்சினையை அடுத்து அவர் மட்ரிட்டில் இருந்து பிரிந்து சென்று இத்தாலியின் யுவென்டாஸுடன் இணைந்துள்ளார். ரொனால்டோவின் இடம் மட்ரிட்டுக்கு என்றும் வெற்றிடம் என்று தெரிவிக்கப்படும் நிலையில் பேல் அந்த வெற்றிடத்தை ஈடுகட்டுவார் என்கிறது மட்ரிட் நிர்வாகம். இத்தனைக்கும் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் அவ்வப்போது புறக்கணி க்கப்படுபவர்தான் இந்த பேல்.



# கோக்லி தொட்ட இமயம்

இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி தொட்டுள்ள இமயம் குறித்துத்தான் கிரிக்கெட் உலகில் தற்போது பேச்சு.

இங்கிலாந்துக்கு எதிராக இங்கிலாந்தில் வைத்து எந்தவொரு டெஸ்ட் சதத்தையும பெறவில்லை என்கிற குறை கோக்லிக்கு இருந்தது. அது தற்போது இல்லாது போயுள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தாலும் கோக்லியின் தனிநபர் பெறுபேறு உச்சம்தான். முதல் இன்னிங்ஸில் 149, இரண்டாவது இன்னிங்ஸில் 51 என்று ஒட்டுமொத்தமாக 200 ஓட்டங்களை கோக்லி விளாசினார். இந்த சதம், அரைச் சதத்தின் உதவியுடன் அவர் டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்துக்கும் முன்னேறியுள்ளார்.

929 புள்ளிகளுடன் சுமார் 36 மாதங்களாக முதலிடத்தில் இருந்துவந்த சிமித்தை 934 புள்ளிகளுடன் பின்தள்ளியே உச்சம் தொட்டுள்ளார் கோக்லி.

விளையாட்டு

பிரகாஸ்



# தோல்விகளைத் தேடி...

இலங்கைக் கிரிக்கெட் அணியின் கதை தற்போது பெரும் சோகக்கட்டம் தான். சாண் ஏற எத்தனிக்கையில் முழம் சறுக்கும் நிலைப்பாடு இலங்கை கிரிக்கெட் அணியை ஆட்கொண்டுள்ளது. ஆனால் அணித் தெரிவுகளையும், இலங்கை கிரி க்கெட்டின் நகர்வுகளையும் பார்க்கையில் இலங்கை கிரிக்கெட் சபையின் பயணம் தோல்வியைத் தேடியதுதானா? என்றே எண்ணத் தோன்றுகிறது.

தென்னாபிரிக்கா-இலங்கை அணிகளுக்கு இடையில் அடுத்ததாக ஒரு ரி20 ஆட்டம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 14ஆம் திகதி இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்துக்கான இலங்கை அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் மலிங்க. இளம் வீரர்கள் அணியில் இருப்பது அவசியம் தான். ஆனால் அனுபவ முதிர்ச்சி என்பதும் வெற்றிக்கு இன்றியமையாதது.

ஐ.பி.எல். தொடரில் மூத்த வீரர்கள் நிறைந்திருந்த சென்னை சுப்பர் கிங்ஸின் வெற்றி, கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் அனுபவ வீரர்களைக் கொண்டிருந் குரோசியா இறுதிக்குத் தகுதி பெற்றமை என்பன இதற்கு ஆகச் சிறந்த எடுத்துக்காட்டு. பதிவுகள் இப்படி இருக்கையில் மலிங்கவைப் புறமொதுக்குதல் தகுமா...?



## மெல்டோனியத்துக்கு முன் மெல்டோனியத்துக்கு பின்

மெல்டோனியத்துக்கு முன், மெல்டோனியத்துக்குப் பின். மெல்டோனியம் ஏன் திடீரென இந்தப் பகுதியில் வருகிறது. வேறென்ன செய்வது ரஷ்ய ரென்னிஸ் புயல் மரிய செரபோவாவை இப்படித்தான் இப்போது பிரித்தறிய முடிகிறது.

மெல்டோனியம் என்ற ஊக்கமருந்தைப் பயன்படுத்தி இரண்டு ஆண்டுகள் தடைபெற்றார் மரிய செரபோவா. கடந்த 2015ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இரண்டு ஆண்டுகள் முடிவடைந்து தடைக்காலத்துக்குப் பின்னர் தற்போது அவர் மீண்டும் விளையாடி வந்தாலும் தடைபெறுவதற்கு முன்னர் இருந்த வேகத்தையும், விவேகத்தையும் செரபோவாவிடம் காண முடிவதில்லை. இதனால்தான் செரபோவாவின் விளையாட்டுத் திறனைப் பற்றிப் பேசுவதற்கு மெல்டோனியத்துக்கு முன்னர், மெல்டோனியத்துக்குப் பின்னர் என்று பிரிக்க வேண்டியுள்ளது. தடைக்காலம் முடிவடைந்து மீண்டும் களந்திரும்பிய போதிலும் இன்றளவும் செரபோபாவால் முக்கிய தொடரெதையும் கைப்பற்ற இயலவில்லை. இவ்வளவு ஏன் தற்போது நடைபெற்றுவரும் றொயேர்ஸ் கிண்ணத் தொடரிலும் அவரின் உச்சக்கட்டப் பெறுதி காலிறுதிதான்.

## இந்திய டெஸ்ட் அணியில் மூன்று தமிழ் வீரர்கள்

இலங்கை அணியின் முரளிதரனுக்குப் பின்னர் இன்னுமொரு தமிழ் வீரர் இடம்பிடிக்க மாட்டாரா என்று தவமிருக்கிறோம். ஆனால் 120 கோடி சனத்தொகையுடைய இந்தியாவில் ஒன்றல்ல இரண்டல்ல மூன்று தமிழ் வீரர்கள் இடம்பிடித்து விளையாடும் சந்தர்ப்பம் இங்கிலாந்துத் தொடரில் நடைபெற்று வருகிறது.

இந்திய டெஸ்ட் அணியின் இலக்குக் காப்பாளர் சகா காயமடைந்ததை அடுத்து பதில் வீரர்களாக இணைக்கப்பட்ட பன்ட், டினேஸ் கார்த்திக் இருவரின் டினேஸ் கார்த்திக் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் சேர்க்கப்பட்டார். இதையடுத்தே மூன்று தமிழ் வீரர்கள் என்ற அதிசய நிகழ்வு தற்போது நடைபெற்றுள்ளது.







# யாழ்.ரமணன் எனும் ஊடகப்போராளி...



யாழ்.ரமணன் எனப் பலராலும் அழைக்கப்பட்ட இராஜேஸ்வரன் என்ற ஊடகப்போராளி கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை அன்று அவருடைய 63ஆவது வயதில் மறைந்திருக்கிறார். அவரது மறைவு இலங்கை இசையுலகத்தினருடன் மாத்திரம் நின்றுவிடாது இந்திய இசைப் பரப்பினர்வரை வியாபித்துத் துயரத்தை ஏற்படுத்தியி ருக்கிறது. தமிழ் மக்களின் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு இசையால் எழுச்சியூட்டியவர் இவர். மிகச் சிறந்த கிற்றார் வாத்திய இசைக் கலைஞர். எல்லாவற்றுக்கும் மேலாக முதலில் அவர் ஓர் ஊடகப்போராளி! உதயனின் உதவி ஆசிரியராகப் பேனா ஏந்தியவர். அவர் பயின்றிருந்த சட்டக் கற்கை அவருடைய ஊடகப்பணியை மேலும் செழிப்பாயிருந்தது.

**உதயனுடன் இணைந்து விடுதலைக்கான குரல்**

யாழ்ப்பாணத்தில் பிறந்த இவருடைய இயற்பெயர் இராஜேந்திரன் இராஜேஸ்வரன். பிற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் 'ராகம்ஸ்' எனும் பெயருடைய இசைக்குழுவை நிறுவித் தம்முடைய இசைமீதான காதலை இறுதிவரை வெளிப்படுத்திக்கொண்டே இருந்தார். ஆனால், இவருடைய இசைப் பயணம் 'ராகம்ஸ்'க்கு முன்பே பல புரட்சிகரச் சாதனைகளை நிகழ்த்தி விட்டிருந்தது. தமது இனம் சார்ந்த மக்களுக்காக ஆயுதம் ஏந்திய போராளிகளின் விடுதலை வேட்கை முளைவிட்டிருந்த காலத்தில் நிகழ்ந்த ஒன்றுதான் ரமணனின் இசை வேட்கையும். கவிஞர் புதுவை இரத்தினதுரை கவிதைகளில் ஈழப் புரட்சியைக் கருத்தாக்கிப் பரப்பியதுபோல ரமணன் தனது பொப் இசையில். ஈழத்து இசையில் தமிழ் மக்களின் விடுதலை வேட்கையைத் தன்சார்பாக வெளிக்கொணர்ந்தார். தமிழீழ விடுதலைப்போராட்டம் உச்சமடைந்திருந்த காலத்தில் ரமணனின் விடுதலை எழுச்சிப் பாடல்களும் உச்ச ஸ்தாயி பெற்றன.



அவை தமிழ் மக்களின் குரலாகவே ஓங்கி ஒலித்தன.

தவிரவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்கள் பரந்து விரிந்தவை. ஈழப்போராட்டத்துடன் பிணைந்திருந்து. தமிழ் மக்களின் குரலாக. அடக்குமுறையாளர்களின் கரங்களுக்குள் சிக்கியிருந்தும்கூடச் சிரம் தாழ்த்தாமல் உண்மைச் செய்திகளைப் பல எச்சரிக்கைகள், ஆபத்துக்களுக்கு நடுவிலும் துணிவுடன் வெளிப்படுத்திக் கொண்டிருந்த உதயன் பத்திரிகையில் அவர் அங்கம் வகித்ததுவும் அவர் விடுதலைப்போராட்டத்துக்கு ஆற்றிய விசாலமான பங்களிப்புக்களில் ஒன்றே.

> குண்டு வீச்சுக்கள், உலங்கு வானூர்தித் தாக்குதல்கள், இராணுவ நெருக்கீடுகள், மற்றும் உதயன் மீதான கழுகுப் பார்வை என ஆபத்துக்கள் பலவாகி இருந்தன. அவற்றுக்கு நடுவிலும், தனது வலுவிழந்த கால்களுடன் அவர் ஆற்றிய பணிகளும் போராட்டங்களும் நிச்சயம் நினைவு கூரப்பட வேண்டியவை.

**வாழ்க்கைப் போராட்டம்**

கிட்டத்தட்ட ஒரு மாத காலப்பகுதிதான் இருக்கலாம்! அவரைப் புற்றுநோய் தனக்குள் முற்றாக மூழ்கடித்துவிட்டமை கூட அதன் பிறகு அறியப்பட்ட ஒன்றுதான். வாழ்க்கையின் சவால்களும். அதனுடன் போராடி அவர் பெற்றிருந்த வெற்றிகளும் இத்தகைய கொடிய நோயையும் அலட்சியப்படுத்தியிருக்கலாம். ஆகையால் அது அவரைப் பொறுத்த வரையில் ஆச்சரியத்துக்கு உரியதாக இருக்காது!

கால் வலுவிழந்த. நடக்க முடியாத ஒருவராக இருந்த இராஜேஸ்வரன் ஈழத்தில் அதிகம் வளர்ந்திராத இசைத் துறையைத் தனது கையில் ஏந்தித் தன்னால் முடிந்த பங்களிப்புக்களை விடுதலைப்போராட்டத்துக்கு ஆற்ற முனைந்திருந்தார். ஆனால். அந்த முனைப்பே இயன்றளவில் ஈழப்போராட்டத்துக்குத் தேவையான வலுவைப் பெற்றும் கொடுத்திருந்தது. ஈழத்தைப் பொறுத்தவரை இசைத்துறையின் வளர்ச்சியும். இசைப் புலத்தினரின் ஈடுபாடும் அதி உச்சமாக



இல்லை. இந்தியா சார்ந்தும். இந்திய இசை சார்ந்தும் இருப்பவர்கள்கூட அவ்வளவாக அதில் காத்திரமான வளர்ச்சியைக் கண்டடைந்துவிட வில்லை. ஆனால். ஈழத்தில் கிடைத்தவற்றைக் கொண்டு 'ஈழத்து இசை' என்று அடையாளப்படுத்தக் கூடிய வகையில் அவர் சாதித்தமை பேசுபொருளுக்குரியதே.

**ஊடகப் போராளியாக, உதயனில்...**

இலங்கைச் சட்டக் கல்லூரியில் சட்டக் கற்கையை நிறைவுசெய்து சட்டத்தரணியான இராஜேஸ்வரனின் உதயனுடனான ஊடாட்டம் அதிகம் சிலாகிக்கப்பட வேண்டியது. சட்டத்தரணியானாலும் ஊடகத் துறையில் அவருக்கு இருந்த அதீத ஈர்ப்பு அவரை உதயனுடன் பிணைத்தது. உதவி ஆசிரியரானார்.

1990ஆம் ஆண்டுக்கும் 1996ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் உதவி ஆசிரியராக மாத்திரமன்றி உதயனுக்குப் பல்வேறு தளங்களிலும் சட்ட ஆலோசகராகவும் தன்னாலான பணிகளை ஆற்றினார். அவ்வேளையில் நிலவிய போர் நெருக்கடிகள், உதயன் மீதான அரச, ஆயுத ஒடுக்குமுறைகள் என்பவை அவருடைய பணியை மேலும் அவாவி நின்றன. போர்க்காலச் சூழல் உதயனுக்கு மாத்திரமன்றி. குறிப்பிட்ட காலப்பகுதியில் குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தது. குண்டு வீச்சுக்கள். உலங்கு வானூர்தித் தாக்குதல்கள், இராணுவ நெருக்கீடுகள், மற்றும் உதயன் மீதான கழுகுப் பார்வை என ஆபத்துக்கள் பலவாகி இருந்தன.

அவற்றுக்கு நடுவிலும், தனது வலுவிழந்த கால்களுடன் அவர் ஆற்றிய பணிகளும் போராட்டங்களும் நிச்சயம் நினைவுகூரப்பட வேண்டியவை. அவரது மறைவுக்கு உதயன் குழுமத்தின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

---

## வெளிச்சங்கள் காணா மனிதர்கள்



பறவைகள் கூடு கட்டாத
எம் நிலங்களின் தேகமெங்கும்
அரங்கேறுகிறது நிதம் கூத்து

மழை பெய்து நிரம்பாத கிணறுகளில்
கல்பெயர்ந்து முளைத்த சிறு மரங்களில்
படிகிறது எச்சிலின் துளி...

உறைந்த நீரெனச் சரியும் காதலின் முற்றத்தில்
நீலம் குடித்த மலர்கள்
இறுதியில் மகுடியில் சாய்ந்திட வஞ்சிக்கப்பட்ட அன்பு
இடுக்குகளிலிருந்து முகிழ்ந்து மூச்சுத் திணறுகிறது

பிரியும் கணம் தாழாது
புதைந்த கண்ணிவெடியென

பதறுகிறது உணர்வுகளின் வெப்பம்
இடம்பெயரும் நிலவு சோகையுடன் சுழலாய் மேலெழும்ப
உயிர்கள் எப்போதோ உருகியிருக்கின்றன

ஒரு துன்பியல் சித்திரமென
தாலமுக் காட்டின் வாசனையோடு
சிதறுகிறது பூமிப்பிஞ்சு

இறுதி முத்தங்களின் சத்தம் தொலைந்திட
இன்னும் பெய்யவில்லை வெளிச்சம்
மனிதர்கள் கடந்து செல்லும் நிலங்களில்

அடைக்க அடைக்கப் பீறிடுகிறது
துயரத்தின் ஊற்றுக்கண்

கவிதை
பாதுவி உமாசுதர்மா

# VACANCIES

இலங்கையின் பிரபல கல்லூரியின்
வவுனியா கிளைகளுக்கு

**ENGLISH TEACHER**
**COMPUTER LECTURER**
**RECEPTIONIST**

**Call : 077-0319550**

**BRITISH COLLEGE OF EDUCATION**
email.- britishcollegekandy@gmail

---

பத்திரகாளி சமேத ஸ்ரீ ஆதிசிவ வீரபத்திர சுவாமி
தேவஸ்தான பரிபாலன சபை

## அந்தணக் குருக்கள் தேவை

பருத்தித்துறை வியாபாரிமூலை ஸ்ரீ பத்திரகாளி சமேத ஆதி சிவ வீரபத்திரர் ஆலயத்துக்கு ஆச்சார்யா அபிஷேகம் மேற் கொண்ட சகல கிரியைகளும் செய்யக்கூடிய குருக்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. குடும்பமாகத் தங்கி இருக்கக் கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 162 0693,**
**077 538 9219** (CS/18683)(11) **ஆலய பரிபாலன சபை**

---

## மரண அறிவித்தல்

## கந்தையா சிவகுரு



தோற்றம் 04.03.1934 மறைவு 09.08.2018

செம்மலை, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவகுரு கடந்த (09.08.2018) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு ஏகபுத்திரனும் மயில்வாகனத்தின் பாசமிகு வளர்ப்பு மகனும் காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளையின் கணவரும் சறோஜாதேவி, சாந்தகுமாரி, அசோக்குமார் (பிரான்ஸ்), இராஜகுமாரி (இந்தியா), கமலகுமாரி, யோகேஸ்வரன் (பிரான்ஸ்), விஜயகுமாரி, சந்தியகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அழகையா, சிவபாலன், வரதா, மனோகரன், சந்திரசேகரம், சங்கீதா, அமிர்தலிங்கம், அருமைநாயகம் ஆகியோரின் மாமனாரும் பிரதீபன், மயூரதன், கஜதீபன், மதுரா, சிவதீபன் (கனடா), சுஜாதா (பிரான்ஸ்), சுதர்சன், பிரியந்தி (சுவிஸ்), அபிஷேகா, அனுஷ் (பிரான்ஸ்), காயந்திரி (லண்டன்), கௌசிகா, குவிதன், விதுசன், பிரவீன், தர்சன் (பிரான்ஸ்), திலக்சனா, பகலவன், சாரங்கனி, சாரகன், மகிழினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் சந்தோஷ், சர்வித் (பிரான்ஸ்), பிரகத், றித்வா (லண்டன்), அபிலாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.30 மணியளவில் செம்மலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: நிரஞ்சன் பிரியந்தி (சுவிஸ்)**
**சாங்கர் சுஜாதா (பிரான்ஸ்)**
(CS 18967/15/18)

---

### வாடகைக்கு

சண்டிலிப்பாயில் வீடு வாடகைக்குண்டு.

**தொடர்பு - 076 701 3060**

### பசு விற்பனைக்கு

நல்லின யேசி வகையைச் சேர்ந்த 20 நாள்களில் கன்று ஈனக் கூடிய பசு விற்பனைக்குண்டு.
(கன்னி நாகு)

**தொடர்பு - 077 317 7566**

### காணி விற்பனைக்கு

யாழ். மருத்துவபீடத்துக்கு முன்பாக பொற்பதி வீதியில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 076 697 2287,**
**077 3058 782**

### வீடு விற்பனைக்கு

நல்லூர் ஆலயச் சூழலில் 1 1/2 பரப்புக் காணியில் அமைந்த 5 அறைகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு.
நேரடி விற்பனை மட்டும்.

தொடர்பு :- **076 697 2287** (ACO/5431)(10)

### பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் அப்பா, அம்மா மட்டுமுள்ள வீட்டிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய, பொறுப்புக்களற்ற வடபகுதியைச் சேர்ந்த வயது 30 - 38 வரையுள்ள பணிப்பெண் தேவை. சம்பளம் 28000 - 30000

**தொடர்பு - 076 225 6684**

### வீடு வாடகைக்கு

பிறவுண் றோட்டில் 6 அறைகள் மற்றும் பார்க்கிங் வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது) **தொடர்பு - 070 308 1575**

### காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு, பனிப்புலம் செட்டிய குறிச்சியில் வீட்டுடன் கூடிய ஏழு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 077 700 9049**

### வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல நகைக்கடை, பான்சி கடைக்கு அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவை.

**தொடர்பு - 077 3515 980,**
**077 3734 109**

### மாபிள் வேலை

உங்கள் வீட்டிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் வேலை செய்து தரப்படும். சதுர அடி ரூபா 45 /=

**தொடர்பு - 077 3341 281**

---

**ES Printers**

பனர் பிரின்ட் (Banner) 35/=

# 357, Kasthuriyar Road, Jaffna.

---

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3068 திகதி: 2018.08.11 சனிக்கிழமை
பச்சை

| வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் |
|---|---|---|
| 08 19 43 70 Z | 59 | 36,806,805/- |

Web: www.dlb.lk

### அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 339
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.08.11

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 59,026,665/-

| வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து |
|---|---|
| 24 27 34 42 | S |

### சங்வர்தன வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் ▶ 168
சீட்டிழுப்பு திகதி ▶ 11.08.2018
சிவப்பு

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| F | 01 49 57 | 05 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.1, 03, 83,980/=

### ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| அம்பாறை | 5685353 |
| கம்பஹா | 6606959 |
| மொனறாகல | 4322540 |
| கண்டி | 9437928 |
| கிளிநொச்சி | 3445349 |

2018.08.16 ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 06.01.1940 மறைவு 13.07.2018



கடந்த 13.07.2018 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## செல்லப்பா தனபாலசிங்கம்

(மீசைப் பாலு)

அவர்களது 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இன்று (12.08.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தங்களை இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஞானசம்பந்தர் வீதி,
விளாத்தியடி, உரும்பிராய் வடக்கு. **குடும்பத்தினர்.**

---




"எனது வாழ்வு பூரணமாவது அன்பான தகப்பன் சிநேகமான கணவன், விசுவாசமுள்ள நண்பன் போன்றே இந்த அனைத்து பாத்திரங்களினுடாவாகும். வெற்றிகரு எனக்கு சக்தி கிடைப்பது Biovita 40+ இன் மூலமாகும்."

உங்கள் வயது 40 ஐத் தாண்டும் போது தலைமயிர் வெண்மையாதல் மூலம் முதிர்ந்த தோற்றத்தைக் காட்டும். வயது முதிர்வடைவதுடன் விட்டமின் B 12, போலிக் அமிலம், விட்டமின் C, B5, Calcium போன்ற போஷாக்குப் பிரிவுகள் உடலில் தேங்கி நிற்பது குறைவாகின்றது. ஆகையால் அவ்வாறான உள்ளீடு கொண்ட Biovita 40+ மேலதிக போஷாக்கினால் அந்த சிக்கலைத் தீர்த்துக் கொள்ள முடியும்.

மருத்துவர்
தினேஷ் விஜேதுங்க

விநியோகிப்பு:
**ஆயுபாமா மற்றும் நியுட்ரா (தனியார்) கம்பனி,**
**இலக்கம் 981/A/1, மாஎலிய, ஜா எல.**
**உடனடி அழைப்பு: 0770 103 796**

## மரண அறிவித்தல்



## திருமதி மங்கையற்கரசி குமாரசிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியை)**

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், 4 ஆம் வட்டாரம் முள்ளியவளையை நிரந்தர வதிவிடமாகவும், கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி குமாரசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியை) 09.08.2018 வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சிதம்பரம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற குமாரசிங்கத்தின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராசாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தம்பையா மற்றும் வேலுப்பிள்ளை, சர்வானந்தராஜா (கனகசிங்கம்), பொன்னம்மா ஆகியோரின் மைத்துனியும், உதயராணி (ஓய்வுபெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர், முல்லை வலயம்), காலஞ்சென்ற ஜெயரஞ்சினி மற்றும் உதயகுமார் (கனடா), முல்லைக்குமார் (பிரதி அதிபர், வவுனியா தமிழ் மகாவித்தியாலயம்), தேவகுமார், தேவகி (கனடா), தேவராணி (கனடா), விஜயகுமார் (கனடா), விஜயராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், முனீஸ்வரன், பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற முகாமையாளர், ப.நோ.கூ. சங்கம்), றஜனி (கனடா), தனலட்சுமி (ஆசிரியர், பூந்தோட்டம் மகாவித்தியாலயம்), கெங்கா, ராஜவரன் (கனடா), சிவபாஸ்கரன் (கனடா), தனப்பிரியா (கனடா), தேவதாஸ் ( கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயப்பிரணவன், ரிஷபாலன், யரூரன், யவணராம், சோபனா, காலஞ்சென்ற ஜனோஜா மற்றும் செந்தூரன், தினேஸ்கரன், கதீஸ்கரன், சகானா, அஜன், ஜனன், அபிநுஷன், தேனுஜா, அனுஷன், சாருஷன், துளிர், தூயவன், ஆதித்யா, அஸ்வினா, திவ்யன், நிவேதா, கஜனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆரபி, ஆரளன், ஆரகன், அஜனியா, சரண்யா, பவித்திரன், குமரன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2018) ஞாயிற்றுக்கிழமை 4ஆம் வட்டாரம், முள்ளியவளையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கற்பூரப்புல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**4ஆம் வட்டாரம்,**
**முள்ளியவளை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS/18938)(11,17)

**077 288 0807, +905 813 0161(கனடா)**



## இதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

### இதயநாடிகளில் நோய் அன்ஜைனா - மார்பு அடைப்பு

கொழுப்பு படிவதால் நாளங்கள் சுருங்கி சீரான இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது. மேலும் இவை மார்புவலி மற்றும் இதயபாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

**நெஞ்சடைப்புக்கான காரணிகள்**
புகைத்தல், உயர்இரத்தஅழுத்தம்,
அதிக கொழுப்புச்சத்து, நீரிழிவு

நெஞ்சுவலி, மார்படைப்பையும்
பூரணமாகக் குணப்படுத்தும்
எமது ஆயுர் வேதமருத்துவம்
உன்னதமானது.
நிரூபணமானது




FAIR PHARMA (PVT) LTD
செலிங்கோ ஹவுஸ், 10ஆம் மாடி, கிழக்கு,
இல.69 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

**Hotline: 077 755 5600 / 077770 8310/ 077 770 8330**
**Office: 011 438 8200 / 4 388 100/ 4 388 101 /4 388 102**

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA,
ஆயுர்வேத மருத்துவசபை. BIO & ISO 9001:2008
அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனம்.

**எங்களால் குணப்படுத்தப்படுகிறது**
- இருதயநோய்
- நோய் எதிர்ப்பு சக்தி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புக்கள்
- மூட்டு வாதம்
- மூட்டுவலி / முதுகு வலி
- புரோஸ்டேற் பிரச்சினைகள்
- ஒற்றைத் தலைவலி
- புழையழற்சி
- மனஅழுத்தம்
- இருமல் / சளி
- படுக்கைப்புண்கள்
- நாட்பட்ட காயங்கள்
- நீரிழிவு நோய்கள்
- வைரஸ் தொற்றுக்கள்
- பாலியல் குறைபாடு
- மண்குஷ்டம்


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம் 14.12.1939 — மறைவு 13.07.2018

13.07.2018 வெள்ளிக்கிழமை
இறைபதம் அடைந்த எமது குலதெய்வம்

### அமரர் கந்தையா நடராசா

**(ஓய்வு பெற்ற அதிபர்)**


அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் மதிய போசனமும் நாளை (13.08.2018) திங்கட்கிழமை செல்வச்சந்நிதி ஆலயத்தில் உள்ள **அமரர் செ. விசாகரத்தினஐயா மடத்தில்** நடைபெற உள்ளதால் உற்றார், உறவினர், நண்புர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல. 01, பண்டாரக்குளம்
ஒழுங்கை, நல்லூர்.

றூபாவதி
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

## சின்னப்பு பொன்னுத்துரை



பிறப்பு 07.04.1939 — இறப்பு 09.08.2018

யாழ். ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு பொன்னுத்துரை கடந்த (09.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணன் கதிராசி தம்பதிகளின் அன்பு மருமகனும், சாரதாம்பாளின் அன்புக் கணவரும், சுதாஜினி (லண்டன்), சுதர்ஜினி (நியூசிலாந்து), சுதன் (பிரான்ஸ்), துஷ்யந்தி (கோதை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவதயாளன் மற்றும் சிவானந்தன், காயத்திரி, சத்தியன் ஆகியோரின் அன்புமாமனாரும், கஜீசன், எமிகா, யதுசன், தனுசன், சைலினா, எழிலிசை ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2018) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 33, பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
021 223 2307

தகவல்:
லயன். ப. செல்லத்துரை (J.P)
(சகலன் - 0777726501)
சுதன் (பிரான்ஸ், மகன் - +33618315858)

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# இறைதிட்டம் தேடும் இளையோர் பயணம்

## யாழ் மறைமாவட்ட இளையோர் மாநாடு பற்றிய பார்வை

யாழ் மறை மாவட்டத்தில் 2018ஆம் ஆண்டு இளையோர் ஆண்டாக கொண்டாடப்படு வதை சிறப்பிக்கும் முகமாக "இறை திட்டம் தேடும் இளையோர் பயணம்" என்ற தொனிப்பொருளில் இளை யோர் மாநாடு ஒன்று கடந்த மாதம் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை கிளிநொச்சி ஆரோபணம் இளை யோர் இல்லத்தில் யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குனர் அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது பற்றி இந்த ஆக்கம் பேசு கிறது. இந்த ஆக்கத்துக்கான தகவல்களை யாழ். மறைமா வட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குனர் அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் தந்துதவினார்.

**யாழ் மறைமாவட்டம் முழுவதிலும் இருந்து இளைஞர்கள்**

இறை திட்டம் தேடும் இளையோர் பயணம் என்ற தொனிப் பொருளில் கடந்த மாதம் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெற்ற மேற்படி மாநாட்டில் யாழ்ப்பாணம் மறை மாவட்டத்தில் உள்ள ஆறு மறைக் கோட்டங்களிலிருந்தும் இளையோர் கலந்து கொண்டனர். யாழ். மறைக்கோட்டத் தில் இருந்து 19 இளையோரும் இளவாலை மறைக்கோட் டத்தில் இருந்து 5 இளையோ ரும் தீவகம் மறைக்கோட்டத் தில் இருந்து 16 இளையோரும் பருத்தித்துறை மறைக்கோட் டத்தில் இருந்து 16 இளையோ ரும் கிளிநொச்சி மறைக்கோட் டத்தில் இருந்து 23 இளையோ ரும் முல்லைத்தீவு மறைக் கோட்டத்தில் இருந்து 17 இளை யோரும் செயற்குழு உறுப்பி னர்களாக 21 இளையோரு மாக மொத்தம் 117 இளை யோர் கலந்து கொண்டனர்.




22ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 6.30 மணிக்கு கொடியேற்றல் நிகழ் வுடன் ஆரம்பமான இந்த மாநாடு 24ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 12 மணியளவில் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தலை மையில் நடைபெற்ற திருப்பலியுடன் நிறைவடைந்தது. இந்த மாநாட்டில் சமகால இளையோரின் வாழ்வுடன் தொடர்புள்ள விடயங்களை உள்ளடக்கிய கருத்துரைகளும் குழு ஆய்வு களும் கலை நிகழ்வுகளும் நடைபெற்றமை இங்கு சிறப்பு டன் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

**இளையோர் மாநாட்டில் என்ன நடந்தது**

கொடியேற்றத்துடன் ஆரம்பமான முதலாம் நாள் நிகழ்வில் இறைத்திட்டம் தேடும் இளையோர் பயணம் என்னும் தலைப்பில் குழுச்செயற்பாடுகள் எம்.வி.இ.இரவிச்சந்திரன்

> இன்றைய இளைஞர்கள் மேல் சாட்டப்படும் அனைத்து பிரச்சினைகளுக்கும் முக்கிய அடிப்படைக் காரணம் போதைப்பொருள் மற்றும் குடிவெறி எனலாம். அன்றாடம் நடக்கும் வாள் வெட்டுக்கள், வீதி விபத்துக்கள், தற் கொலைகள், மற்றும் இளைஞர்கள் தெரடர்பான விபரீதங்கள் அனைத் தும் இதனாலேயே ஏற்படுகிறது.

அடிகளாரால் நடத்தப்பட்டது. காலை தியானத்துடன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இலக் கமைத்தல் என்னும் தலைப்பில் கிளறீசியன் சபையை சேர்ந்த மில்பர் அடிகளாரால் உரை வழங்கப்பட்டது. வன்முறையற்ற தொடர்பா டல் என்னும் தலைப்பில் விஜயேந்திரன் அ.ம.தி அடிகளார் கருத்துரை வழங்கினார். மதிய உணவை முடித்துக் கொண்டு குழு விளையாட்டுக்கள் நடைபெற்றன. யாழ். மறை மாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குனர் அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் சமூகத்தொடர்பு சாத னங்களும் இளையோரும் என்னும் தலைப்பில் உரை வழங்கினார் இன்றைய சமூகம் எதிர்பார்க்கும் தல மைத்துவம் என்னும் தலைப்பில் ஆனந்தராஜா அமலவ என் உரை வழங்கினார் நற்கருணை வழிபாடு, இரவு




உணவு மகிழ்வூட்டல் நிகழ்வுகளுடன் அன்றைய தின நிகழ்வுகள் முடிவுக்கு வந்தன. இறுதி நாள் நிகழ்வுகள் உன் னால் முடியும் என்ற நவனீதன் உரையைத் தொடர்ந்து நிர்வாகக்குழு தெரிவுசெய்தல் மீளாய்வு திருப்பலி மதிய உணவு என்பவற்றுடன் இளையோர் மாநாட்டு நிகழ்வுகள் முடிவிற்கு வந்தன.

**மாநாட்டில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள்**

யாழ் மறைமவட்ட பங்குகளில் இளையோர் மன்றங்களை வலுப்படுத்தி புதியவர்களை இணைத்தல், இளையோர் மன் றங்கள் இல்லாத யாழ். மறைமவட்ட பங்குகளில் புதிய இளையோர் மன்றங்களை உருவாக்குதல், யாழ் மறைமா வட்ட இளையோர் ஒன்றியம், மறைக்கோட்ட இளையோர் ஒன்றியங்கள்ளையும் பங்கு இளையோர் மன்றங்களையும் வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல் என்ற மூன்று முக் கிய தீர்மானங்கள் மாநாட்டின் முடிவில் முன்வைக்கப்பட்டன. இன்றைய இளைஞர்கள் மேல் சாட்டப்படும் அனைத்து பிரச் சினைகளுக்கும் முக்கிய அடிப்படைக் காரணம் போதைப் பொருள் மற்றும் குடிவெறி எனலாம். அன்றாடம் நடக்கும் வாள்வெட்டுக்கள், வீதி விபத்துக்கள், தற்கொலைகள், மற் றும் இளைஞர்கள் தெரடர்பான விபரீதங்கள் அனைத்தும் இதனாலேயே ஏற்படுகிறது. வீதி விபத்தை விடுங்கள், வேகக் கட்டுப்பாட்டை மீறி வீதிக்கு வெளியே இருக்கும் மதிலிலும் மின்கம்பங்களிலும் மோதி இறப்போர் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. பாட சாலை மாணவர்கள் கட்டுப்படுத்த முடியாத அள விற்கு போதைப்பொருளுக்கு அடிமையாகி என்ன செய்வதென்று தெரியாது வன்முறையிலும் சிறிய விடயத்திற்கும் தற்கொலையிலும் ஈடுபடுகிறார் கள். இந்த பிரச்சினைளுக்கும் தேசிய ரீதியில் ஏதாவது செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் தலைவராகிய கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்ட கையி டம் அன்பு வேண்டுகோள் விடுக்கிறது.

மாநாடு இலங்கை தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் தலைவராகிய கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலை மையில் தேசிய ரீதியில் எல்லா இளையோரும் குறிப்பாக தமிழ் இளையோரும் தம் வாழ்வின் அர்த்தத்தையும் ஆளத்தையும் உணர்ந்து வாழ இறை வரம் வேண்டுவோம்.

**இளையோரை மையப்படுத்திய உலக ஆயர் மன்றம்**

இவ்வருடம் (2018) ஐப்பசி மாதம் வத்திக்கா னில் 15ஆவது உலக ஆயர் மன்றம் நடைபெற உள்ளது. இந்த உலக ஆயர் மன்றத்தின் மையப்பொருளாக இருப்பவர்கள் இளையோரே. 'இளையோர் நம்பிக்கையும் அழைத்தலைத் தேர்ந்து தெளிதலும்' என்ற தொனிப்பொருளில் திருத்தந்தையின் தலைமையில் ஆயர்கள் ஒன்றுகூடி, இந்த மாமன்றத்தினை நடத்தவிருக்கிறார்கள். இதற்குரிய ஆயத்த ஏற்பாடுகள் வத் திக்கானில் நடைபெற்றுவருவதோடு உலகின் பல பகுதிகளில் வாழ்ந்துவரும் பல்லாயிரக்கணக்கான இளையோரும் இதற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றார்கள். இந்த மாமன் றத்திற்கு ஒரு தயாரிப்பாக உலகின் பல நாடுகளிலிருந்தும் அழைக்கப்பட்டிருந்த 300ற்கும் அதிகமான இளையோர் இந்த வருடம் மாசி மாதத்தின் நடுப்பகுதியில் உரோம் நகரில் மேற்கொண்ட சந்திப்பின் இறுதியில் இளையோர் ஏடு ஒன் றைத் தயாரித்தார்கள். தாங்கள் உருவாக்கியுள்ள இந்த ஏடு ஓர் இறையியல் கொள்கைத் திரட்டு அல்ல என்றும், ஆயர் கள் மேற்கொள்ளும் விவாதங்களில் உதவியாக இருக்கும் ஒரு வழிகாட்டி என்றும் இளையோர் இந்த ஏட்டின் முகவு ரையில் தெரிவித்துள்ளனர். இந்த ஏடு உரோமையில் கூடி யிருந்த 300ற்கும் அதிகமான இளையோரும், சமூக வலைத்தளங்கள் வழியே உல கெங்கிலுமிருந்து தொடர்பு கொண்ட 15 ஆயிரத்துக்கு மேற் பட்ட இளையோரும் இணைந்து மேற்கொண்ட விவாதங்களின் முடிவில் உருவாக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இளை யோர் உருவாக்கியுள்ள இந்த ஏடு இவ்வருடம் குருத்தோலை ஞாயிறன்று கொண்டாடப்பட்ட இளையோர் தினத்தில் வத்திக் கான் புனித பேதுரு வளாகத்தில் நடைபெற்ற திருப்பலியின் இறுதி யில் திருத்தந்தையிடம் ஒப்ப டைக்கப்பட்டது.

இவ்வருடம் குருத்தோலை ஞாயிறன்று 33 ஆவது உலக இளையோர் தினம் கொண்டாடப் பட்டது. வானதூதர் கபிரியேல், "மரியா அஞ்சவேண்டாம் கடவுளின் அருளை கண்டடைந் துள்ளீர்" (லூக்கா 1:30) என்று இளம் பெண் மரியாவிடம் கூறிய வார்த்தைகள் இந்த நாளின் விருதுவாக்காக அறிவிக் கப்பட்டது. இந்த விருதுவாக்கில் காணப்படும் இரண்டு பகு திகளும் மிகவும் ஆழமான இறையியல் கருத்துக்களை உள்ளடக்கியவையாக அமைந்துள்ளன. "அஞ்சவேண் டாம்" "கடவுளின் அருளை கண்டடைந்துள்ளீர்" என்பவை இளையோர் அச்சம் தவிர்த்து இறைவனின் அருளால் துணி வுகொள்ள வேண்டும். என்ற வழிகாட்டலை தருகின்றது. இளமைத்துடிப்போடும், வாலிப மிடுக்கோடும், உலகில் மாற்றங்களை நிகழ்த்தும் இளமைப் பராயத்துக்குள் பய ணிக்கும் இளையோர், தமது வாழ்வின் பல்வேறு தளங்க ளிலும் தமது அழைப்பைக் கண்டுபிடித்து வாழ்வில் வரும் அச்சங்களை தவிர்த்து இறை அருளால் துணிவு பெற்று தமது வாழ்வின் முழுமையாகிய இறைவனை நோக்கி பய ணிக்க வேண்டும். இந்தப் பயணம் சிலருக்கு சுகமானதாகவும் பலருக்கு சுமையானதாகவும் அமைந்தி ருக்கும். இருப்பினும் பயணத்தில் உறுதியாக இருந்து இறை



திட்டத்தைத் தேடி இறைவனை நோக்கி பயணிக்க வேண் டும். இறைதிட்டம் தேடிய பயணத்தில் திருச்சபை இளையோ ருக்கு வழித்துணையாக இருக்க வேண்டும்.

அத்துடன் நீண்ட கொடிய உள்நாட்டுப் போரின் விளைவாக ஒரு சந்ததி அழிக்கப்பட்டு நல்ல தலைமைத்துவத்திற்கான வெற்றிட வரலாற்றுப் புள்ளியில் தமிழினம் தத்தளிக்கும் இவ்வேளையில் இளையோர் தமது இருப்பை உறுதிசெய்து வலுப்படுத்தி, தமது இளமையைச் சிதைக்க கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் சவால்களை வெற்றிகொண்டு நல்ல தலை வர்களாக மாற வேண்டும். இந்த அழைப்பை இளையோர் உணர்ந்து சமூக வரையறைகளைக் கடந்து ஒன்றாக கைகோர்த்து இளைஞனாக இளமைத்துடிப்போடு இறைய ரசை அமைத்து வரலாற்றில் தன்னை கரைத்துக் கொண்ட இயேசுவின் பாதச்சுவடுகளில் பயணிக்க வேண்டும்.

## Stepping Stones

ELOCUTION CLASSES
& English Classes for Children

யாழில் புதிதாக ஆரம்பம்
சனிக்கிழமை பி.ப.3.30 - 4.30 மணிவரை

- Speech and Drama
- Poetry and Recitation
- Reading
- Broadening Vocabulary
- Speaking Skills

Small groups Will facilitate individual attention Per student

3 வயது தொடக்கம்

பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள் - 077 025 5901

No.40, Palaly Road, Kantharmadam, Jaffna.

## விற்பனையாளர் தேவை

யாழ்நகரில் உள்ள ஆர்.வி.ஜீ மெடிக்கலுக்கு சிறுவர்களுக்கான ஆடைகள், அழகுசாதனப் பொருள்கள், பலசரக்குப் பொருள் விற்பனையில் அனுபவமுள்ள A/L சித்தியடைந்த ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-

ஆர்.வி.ஜீ.மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2129

## வீடு வாடகைக்கு

4 அறைகள், ஒரு பெரிய வரவேற்பறை, 2 குளியலறை, குசினி, வாகனத் தரிப்பிடவசதி என்பவற்றுடன் 30 அடி அகலம் 50 அடி நீளம் கொண்ட களஞ்சிய Store Room உண்டு. வெலிண்டன் சந்தியில் இருந்து 50 மீற்றர் மணிக் கூட்டு வீதி பெருமாள் கோயில் செல்லும் வீதியில் அமைந்துள்ளது.

நிறுவனம் விரும்பத்தக்கது.

077 271 8458, 021 221 9448

## வேலைவாய்ப்பு

### Himaalayan motors and Engineering

நிறுவனத்தின் புதிய கிளைக்கு [illegible]ரும் நிலைகளுக்கு பதவி வெற்றிடமுள்ளது. தகைமையுள்ள [illegible]ண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் எதி[illegible]கப்படுகின்றன.

1. முகாமையாளர்
2. சந்தைப்படுத்தல் உத்தியோக[illegible]
3. மோட்டார் சைக்கிள் தொழில்[illegible] பவியலாளர்.
4. பயிலுனர்- (மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர்).

**தகைமைகள்**

- ✓ மேற்படி துறைகளில் கல்வி சா[illegible]தமை பெற்றிருத்தல் வேண்டும்.
- ✓ தொழில் அனுபவத்தைக் கொ[illegible]ருந்தல் வேண்டும்.
- ✓ அரச துறைகளில் வேலை செ[illegible] ஓய்வுநிலை உத்தியோகத்தரும் இணைந்துகொள்ளலாம்.

தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப [illegible]பனவு தீர்மானிக்கப்படும்.
மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படு[illegible]
EPF,ETF என்பன பெற்றுக்கொள்ள முடி[illegible]
மேலதிக தகைமைக்கேற்ப ஊக்குவிப்புப் [illegible]பனவை பெற்றுக்கொள்ள முடியும்.

சுயவிவரக் கோவைகளை 18.08.2018[illegible] முன்னர் அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு:-
ஹிமாலயன் மோட்டோர்[illegible] அன் இன்ஜினியரிங்
கண்டி வீதி, நுணா[illegible], சாவகச்சேரி.
தொலைபேசி இல. 021 227 0019 [illegible] இல. 077 410 9151
himaalayanmoto[illegible]@gmail.com

## Lakeland COLLEGE

LEADING. LEARNING. SINCE 1913

SYUDENT VISA TO CANADA

கல்வி, வேலை வாய்ப்புடன் கனடாவில் நிரந்தர வாழ்விடம்

(2 வருட லேக்லண்ட் கொலேஜ் டிப்ளோமா தரத்துடன் நிரந்தர வசிப்பிடத்திற்கு விண்ணப்பியுங்கள்.)

கனடாவில் கல்வி கற்பதற்கான கருத்தரங்கு

அனுமதி இலவசம்

19வா ஆகஸ்ட் 2018 நுகேகொட, கொழும்பு
உங்கள் இடத்திற்கு உடன் முற்பதிவு செய்யுங்கள்.



| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | திவாகர்- 0777547447 |
| நுகேகொட | நசீர்- 0776301175 |
| மாத்தறை | ரிசித்- 0762157718 |

10 வருட அர்ப்பணிந்த கல்விச்சேவை அனுபவம்

Benchmark International Consultancy Pvt. Ltd.
228/B, Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna, Sri Lanka
Tel: +94 21 437 6199 | Web: www.benchmarklk.co.nz |
Email: diwakar@conceptinaction.com


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா இரத்தினம்
(படப்பிடிப்பாளர்)

பிறப்பு 24.01.1947
இறப்பு 03.08.2016

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஈச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


## உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7th World Scientific Congress இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது...

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

# British Way® English Academy

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

இதுவே வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கான உலகின் தலைசிறந்த இடம்...

- NITTAMBUWA • GALLE • MATARA • ANURADHAPURA • KANDY • KURUNEGALA • KIRIBATHGODA • BANDARAWELA
- NUGEGODA • GAMPAHA • NEGOMBO • POLONNARUWA • RATHNAPURA • JAFFNA • EMBILIPITIYA • KALUTARA

### இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

### வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

23rd of September, 2018 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### KIDS' Class Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

இன்றே பதிவு செய்யவும்

021 300 55 55

No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)



ஆடி அமாவாசை தினமான நேற்று, கீரிமலை கண்டகி தீர்த்தக் கரையில் மக்கள் கூட்டம் அலைமோதியது. பிதிர்க் கடன் கொடுப்பதற்காக வந்தவர்கள் ஒருபுறம் இருக்க யாசகம் பெற வந்தவர்களும் பெரும் எண்ணிக்கையில் அங்கு காணப்பட்டனர். (ற-114)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி சாவு

யாழ்ப்பாணம், ஓக. 12

சாவகச்சேரியிலிருந்து அச்சுவேலி நோக்கி உந்துருளியில் பயணித்த போது பின்னால் இருந்த பெண் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த பூபாலசிங்கம் ஜெயதேவி (வயது-55) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி உந்துருளியில் பின்னால் இருந்து பயணித்த பெண் அணிந்திருந்த தலைக் கவசம் கழன்றுவிழும் நிலையில் இருந்தமையால் அதனை கையால் பிடித்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக உந்துருளியில் இருந்து தவறி வீழ்ந்துள்ளார். மயக்கமடைந்த நிலையில் உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அன்றையதினமே மாற்றப்பட்டுள்ளார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இறப்புத் தொடர்பான விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (5.8)

## பருத்தித்துறையில்...

தாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடைக்குச் சென்று கொண்டிருந்தபோது, பெண்ணின் பின்புறமாக உந்துருளியில் வந்த இருவர் சங்கிலியைப் பறித்துச் சென்றுள்ளனர். உந்துருளியில் இருந்தவர்களில் ஒருவர் தலைக்கவசம் அணியவில்லை என்று தனது முறைப்பாட்டில் பெண் தெரிவித்துள்ளார். (5.26)

## இரவோடு...

தீவு மீனவர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர். திணைக்களத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அது தொடர்பில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகள் மேற்கொண்ட பொலிஸார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனை நேற்றுமுன்தினம் கைது செய்தனர். பதில் நீதிவானிடம் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இரவு 6 பேர் கைது செய்யப்பட்டனர். கரைத்துறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் எம்.தொம்மைப் பிள்ளை, செல்வபுரம் கடற்றொழில் கூட்டுறவு அமைப்பின் பொருளாளர் ஏ.ஜெயராசா, கடற்றொழிலாளர் சம்மேளன உப தலைவரும், தீர்த்தக்கரை அன்னை வேளாங்கன்னி கடற் றொழில் அமைப்பின் தலைவருமான வி.அருள் நாதன், தலைவர் பெ.பேரின்பநா தன், கோவில் குடியிருப்பு கடற்றொழில் அமைப்பின் தலை வர் அ.பிராண்டா அன்ரனி ஆகியோரே கைது செய்யப்பட்டனர். அவர்கள் பதில் நீதிவான் மன்றத்தில் முற்படுத்தப்பட்டு நிபந்தனையுடனான பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

போராட்ட இடத்துக்குச் செல்லக்கூடாது, ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளும் நீதிமன்றில் கையொப்பம் இட வேண்டும் என்ற பிணை நிபந்தனைகளின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர். (ந.5.ரி3)

## மாணவர்களுக்கு...

னர். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட மகிழூர்ந்தும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வர்ண ஜெயசுந்தர தலைமையிலான பொலிஸ் குழு இந்தக் கடத்தலை முறியடித்துள்ளது. மன்னாரில் இருந்து கொழும்பு செட்டித் தெரு நோக்கிப் போதை மாத்திரைகள் கடத்தப்படவிருந்த நிலையிலேயே அவை கைப்பற்றப்பட்டுள்ளன. 24 வயதுடைய கணவனும், 22 வயதுடைய மனைவியும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் போதை மாத்திரைகள் இந்தியா மற்றும் டுபாயில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளது என்று முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒவ்வொன்றும் 200 கிராம் நிறையுடைய 70 ஆயிரம் மாத்திரைகள் கைப்பற்றுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-5,26,110)

## பதவி....

இதுவரை அதனைச் செய்யவில்லை. நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக தன்னால் அந்தப் பணியைச் செய்ய முடியாது என்று கூறிவருகின்றார். இதனால் வடக்கு அமைச்சரவை செயற்பட முடியாத நிலையில், வடக்கு மாகாணத்தின் நிறைவேற்று மற்றும் சட்டவாக்கச் செயற்பாடுகள் தேக்கமடைந்துள்ளன.

இதற்கிடையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்தவில்லை என்று தெரிவித்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி முதலமைச்சர் விக்னேஸ்வரன் உள்பட மூன்று அமைச்சர்களை மன்றில் தோன்றுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் நெருக்கடி நிலமைக்குள் தள்ளப்பட்டுள்ளார். இதிலிருந்து தப்பிப்பதற்கு - விடுபடுவதற்கு முதலமைச்சர் பதவியைத்துறப்பதே ஒரே வழி என்று விக்னேஸ்வரனுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் முடிவடைவதற்கு இன்னமும் 70 நாள்களே இருப்பதால், பதவி துறப்பதில் எந்தப் பிரச்சினையும் வராது என்றும், பதவிதுறப்பதன் ஊடாக, மக்களின் அனுதாப அலையைத் திரட்ட முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் தலைமை வடக்கு அமைச்சரவை நெருக்கடி குறித்து ஆராய்வதால், பதவி துறக்கும் ஆலோசனையை முதலமைச்சர் தற்போதைய நிலமையில் ஏற்றுக் கொள்ளவில்லை என்று அறியமுடிகின்றது. (5.105)

## கீரிமலை...

ஆடி அமாவாசை தினத்தன்று முன்னோர்களைப் போற்றி வணங்குவது இந்துக்களின் வழமை. இறந்து போன முன்னோர்களின் நினைவாக நீர் நிலைகளுக்குச் சென்று திதி கொடுத்து வழிபாடு செய்தால் முன்னோர் ஆசி கிடைக்கும் என்பது நம்பிக்கை.

சிறப்பு மிக்க கீரிமலை கண்டகி தீர்த்தக் கரையிலும் பெரும் எண்ணிக்கையானோர் கூடி தமது முன்னோர்களுக்குத் திதி கொடுத்துப் போற்றி வணங்கினர். (ற-114)

## வன்முறையைக்...

நேற்று வாகனங்கள் சகிதம் ஊர்வலமாகச் சென்ற பொலிஸார் பொதுமக்களுக்கு துண்டறிக்கைகளை வழங்கினர். ஒலிபெருக்கி மூலமும் அறிவித்தனர்.

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைக்குத் தொந்தரவு செய்யும் குற்றவாளிகளைக் கைது செய்ய உங்களின் ஆதரவை வழங்குகள் என்று அந்தந் துண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான தகவல்களை வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் வழங்கலாம் என்று குறிப்பிடப்பட்டு 076 6093030 என்ற அலைபேசி இலக்கமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் நடந்த இந்த ஊர்வலத்தில் வடக்கு மாகாணப் பொலிஸ் உயர் அதிகாரிகள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-26)

## கொள்கை...

நிராகரிக்கவேண்டும் என்றார். இங்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரும் நிராகரிக்க வேண்டும் என்றார்கள். அப்படியானால் இரண்டு தரப்புக்கும் இடையிலுள்ளதை மக்கள் பார்க்கவேண்டும்.

இடைக்கால அறிக்கையை வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிராகரித்தார். கண்மூடித்தனமாக விமர்சித்தார். இது அவரின் போலித்தனமான அணுகுமுறை.

எமது தேர்தல் அறிக்கையில் கூட்டாட்சியைக் குறிப்பிட்டமைக்காக எமக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதன் தீர்ப்பு எமக்குச் சாதகமாக வெளியாகியது. கூட்டாட்சிக்குரிய விளக்கம் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை விடுத்து இங்கிருந்து வெறுமனே அறிக்கைகள் விட்டுக் கொண்டிருப்பவர்களால் எதுவும் ஆகப்போவதில்லை. இவர்கள் இந்த வழக்கில் அமர்ந்திருந்தால் நல்ல தீர்ப்பு கிடைத்திருக்குமோ தெரியாது.

வடக்கு - கிழக்கில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை மீட்க அறிக்கை விட்டுக் கொண்டிருப்பவர்கள் நீதிமன்றில் வாதாடினார்களா? சிறு முயற்சியாவது எடுத்தார்களா? எங்கள் கட்சியின் சட்டத்தரணிகளால் பல வழக்குகள் வாதாடப்பட்டு அவை வெற்றி பெற்றும் உள்ளன. இந்த விடயங்களைக் கூறி நாங்கள் வாக்குக் கேட்கவில்லை. ஆனால் இப்போது இவற்றையெல்லாம் பேசவேண்டிய நிலைக்கு எங்களைத் தள்ளிவிட்டார்கள். விசுவாசத்துக்கும், போலித்தனமான செயற்பாடுகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை வெளிக்கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

வெறும் அறிக்கைகளால் மாத்திரம் எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா? எங்கள் இலக்கை அடைய நாம் இராஜதந்திர ரீதியில் பல்வேறு போராட்டங்களை நடத்தவேண்டியிருக்கின்றது. அதுதான் இன்றைய தேவையாக இருக்கின்றது - என்றார்.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது புத்தக வெளியீட்டு விழாவில், கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமை கொள்கை அடிப்படையிலேயே அமையவேண்டும் என்று கூறியிருந்த நிலையில், அதே கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசாவும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5.8)

## வெடுக்குநாரி...

அமாவாசை தினமாதலால் அங்கு சிறப்புப் பூசை வழிபாடுகளும் நடந்துள்ளன.

வவுனியா, வடக்கு நெடுங்கேணியில் உள்ள ஒலுமடுக் கிராமத்தில் இருந்து சற்றுத் தொலைவில் காட்டுப் பகுதியில் அமைந்துள்ளது வெடுக்குநாரி மலை. அங்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மக்கள் பூசை வழிபாடுகளை மேற்கொள்வது வழமை.

திடீரென அந்தப் பகுதி தமக்குரியது என்றும், அங்கு எவரும் செல்லக் கூடாது என்றும் தொல்பொருள் திணைக்களம் அறிவித்தது. நெடுங்கேணி பொலிஸ் நிலையத்துக்கும் தொல்பொருள் திணைக்களம் இது தொடர்பில் அறிவித்தது. வெடுக்குநாரி மலையிலுள்ள ஆலயத்தின் நிர்வாகிகள் பொலிஸாரால் அழைக்கப்பட்டனர். அந்தப் பகுதி தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமானது என்றும், நேற்று சனிக்கிழமை முதல் எவரும் அந்தப் பகுதிக்குள் அனுமதி இன்றி நுழையக் கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டனர்.

நேற்று ஆடி அமாவாசை தினமாதலால் மக்கள் அங்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டனர். நெடுங்கேணிப் பொலிஸாரும் கூடச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

**மக்கள் விசனம்**

இந்த ஆலயம் எமது வாழ்வோடு பின்னிப் பிணைந்தது. எமது முன்னோர்கள் இங்கு வழிபாடுகளை மேற்கொண்டனர். இப்போது திடீரென தொல்பொருள் திணைக்களம் உரிமை கொண்டாடுகின்றது. எமக்கு இது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

எம்மை இங்கு வழிபாடு மேற்கொள்ளக் கூடாது என்று கூறுவது மனித உரிமை மீறலே. நாம் மலைக்கான பாதைகள் அமைந்துப் படிகளும் அமைக்கவிருந்தோம். அவையும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் புதையல் இருப்பதாகக் கூறப்பட்டாலும், நாம் வழிபாடு செய்வதற்கும், அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பௌத்த மயமாக்கலின் ஒரு அங்கமாவே இது எமக்குத் தென்படுகின்றது.

எம்மை தடுப்பதை ஏற்க முடியாது. இதற்குக் கட்டாயம் எதிர்ப்பு வெளியிடுவோம். எமது உரிமையை நிலைநாட்டுவோம். தமிழ் அரசியல் பிரதிநிதிகள் இது தொடர்பில் மௌனம் காக்காது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ற-110)

## நவாலியிலும்...

தீனமாக வீட்டில் உள்ளவர்களுக்கு காயம் ஏற்படவில்லை.

அந்தப் பகுதியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் வன்னியசேகரம் இது தொடர்பில் தெரிவித்ததாவது, எனது வீட்டிலிருந்து மூன்று வீடுகளுக்கு அப்பால் உள்ள சகோதரியின் வீட்டின் மீதே கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சகோதரியின் மகள் வீட்டு யன்னல் ஊடாக, மதிலின் மேலாக இனந்தெரியாத சிலர் சிவப்பு நிற வெளிச்சத்துடன் ஏறிக் குதிப்பதை அவதானித்துள்ளார். சிறிது நேரத்தில் வீட்டின் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் சத்தமிடவே 25 மேற்பட்ட இளைஞர்கள் அங்கு திரண்டனர். தேடுதல் நடத் தியபோதும் எவரும் சிக்கவில்லை. நாளை (இன்று) காலை பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யவுள்ளனர் - என்றார். (5.50)



# கரவைச்சுடர் அணி போராடி வென்றது!

யாழ்ப்பாணம், ஓக. 12
கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கரவைச்சுடர் அணி வெற்றிபெற்றது. றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும்கோல்எதையும்பதிவுசெய்யாத நிலையில்சமநிலைத்தவிர்ப்புஉதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் கரவைச்சுடர் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 12

**தாச்சித் தொடர்**

யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் நடத்தும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தாச்சித் தொடரின் ஆட்டங்கள் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கீரிமலை உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கால்பந்தாட்டம்**

வடக்கு - கிழக்கு பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நோதன் எலைய்ட் அணியை எதிர்த்து அம்பாறை அவஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா வாரியர்ஸ் அணியை எதிர்த்து றிங்கோ றைட் றென்ஸ் அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டம்**

அச்சுவேலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் மற்றும் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் றொக்கெட் அணியை எதிர்த்து முரசொலி அணி மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் எல்லாளன் அணியை எதிர்த்து வாரியர்ஸ் அணி மோதவுள்ளது. மேற்படி அரையிறுதியாட்டத்தில் வெற்றி பெறும் அணிகள் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. (ம-23)

# இளந்தளிர் வென்றது!

யாழ்ப்பாணம், ஓக. 12
உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் உருத்திரபுரம் நினைவுக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இளந்தளிர் அணி வெற்றிபெற்றது.
உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது இளந்தளிர் அணி. சுட்வின் ஆட்டநாயகனானார். (ம-23)

# விளைபூமி போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 12
உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் விளைபூமி அணி வெற்றி பெற்றது.
உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கனகபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விளைபூமி விளையாட்டுக் கழக அணி மோதியது. 8:7 என்ற கோல் கணக்கில் விளைபூமி அணி வென்றது. (ம-23)

# இளைஞர் வட்டம் வெற்றி பெற்றது!

யாழ்ப்பாணம், ஓக. 12
உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் உருத்திபுரம் நினைவுக் கிண்ணத்துக்கான அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளைஞர் வட்டம் அணி வெற்றி பெற்றது. உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது இளைஞர் வட்டம் அணி. ஆட்டநாயகனாக துசாந்தன் தெரிவானார். (ம-23)

# யங்கம்பன்ஸை வீழ்த்தியது சிவானந்தா அணி

யாழ்ப்பாணம், ஓக. 12
கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சிவானந்தா அணி வெற்றிபெற்றது.
றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சிவானந்தா அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல் எதுவும் பதிவுசெய்யப்படாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:3 என்ற கோல் கணக்கில் சிவானந்தா அணி வெற்றிபெற்றது. (ம-23)



# உருத்திரபுரம் அணி அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 12
உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உருத்திரபுரம் அணி வெற்றிபெற்றது.
உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெயந்திநகர் விளையாட்டுக்கழகஅணி மோதியது. 6:1 என்ற கோல் கணக்கில் உருத்திரபுரம் அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக உருத்திரபுரம் அணியின் பௌசிகன் தெரிவானார். (ம-23)

# சரஸ்வதி இறுதியில்

யாழ்ப்பாணம், ஓக. 12
கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் கைதடி சரஸ்வதி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் கைதடி துர்க்கா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைதடி சரஸ்வதி அணி வெற்றி பெற்றது. (ம-23)

# கார்த்திக் மீண்டும் 'போல்ட்'

இந்திய அணியில் மூன்று தமிழ் வீரர்கள் என்கிற கூட்டணி உடையக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள் ளன. டினேஸ் கார்த்திக் வெளிப்படுத்தும் தொடர் தடுமாற்றத்தாலேயே இந்த அபாய நிலை தோன்றியுள் ளது.

இந்திய டெஸ்ட் அணியின் இலக்குக் காப்பாளர் சகா காயமடைந்ததை அடுத்து பதில் வீரராக அணிக்குள் சேர்க்கப்பட்டார் டினேஸ் கார்த்திக். அஸ்வின், முரளி விஜய் என்று இரு தமிழ் வீரர்கள் ஏற்கனவே அணிக்குள் விளையாடிவந்த நிலையில் அவர்களுடன் டினேஸ் கார்த்திக்கும் இணைந்ததால் இந்திய அணிக்குள் அதுவும் டெஸ்ட் அணிக்குள் மூன்று தமிழ் வீரர்கள் கொண்ட கூட்டணி உதயமானது. இந்தக் கூட்டணி தற்போது உடைந்துவிடும் வாய்ப்புள்ளது.

இதுவரை மூன்று தடவை கள் துடுப்பெடுத்தாடியுள்ள டினேஸ் கார்த்திக் இரண்டு தடவைகள் போல்ட் முறையில் ஆட்டமிழந்துள் ளார். ஒரு தடவை டக்அவுட். இன்னொரு தடவை வெறும் 1. ஆக, தனது வாய்ப்பை அவர் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. களத்தடுப்பிலும் டினேஸ் கார்த்திக் சில வாய்ப்புக் களை வீணாக்கினார். இதனால் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான அணியில் அவர் இருப்பாரா என்பது தொடர்பில் சந்தே கமே நிலவுகிறது.

இங்கிலாந்துக்கு எதிராக லோட்ஸில் தற்போது நடைபெற்று வரும் டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் தன்னை அவர் நிரூபித்தால் அணிக் குள் தொடரவும் வாய்ப்புக் கள் இருக்கின்றன. இல்லா விடில் பதில் வீரராக பன்ட் சேர்க்கப்படலாம். (ம)





# ஆஸ்திரேலியாவில் சாதிப்பாரா விராட்?

## வாஹ் கேள்வி

"இந்திய அணியின் தலைவரான கோக்லி, ஆஸ்திரேலியாவில் வைத்து ஓட்டங்களைக் குவிப்பாரா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் ஆஸ்திரேலிய வீரரான வாஹ்.

இங்கிலாந்தில் கோக்லி பெரியளவில் சாதித்த தில்லை என்கிற விமர்சனங்கள் தற்போது முடிவுக்கு வந்துள்ளன. இங்கிலாந்துக்கு எதி ரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஒரு சதம், ஓர் அரைச்சதம் என்று தனது ஆதிக்கத்தை வலுவாக நிலைநாட்டியுள்ளார் கோக்லி. இதை யடுத்து கோக்கி ஆஸ்திரேலியாவில் எந்தளவுக் குச் சாதிப்பார் என்று கேள்வி எழுப்பியுள்ளார் வாஹ்.

"ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரின் போது கோக்லி தன் மீதே கொஞ்சம் அழுத் தத்தை ஏற்றிக் கொள்வார். ஆஸியில் வெற்றி பெற்றுவிட்டால் அவருக்கு நிச்சயம் இது இன் னொரு மகுடமே. இந்தியாவில் சிமித் நம்ப முடியாத வகையில் கடந்த முறை 3 டெஸ்ட் சதங்களை எடுத்தார். ஆனால் விராட் கோக்லி ஓட்டங்களை எடுக்கவில்லை. இது அவருக்கு பெருமை சேர்க்காது. எனவே ஆஸ்திரேலியா வில் அவர் சிமித்துடன் கணக்குத் தீர்த்துக் கொள்வார்.

விராட் கோக்லி இந்திய அணிக்கு மிகவும் முக் கியமானவர். எங்கு போனாலும் நன்றாக ஆடக்கூடிய உத்தி அவரிடம் உள்ளது. அவரி டமும் ஏ.பி.டிவிலியர்ஸிடமும் நல்ல உத்தி உள்ளது. டிவிலியர்ஸ் இப்போது ஆடுவ தில்லை. அதனால் கோக்லிதான் இப்போது கோலோச்சுகிறார்.



சிமித் ஓட்டங்களை அதிகளவில் குவிக்க வேண்டும் என்கிற பசி உடையவர். ஆனால் அவர் சமீபமாக ஆடாததால் நிச்சயம் விராட் கோக்லி உலக கிரிக்கெட்டில் முதன்மை வீரர். பிரையன் லாரா, சச்சின், விவ் ரிச்சர்ட்ஸ், ஜாவேத் மியான்தத் போன்ற பெரிய வீரர்கள் பெரிய நிகழ்வு, தொடருக்காக காத்திருந்து தங் களின் சிறந்தவற்றை வெளிக்கொணர்பவர் கள். அவர்களுக்கு நிகராக கோக்லியும் உள்ளார். ஆஸ்திரேலிய அணி 300-350 ஓட்டங்களை எடுத்து விட்டால் கோக்லியை நெருக்கடிக்குள் ளாக்கலாம். பெரிய ஓட்டங்கள் அவரின் துடுப் பாட்டத்தில் நிச்சயம் பிரச்சினைகளை ஏற்படுத் தும். எனவே ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளர்க ளிடம்தான் விடயம் உள்ளது" என்று வாஹ் மேலும் தெரிவித்தார். (ம)

# சொந்த மண்ணில் அதிக இலக்குகள்

## அனில் கும்ளேயுடன் இணைந்தார் அன்டர்சன்

சொந்த மண்ணில் அதிக இலக்குகளைக் கைப் பற்றிய வீரர்களின் பட்டியலில் அனில் கும்ளே யுடன் இணைந்தார் அன்டர்சன்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடை யிலா இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகி றது. முதல் இன்னிங்ஸில் இந்திய அணி வெறும் 107 ஓட்டங்களில் சகல இலக்குகளை யும் இழந்தது. அன்டர்சன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். இந்த 5 இலக்குகளின் உதவி யுடன் அன்டர்சனின் மொத்த இலக்குகள் சொந்தமைதானத்தில்350ஆக அதிகரித்தது. இதையடுத்து கும்ளேயின் அடைவுடன் இணைந்தார் அன்டர்சன்.

இந்தப்பட்டியலில் 493 இலக்குகளுடன் முத் தையா முரளிதரன் முதலிடத்தில் உள்ளார். (ம)



# சொன்னதைச் செய்தார் பயிற்சியாளர் பெய்லிஸ்

"இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் கோக்லியை அல்லாமல் ஏனைய வீரர்களுக்கு இலக்குவைத்து அதன்மூலம் கோக்லிக்கு அழுத்தம் கொடுப்போம். இந்தியாவை விரைவில் சுருட்டுவோம்" என்று தான் சொன்னதைச் செய்து காட்டியிருக்கிறார் இங்கிலாந்தின் பயிற்சியாளர் பெய்லிஸ்.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் தொடர்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், "உலக கிரிக்கெட்டில் விராட் கோக்லி மட்டும் சிறந்த வீரராக இல்லாமல் இருந்திருந்தால், அவரை எப்போதோ எங்கள் வீரர்கள் ஆட்டமிழக்கச் செய்திருப்பார்கள். முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இரு இன்னிங்ஸிலும் விராட் கோக்லியின் துடுப்பாட்டம் மிக அற்புதமாக இருந்தது. அதை வர்ணிக்க முடியாது. ஆதலால், அடுத்துவரும் ஆட்டங்களில்: எங்கள் உத்தியை மாற்றிக்கொள்ள இருக்கிறோம். விராட் கோக்லிக்கு கொடுக்கும் நெருக்கடியை, அணியில் உள்ள மற்ற வீரர்களுக்கு நாங்கள் கொடுக்கப் போகிறோம்.

அவர்களுக்குப் பந்துவீச்சில் நாங்கள் கொடுக்கும் நெருக்கடியால், அவர்கள் இலக்கை இலகுவாக இழப்பார்கள். அந்த அழுத்தம் முழுவதையும் கோக்லி மீது சுமத்துவார்கள். இதனால்,




கோக்லிக்கு தானகவே அழுத்தம் அதிகரிக்கும், இலக்கை இழப்பார். இதுதான் எங்கள் யுத்தியாகும். மற்ற வீரர்களுக்கு மட்டுமே எங்களால் நெருக்கடி இருக்கும். விராட் கோக்லிக்கு மற்ற வீரர்களால் அழுத்தம் ஏற்படும்" என்று பெய்லிஸ் தெரிவித்திருந்தார். அதன்படியே

இங்கிலாந்து நேற்றுமுன்தினம் கோக்லிக்கு அளவுக்கு அதிகமான அழுத்தத்தை வழங்கவில்லை. ஆனால் ஏனைய வீரர்களை பதின்மத்துக்குள் சுருட்டி எறிந்தது. இதனால் வெறும் 107 ஓட்டங்களில் சுருண்டது இந்தியா. (ம)

## உங்கள் வருமானத்தை மேலும் அதிகரிக்க புதிய ஐடியா !

### ஜூஸ் பக்கெட் மெசின்




டீ,கோப்பி மெசின் பொப்கோர்ன் மெசின்




தமிழில் தொடர்பு கொள்ள

**077 391 8870**

WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03

## கடைவாடகைக்கு

BATH ROOM வசதியுள்ள
இல.153, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில்
12'X 25' விசாலமுள்ள
இரு கடைகள் வாடகைக்கு உண்டு.

**076 609 9188**

## பணிப்பெண் தேவை

4 பேர் கொண்ட
ஒரு வைத்தியரின் வீட்டுக்குப்
பணிப்பெண் தேவை.

**077 766 7659**

## வாடகைக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு
அண்மையில் பொற்பதி வீதியில் புதிதாகத்
திருத்தி அமைக்கப்பட்ட
வீடு வாடகைக்கு விடப்படும்.

**077 070 2418**

## குத்தகைக்கு காணி தேவை

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு
உட்பட்ட பகுதியில் குறைந்தது
4 பரப்புக் காணி நீர், மின்சார
வசதியுடன் குத்தகைக்குத் தேவை.

**076 826 7703**

## ஆண், பெண்கள் தேவை

யாழில் நிறுவனம் ஒன்றில்
உற்பத்தி பொருள்களுக்கான
ஓடர்களை பெற்றுத்தர
"பொருத்தமான ஆண், பெண்
இருபாலாரும் தேவை.

தகைமை:
- எழுத படிக்க தெரிந்திருத்தல்
- சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல்
- மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல்

**077 886 6832/ 071 087 7680**

## வேலை வாய்ப்பு

சேவை நிறுவனம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.

01. **Billing Staff** - யாழ்ப்பாணம். (பெண்)

**தகைமைகள்:**
- ✓ A/L சித்தி
- ✓ ஆங்கில அறிவு விரும்பத்தக்கது
- ✓ யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

02. **Packing Staff** - கொழும்பு (ஆண்)

**தகைமைகள்:**
- ✓ கொழும்பில் பணியாற்றுவதற்கான தகுதியினை கொண்டிருக்க வேண்டும்.
- ✓ வயது எல்லை: (18-30)
- ✓ உணவு மற்றும் தங்கும் இடவசதி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**077 427 5311 / 076 253 4275**

(CS 7511)(10)

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## MATHS CLASSES (Group & Personal)

(தமிழ், ஆங்கில மொழி மூலமான)

**Gr. 6-11** வரையான மாணவர்களுக்கான கணிதம் குழு மற்றும் பிரத்தியேக வகுப்புகள் அனுபவமிக்க தேசிய பாடசாலை ஆசிரியரினால் வீடு வந்து கற்பிக்கப்படும்.

▼ புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான வகுப்புக்களுக்கும் அழைக்கவும்.

**077 454 0529**

## கார் விற்பனைக்கு

CAD.xxxx என்ற இலக்கமுடைய Silver கலர்
TATA INDIKA கார் (உற்பத்தி ஆண்டு 2015)
விற்பனைக்குண்டு

**T.P: 077 374 7825/ 077 615 2992** (CS/18956)(10)

## நாகபூஷனி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள்
ஜாதகங்கள் உடன் தெரிவு
செய்து தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /-Kg
கனடா-900/-Kg
ஜேர்மனி-700/-Kg
நெதர்லாந்து-700/-Kg

0768226240

V2 TRAVELS

## மணப்பெண் தேவை

கவிஞரும் மென்பொருள் பொறியியலாளருமான
39+ வயதுடைய மணமகனுக்கு 6-14 வயது
வித்தியாசத்தில் ஒழுக்கமுள்ள அழகிய Dr , Eng ,
BSc or equivalent மணப்பெண் தேவை. Photo
மற்றும் மேலதிக விபரங்களுக்கு.
www.seaaav.com/IT/ ஐ பார்க்கவும்.

0772420337




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.